ஸ்ரீ

ஸ்ரீ ராமஜெயம்

தியாகி இராமாயணம்

(கம்பரும் வால்மீகரும்)

சுந்தர காண்டம்

(இரண்டாம் பதிப்பு)

வடுவூர், இராம-சடகோபன்
"தியாகி" பத்திராதிபர், சென்னை.

—❀—

"தியாகி" அச்சுக்கூடம்,
சென்னை,
1947.

 [4—12—0

முதல் பதிப்பு — 1942
இரண்டாம் பதிப்பு — 1947

Printed at Thyagi Press, Triplicane, Madras.
S. A. 60. C. 1000—2-1-1947.

ஸமர்ப்பணம்.

பாரத நாட்டின் தாரகமான

பதிவிரதைகளுக்கு

பக்தி பூர்வமான ஸமர்ப்பணம்.

இன்ப இணைப்பு

புதுவையில் மோனத் தவம் பயிலும் யோகி
ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் எழுதுகிறார் :

கம்பனுக்கு ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது புதிய உயிர் வந்திருக்கிறது. நாடெங்கும் கம்பர் திருநாள் நடக்கிறது. கம்பனைப் பலர் விரும்பிக் கற்கின்றனர்.

கதைக்கு வால்மீகி, கவிக்குக் கம்பன் என்பது ஆராய்ச்சியில் அறிய வரும்.

வால்மீகி ஆற்றொழுக்கம்போல் கதையை நடத்திச் செல்கிறார். இடையிடையே மக்களறத்தை மாண்புறக் காட்டுகிறார்.

கம்பர் வால்மீகியின் கதையை தனது ஆவேசத் தீயில் உருக்கி வார்த்துக் கலையின்பம் பொலிய வைக்கிறார். தமிழர் நாகரிகத்தை விளக்கி ஒரு அற்புத மான கலைமாளிகை கட்டி வைத்தார். இன்று கலையுள்ளம் அந்த மாளிகையைக் கண்டு களிக்கிறது.

அந்த மாளிகையின் அழகை வால்மீகியின் கலையுடன் ஒப்பிட்டு வடுவூர் ஸ்ரீ இராம - சடகோபன் நமக்கு ஒரு அரிய ஆராய்ச்சி நூலைத் தந்திருக்கிறார். இரண்டு கலைகளுக்கும் இந்த நூல் ஒரு இன்ப இணைப்பாக இருக்கிறது. ஸ்ரீ இராம - சடகோபன் முயற்சி போற்றத்தக்கது.

இதேபோல் மற்றக் காண்டங்களும் வந்தால் கம்பர் பெருமையும் முனிவர் பெருமையும் விளங்கும்.

அன்பு,
சுத்தானந்த பாரதியார்.

உ

ஸ்ரீராமஜெயம்

முகவுரை

'தியாகி' சுந்தர காண்டம் பார்த்தேன். சற்றுப் பிரயாணத்தின் மத்தியில் படிக்க, மனதிற்கு சாந்தியும், மகிழ்ச்சியும் தந்தது. மிகவும் அழகான புத்தகம். தமிழருக்கு மிகவும் பயன்படும்.

இதேயாதிரி ஆசிரியர், பதிப்புரையில் எழுதியிருக்கிறபடி வால்மீகி, கம்பர், துளசிதாஸர் மூவருடைய அமிழ்த வாக்குகளிலிருந்து பாட்டுக்கள் எடுத்துக் கோத்து, இராமாயணத் திரிவேணி எழுதவேண்டும். இது பரத சேவையாகும். பரத சேவைதான் ராமனுக்கு திருப்தி கொடுக்கும்.

திருவாரூர்-
நாகை ரயில்
26-1-42

இங்ஙனம்
சக்கரவர்த்தி-இராஜகோபாலாச்சாரியார்,
(சென்னை மாஜி பிரதம மந்திரி)

ஸ்ரீராமஜெயம்

மதிப்புரை

'தியாகி' பத்திராதிபர் இராம - சடகோபன் அவர்கள் ராமாயணக் கதையைப் புது முறையில் அனுபவிக்கச் செய்கிறார்கள்.

சென்ற 21-2-42 அன்று மைலைத் தமிழ்ச் சங்கம் சார்பாக, அரங்கேற்றும் முறையில், ஆசிரியர் தன்னுடைய சுந்தர காண்டத்தை எடுத்துச் சொன்னார்கள். ஆங்காங்கு வடமொழி சுலோகங்களையும் கம்ப ராமாயணப் பாடல்களையும் பாடி விளக்கி வந்தார்கள்.

பக்தி பூர்வமாகவே பாட்டும் விளக்கமும் இருந்தன. ராமாயணப் பாடல்களைப்பற்றிப் பேசும்போது பக்தி பூர்வமாகச் சொன்னால்தான் பயன் உண்டாகும் என்றால் மிகையல்ல.

ஆசிரியர் பக்தியில் ஈடுபடக்கூடிய பாக்கியம் பெற்றவர்கள். அந்த ஈடுபாட்டோடு நாம் புஸ்தகத்தை வாசிக்க வேண்டும். அதிலுள்ள பாசுரங்களைப் பாடவேண்டும்.

தமிழர்களுக்காகவே எழுதிய புஸ்தகம். இதைத் தமிழர்கள் நல்ல முறையில் அனுபவிப்பார்கள் என்று நம்புகிறேன்.

மீனம்பாக்கம்,
சென்னை, 2—3—42.

டி. கே. சிதம்பரநாத முதலியார்,
(திருநெல்வேலி.)

பொருளடக்கம்

ஸ்ரீராமஜெயம்

அணிந்துரை

ஸ்ரீ தியாகி இராமாயணம் (கம்பரும், வால்மீகரும்) சுந்தர காண்டம் மிக அழகாகவும், சுத்தமாகவும், பெரிய எழுத்துக்களில் அச்சிடப் பெற்றுள்ளது. சிறுவர் சிறுமியர் உள்பட யாவர்க்கும் பயன்படு மாறு சிறு சிறு வாக்கியங்களில் எளிய நடையில் தெளிவாக எழுதப் பெற்றிருக்கிறது. முக்கியமான விஷயங்களைச் சுருக்கியும் விளக்கியும் சுவை ததும்ப உரைக்கின்றது. பொருத்தமான நீதிகள் பல ஆங் காங்கே எடுத்துக் காட்டப் பெற்றுள்ளன. தேர்ந் தெடுத்த வால்மீகி சுலோகங்களும் கம்பர் கவிகளும் மிளிர்கின்றன.

அனன்னிய பக்தியின் அடைவும் பதிவிரதா தரு மத்தின் பாங்கும் ஆஞ்சநேயரிட மிருந்தும் சீதா பிராட்டியிட மிருந்தும் குறிக்கொண்டு ஆடவரும் பெண் டிரும் கடைப்பிடிக்கத் தக்கன.

"சீதையின் கீதை" என்னும் அத்தியாயம் இந் நூலில் சிறந்த பகுதிகளில் ஒன்றாகும். இந்நூல் பாடசாலை, புத்தகசாலை தோறும், குடும்பந்தோறும் எல்லோ ராலும் பயில்வதற் குரியது.

இதன் ஆசிரியர் "தியாகி" பத்திராதிபர் ஸ்ரீ இராம-சடகோபன் அவர்கள், திருவண்ணாமலையில் தெய்வத் தன்மையால் சிறப்புற்று விளங்கும்

பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷிகளைப் பல்லாண்டுகளாக அடிக்கடி வந்து தரிசித்து அன்னார் அருட்கண் நோக்கம் பெறும் பாக்கியம் வாய்ந்தவர். இந்நூலும் ஸ்ரீ பகவான் ரமண மஹரிஷிகளின் அருட் கண்ணோக்கத்திற்கு இலக்கானது. இவர் அக்கடவுட் பெரியாரை அவ்வப்போது போற்றிய செந்தமிழ்ச் செய்யுட்கள் இனிமையுடையனவாம்.

நிற்க, ஆசிரமப் பழக்கத்தால் எனது நண்பர் ஆன இவர், இது போல் ஏனைய காண்டங்களையும் வெளியிட ஸ்ரீ பகவான் திருவருள் இவருக்குத் துணை புரிவதாக.

தமிழ் நாட்டார் இந்நூலை ஆதரிக்கும் முகத்தால் அம்முயற்சியில் ஆசிரியரை மேன்மேலும் ஊக்கித் தாங்களும் பயனடைதல் வேண்டும்.

திருவண்ணாமலை } பரத்வாஜி முகவைக் கண்ண முருகனார்
20-11-1941. } ஆசிரியர்.

ஸ்ரீ

ஸ்ரீ ராமஜெயம்

இரண்டாம் பதிப்புரை.

ஸ்ரீ பகவான் அருளால் கம்பரும் வால்மீகரும் கலந்த தியாகி சுந்தர காண்டம் முதல் பதிப்பு 1941-ல் வெளி வந்தது.

அறிவில் சிறந்த மேதாவிகளும், ஆண் பெண் குழந்தைகள் முதல் மஹா ஜனங்களும் இதைப் பாராட்டிப் படித்து, தங்கள் தங்கள் குடும்ப பொக்கிஷமாக ஒரு பிரதி வேண்டுமென்று விரும்பினர்.

சின்னாளில் பிரதிகள் செலவழிந்தன. மக்கள் தேவையைப் பூர்த்தி செய்ய மீண்டும் பதிப்பிக்க முடியாமல் ஐந்து ஆண்டுகள் கழிந்தன.

ஸ்ரீ பகவானருளால் இப்பொழுது இரண்டாம் பதிப்பு வெளியாகிறது. மக்களுக்கு இது பயன் தருவதாக.

அன்றியும் கம்பர் வால்மீகரோடு, பிரசித்திபெற்ற துளஸிதாஸரையும் கலந்து தமிழ் நாட்டில் ஸ்ரீ ராமாயணத் திரிவேணி பிரவகிக்கும்படி ஸ்ரீ பகவான் அருள் செய்வாராக என்று முதல் பதிப்புப் பதிப்புரையில் பிரார்த்தித்திருந்தேன்.

இதற்கு முகவுரை எழுதிய ராஜாஜி—

"ஆசிரியர் பதிப்புரையில் எழுதியிருக்கிறபடி வால்மீகி, கம்பர், துளஸிதாஸர் மூவருடைய அமிழ்த வாக்குகளிலிருந்து பாட்டுக்கள் எடுத்துக் கோத்து இராமாயணத் திரிவேணி எழுத வேண்டும்", என்று ஆதரித்திருந்தார்.

கம்பரும் வால்மீகரும் தொடர்ந்து "தியாகி"யில் வெளி வந்தது, சின்னாள் முன் பட்டாபிஷேகம் முடிந்து, இப்பொழுது கம்பர், வால்மீகர், துளஸிதாஸர் மூவரும் கலந்த ஸ்ரீ இராமாயணத் திரிவேணி "தியாகி" யில் தொடர்ந்து வெளிவருகிறது. இதுவும் தமிழருக்குப் பயன் தருவதாக.

இராம-சடகோபன்.

ஸ்ரீ

ஸ்ரீ ராமஜெயம்

பதிப்புரை [முதல்]

ஸ்ரீ இராமாயணம் பாரத நாட்டின் தாரகம். உலகின் பொக்கிஷம். உச்சந் தலை முதல் உள்ளங் கால் வரை ஜீவாதாரமான இரத்தம் பரவி இருப்பது போல், இமகிரி முதல் குமரி வரை இராமாயணம் பரவி இருக்கிறது. லக்ஷக் கணக்கான மக்கள் இதைத் தினந்தோறும் படிக்கிறார்கள். கோடிக் கணக்கான மக்கள் போற்றுகிறார்கள். வண்டுகள் மலரில் தேன் குடைவது போல் அறிவாளிகள் இராமாயணத்தில் திளைக்கிறார்கள்.

ஆதி காவியமான வால்மீகி இராமாயணமும், அருட் காவியமான கம்ப இராமாயணமும், பால் கடலும் தேன் கடலும் போல் பரந்து கிடக்கின்றன. இரண்டையும் சிறிது கலந்து பருகினால் அந்த அமுதத்தின் ஆனந்தம் தான் என்னே!

கம்பரும் வால்மீகரும் கலந்த தியாகி இராமாயணம் கடந்த ஆறு வருடங்களாக 'தியாகி' வாரப் பத்திரிகையில் தொடர்ந்து வெளியாகி வருகிறது. இதைப் படித்த பலர் இதனைப் புத்தகமாக்குவது உசிதமென்று விரும்பினார்கள்.

ஸ்ரீ பகவானருளால் இப்பொழுது முதல் முதலாக சுந்தர காண்டம் வெளி வருகிறது. மற்றக் காண்டங்களும் தொடர்ந்து வெளிவர பகவான் அருள் செய்வாராக.

ஸ்ரீ வால்மீகி இராம ராஜ்யத்தில், அமைதியான காட்டில், இனிமையான தவ வாழ்க்கை நடத்தி, பிரம்மாவின் அருளால் அந்த உயர்ந்த ஆதி காவியத்தைப் பாடினர்.

சிம்பிரா சடையப்ப வள்ளலால் தூண்டப் பெற்று, அரசனால் வேண்டப் பெற்று, வேண்டும் பொருள் பெற்று, கலைமகள் அருள் பெற்றுக் கவிமழை பொழிந்தார்.

இரண்டும் கலந்த தியாகி இராமாயணமோ இன்றுள்ள பல வகையான தினசரி வாழ்க்கைப் போராட்டத்திடையே, பத்திரிகை நடத்தும் பொறுப்பிடையே, வாரா வாரம் எழுதப் பெற்றது. இவற்றிடையே அச்சிடப் பெற்றது. ஆகையால் தவறுகளை விலக்க வேண்டிய முயற்சி செய்தும் பல தவறுகள் மறைந்து கொண்டிருக்கலாம். இதைக் கண்ணுறும் அறிஞர்கள் இவற்றை எடுத்துக் காட்டுவார்களாகில் நன்றியறிதலோடு அடுத்த பதிப்பில் திருத்தப் பெறும். இதை வெளியிட பல வகையில் உதவி செய்த அனைவருக்கும் நன்றி உரியது.

தவிர, பிரசித்தி பெற்ற துளஸிதாஸ் இராமாயணத்தையும் இத்துடன் கலந்து தமிழ் நாட்டில் ஸ்ரீ இராமாயணத் திரிவேணி பிரவஹிக்கும்படி ஸ்ரீ பகவான் அருள் செய்வாராக.

தமிழ் நாடு இந்த முயற்சியை ஆதரிக்கும்படி பிரார்த்திக்கிறேன்.

இராம-சடகோபன்.

ஸ்ரீ ராமஜெயம்

தியான ச்லோகங்கள்

விஷ்வக்ஸேனர்

சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசி வர்ணம் சதுர்புஜம்
ப்ரஸன்ன வதனம் த்யாயேத் ஸர்வ விக்னோப சாந்தயே

ஆதிகவி வால்மீகி

கூஜந்தம் ராம ராமேதி மதுரம் மதுராக்ஷரம்
ஆருஹ்ய கவிதா சாகாம் வந்தே வால்மீகி கோகிலம்

மாருதி

அஞ்சனா நந்தனம் வீரம் ஜானகீ சோக நாசனம்
கபீசம் அக்ஷ ஹந்தாரம் வந்தே லங்கா பயங்கரம்

யத்ர யத்ர ரகுநாத கீர்த்தனம் தத்ர தத்ர க்ருதமஸ்த
காஞ்சலிம்
பாஷ்ப வாரி பூரிபூர்ண லோசனம் மாருதிம் நமத
ராக்ஷஸாந்தகம்

ஸ்ரீ பட்டாபிராமர்

வைதேஹி ஸஹிதம் ஸுரத்ருமதலே ஹைமே மஹா
மண்டபே
மத்யே புஷ்பக மாஸனே மணிமயே வீராஸனே ஸுஸ்திதம்
அக்ரே வாசயதி ப்ரபஞ்சன ஸுதே தத்வம் முனிப்ய: பரம்
வ்யாக்யாந்தம் பரதாதிபி: பரிவ்ருதம் ராமம் பஜே ச்யாமளம்

ஸ்ரீ

காப்பு

நம்மாழ்வார்

தருகை நீண்ட தயரதன் தான்தரு
இருகை வேழத் திராகவன் தன்கதை
திரிகை வேலைத் தரைமிசைச் செப்பிடக்
குருகை நாதன் குரைகழல் காப்பதே.

மாருதி

அஞ்சிலே ஒன்று பெற்றான் அஞ்சிலே ஒன்றைத் தாவி
அஞ்சிலே ஒன்று ஆறாக ஆரியர்க் காக ஏகி
அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கைக்கண் டயலார் ஊரில்
அஞ்சிலே ஒன்றை வைத்தான் அவனம்மை அளித்துக்
காப்பான்.

ஸரஸ்வதி

புத்தகம் படிக மாலை குண்டிகை பொருள்சேர் ஞான
வித்தகம் தரித்த செங்கை விமலையை அமலை தன்னை
மொய்த்த கொந் தளகபார முகிழ்முகைத் தவளமேனி
மைத்தகு கருங்கட் செவ்வாய் அணங்கினை வணங்கல்
செய்வாம்—*(கம்பர்)*

சரித மகிமை

அன்பிலா நெஞ்சத் தார்ந்த அறிவிலா அடியேன் புன்சொல்
என்பெலாம் உருக ஏற்று இனியதே என்பாராகில்
வம்புலாம் ராமன் காதை மகிமை யார் வழுத்தற் பாலார்
கம்பர்வால் மீகி தீந்தேன் கவிதையில் களிக்க லாமே.
(இராம-சடகோபன்)

ஸ்ரீ:

தியாகி இராமாயணம்,

சுந்தர காண்டம்.

1. அத்தியாயம்.

ஸ்ரீ பகவானருள்

ஸ்ரீ பகவானுடைய அருளினால் தான் எல்லாக் காரியங்களும் நடைபெறுகின்றன. மனிதன் கருவியாக மட்டும் இருக்கிறான். இவனே கர்த்தா இல்லை. தன்னைத்தானே கர்த்தா என்று எண்ணிக் கொண்டு தான் தடுமாற்றம் எல்லாம் அடைகிறான்.

விளக்கு எரிதல், விசிறி ஆடுதல், யந்திரம் ஓடுதல், சமையல் செய்தல் முதலான பல காரியங்களையும் ஒரே மின்சார சக்தி செய்கிறது. இந்த சக்தியைக் கண்ணால் காண முடியாது. ஆனால் இதன் காரியங்களைக் கண்ணால் பார்க்கிறோம்.

இப்படியே மனிதர்கள், மிருகங்கள், பறவைகள், ஊர்வன, நீர் வாழ்வன, தாவரங்கள் முதலான எல்லா ஜீவர்களுக்குள்ளும் ஒரே தெய்வ சக்தி ஊடுருவித் தாங்கி நின்று இயக்குகின்றது.

மின்சார சக்தியின் மூலத்தைக் கண்டவர், வேலை பலவாயினும் சக்தி ஒன்று தான் என்று உணர்கிறார். உலகத்தின் மூலத்தைக் கண்டவர், தோற்றம் பலவாயினும் அடிப்படையான பொருள் ஒன்றுதான் என்று உணர்கிறார்.

தெய்வத்தின் இயக்கத்தைக் கண்டவருக்கு நான் இயக்குகிறேன் என்ற எண்ணம் விலகிப்போகிறது. எல்லாம் தெய்வச் செயலாக விளங்குகிறது. அந்தச் சக்தியின்றி ஒன்றும் இயங்காது என்று தெளிவாகிறது. தான் செய்யும் ஒவ்வொரு காரியமும் தெய்வத்தின் அருளால் என்று விளங்குகிறது. ஆகவே, காரியம் தொடங்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படும்போது, அதை இயக்குகின்ற தெய்வ சக்தியைச் சிந்தித்தே தொடங்குவது சகஜமாகிறது. இதில் இன்னும் ஊறித் திடப்பட்டவர்கள் வேலை செய்து கொண்டிருக்கும் போதும், இயக்குகின்ற சக்தியை மறவாமலே இயங்குகின்றார்கள். இதை பிரம்ம கர்ம சமாதி என்று சொல்லுகிறார்கள். காரியம் முற்றிலும் தெய்வ சக்தியை மறவாமல் இருக்க முடியாதவர்கள், ஆரம்பத்திலாவது அந்தச் சக்தியைச் சிந்திக்கலாம் அல்லவா? ஆகவே, எந்தக் காரியம் ஆரம்பித்தாலும் தெய்வத்தைச் சிந்தித்து வணங்குவது, இந்த தெய்விக நாட்டின் பரம்பரைப் பழக்கமாக இருக்கிறது.

ஒவ்வொரு காண்டம் ஆரம்பிக்கும் போதும் கம்பர் தெய்வ வணக்கம் செலுத்துகிறார். சாத்தியமான எல்லா இடத்திலும் தெய்வ சக்தியைப் புகழ்ந்து நமது பக்தியைப் பெருக்குகிறார்.

சுந்தர காண்டத்தை ஆரம்பிக்கும் போது கம்பர் மிக அழகான காப்புப் பாட்டுப் பாடுகிறார். இராமர் யாரென்று ஆரம்பிக்கும் போதே, எப்படி இராம பக்தியை ஊட்டுகிறார், பாருங்கள்!

அலங்கலில் தோன்றும் பொய்ம்மை
அரவெனப் பூதம் ஐந்தும்
விலங்கிய விகாரப் பாட்டின்
வேறுபா டுற்ற வீக்கம்
கலங்குவ தெவரைக் கண்டால்
அவரென்பர் கைவில் ஏந்தி
இலங்கையில் பொருதார் அன்றே
மறைகளுக் கிறுதி யாவார்.

பழுதை கிடக்கிறது. இதைக் கண்டு பாம் பென்று மனிதன் மயங்கிப் பயமடைகிறான். வெளிச் சத்தைக்கொண்டு பழுதையைப் பழுதை யென்று கண்டு தெளிவடைகிறான். இது போல உலகத்தில் பல தோற்றங்கள் காணப்படுகின்றன. இவை யாவும் மண், தண்ணீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்ற பஞ்ச பூதங்களால் ஆனவை. இவற்றில் மனிதன் மயங்கிக் கிடக்கிறான். இந்த மயக்கம் எப்பொழுது தெளியும்? மூலப்பொருளைக் கண்டால் தான். அந்த மூலப்பொருள் யார்? கையில் வில்லேந்தி இலங்கை யில் அக்ரமத்தை அழித்து தர்ம தேவதையைச் சிறை மீட்ட இராமர்தான்; வேதத்தில் துணிந்த பொருள் இராமர்தான் என்று கூறி மனிதனுடைய மயக்கம் தெளிவதற்கு தெய்வ பக்தி, அதாவது இரா மர் பக்தி வேண்டும் என்று நிரூபிக்கிறார்.

இராமாயணத்திலேயே மிக மேலான பாகம் சுந் தர காண்டம் என்று கொண்டாடுகிறார்கள். பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரண்ய காண்

டம், கிஷ்கிந்தா காண்டம், யுத்த காண்டம், உத்தர காண்டம் என்ற இதர காண்டங்கள், இராமர் சம்பந்தமாகவே பெயரிடப் பட்டிருக்கின்றன. இராமர் பாலனுயிருந்த காலத்தைப் பற்றியது பால காண்டம். அயோத்தியில் இராமர் இருந்த போது நடந்த சம்பவங்களைக் குறிப்பிடுவது அயோத்தியா காண்டம். காட்டில் வசித்தபோது ஆரண்ய காண்டம். கிஷ்கிந்தைக்கு வந்தபோது கிஷ்கிந்தா காண்டம். யுத்தம் செய்த போது யுத்த காண்டம். பட்டாபிஷேகத்திற்குப் பிறகு நடந்தது உத்தர காண்டம்.

இடையில் சுந்தர காண்டத்தில், இராமர் சரித்திரம் அதிகம் இல்லை. ஆனால் இராமருடைய தர்ம பத்னி சீதையின் மகத்தான குண விசேஷங்கள் வெளியாகின்றன. மாருதியின் பெருமை அதிகமாக வெளியாகிறது. அதாவது இராம பக்தர்களுடைய சரித்திரம் வெளியாகிறது. அன்புள்ள மனைவியும், அறிவும் அன்புமுள்ள ஊழியனும் வெளியாகிறார்கள். இவர்கள் எப்படியெல்லாம் இராமரையே சிந்தித்து, அவருக்காகவே உயிர் வாழ்ந்து, அவருக்காகவே வேலை செய்தார்கள் என்று தெளிவாகிறது.

நாம் எல்லாம் இராமராவது எளிதல்ல. ஆனால் இராம பக்தராகலாம். இதற்கு வழி காட்டும் பக்தர் சரித்திரம் நமக்கு முக்கியமானது. ஆகையால் சுந்தர காண்டம் மிக முக்கியமானதாகக் கொண்டாடப்படுகிறது. சுந்தரம் என்றால் அழகு என்று பொருள். இதில் என்ன அழகு இருக்கிறது? பதிவிரதையான பக்தை, பிரம்மசாரியான பக்தன் இவர்கள் கடுமையான சோதனைகளில், எப்படி கொஞ்சமும் ஏமாந்து விடாமல், இராமரை மறவாமல், தங்களுக்கு அழியாத புகழையும், உலகத்திற்கு சாச்வதமான நன்மையையும் சம்பாதித்தார்கள் என்று இந்த பாகம் விளக்கி, ஆணுக்கும் பெண்ணுக்கும் வழி

காட்டி இராமருடைய பக்தியில் ஈடுபடுத்துகிறது. எத்தனையோ நல்ல காரணங்களால் இதற்கு சுந்தர காண்டம் என்று பெயரிடப் பட்டிருக்கிறது. இராமாயணத்தை தினந்தோறும் பாராயணம் செய்பவர் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். இது சாத்திய மில்லாதவர்கள் சுந்தர காண்டத்தைத் திருப்பித் திருப் பிப் பாராயணம் செய்து கொண்டே இருக்கிறார் கள். இஷ்டசித்தி வேண்டுபவரும், பேராபத்தில் தவிப் பவரும் சுந்தர காண்டத்தை மட்டும் தனியே முறை யாகப் படித்து நன்மை படைகிறார்கள்.

இராமாயணம் கொண்டாடப் பெறுகிறது. சுந்தரகாண்டம் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெறுகிறது.

2. அத்தியாயம்.

பாய்ந்தார் மாருதி

சுந்தர காண்டத்தில் பெரும்பாலும் மாருதி செய்த அரும் பெரும் காரியங்களே விளக்கப் படுகின்றன.

மாருதியின் பெருங் காரியங்களில் முதல்தர மானது, 100 யோஜனை விஸ்தீரணமுள்ள ஸமுத்தி ரத்தைக் கடந்ததுதான்.

வேறு யாரும் மனதால்கூட நினைக்க முடியாத இந்த மகத்தான காரியத்தைச் செய்ய ஆரம்பிக்கும் போது, மாருதி தெய்வ வணக்கம் செய்வது எவ்வளவு அவசியம் பாருங்கள்.

ஜீவனுடைய அறிவு கண்டமானது. சக்தி அளவுடையது. தெய்வத்தின் அறிவு அகண்டமானது. சக்தியும் அளவற்றது.

தன்னையே நம்பி வேலை செய்கிற ஜீவனுக்கு ஓரளவுடைய சக்தியும் புத்தியும்தான் இருக்கிறது.

தன்னைத் தெய்வத்தில் கரைத்து, அந்த தெய்வ சக்தியை நம்பி வேலை செய்கிறவருக்கு அளவற்ற அறிவும் ஆற்றலும் அந்த தெய்வத்தினிடத்திலிருந்து பிரவகிப்பதற்கு வழி திறக்கப்படுகிறது. மாருதியும் அந்த தெய்வ சக்தி பாய்வதற்கு வழி திறக்கிறார்.

ஸ ஸூர்யாய மஹேந்த்ராய பவனாய ஸ்வயம்புவே
பூதேப்யச் சாஞ்சலிம் க்ருத்வா சகார கமனே மதிம்

சூரியன், இந்திரன், வாயுபகவான், பிரம்மா, பூதங்கள் முதலானவரை நினைந்து, கை கூப்பி வணங்கினார். பிறகு புறப்பட நினைத்தார்.

குழந்தைப் பருவத்திலேயே உண்ணத்தக்க கனி யென்று கருதி மாருதி, சூரியன் மீது தாவினார். இந்திரனுடைய வஜ்ராயுதத்தால் அடிபட்டு பிரம்மாவால் வரங்கள் பெற்றார். பிறகு அந்த சூரியனே மாருதிக்கு ஆசாரியன் ஆனார். இவரது உயிருக்கு உயிரானார். ஆகவே மாருதி முதலில் தனது குரு, சூரியனைத் தியானிக்கிறார்.

எல்லாரையும் காட்டிலும் குரு பெரியவர். வெறும் முரட்டு பக்தியாயில்லாமல் அறிவுடைய பக்தியா யிருந்தால் குரு பக்தியைக் காட்டிலும் சிறந்த தில்லை. குரு பக்தியால் சாதிக்கக் கூடாதது மில்லை. ஆகையால் மாருதி முதலில் தனது குருவை நினைந்து வணங்கினர்.

வஜ்ராயுதத்தால் தன்னோடு பலப் பரிக்ஷை செய்த தேவராஜன் இந்திரனை வணங்கினர்.

தன்னை வேண்டுமென்று அன்போடு பெற்றெடுத்த தந்தையை வணங்கினர். பின்னும் உலகத் தந்தையாய், பிதாமகனாய், ஸ்வயம்புவாய் நிறைந்தவரும், தனக்கு அளவற்ற வரங்கள் அளித்தவருமான பிரம்மாவையும், பூதங்களையும் வணங்கினர்.

கிழக்கு முகமாகத் திரும்பித் தன்னைப் பெற்றெடுத்த தந்தையை மீண்டும் வணங்கி, மிக வாமர்த்திய முடைய மாருதி தென் திசையில் செல்ல எண்ணினர்.

கடல் கடக்கத் தக்க உடல் வளர்த்த மாருதி, தனது பிரம்மாண்டமான விச்வ ரூபத்தோடு, சூரிய சந்திரர் போன்ற கண்களோடு அந்த மலைமேல் நிற்கிறார். எங்கும் சுற்றிப் பார்க்கிறார்.

அவர் கண் தேவ லோகத்தில் விழுந்தது. அங்கு சீதை இல்லை யென்று கண்டார். இலங்கையை நோக்கினர். அவருக்கு சிறிது சீற்றமும் ஆத்திரமும் உண்டாயிற்று.

கண்டனன் இலங்கை மூதூர்க்
கடிபொழில் கனக நாஞ்சில்
மண்டில மதிலுங் கொற்ற
வாயிலும் மணியிற் செய்த

மாருதி ஆகாயத்தில் பாய எண்ணினார். காற்றை இருதயத்தில் நிறுத்தி "தம்" பிடித்தார். பாய்கிறார். எப்படி?

வால் விசைத் தெடுத்து வன்றாள்
மடக்கிமார் பொடுக்கி மானத்
தோள் விசைத் துணைகள் பொங்கக்
கழுத்தினைச் சுருக்கித் தூண்டும்
கால்விசைத் தடக்கை நீட்டிக்
கட்புலன் கதுவா வண்ணம்
மேல் விசைத் தெழுந்தான் உச்சி
விரிஞ்சனூ டுரிஞ்ச வீரன்.

மாருதி வாலை யடித்து மேலே தூக்கினார். பாதுடைய கால்களை மடக்கினார். மார்பை ஒடுக்கினார். மலைபோன்ற தோள்கள் பொங்கக் கழுத்தினைச் சுருக்கினார். கையை முன்னே நீட்டினார். யாரும் கண் கொண்டு காண முடியாத வேகத்தில் மேலே உந்தி ஆகாயத்தில் பாய்ந்தார்.

3. அத்தியாயம்.

அமுக்குவாம் இன்னும் என்ன!

தாவினார் மாருதி. ஆழமான கருங்கடல் மீது எல்லையற்ற ஆகாயத்தில் பாய்ந்தார். என்ன நடக்கும் என்பதைப் பற்றி அவர் கொஞ்சம் கூட லக்ஷியம் செய்ய வில்லை. சிறிது கூட சிரமம் இல்லாமல்

ஆகாயத்தில் செல்லும் கருடனைகத் தன்னை மதித் தார் அளவற்ற உற்சாகம், பலம், பூரிப்போடு போகிறார்.

இவரோடு இவர் வேகத்தால் மரங்கள் எழுந் தன. குன்றுகளும், குன்றனைய யானைகளும் எழுந் தன. சீதையைக் காணவும், இராம காரியத்தை நிறைவேற்றவும் இவைகளுக்கும் ஆசை உண்டாகி விட்டது போலும்!

வெகுதூரம் ஊருக்குப் போவோரை பந்துக் களும் நண்பர்களும் தொடர்ந்து போகவில்லையா?

அரசன் புறப்படும் பொழுது சேனைகளும் பரி வாரங்களும் அவனைத் தொடர்ந்து சூழ்ந்து செல்ல வில்லையா?

இப்படியே மரங்களும் குன்றுகளும் மாருதி யைத் தொடர்ந்து சென்றன. இவற்றின் மத்தியில் மாருதி செல்லும் காட்சி மிக அற்புதமாயிருந்தது.

ஆனால் பிறர் சக்திகொண்டு எவ்வளவு தூரம் பறக்க முடியும்? ஆகையால் மரங்களும் மலைகளும் பொத் துப் பொத்தென்று கடலில் விழுந்தன. மரங்களி லிருந்து உதிர்ந்த நானா விதமான புஷ்பங்கள் எல் லாம் சமுத்திரத்தில் மிதந்தன.

விதம் விதமான நிறமுடைய புஷ்பங்கள் மிதக்கும் அந்த நீலக் கடல்

தாராபி ரபி ராமாபி ருதிதாபி ரிவாம்பரம்

அழகான நக்ஷத்திரங்களோடு விளங்கும் நீல வானம்போல் அற்புதமாகக் காணப்பட்டது.

மாருதி தாவும் காற்று வேகத்தால் சமுத்திரம் பிளந்தது. மீன்கள் துடித்தன. அலைகள் முன்னோடி இலங்கை மீது தவழ்ந்தன.

ஆகாயத்தில் செல்லும் மாருதியை மனக்கண்ணால் கண்டார் கம்பர். இந்தக் காட்சியை வருணித்து உபமானம் சொல்ல எண்ணுகிருர். மூளை வெகு வேகமாகப் பறக்கிறது. உபமானங்களைக் கொட்டுகிருர்.

விண்ணவர் ஏத்த வேத
முனிவரர் வியந்து வாழ்த்த
மண்ணவர் இறைஞ்சச் செல்லும்
மாருதி மறமுட் கூர
அண்ணல்வா ளரக்கன் தன்னை
அமுக்குவாம் இன்னும் என்ன
கண்ணுதல் ஒழியச் செல்லும்
கைலையங் கிரியு மொத்தான்.

இராம காரியம், தேவ காரியம் அல்லவா? இராம காரியத்தைச் செய்யும் மாருதி தேவ காரியத்தை அல்லவா செய்கிருர்? ஆகையால் தேவர்கள் அவரை நன்றியோடு தோத்திரஞ் செய்கிருர்கள்.

இது மகரிஷிகளுக்கும் சொந்தமான காரியந் தானே. எனவே வேத முனிவர்கள் இவரைக் கண்டு சந்தோஷத்தோடும் ஆச்சர்யத்தோடும் மங்களாசாஸனம் செய்கிருர்கள். பூலோக வாஸிகள் வணங்கி வணங்கி வாழ்த்துகிருர்கள். மாருதி மேலும் மேலும் போய்க் கொண்டிருக்கிருர். இந்தக் காட்சி எப்படி இருக்கிறது?

முன்னொரு சமயம் இராவணன் கைலையங்கிரியைப் பெயர்த்தான். மலை நடுங்கியது. பார்வதி

தேவி நடுங்கிப் பரம சிவனை அடைந்தாள். அப்பொழுது ஈச்வரன் தனது கால் கட்டை விரலால் மலையை அழுத்தினார். இராவணன் மலையடியில் அகப்பட்டுக் கொண்டான். பொறியில் அகப்பட்ட எலி போல், கிச் கிச் என்று கத்தினான்.

இப்பொழுது மற்றொரு உத்தமி, ஸாக்ஷாத் லோக மாதா ஸ்ரீ லக்ஷ்மி தேவியைப் போன்ற ஸீதா தேவிக்கு உபத்ரவம் உண்டாக்கினான். துளிர்த்துப் போன இந்தத் துஷ்டப் பயல் இராவணனை மீண்டும் ஒரு முறை அமுக்குவோம் என்று கைலமலை புறப்பட்டுப் போவது போலிருந்ததாம். அன்றியும்—

தடக்கைநா லைந்து பத்துத்
தலைகளும் உடையான் தானே
அடக்கினும் புலன்கள் வென்ற
தவப்பயன் அறுதலோடும்
கெடக்குறி யாக மாகம்
கிழக்கெழு வழக்கு நீங்கி
வடக்கெழுந் திலங்கை செல்லும்
பரிதிவா னவனு மொத்தான்.

பத்துத் தலைகளும் இருபது தோள்களும் உடைய இராவணன் பொறி புலன்களை ஒடுக்கி நீண்ட காலம் தவம் செய்தான். தன் தலைகளை அறுத்து அக்னியில் ஆகுதி செய்து யாகம் செய்தான். இந்தப் புண்ணியத்தால் பெரும் போகத்தைப் பெற்றான். இலங்கை ராஜதானி, மூன்று லோக ஆதிபத்தியம், புஷ்பக விமானம், முதலியன பெற்றுத் தேவர்களை ஏவல் கொண்டான். அந்தப் புண்ணியத்தின் களஞ்சியம் வறண்டு விட்டது போலும். அவனது வீழ்ச்சி நெருங்கி விட்டது. உலகத்தில் இப்படிப் பெருங் காரியங்கள் நிகழ்வதற்கு முன் உத்பாதங்கள், அறி

குறிகள் தோன்றும். இயற்கைக்கு மாருன காரியங்கள் நடைபெறும்.

எப்பொழுதும் கிழக்கே உதிக்கும் சூரியன் இராவணன் வீழ்ச்சியை அறிவிக்கும் உத்பாதமாக வடக்கே உதித்துத் தெற்கே போவது போல், மாருதி செல்லும் காட்சி தோற்றம் அளித்தது என்கிருர் கம்பர்.

மாருதி கைகள் இரண்டும் ஐந்து தலை நாகம் போல் சீறிக் கொண்டு சென்றன.

சந்திரன் மேக மண்டலங்களில் மறைந்து மறைந்து வெளிப்படக் காணகிருேம். இப்படியே மாருதியும் மேகங்களிடையே மறைந்து மறைந்து தோன்றினர்.

வீர மாருதி போகிருர். வாலும் தொடர்ந்து போகிறது. எப்படி?

......................விண்டு
காலினுலளந்த வான
முகட்டையும் கடக்கக் கால
வாலினுல் அளந்தா னென்று
வானவர் மருளச் சென்ருன்.

'பகவான் விஷ்ணு திரிவிக்ரம அவதாரம் எடுத்த போது வானுலகத்தை யெல்லாம் தன் காலாலே அளந்தார். அடடா! மாருதி அதை இதோ வாலாலே அளந்தாரே' என்று தேவர்கள் மருளும்படி போகிருர். அன்றியும்—

விளித்துப்பின் வேலை தாவும்
வீரன் வால், வேத மெய்க்கும்
அளித்துப்பின் அனுமன் என்னும்
அறந்துணை பெற்ற தாயும்,
களித்துப்புன் தொழில்மேல் நின்ற
அரக்கர்கண் ணுறுவ ராமென்
றொளித்துப்பின் செல்லுங் கால
பாசத்தை ஒத்ததன்றே!

வீரரான மாருதியின் வால், கால பாசம் புறப்பட்டது போலிருந்ததாம். இது ஏன் புறப்பட்டது? தடுமாறுகின்ற ஸத்யத்தைக் காக்கும் தயை கொண்டு புறப்பட்டது. அனுமானுகிய தருமத்தைத் துணை கொண்டு புறப்பட்டது. ஆனுல் சமயம் வருவதற்கு முன் அரக்கர்கள் தன்னைக் கண்டு விடாமல், அந்த கால பாசம் மாருதியின் பின்புறம் ஒளிந்து கொண்டு போவது போல் விளங்கியது அந்த வீர வால்.

மாருதி போகும் வேகத்தால் திமிங்கிலங்களும் திமிங்கில கிலங்களும் மாண்டு மிதந்தன. மாருதி இப்படிப் போய்க் கொண்டிருக்கிறுர்.

தீரமான நல்ல காரியத்தை செய்யப் பலருக்கும் எண்ண மிருந்தாலும், துணிந்து முன்னுக்கு வருபவர் இரண்டொருவரே. ஒருவர் முன்னுக்கு வந்து வழிகாட்டத் துணிந்தால் பலரும் கட்டாயம் பக்க உதவி செய்வார்கள். இதோ இயற்கைத் தேவியே உதவி செய்கிறுள்.

ததாப ந ஹி தம் ஸூர்ய: ப்லவந்தம் வான ரோத்தமம்
ஸிஷேவே ச ததா வாயு ராம கார்யார்த்த ஸித்தயே

தாவிப் போகும் வானரோத்தமரை வெங்கதிருடைய சூரியனும் சுடவில்லை. சூரிய கிரணங்கள்

சுகமாக அவர் மீது விழுந்தன. காற்றும் இராம காரியம் நிறைவேறும் பொருட்டு இனிமையாகவும் இவருக்கு அனுகூலமாகவும் வீசியது. அன்றியும் மாருதிக்கு மற்றொரு பேருதவியும் எதிர்ப்பட்டது. அது என்ன ?

4. அத்தியாயம்.

அன்பிலும் உண்டோ அமுது?

இயற்கைத் தேவியின் இன்பக் கரங்களில் தவழ்ந்து போகும் மாருதி, திடீரென்று கடலிலிருந்து ஒரு மலை கிளம்பி தன் வழிக்கெதிரே நிற்பதைக் கண்டார் !

என்ன தோன்றும்? ஏதோ இடையூறு என்று தான் எண்ண முண்டாகும். மாருதி அப்படித் தான் எண்ணினர். இதைக் கண்டு அஞ்சுபவரா மாருதி? இல்லை, இல்லை.

இடங்கெட வெவ்வா யூறு கிடைத்தால் இடையாதீர் !

"இடையூற்றைக் கண்டு அஞ்சாதவர்" என்று ஜாம்பவந்தர் சொல்லியிருக்க வில்லையா? உண்மையாகவே இடையூறு வரவரத்தான் வீரர்களுடைய

வீரமும் அறிவாளிகளுடைய அறிவும் சுடர்விட்டுப் பிரகாசிக்கிறது. நெருப்பில் போடப் போடத் தங்கம் பிரகாசிக்க வில்லையா? இப்படியே மாருதியும் உற்சாகம் கொண்டார். என்ன செய்தார்?

உரஸா பாதயாமாஸ ஜீமூதம் இவ மாருத:

மஹா வேகமாகப் போகும் போதே மாருதி தனது மார்பாலே அந்த மலையை இடித்து வீழ்த்தினார்! காற்று மேகத்தை விழ்த்துவது போல.

அந்த மலை உருட்டி அடித்துக் கொண்டு வீழ்ந்தது. ஆனால் கோபம் அடையவில்லை. சந்தோஷமே அடைந்தது. எதிரியா யிருந்தாலும், அவனுடைய வீரச் செயல் நமக்கு சந்தோஷத்தை உண்டாக்குகிறது. ஆனால் அந்த மலை எதிரியாக வரவில்லையே. அன்புடனேயே வந்தது. ஆகவே நண்பனுடைய பலமும் வீரமும் எவ்வளவு சந்தோஷத்தை உண்டாக்கும்?

சந்தோஷத்தோடும் உற்சாகத்தோடும் அந்த மலை மீண்டும் மேலே கிளம்பியது. அந்த மலையின் சிகரத்தில் ஒரு மனிதன் தோன்றினார். தெளிவான குரலில் பேசுகிறார்.

"எந்தாய்! நான் விரோதி யல்ல. உமது நண்பன். உமக்கு உதவி செய்ய சமுத்ர ராஜன் என்னை அனுப்பினார். நீர் இராம காரியம் செய்யப் போகிறீர். அந்த இராம வம்சத்துக்கு ஸமுத்ர ராஜன் கடமைப் பட்டிருக்கிறார். இராமருடைய மூதாதை, பிரஸித்தி பெற்ற ஸகரச் சக்ரவர்த்தியின் பிள்ளைகளால் இந்த ஸமுத்திரங்கள் தோண்டப் பட்டன. ஆகையால் தான் ஸாகரம் என்று பெயர். அந்த வம்ச திலகரான இராமருக்கு உதவி செய்யப் போகும் உமக்கு

உதவி செய்யும்படி, அந்த மகாத்மாவான ஸமுத்ர ராஜன் எனக்கு ஆணையிட்டார். என் மீது சிறிது தங்கி இளைப்பாறி, காய்கனிகள் உண்டு சந்தோஷமாக புறப்பட்டுப் போகலாம்.

அன்றியும் நானே உமக்கு கடமைப் பட்டவன். உமது தந்தையால் இன்று நான் நல்ல நிலையில் உயிர் வாழ்கிறேன்.

முற்காலத்தில் மலைகளுக்குச் சிறகிருந்தது. நாங்கள் வானில் பறந்தோம். மலை பறப்ப தென்றுல் எந்த நகரத்தின் மீது, எந்த ஜன சமூகத்தின் மீது எப்பொழுது இறங்கி நாசம் செய்யுமோ என்ற நடுக்கம் உண்டாயிற்று.

ஆகையால் இந்திரன் கோபித்து தனது வஜ்ராயுதத்தால் மலைகளின் சிறகுகளை அரிந்து ஆங்காங்கே வீழ்த்தினர். மைநாகன் என்ற நான் சிற கோடு வாழ ஆசை கொண்டு தப்பித்து ஓட முயற்சித்தேன். அப்போது உமது தந்தை தயா மூர்த்தியாகிய வாயு பகவான் எனக்கு உதவி செய்தார். வஜ்ராயுதத்தை ஓங்கிக்கொண்டு தேவ ராஜன் துரத்தும்போது, வாயு பகவான் என்னை இந்தக் கடலில் மூழ்க்கிக் காப்பாற்றினுர். சிறகிழந்த பக்ஷிபோல் நான் தத்தளித்து தவிக்காமல் காப்பாற்றிய உமது தந்தைக்கு நான் ஏழேழு ஜன்மமும் கடமைப் பட்டவன். உமக்கும் எனக்கும் இந்த ஸம்பந்தம் இருக்கிறது. உம்மைப் பூசிப்பதால் உமது தந்தை பூசிக்கப் படுகிறுர்.

ஆகையால் ஸமுத்திர ராஜனுடைய தூண்டுதலாலும் என் சொந்த ஆசையாலும் நான் உம்மை உபசரிக்க வந்திருக்கிறேன். எங்களுடைய வேண்டு

கோளுக் கிரங்கி, என்மீது தங்கி இளைப்பாறி எங்களைக் கிருதார்த்தராக்க வேண்டும்" என்று வேண்டினார்.

மாருதி இப்படி விருந்து செய்யும் அற்புதமான மலையையும், மலைமேல் நின்ற மனிதனையும் நோக்கி மனமகிழ்ந்தார். ஆனால் நல்லதென்று விருந்துக்கு உட்கார்ந்து விட்டாரா? இடையூறு வந்த போது வருந்தவும் இல்லை. உபசாரம் செய்யும் போது மகிழ்ந்து தன் கடமையை மறக்கவும் இல்லை. சொல்லுகிறார்.

த்வரதே கார்ய காலோ மே அஹச்சாப் யதி வர்த்ததே
ப்ரதிஞ்ஞா ச மயா தத்தா நஸ்தாதவ்யம் இஹாந்தரே

நண்பரே! வந்தனம். வேலை செய்யும் வேளை இது. கடமையே முக்கியம். பிறகு தான் உண்ணுதலும் இளைப் பாறுதலும். நான் பிரதிஞ்ஞை செய்து புறப்பட்டேன். ஆகவே வேலையை விட்டு நான் நிற்கக் கூடாது. என் மனம் வேலைமேல் பறக்கிறது. நீண்ட தூரம் போவதால் களைத்திருப்பேனென்றும், களைப்பாறுதல் அவசிய மென்றும் எண்ணுகிறீர்கள். அப்படியல்ல. நான் களைப்படைய வில்லை. ஏன்?

வருந்தேனது என் துணை வானவன் வைத்த காதல்
அருந்தேன் இனி யாதும் என் ஆசை நிரப்பினல்லால்
பெருந்தேன் மொழி சார நின்னன்பு பிணித்த போதே
இருந்தேன் நுகர்ந்தேன் இதி னூஉங் கினியீவ துண்டே?

தர்ம முணர்ந்த மைநாகமே! நான் களைப்படையாத காரணம் என் தெய்வம் என்மீது வைத்த கருணை தான். அந்தக் கருணை மூர்த்தியின் காரியத்தை நிறைவேற்றினாலொழிய என் மனம் நிம்மதி

அடையாது. ஆசை பூர்த்தி யாகாது. என் ஆசை பூர்த்தியாகாமல் நான் ஒன்றும் சாப்பிடவும் முடியாது.

அல்லாமலும் உமது அன்பமுதைப் பருகினேன். நீர் அன்போடு அளித்த ஆதரவும், உரைத்த மொழிகளும் என் உள்ளத்தை நிரப்பி, என் உடலையும் நிரப்பின. இன்னும் நீர் என்ன செய்ய வேண்டும்? இன்னும் நான் என்ன உண்ண வேண்டும்? ஆகா! இந்த அன்பான உபசரிப்பு வள்ளல்களுக்குள்ள அருங்குணமல்லவா?

முன்பிற் சிறந்தார் இடையுள்ளவர் காதல் முற்றப்
பின்பிற் சிறந்தார் குணம் நன்றிது பெற்ற யாக்கைக்(கு)
என்பிற் சிறந்தாயதொர் ஊற்றமுண் டென்னலாமே
அன்பிற் சிறந்தாயதொர் பூசனை யார்கண் உண்டே?

தலை வள்ளல்கள், இடை வள்ளல்கள், கடை வள்ளல்கள் என்று மூவகை.

தம்மிடம் வந்தவர் குறிப்புணர்ந்து அவர் கேட்காமல் கொடுப்பவர் தலை வள்ளல்கள்.

வேண்டினால் வேண்டியதைக் கொடுப்பவர் இடை வள்ளல்கள்.

தம்மைப் புகழ்ந்தால் கொடுப்பவர் கடை வள்ளல்கள்.

இவர்கள் அனைவரிடத்திலும், வந்த விருந்தாளிகளை அன்புடன் உபசரிக்கும் உயர்ந்த குணம் விளங்கியது.

அதிதி தேவோ பவ!

"விருந்தாளியைத் தெய்வமாக மதித்து நடந்து கொள்" என்று தைத்ரிய உபநிஷதம் கூறுகிறது.

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.

வீடு கட்டி வாழ்வ தெல்லாம் விருந்தாளிகளை உபசரித்து தருமம் செய்வதற்காகத் தான் என்று பெரியோர்கள் கூறுகிறார்கள். இல்லறம் செய்பவரிடமிருக்கும் இந்த உயர்ந்த தருமத்தை உம்மிடம் கண்டேன். மகிழ்ந்தேன்.

உடலுக்கு எலும்பு தான் ஆதாரம். பூசைக்கு, உபசாரத்திற்கு அன்பு தான் ஆதாரம். அன்பைக் காட்டிலும் வேறென்ன பூசை யிருக்கிறது? அன்பமுதைக் காட்டிலும் வேறு என்ன உயர்ந்த உணவு இருக்கிறது?

நீர் அன்பமுதை ஊட்டினீர். நான் உண்டேன். நமக்கு இருவருக்கும் பொதுவான இராம காரியம் நிற்கிறது. என் மனம் வேகப்படுகிறது. நீரும் விடை கொடும். திரும்புங்கால் சந்திக்கிறேன் என்று மாருதி வேகமாகப் பாய்ந்தார்.

5, அத்தியாயம்.

சோதனையில் வெற்றி

இப்படி உற்சாகத்தின் உச்சியில் பறந்து போகும் மாருதி தன் முன்னே பயங்கரமான கோர உருவமுடைய அரக்கி ஒருத்தி வாய் பிளந்து வழி மறித்து நிற்கக் கண்டார். "இவள் யார்?" என்று மாருதி சிந்திக்கும் முன்னம் அவளே தன்னை அறிவித்துக்கொண்டாள்.

தீயே எனலாய பசிப்பிணி
  தீர்த்தல் செய்வாய்
ஆயே விரைவுற்றனை
  அண்மினை வன்மையாள!
நீயே யினிவந்தென்
  நிணங்கொள் பிணங்கெயிற்றின்
வாயே புகுவாய் வழி மற்றிலை
  வாவின் என்றாள்.

'நீண்ட காலமாக நல்ல ஆகாரமின்றி இருக்கிறேன். நெருப்பைப் போல், கொள்ளித் தேள் போல் பசி என்னை வாட்டுகிறது. என் பசி தீர்க்கவே நீ வேகமாக வந்திருக்கிறாய். தெய்வமே உன்னைக் கொண்டு வந்து விட்டது. நான் உன்னை எடுத்து விழுங்கும் சிரமத்தைக் கொடுக்காமல் நீயே என் வாய்க்குள் புகுந்துவிடு. உனக்கு வேறு வழியும் கிடையாது. என் வாயில் புகுந்து தானாக

வேண்டும். இப்படியே எனக்குத் தெய்வ வரம் இருக்கிறது.' என்றாள்.

பசி என்று கேட்டவுடன், மாருதி இரக்கம் கொண்டார். சொல்லுகிறார்.

பெண்பால் ஒருநீ பசிப்பிணை
 ஒறுக்க நொந்தாய்
உண்பாய் எனதாக்கையை
 யானுதவற்கு நேர்வல்
விண் பாலவர் நாயகன்
 ஏவல் இழைத்து மீண்டால்
நண்பால் எனச் சொல்லிய
 நல்லறி வாளன் நக்கான்.

"பசி மிகக் கொடுமையானது. எல்லாருக்கும் பொதுவானது. நீயோ பெண்பால். தீவிர பசியால் வருந்துவதாகச் சொல்லுகிறாய். என்னைத் தின்ன விரும்புகிறாய். மிகவும் சந்தோஷம். என் உடம்பை உனக்கு ஆகாரமாகக் கொடுக்கிறேன். பிறருக்கு உபகாரமாக கடைசி வரை வாழ வேண்டும். பிறருக்கு உபகாரமாகவே உடலையும் தத்தம் செய்து விட வேண்டும். இது தான் சிறந்த தர்மம். உன்னுடைய பசிக்கு என்னுடைய உடல் உபயோகமாகிறதைப் பற்றி நான் சந்தோஷப் படுவேன்.

ஆனால் ஒரு விஷயம். நான் ஏற்கனவே ஒரு காரியத்தைச் செய்வதாக ஒத்துக் கொண்டிருக்கிறேன். இராம காரியமாக, சீதை இலங்கையில் இருக்கிறாளா என்று பார்த்துவர வானரத் தலைவன் என்னை அனுப்பி இருக்கிறார். இந்த வேலையைச் செய்ய நான் ஒத்துக் கொண்டிருக்கிறேன். அந்த நல்ல காரியம் நிறைவேற வேண்டும். ஏற்கனவே

நான் செய்த பிரதிக்ஞை நிறைவேற வேண்டும். ஒருவன் தொட்ட காரியத்தை விட்டு, மற்ற காரியத்தைத் தொடுவது முறையாகாது.

ஆகையால் கொஞ்சம் பொறு. நானே உனக்கு ஆகாரமாகிறேன். இலங்கைக்குச் சென்று சீதா தேவியைக் கண்டு, இராமருக்கு சந்தோஷ சமாசாரத்தை அறிவித்து விட்டு உடனே உன் வாய்க்குக் கவளமாக ஓடி வருகிறேன். நீ நன்ருக ருசியோடு என்னை மென்று தின்னலாம். ஆகாரம் கிடைக்காமலே இவ்வளவு நாள் கஷ்டப்பட்டாய். கைக்கு எட்டியது வாய்க்கு எட்டுகிற வரையில் கொஞ்சம் பொறுத்திரு. இதனால் அந்தப் புண்ணிய மூர்த்தி இராமருக்கு நீயும் உதவி செய்தவளாகிருய். உனக்குப் புண்ணியமும் கிடைக்கும். ஆகாரமும் கிடைக்கும். கொஞ்சம் வழி விடு. நான் வேகமாகப் போகவேண்டும்', என்ருர்.

இவ்வளவு நயமாக இணங்கியும் அரக்கி இணங்கவில்லை. என் வாயில் புகுந்து தான் போக வேண்டும். இது எனக்கு பிரம்மா கொடுத்த வரம் என்று பிடிவாதம் பண்ணினுள்.

மாருதிக்குக் கோபம் வந்தது. "நல்லது, வல்லையாகில் என்னை நீ தின்னு. என் சரீரத்தை விழுங்கத் தக்க வாய் இருக்கிறதா?" என்று தன் உடலை பத்து யோஜனை விஸ்தீர்ணமுடையதாக வளர்த்தார்.

ஆனல் அந்த அரக்கி சாதாரணமானவள் அல்ல போலும். தன் வாயை இருபது யோஜனை வளர்த்தாள். மாருதி இளைத்தவரா? உடலை முப்பது யோஜனை பெருக்கினர். அவளோ வாயை நாற்பது யோஜனை பிளந்தாள். இப்படி 50, 60, 70, 80,

90, 100 என்று ஒருவருக் கொருவர் போட்டியிட்டுக்கொண்டு, உடலையும் வாயையும் வளர்த்துக் கொண்டே போயினர். அந்த ராக்ஷஸி 100 யோஜனை விஸ்தீர்ணம் வாயைப் பிளந்திருக்கிறாள்.

மகா மேதாவியான மாருதி பார்த்தார். அவளை வெல்ல எண்ணினார். திடீரென்று—

நீண்டான் உடனே சுருங்கா
நிமிர்வாள் வயிற்றின்
ஊண்டான் எனவுற் றெருயிர்ப்
புயிராத முன்னர்
மீண்டான், அது கண்டனர் விண்ணுறை
வோர்கள் எம்மை
ஆண்டான், வலனென்று அலர்தூவய்
நெடிதாசி சொன்னார்

மிகப் பெரியதாயிருந்த தன்னுடைய சரீரத்தை மிகச் சிறியதாகக் குறுக்கினார். மிகப் பெரியதாகத் திறந்திருக்கும் வாயிலும் வயிற்றிலும் ஒரு கவளம் போல திடீரென்று பிரவேசித்தார். எதிர் பாராத இந்த சம்பவத்தால் அரக்கிக்குப் பொறி தட்டிப் போயிற்று. என்ன நடந்தது, என்ன செய்வது என்று அவள் உணரும் முன், அவள் வாயை மூட நினைப்பதற்கு முன், மாருதி வயிற்றிலிருந்து வாய் வழியே மீண்டும் வெளியே வந்துவிட்டார். மிகத் தந்திரமாக அவளை வென்ற மேன்மையைக் கண்டு தேவர்களெல்லாம் புஷ்பமாரி பொழிந்தார்கள். ஆசீர்வாதம் பண்ணினார்கள். ஆகாயத்தின் மீது நிற்கிறார் மாருதி. சொல்லுகிறார்:—

ப்ரவிஷ்டோஸ்மி ஹி தே வக்த்ரம்
தாக்ஷாயணி நமோஸ்து தே
கமிஷ்யே யத்ர வைதேஹி
ஸத்யம் ஆஸீத் வரஸ் தவ.

'உன் வாயில் புகுந்து மீண்டேன். தாக்ஷாயணீ! உனக்கு நமஸ்காரம். உன்னுடைய வரமும் நிறைவேறி விட்டதல்லவா? நானும் சீதா தேவியைக் கண்டு என் பிரதிக்ஞையை நிறைவேற்றப் போகிறேன்' என்றார்.

என்ன ஆச்சரியம்! கோரமான அந்த அரக்கி ஒரு நாகப் பெண்ணாக மாறி நின்றாள். மாருதியை மனப்பூர்வமாக ஆசீர்வாதம் பண்ணினாள். சொல்லுகிறாள்—

"வானரோத்தமரே! நீர் சந்தோஷமாகச் செல்லும். ஸீதா தேவியைக் கண்டுவந்து ராமபிரானிடத்தில் சேர்த்து வையும். இதைச் சாதிக்கும் சக்தியும் புத்தியும் உமக்கு நிரம்ப இருக்கிறது. ஆனால் இதை நீர் உணராமலிருந்தீர். இலங்கைக்கு யார் போய் வருவதென்று வானரர்கள் கவலைப்பட்டபோதும், அவரவர் தத்தம் பலத்தை யெல்லாம் அளவிட்டுக் கூறியபோதும், நீர் வாய் திறவாமல் மூலையில் குந்தி இருந்தீர். பெரியவரான ஜாம்பவந்தர் உம்மை அழைத்து, உமது பலத்தை உணர்த்தி, இந்த தர்ம காரியத்தைச் செய்யும்படி ஊக்கி விட்டார். அதன் மீது நீர் உற்சாகமாகப் புறப்பட்டு இருக்கிறீர். ஆனாலும் உமது முழு சக்தியையும், புத்தியையும் இன்னும் நீர் உணரவில்லை என்று நினைத்த தேவர்கள் என்னை அனுப்பினார்கள். உமக்கு இடையூறு உண்டாக்கி, உமது பலத்தை உணர்த்தும்படி என்னைப் பிரார்த்தித்தார்கள். நானும் அவர்களிஷ்டப்படி கோரமான அரக்கி வடிவம் கொண்டு உம்மை பயமுறுத்தினேன். வேறு யாரும் இப்படி இதை சமாளித்திருக்க முடியாது. பெரிய சக்தியும், பெரிய புத்தியும் உம்மிடம் இருக்

கிறதென்பதை நிரூபித்து விட்டீர். இதை உணர்த்தத்தான் நான் வந்தேன். நீர் தந்திரமாக என்னை வெற்றி கொண்டது மல்லாமல், உண்மையில் நான் யாரென்று தெரிந்து என்னைப் பெயரிட்டு அழைத்து விட்டீர். உமது அறிவுக்கு நமஸ்காரம். நான் ஸுரஸை என்ற நாகப்பெண்தான். தருமமூர்த்தியாகிய இராம காரியம் உம்மால் இனிது நிறைவேறும். போய் வாரும்" என்று விடை கொடுத்தாள். மாருதியும் உற்சாகத்தோடு நமஸ்கரித்து விடைபெற்றுப் புறப்பட்டார்.

6. அத்தியாயம்.

ஓரே பரிகாரம்

கடலிலிருந்து மலை முளைத்துத் தன் தலைமீது இளைப்பாறிப் போகச் சொல்லுகிறது. கோர அரக்கியாக வழி மறித்தவள் ஸுரஸை என்னும் நாக மாதாவாக வாழ்த்தி வழிவிட்டுப் போகிறாள். எடுத்த காரியத்தில் எதிர்பாராத இந்த உதவிகள் மாருதி மனதில் உற்சாகத்தை உண்டாக்கின. நல்ல காரியம் செய்பவருக்கு இடையூறுகள் வரும். எதிர்பாராத பல உதவிகளும் வரும். இடையூறுகளில் இளைக்காமலும், உதவிகளில் மகிழாமலும் காரியத்தில் கண்ணுயிருப்பவரே வெற்றி பெறுவர்.

மாருதியும் காரியத்தில் கண்ணுகவே மேலும் மேலும் போய்க் கொண்டிருக்கிருர். இனிய தென்றல் வீசுகிறது.

மந்தார முந்து மகரந்தம்
  மணந்த வாடை
செந்தா மரை வாண் முகத்தில்
  செறிவேர் சிதைப்ப
தந்தாம் உலகத் திடை
  விஞ்சையர் பாணி தள்ளும்
கந்தார வீணைக் களிசெஞ்
  செவிக்காது நுங்க.

மாருதி வானளாவிப் போகிருர். தேவ லோகத்தில் இருக்கும் மந்தாரம், பாரிஜாதம் முதலிய தெய்விகப் புஷ்பங்களின் நறுமண மிருந்த வாடையை அள்ளிக்கொண்டு வந்து இனிய தென்றல், மாருதியின் செந்தாமரை முகத்தில் தோன்றும் சிறு சிறு வேர்வைத் துளிகளை மாற்றுகின்றது.

வித்தியாதரர்கள் பருந்தும் நிழலும் போல வீணையோடு கலந்து பாடும் இனிய கானம், மாருதியின் செவித்துளைகளில் வந்து நிரம்புகின்றது. இப்படி இயற்கையின் இன்பக் கரங்களால் தழுவப்பட்டு மேக மண்டலங்களில் அடிக்கடி மறைந்தும் வெளிப்பட்டும் வெகு வேகமாகப் போய்க்கொண்டிருக்கிருர்.

திடீரென்று இவர் வேகம் தடைப் பட்டது. நடு சமுத்திரத்தில், எதிர் காற்றில் அகப்பட்ட பெரிய கப்பலைப் போல் மாருதியின் வேகம் தடைப்பட்டது. 'ஆ! இது என்ன? எனது பராக்கிரமம் பங்கப் படுத்தப் பட்டது. இதற்குக் காரணம் யார்'? என்று மேலும் கீழும் நாலா பக்கமும் சுற்றிப் பார்த்தார்.

கடலிலிருந்து ஒரு பெரிய பிராணி மேலே கிளம்பி வருவதைக் கண்டார். வாயைப் பிளந்து கொண்டு வரும் அந்த கோர அரக்கியைக் கண்டு மாருதி சிந்தித்தார். 'ஓ! இவள் சுக்ரீவர் குறிப்பிட்ட சாயாக்கிரஹி போலும்' என்று உணர்ந்தார். தன் உடலை வளர்த்தார். வளருகின்ற மாருதியைக் கண்டு அரக்கியின் கோபம் வளர்ந்தது. பாதாள வாயிலைப் போல் வாயைப் பிளந்தாள். கோடையிடி போல் கர்ச்சித்தாள். மாருதியைத் துரத்தினாள். அமைதியாக மாருதி, "பெண்ணுருவே! நீ யார்?" என்றார். அவளுக்குக் கோபம் இன்னும் அதிகமாயிற்று. சொல்லுகிறாள்.

பெண்பா லெனக் கருது
பெற்றி ஒழி உற்றால்
விண்பா லவர்க்கு முயிர்
வீடுறுதன் மெய்யே
கண்பா லடுத்த உயிர்
காலன் வரு மேனும்
உண்பா னருத்திய(து)
ஒழிப்பரிய தென்றாள்.

'ஏ குரங்கே! என்னைப் பெண்ணென்று நினைக்கும் பேதமையை விட்டு ஒழி. என்னைக் கண்டால் தேவர்களும் நடுங்கி மாள்வார்கள். நிழலைப் பிடித்திழுத்து நான் உயிர்களை விழுங்கி விடுவேன். என் கண்ணில் கண்ட பொருளை எமன் வந்தாலும் மீட்டுக் கொண்டு போக முடியாது. நீ எங்கே தப்பப் போகிறாய்? நெடு நாளாக நான் பசியோடு இருக்கிறேன். உன்னுடைய பெரிய உடல் எனக்கு இன்று நல்ல விருந்தாகும்' என்று கர்ச்சித்து வாயைப் பிளந்து கொண்டு ஓடிவந்தாள். என்ன நடந்தது?

திறந்தா ளெயிற்றை அவள்
அண்ணலிடை சென்றான்

அறந்தா னரற்றிய(து)
அயர்த் தமரர் எய்த்தார்
இறந்தான் எனக் கோடோ
ரிமைப் பதனின் முன்னம்
பிறந்தா னெனப் பெரிய
கோளரி பெயர்ந்தான்

பிளந்திருந்த அவள் வாயில் மாருதி திடீரென்று உடலைச் சுருக்கிப் புகுந்தார். 'ஆ! இவள் கொடிய அரக்கியாயிற்றே. இவள் வாயிலிருந்து மாருதி எப்படித் தப்பி வருவா'ரென்று தருமதேவதை கதறியது. தேவர்கள் பயந்து மூர்ச்சையடைந்தனர். இறந்தார், இறந்தார் என்றே எண்ணிவிட்டனர். ஆனால் என்ன ஆச்சரியம்! கண்மூடிக் கண் திறப்பதற்குள் பிறந்தார், பிறந்தார் என வெளிப்பட்டார். தனது வைரம் பொருந்திய நகங்களால் அவளது இருதயத்தையும் குடலையும் பிடுங்கிக் கொண்டு வந்து விட்டார். அரக்கி மாண்டு விழுந்தாள். மாருதியின் மகத்தான இந்த வெற்றியைக் கண்டு ஆகாய வாசிகளெல்லாம் வாழ்த்தினர். கூறுகிறார்கள்—

யஸ்ய த்வேதானி சத்வாரி
வானரேந்த்ர யதா தவ
த்ருதிர் த்ருஷ்டி: மதிர் தாக்ஷ்யம்
ஸ்வகர்மஸு ந ஸீததி

"யாரிடத்தில் தைரிய மிருக்கிறதோ, தீர்க்க திருஷ்டி யிருக்கிறதோ, சிந்தனா சக்தியும் காரிய நிருவாக சாமர்த்தியமு மிருக்கிறதோ அவர் தம் காரியங்களில் கலங்க மாட்டார். வெற்றியோடு வெளி வருவார். மாருதி! உம்மிடத்தில் இந்த நான்கு குணங்களும் சிறந்து விளங்குகின்றன" என்று ஆகாய வாசிகள் மகிழ்ந்து புகழ்ந்தனர்.

மாருதியோ ஆகாயத்தில் கருடனைப் போல் போகிறார். ஆனால் அவர் தம் சாமர்த்தியத்தைப் பாராட்டிக் கொள்ள வில்லை. இந்த வெற்றிக் கெல்லாம் காரணம் தரும மூர்த்தியாகிற இராமரே என்று திட மான முடிவுக்கு வந்தார்.

ஊறுகடி தூறுவன ஊறிலற முன்னுத்
தேறிலி யரக்கர் புரி தீமையவை தீர
வேறுவகை யாண்டைய இராமனென எல்லாம்
மாறுமதின் மாறுபிறி(து) இல்லென வலித்தான்.

"இடையில் எத்தனை இடையூறுகள் வந்தாலும் சரி; அல்லது இடையூறு செய்வதையே தொழிலாகக் கொண்ட அரக்கர்கள் வாழ் இலங்கையில் எத்தனை தீமைகள் வந்தாலும் சரி; இவற்றிற் கெல்லாம் ஒரே பரிகாரம் தான் இருக்கிறது. இராம நாமம்தான் சிறந்த பரிகாரம். இடையூறுகளை நீக்கி, வெற்றி அளிப்பதற்கும், நன்மைகளை நல்கிச் சுகம் அளிப்பதற்கும், ஒப்பற்ற இராம நாமத்தைத் தவிர வேறு என்ன வழி யிருக்கிறது?" என்று எண்ணினார்.

ஸத்தியத்திலும், தர்மத்திலும், ஸத்யதர்ம மூர்த்தியாகிய இராமரிடத்திலும் பரம நம்பிக்கையோடு போகும் மாருதி வெகு தூரத்தில் மரக் கூட்டங்களைக் கண்டார். கடற்கரையையும், கடலில் வந்து விழும் நதிகளின் முகத்வாரங்களையும் கண்டார். கரையை நெருங்கினார்.

**பசுஞ் சுடர்ச் சோலைத் தாங்கோர்
பவளமால் வரையில் பாய்ந்தான்**

பசுமையான சோலைகள் நிறைந்த ஒரு மலையில் பாய்ந்து நின்றார். நாலா பக்கத்திலும் பார்த்தார்.

இந்த மகத்தான உடலோடு என்னை ராக்ஷஸர்கள் கண்டால் வேடிக்கையாக இருக்கும் என்று சிந்தித்தார். பின்னர் தன் உடலைச் சுருக்கிக் கொண்டு இலங்கையைக் கவனித்தார்.

ஒரு ஸ்திரீ தன் முகத்தைப் பார்த்துக் கொள்ள கண்ணாடி அமைத்துக்கொள்ளுகிறாள். வானுலகாகிற மங்கை, தன் முகத்தைப் பார்த்துக்கொள்ள அமைத்த கண்ணாடி போலிருக்கிறதாம், 700 யோஜனை விஸ்தீர்ணமுள்ள இலங்கை

7. அத்தியாயம்.

வெற்றி அல்லது மரணம்

அடடா! தேவலோகத்தை மிகப் பிரமாதமாக வருணிக்கிறார்களே! இந்த இலங்கையைப் பார்த்தால் தேவலோகம், நாகலோகம், மற்ற எந்த லோகங்களும் இதன் காலில் கட்டியடிக்கக் காணாது.

பொன்கொண் டிழைத்து மணி
யைக் கொடு பொதிந்த
மின்கொண் டமைத்த, வெயி
லைக் கொடு சமைத்த
என்கொண் டியற்றிய
எனத் தெரிகிலாத
வன் கொண்டல் விட்டு மதி
முட்டுவன மாடம்

பளிச்சென்று கண்ணைப் பறிக்கும் மின்னலால் செய்ததா? சூரிய கிரணங்களால் சமைத்ததா? மேக மண்டலத்தையும் தாண்டி, சந்திர மண்டலத்தில் முட்டும் மாடங்கள் ஒரே ஒளிப் பிழம்பாக விளங்கு கின்றன. பொன்னால் இழைத்திருக்கிறார்கள். ரத்தினங்கள் பதித்திருக்கிறார்கள். ஆஹா! இது போன்ற ஜெகஜ் ஜோதியான மாளிகைகள் எந்த உலகத்தில் காண முடியும்? இலங்கையின் பேரொளி யால்—

திருகுறும் சினத் தரக்கரும்
கரு நிறம் தீர்ந்தார்
அருகு போகின்ற திங்களும்
மரு வற்ற(து) அழகைப்
பருகு மின் னகர்த் துன்னொளி
பாய்தலில் பசும்பொன்
உருகுகின்றது போன்றுள(து)
உலகு சூழ் உவரி.

கன்னங் கரேலென்று நவ்வற் பழம் போல் இருக் கும் அரக்கரும் இந்த இலங்கையின் ஒளியால் பொன் னொளியோடு காணப்படுகின்றனர். ஆஹா! சந்திர னில் இருக்கும் கரு நிறக் களங்கங் கூட இந்த ஒளி யால் மறைகிறது. இலங்கையைச் சூழ்ந்து கிடக்கும் சமுத்திரத்தின் ஜலமெல்லாம் நகரின் டால் அடிப்ப தால், உருக்கி விட்ட பொன்போல் பிரகாசிக்கிறது.

கடல் நடுவில் அற்புதமான திரிகூட பருவதத் தின் சிகரத்தின் மேல் அமைத்திருக்கும் இந்த ஆடம்பரமான இலங்கையில் ஒவ்வொன்றும் ஆச்சரிய மாகத்தான் இருக்கிறது.

மரமடங்கலும் கற்பகம்
மனையெலாம் கனகம்

அரமடந்தையர் சிலதியர்
அரக்கியர்க்(கு) அமரர்
உரமடங்கி வந் துழையராய்
உழல்பவர், ஒருவர்
தரமடங்குவ தன்றிது
தவஞ்செய்த தவமால்.

எந்த மரத்தைப் பார்த்தாலும் தேவலோகத்தின் கற்பக விருக்ஷமாக இருக்கிறது. எந்த வீட்டைப் பார்த்தாலும் பொன் மயமாக இருக்கிறது. அதோ! கோரப் பல்லும், செம்பட்டை மயிரும், கருத்த பருத்த உடலும் உடைய அரக்கிகள். இவர்களுக்கு அடங்கி, ஒடுங்கி பயந்து வேலை செய்யும் தாதிகள் யார் தெரியுமா? அட பாவமே! கற்பனைக்கும் எட்டாத அழகும், குணமும், ஆடலும், பாடலும், கலையும், நிலையும் உடைய தெய்வப் பெண்கள்தான் அரக்கியருக்கு வேலை செய்கின்றனர்.

இப்படியே, எப்பொழுதும் மாறாத யௌவனமும், இருபத்தைந்து வயதும் உள்ள தேவர்கள், கண்ணிமைத்தல், மரணம், மூப்பு அற்றவர்கள், கோரமான ராக்ஷஸர்களுக் கெல்லாம் மீன் பிடித்துக் கொடுப்பதும், சாராயம் எடுத்துக் கொடுப்பதும், மாமிசம் உரித்துக் கொடுப்பதும், ஸ்திரீ ரத்னங்களை அழைத்துக் கொடுப்பதும், இன்னும் எத்தனையோ இழிதொழில்களை எல்லாம் செய்வதுமாய் இருக்கிறார்கள்.

இப்படி தேவர்கள், ஆண்களும் பெண்களும் தங்கள் நிலை குலைந்து, பெருமை யிழந்து, இழிதொழிலே புரியும் அரக்கர்களுக்கு அடிமைப் பட்டுக் கிடப்பானேன்? பார்க்க சகிக்காத இவ்வடிமைத்தனத்தின் காரணமென்ன? ராவணாதிகள் உயர்வானேன்?

ராவணன் இந்த உலகை எல்லாம் ஆளும் பெரிய லக்ஷியங் கொண்டான். இதற்காக சரீர சுக போகங்களை யெல்லாம் லக்ஷியம் செய்யாமல் விலக்கி, நெடுங்காலம் பிரம்மாவை நோக்கி அரிய தவம் செய்தான். அப்பொழுதும் பிரம்மா பிரத்தியக்ஷமாக வில்லை.

ராவணன் சிந்தித்தான். தன் லக்ஷிய சித்தி பெருமல் அற்பயாக இந்த உலகில் வாழ அவனுக்குப் பிரிய மில்லை. **வெற்றி அல்லது மரணம்** என்று தீர்மானித்தான். வாளுருவி தனது பத்துத் தலைகளில் ஒன்றை அறுத்து யாகத்தீயில் போட்டான். அப்பொழுதும் பிரம்மா தோன்ற வில்லை. இராவணனும் தன் உறுதியில் பின் வாங்க வில்லை. மற்றொரு தலையையும் அறுத்துப் போட்டான். ஆனாலும் பயன் இல்லை. என்ருலும் விட வில்லை. ஒவ்வொன்ருக ஒன்பது தலைகளையும் அறுத்தாயிற்று. ஒரு தலை பாக்கி. இன்னும் பிரம்மா வரவில்லை. கடைசித் தியாகத்திற்கும் இராவணன் தயாரானன். பத்தாவது தலையையும் அறுத்தான். பிரம்மா தோன்றிருர். இராவணன் கையைப் பிடித்துக் கொண்டார். வேண்டிய வரங்கள் அளித்தார். அறுத்த தலைகள் முளைத்தன. ராவணனும் தனது லக்ஷிய சித்தி பெற்ருன்.

இராவணனுக்கு மூன்றுலக ஆட்சியும் போக போக்கியங்களும் சும்மா கிடைத்து விட வில்லை. உயர்ந்த லக்ஷியம் கொண்டு, இதற்காகப் பரிபூரண தியாகமும் செய்துதான் பெற்ருன். யாகம், தவம், தானம் எல்லாம் தியாகத்தில் தான் முடிகின்றன. தியாகமின்றி யாரும் எதையும் சாதித்துக் கொள்ள முடியாது. நாம் எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாகத் தியாகம் செய்கிருேமோ, அவ்வளவுக் கவ்வளவு உயர்வான பதவியும் போகமும் நம்மைத் தேடிக்

கொண்டு வருகின்றன. எல்லாப் பதவிகளையும், எல்லாப் போகங்களையும் சர்வத் தியாகஞ் செய்யும் மகா தியாகிக்கு சாக்ஷாத் பரமாத்மா பிரத்யக்ஷமாகி பூரண அநுக்ரகம் செய்கிறார். சாக்ஷாத் ஈச்வரன் தான் தியாகி. தியாகிகளுக் கெல்லாம் தியாகி. இதனால் அவருக்குத் தியாகராஜன் என்று பெயர்.

ஆனால் இவ்வளவு தூரம் எட்ட முடியாதவர்கள், இவ்வளவு உயர்ந்த லக்ஷியம் கொள்ள முடியாதவர்கள், பதவிகளிலும் போகங்களிலும் மூழ்கி விடுகிறார்கள். இந்தப் பதவிகளையும் போகங்களையும் எந்தத் தியாகத்தினால் பெற்றார்களோ அந்தத் தியாகத்தை மறந்து, பதவியில் இறுமாந்து, போகங்களில் திளைந்து, இழி தொழில்களுக்குத் துணிந்து, கீழே இறங்கி பாதாளத்திலும் விழுந்து விடுகிறார்கள். ஆகையால் தியாகம் போகத்தையும் கொடுக்கும். போகமோ நரகத்தையும் கொடுக்கும்.

அன்றியும் ஒருவன் செய்த மகா பாபம் அவன் குல முழுவதையும் சூழும். இப்படியே ஒருவன் செய்த மகா தியாகத்தால் அவன் குல முழுவதும் வாழும். இராவணனுடைய தியாகத்தின் டால் அவனுடைய அரக்கர் குலமுழுவதும் அடிக்கிறது. அவனது தியாகத்தின் பயனை அரக்கர்களும் அரக்கிகளும் சுவைக்கின்றனர். அவனுக்கு அடிமைப்பட்ட தேவர்கள், ஆண்களும் பெண்களும், எல்லா அரக்கர்களுக்கும் அரக்கிகளுக்கும் அடிமைப்பட்டு கிடக்கிறார்கள்.

தியாகத்தில் சிறந்த இராவணன் சிறப்புப் பெற்றான். போகத்தில் மூழ்கிய தேவர்கள் அடிமைப் பட்டார்கள். கஷ்ட காலத்தில் நல்லெண்ணம் உண்டாகிறது. சுககாலத்தில் தீய எண்ணம் பரவுகிறது.

சுக போகங்களில் செருக்கடைந்து இராவணன் லோக மாதாவைச் சிறை வைத்தான். அழிவைத் தேடிக்கொண்டான். இதனால் தான் அறிவாளிகள் சுகத்தைக் காட்டிலும் கஷ்டத்தை விரும்பி வரவேற்கிறார்கள். கஷ்டம் நம்மை உயர ஏற்றும் படிப்படியாகலாம். சுகம் நம்மைக் குழியில் வீழ்த்தும் பொறியாகலாம்.

மாருதி இராவணனுடைய தியாகத்தால் வந்த போகத்தையும், பாபத்தால் வந்த ஆபத்தையும் சிந்தித்து, மலையில் நின்றபடியே இலங்கையைச் சுற்றிப் பார்த்தார். கட்டுக் காவலுடைய இலங்கை; யாரும் அணுக முடியாதது.

8. அத்தியாயம்.

அணையும் விளக்கு

வரிசை வரிசையாக வானளாவிய மதில்கள். கடல் போன்ற அகழ்கள். கொசுவையும் பிடித்து விடும் பொறிகள். உலகெலாம் கலக்கும் படைகள். யார்தான் இலங்கைக்குள் நுழைந்துவிட முடியும்?

கறங்கு கால்புகா, கதிரவன் ஒளிபுகா, மறலி
மறம்புகா தினி வானவர் புகாரென்கை வம்பே!
திறம்பு காலத்துள் யாவையும் சிதையினும் சிதையா
அறம் புகாதிந்த அணிமதிள் கிடக்கைநின் றகத்தின்

காற்று உள்ளே உத்திர வின்றி நுழைய முடியாது. சூரிய கிரணமும் அப்படித்தான். எங்கும் ஆணை செலுத்தும் எம தரும ராஜன் பாச்சா ஒன்றும் அங்கு பலிக்காது. எதிரிகளாய், அற்ப அடிமைகளாய் இருக்கும் தேவர்களைப் பற்றிச் சொல்ல வேண்டுமா?

ஆனால் யார் அழிந்தாலும் அழியாம லிருப்பது தருமம்.

த்ருயதே இதி தர்ம:

என்றும் அழியாமல் தாங்கி நிற்பதால்தான் இதற்குத் தருமம் என்று பெயர். இந்த அழியாத தருமந்தான், உலகம் அழியாமல் நிற்பதற்கான அஸ்திவாரம்.

ஆனால் இந்த தருமத்திற்கு இலங்கையில் இடமே யில்லையாம். வாழ்க்கையின் அஸ்திவாரமான தருமம் அழிந்த போது இலங்கை அழிவது நிச்சயம்.

வந்திருக்கும் அழிவை இலங்கையர் உணரவில்லை. அவர்கள் சித்தம் போகத்தில் மூழ்கிக் கிடக்கிறது. கண் முன்னே நிற்கும் போகம் அவர்கள் அறிவைப் பறித்து விட்டது. தீர்க்க திருஷ்டி மழுங்கிப் போய் விட்டது. என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?

பளிக்கு மாளிகைத் தலந் தொறும்
இடந் தொறும், பசுந்தேன்

துளிக்கும் கற்பகத் தண்ணறும்
சோலைகள் தோறும்
அளிக்கும் தேறலுண்
டாடுநர் பாடுநராகிக்
களிக்கின் றூரலால், கவல்கின்றார்
ஒருவரைக் காணேன்!

பளிங்குக் கற்களால் செப்பனிட்ட மாளிகைகளின் உப்பரிகைகளிலும், மற்ற இடங்களிலும், தீந்தேன் துளிக்கும் நறுமண மிகுந்த குளிர்ந்த இனிய கற்பகச் சோலைகளிலும் அவர்களுக்கு மிகப் பிரியமான மதுவுண்டு ஆடுகிறார்கள்; பாடுகிறார்கள். இப்படி எங்கு பார்த்தாலும் ஒரே எக்களிப்பா யிருக்கிறது. கவலைப் படுபவர் யாரையுமே காணவில்லை. ஏன்?

கண்ணுக்குத் தெரியாத தருமத்தின் மகத்தான பலத்தைப் பற்றி அவர்களுக்குக் கவலையே இல்லை. அவர்களுக்குப் பிரத்யக்ஷமா யிருப்பது ஆயுத பலந்தான். இதுதான் இவர்களுக்கு மகத்தான வெற்றியைக் கொடுத்தது. உலகத்தை அடிமைப் படுத்திக் கொடுத்தது. எல்லா போக போக்கியங்களையும் கொடுத்தது. இந்த ஆயுத பலம் பரிபூரணமாக இருக்கிறது. விதம் விதமான ஆயுதங்கள். ஒவ்வொன்றிலும் எண்ணற்ற ஆயுதங்கள். எதை அதிகமென்று சொல்வது?

விற்படை பெரிதென் கோயான்?
வேற்படை மிகுமென் கோயான்?
மற்படை உளதென் கோயான்?
வாட்படை வலிதென் கோயான்?
கற்பணம் தண்டு பிண்டி
பாலமென் றினைய காந்தும்
நற்படை உடைத்தென் கோயான்
நாயகர்க் குரைக்கு நாளில்?

'விற்படைகள், வேற்படைகள், மற்படைகள். வாள் படைகள், கற்பணம், தண்டு, பிண்டி, பாலம், எத்தனை எத்தனை ஆயுதங்கள்? இராமரிடத்தில் போய் இவற்றில் எது அதிகமென்று கூறுவேன்' என்று மாருதி மயங்குகிறார்.

இந்த ஆயுதத்தை ஏந்திய வீரர்களோ?

காயத்தால் பெரியர் வீரம்
கணக்கிலர், உலகம் கல்லும்
ஆயத்தார், வரத்தின் தன்மை
அளவற்றால் அறிதல் தேற்றும்,
மாயத்தார் நகர்க்கெங் கேனும்
வரம்புமுண் டாமே மற்றோர்
தேயத்தார் தேயம் சேரல்
தெருவிலோர் தெருவில் சேரல்.

ஒவ்வொரு ஆளும் சரியான ஜவான். பொறுக்கி யெடுத்த பேர் வழிகள். வீரமோ கணக்கில்லை. பலமோ உலகத்தையே பெயர்த்து விடும் மிடுக்குடையவர்கள். இவர்கள் பெற்றிருக்கும் வரங்களுக்கோ அளவேயில்லை. ஆகையால் இவ்வளவு என்று அளவெடுத்துச் சொல்ல முடியாது. இப்படி எத்தனை பேர்? எத்தனை இடங்களில்? எவ்வளவு பெரிய தெருக்கள்! ஒரு தெருவிலிருந்து மற்றொரு தெருவுக்குப் போவது, ஒரு தேசத்திலிருந்து மற்றொரு தேசத்திற்குப் பிரயாணம் போவது போலத்தான்! இப்படி எத்தனை தெருக்கள்? இதென்ன மாயமா? இதற்கு முடிவே இல்லையா? அல்லது இலங்கையின் எல்லைக்கு எங்கேயாவது முடிவிருக்கிறதா? அல்லது ஆங்காங்கே வைக்கப் பட்டிருக்கும் படைகளுக்குத் தான் ஏதாவது எண்ணிக்கைக் கணக்கு அகப்படுமா? யோசித்துப் பார்த்தால்—

கருங் கடல் கடப்பதரி
தன்று நகர் காவல்
பெருங்கடல் கடப்பதரி
தென்னம் இறை பேரின்
அருங்கடன் முடிப்ப தரி
தாரமர் கிடைக்கின்
நெருங்கமர் கிடக்கும் நெடு
நாளென நினைந்தான்.

100 யோஜனை விஸ்திரணமுள்ள சமுத்திரத்தைக் கடப்பதைப் பற்றி பெரிய மந்திராலோசனை நடந்ததே! இது ஒன்றும் பிரமாதமான காரியமாகத் தோன்றவில்லை. இங்கு காவலிருக்கும் சேனை சமுத்திரத்தைக் கடந்து போவது சுலப சாத்தியமாகத் தோன்ற வில்லை. சிறிது ஏமாந்தால் வந்த காரியமும் ஏமாந்து போகும். ஒரு வேளை சண்டை மூண்டு விட்டாலோ, முடிய எத்தனை நாள் செல்லுமோ?

இமாம் து விஷமாம் துர்க்காம்
லங்காம் ராவண பாலிதாம்
ப்ராப்யாபி ஸ மஹாபாஹு:
கிம் கரிஷ்யதி ராகவ:

கடுமையான காவலோடு இராவணனால் பரிபாலிக்கப் படும் இந்த இலங்கையில் வந்து அந்த இராமர் தான் என்ன செய்ய முடியும்? சாம, தான, பேத, தண்டமென்னும் நான்கு உபாயங்களும் இந்த ராக்ஷஸரிடத்தில் பலிக்கும் என்று தோன்ற வில்லை. அன்றியும் இலங்கைக்கு வருவதே அவ்வளவு சுலபமல்ல. என்னைத் தவிர சுக்ரீவர், அங்கதன், நீலன் மூவர்தான் இங்கு வந்து சேர முடியும் என்று சிந்தித்து மாருதி அடிக்கடி பெருமூச்சு விட்டார்.

வந்த காரியத்தை நான் கெடுத்து விடக் கூடாது. இராக்ஷஸர்களோடு சண்டை யிட்டுக் கொண்டிருக்கவும் இது சமயமல்ல. அவர்கள் என்னைக் காணமல் நான் சீதையைக் காண்பது எப்படி? இராக்ஷஸர்களை அறியாமல் இங்கு காற்றுக்கூட சஞ்சரிக்க முடியாது என்று மாருதி யோசிக்கும் பொழுது சூரியன் அஸ்தமித்தது. இருள் சூழ்ந்தது. எப்படி?

ஏய்வினை இறுதியில் செல்வம் எய்தினன்
ஆய்வினை மனத்திலான் அறிஞர்சொற் கொளான்
வீவினை நினைக்கிலான் ஒருவன் மெய்யிலான்
தீவினை எனவிருள் செறிந்த தெங்குமோ!

ஒருவனுக்குச் செல்வம் வந்தாலே கண் தெரியாது. நல்வினை எல்லாம் முடிந்த காலத்தில் செல்வம் வந்தால் தீவினையில் தான் இறங்குவான். நல்வினை தீவினை பகுத்து ஆராயும் மனமுமில்லை. அறிஞர்கள் சொல்லும் ஆலோசனையையும் அங்கீகரிப்பதில்லை. ஸத்யமும் ஸத்ய மார்க்கமும் அவனிடத்தில் மருந்துக்குக் கூட காண முடியாது. இவனுடைய தீவினை எப்படி இருக்கும்! இதுபோல் அங்கு இருள் சூழ்ந்து கொண்டது.

9. அத்தியாயம்.

அறம் வெல்லும் பாவம் தோற்கும்

ஸீதா தேவியைத் தேடும் பொருட்டு இலங்கையில் நுழையத் துடித்துக் கொண்டிருந்த மாருதி பூனை போன்ற சிறிய உருவம் தரித்தார். இலங்கையில் பிரவேசித்தார். இவருக்கு உதவி செய்வது போல் சந்திரன் உதயமானான். பால் போன்ற நிலா எங்கும் பரவியது.

மிக அழகாகப் பிரித்து வகுக்கப்பட்ட விசாலமான தெருக்கள். இரு பக்கங்களிலும் ஏழெட்டு அடுக்கு உப்பரிகைகள். எங்கும் தங்கத்தினாலும் ரத்தினங்களாலும் இழைக்கப் பட்டு பிரகாசமாக விளங்குகின்றன. இனிய மந்த மாருதம் வீசுகிறது. அற்புதமான இவற்றை யெல்லாம் கண்டு மாருதி சந்தோஷமடைந்தார். ஆனாலும் இலங்கையை எப்படி ஜெயிக்க முடியுமென்று சிந்தித்தார். இப்படிப் பல இடங்களைக் கடந்து, கோட்டை வாயிலை அடைந்தார். அங்கிருந்த யந்திரங்கள், காவல் பட்டாளங்கள் அனைத்தையும் கண்டார்.

மாருதி கோட்டை வாயில் வழியே நுழைய விரும்ப வில்லை. ஏன்? அந்த வழி போவது கடினம் என்பது மட்டுமல்ல. எதிரிகள் வைத்த வழியில் போவது வீரர்களுக்கு அழகில்லை என்றும் எண்ணினார். வேறு வழியில் பொன்மதில் மீது தாவினார்.

"யாரடாது குரங்கே!" என்று அதட்டிய குரல் கோடை யிடிபோல் குமுறியது. மாருதி அந்தச் சத்தம் வந்த வழியே பார்த்தார். என்ன கண்டார்?

எட்டுத் தோளாள் நாலு முகத்தாள்
உலகேழும்
தொட்டுப் பேரும் சோதி நிறத்தாள்
சுழல் கண்ணாள்
முட்டிப் பேரின் மூவுலகத்தை
முதலோடும்
கட்டிச் சீறும் காவல் வலத்தாள்
கமையில்லாள்

பிரம்மாவைப் போல் நான்கு தலைகள். எட்டுத் தோள்கள். சக்கரம்போல் சுழலுகின்ற கண்கள். சூரியனைப் போல் ஒளி திகழும் மேனி. மூவுலகங் களையும் கலக்கும் பலம். கொஞ்சமும் பொறுமை யின்றித் துடிக்கின்ற மனம்.

அஞ்சு வணத்தின் ஆடையுடுத்தாள்
அரவெல்லாம்
அஞ்சு வணத்தின் வேகம் மிகுத்தாள்
அருளில்லாள்
அஞ்சு வணத்தின் உத்தரியத்தாள்
அலையாரும்
அஞ்சு வணத்தின் முத்தொளிர் ஆரத்
தனி கொண்டாள்

(இந்தக் கவியில் 'அஞ்சுவணத்தின்' என்று நான்கு முறை வருகிறது. ஒவ்வொன்றுக்கும் வேறு வேறு பொருள். 1. அஞ்சு—வணம்—அஞ்சு வர்ணம். 2. அஞ்சு—உவணம்—(சர்ப்பங்கள்) பயப்படும் கருடன். 3. அச்—சுவணம்—(சுவர்ணம்) அழகிய தங்கம். 4. அம்—சுவள்—நத்து—தண்ணீரில் இருக்கும் சங்கு)

ஐந்து வர்ண முடைய ஆடைகளை உடுத்தி யிருந்தாள். ஸர்ப்பங்களுக்கு நடுக்கத்தை யுண்டாக்கும் கருட பகவானைப் போன்ற வேக முடையவள். தங்கமயமான உத்தரீயம் அணிந்திருந்தாள். சங்கிலிருந்து உண்டான முத்துக்களை ஆரமாக அணிந்திருந்தாள்.

கையில் திரிசூலம் ஏந்தி பயங்கரமாகக் காணப்படும் இந்தப் பெண் உருவம் தன் முன்னே வரக் கண்டார், மாருதி.

“நீ யாவன்? எங்கே வந்தாய்? உயிர் போகு முன் உள்ளதைச் சொல். நீ உள்ளே நுழையமுடியாது” என்று கர்ஜித்தாள் அவள்.

“நீ கேட்டதை நான் சொல்லுகிறேன். ஆனால் என்னைத் தடுத்துப் பயமுறுத்தும் நீ யார் சொல்” என்றார் மாருதி.

“நான் இந்த இலங்கையை இராவணனுணையால் காப்பவள். என் பெயர் இலங்கிணி. யாரும் என்னை மீறிப்போக முடியாது. நீயும் போக முடியாது. மீறினால் செத்து விழுவாய்” என்றாள்.

இலங்கிணியின் வார்த்தையைக் கேட்டு அஞ்சினாரா? இல்லை. மலைபோல் நின்றார் மாருதி. சொல்லுகிறார்—

வனானி யுப வனானி
லங்காய: கானனானி ச
ஸர்வதோ க்ருஹ முக்யானி
த்ரஷ்டுமா கமனம் ஹி மே

இலங்கையிலுள்ள வனங்கள், உப வனங்கள், மாளிகைகள் எல்லாவற்றையும் பார்க்கவே வந்தேன்.

அளியா லிவ்வூர் காணு நலத்தேன்
அணைகின்றேன்
எளியே னுற்ருல் யாவதுனக்கிங்
கிழவென்ருன்

நான் இந்த ஊரைக் காணும் உற்சாகம் கொண்டு வந்தேன். நான் வந்து பார்ப்பதால் உனக்கென்ன நஷ்டம்? என்ருர்.

இலங்கிணி:- போடா என்ருல் போகாமல் பதில் சொல்லுகிருய்! மும்மூர்த்திகளும் உள்ளே நுழையப் பயப்படுவார்கள். குரங்கே! உனக்கு உற்சாகம் வந்தால் உள்ளே நுழையக்கூடிய ஊரோ இலங்கை?

மாருதி:- ஹே, மங்களாகரி!

த்ருஷ்ட்வா புரீ மிமாம் பத்ரே
புனர் யாஸ்யே யதாகதம்

நான் இலங்கையைச் சுற்றிப் பார்த்துவிட்டு வந்த வழியே போய் விடுகிறேன் என்ருர்.

இலங்கிணி யோசித்தாள். 'என்னைக் கண்டால் எமனும் நடுங்குவான். இவன் சிரிக்கிருன். சாதாரணக் குரங்கல்லன். இவனைக் கொல்லாமல் விடுவது ஆபத்தாகும்' என்று தீர்மானித்தாள். தன் கையிலிருந்த முத்தலைச் சூலத்தை மாருதி மீது வீசி எறிந்தாள்.

மின்னல் போல் பிரகாசித்துக் கொண்டு தன் மேல் இடிபோல் வரும் அந்த சூலத்தை மாருதி தாவிப் பிடித்தார். பையன்கள் மிட்டாய் ஓடிப்பது

போல் அதை ஒடித்தார். இலங்கிணி கோபங் கொண்டாள். தன் கையிலிருந்த பல் வேறு ஆயுதங்களை எறிந்தாள். அத்தனையும் அழித்தார் மாருதி. இலங்கிணி கையால் ஓங்கி அடித்தாள். ஆனால் இப்படி—

அடியா முன்னம் அங்கை யனைத்தும்
 ஒரு கையால்
பிடியா என்னே பெண்ணிவள் கொல்லில்
 பிழையென்ன
ஒடியா நெஞ்சத் தோரடி கொண்டான்
 உயிரோடும்
இடியே றுண்ட நாகமெனப் பார்
 இடை வீழ்ந்தாள்

மாருதியோ அவளுடைய எட்டுக் கைகளையும் தனது ஒரு கையால் பிடித்துக் கொண்டு, இவள் பெண்ணென்று நிதானித்து, அதிகக் கோபமின்றி நெஞ்சில் ஒரு குத்து விட்டார். இடி விழுந்த நாகம் போல் இலங்கிணி பூமியில் சாய்ந்தாள். உயிர் போகவில்லை. பிரம்மாவை நினைந்து எழுந்தாள். தழுதழுத்த குரலோடு அகம்பாவம் நீங்கிக் கூறுகிறாள்.

வீரனே! இரக்கம் காட்டும். பலசாலியான வீரர்கள் கட்டுக்கு அடங்கியே நடக்கிறார்கள். என்னை நீர் ஜெயித்து விட்டீர். என்னை ஒரு வானர வீரன் ஜெயிக்கும்போது இலங்கைக்கு ஆபத்துண்டாகும் என்று பிரம்மா கூறியிருக்கிறார். ஸீதா தேவியை அபகரித்துக் கொண்டு வந்ததால் இராவணனுக்கும் அரக்கர்களுக்கும் நாச காலம் வந்தது. பிரம்மாவின் வாக்குத் தப்பாது.

அன்னதே முடிந்த தைய
 அறம் வெல்லும் பாவம் தோற்கும்

என்னுமீ தியம்ப வேண்டும் தகையதோ
இனி மற் றுன்னுல்
உன்னிய எல்லாம் முற்றும்
உனக்குமுற் ருத துண்டோ
பொன்னகர் புகுதி என்னு
புகழ்ந்தவள் இறைஞ்சிப் போனுள்

தருமமே வெல்லும். பாவம் தோற்றே போகும். இது ஸத்தியம். நீர் நினைத்த காரியம் எல்லாம் முடியும். தாராளமாக இலங்கையில் பிரவேசித்து உமது காரியத்தை வெற்றிகரமாக முடித்துக் கொள்ளும்" என்று பேற்றிப் புகழ்ந்து இலங்கிணி வழி விட்டுப் போனுள்.

10. அத்தியாயம்.

சந்திர பாஸம்

இலங்கைமாதேவியை வென்று மாருதி நகருள் பிரவேசித்தார். கடல்மீது தாவியது முதல் இதுவரை இவரை அரக்கியர் உருவோடு மூவர் எதிர்த்தனர்.

முதலாவது ஸுரஸை. ஆனுல் இவள் உண்மையில் அரக்கி அல்ல. நாகமாதா. தேவர்கள் வேண்டு

கோளால் மாருதிக்கு அவரது பலத்தை உணர்த்த வந்தவள். அகண்டமான வாயைப் பிளந்து 'இது தான் உனக்கு வழி' யென்று மறித்தாள். மாருதியோ திடீரென்று உருவத்தைச் சுருக்கி அவள் இஷ்டப்படி வாயில் புகுந்து, அவள் வாயை மூட நினைக்கு முன் வெளியே வந்து விட்டார். அவளுக்குச் சிறிது தீங்கும் இல்லை. ஸுரஸையும் மாருதியை வாழ்த்தி தன்னை அறிவித்து வழி விட்டுப் போனாள்.

இரண்டாவதாக மாருதியின் நிழலைப் பிடித்து இழுத்து, அவரது வேகத்தைத் தடுத்தவள் அங்காரதாரை. இவளைப் பற்றி ஏற்கனவே சுக்ரீவரால் கேள்விப் பட்டிருக்கிறார். மாருதி இவள் வாயில் புகுந்து வயிற்றைக் கிழித்துக் கொண்டு குடலோடு வெளி வந்தார். அங்காரதாரை மாண்டு விழ்ந்தாள்.

மூன்றாவது இலங்கை மாதேவி. இவள் மாருதியை அடித்தாள். இதைத் தடுத்துத் தானும் ஒரு அடி கொடுத்தார். இந்த ஒரே அடியில் உணர்வு பெற்று, இலங்கைமாதேவி வாழ்த்தி வணங்கி வழி விட்டுப் போனாள்.

மாருதிக்கு எத்தகைய இடையூற்றையும் சமாளிக்கும் ஆற்றல் இருக்கிறது. ஆனால் அந்த ஆற்றலை எல்லா இடத்திலும் ஒரே மாதிரி வெளிக் காட்டி விடவில்லை.

ஸுரஸைக்கு ஒரு துன்பமும் இல்லை. இலங்கிணிக்கு ஒரே அடி. அங்காரதாரையை மட்டும் குடலைப் பிடுங்கி வீழ்த்துகிறார்.

எதிர்ப்பவர் மன நிலையை உணர்ந்து, எந்த அளவுக்குத் தேவையோ, அந்த அளவுக்கே சக்தியை உபயோகிக்கிறார்.

இதனால் ஒருவருக்கு பலமோ, பணமோ, அறிவோ இருந்தால் காலமும் இடமுமின்றி இஷ்டப்படி அதை உபயோகித்து விரயம் செய்யக் கூடாது என்பது விளங்க வில்லையா?

இப்படி ஆற்றலும், அதை அளவறிந்து உபயோகிக்கும் அறிவும் உடைய மாருதி சத்ருவின் தலையில் அடி வைப்பது போல் இலங்கையில் கால் வைத்தார்.

கடல் கடந்த காலுடைய மாருதி இப்பொழுது சிறிய உருவத்தோடு தாண்டித் தாண்டிப் போகிறார். எப்படி?

பூத்தோறும் வாவிச் செல்லும்
பொறிவரி வண்டிற் போனான்

புஷ்பந்தோறும் தாண்டிப் தாண்டிப் பறந்து செல்லும் பொறி வண்டு போல மாருதி மாடந்தோறும் கூடந்தோறும் தாவித் தாவிப் போகிறார்.

மாடங்கள் நீலம், பச்சை, வைரம், செம்பு முதலிய நவரத்தினங்கள் வைத்து இழைத்தவை. அந்தந்த இடத்தில் அந்தந்த ரத்தினத்தின் டால் மாருதி மீது வீசுகிறது. இதனால்—

கரியனாய் வெளியனாகிச் செய்யனாய்க்
காட்டும், காண்டற்(கு)
அரியனாய் எளியனாய்த்தன்
அகத்துறை அழகனே போல்

நீலத்தின் டால் தன் மீது அடிக்கும் போது நீலமாகவும், வைரத்தின் ஒளியில் வெளுப்பாகவும், செம்மணி நிழலில் சிவப்பாகவும் பல் வேறு நிறங்களோடு மாறி மாறி மாருதி விளங்குகின்றார்— தனது உள்

ளத்தில் வைத்துப் போற்றும் பகவானைப் போல். அவர் எப்படி இருக்கிறார்? அகம்பாவிகளுக்கு அரியனாய், அன்பர்க்கு எளியனாய், அடுப்பவர் நினைக்கும் வண்ணம் இருக்கிறார். திருமாலென்று போற்றுவாருக்கு நீலமேக சியாமளனாய், பிரம்மா என்று தியானிப்பவருக்கு வெள்ளை உருவனாய், சிவம் என்று வணங்குவோருக்குச் செம்மேனி அப்பனாய், இன்னும் யார் யார் எப்படி எப்படி நினைத்துப் போற்றுகிறார்களோ அவரவர்க்கு அப்படி அப்படி நின்று அருள் புரிய வில்லையா? இப்படியே அடுத்தார் நினைப்பே உருவாகக் கொள்ளும் பகவானைப் போல், ஆங்கு அடுத்த இரத்தினத்தின் நிறமே தன்னிறமாகக் காணப் பட்டார் மாருதி என்று கம்பர் சித்தரிக்கிறார்.

மாருதி பல்வேறு இடங்களிலும் பார்த்துக் கொண்டே போகிறார். சிறப்பாக ஸ்திரீகள் இருக்கும் இடமெல்லாம் தேடுகிறார். என்ன காண்கிறார்?

பூட்டுவார் முகை பொருத
பொய்யிடை நையப் பூநீர்
ஆட்டுவார் அமர மாதர்
ஆடுவார் அரக்க மாதர்

ஒடிந்து விழுமோ என்று எண்ணத் தக்க மெல்லிய இடை துவளத் துவள தெய்வப் பெண்கள் ஸ்நானம் செய்து வைக்கிறார்கள். யாருக்கு? இறுமாப்போடு உட்கார்ந்திருக்கும் கோரப் பல்லுடைய அரக்கியருக்கு! இதனால் என்ன தெரிகிறது?

ஈட்டுவார் தவமலால் மற்
றீட்டினால் இயைவ தின்மை
காட்டினார் விதியார் அஃது
காண்கிற்பார் காண்மினம்மா!

இந்த உலகத்தில் நாம் ஏதேதோ பொருள்களைச் சேர்த்து வைக்கிறோம். ஆனால் எல்லாவற்றிலும் சிறப்பாகச் சேர்த்து வைக்கத் தக்க பொருள் தவம் ஒன்று தான். இது இகத்திற்கும் பரத்திற்கும் பயன் தரும். மற்றப் பொருள்கள் எதைச் சேர்த்து வைத்தும் ஏதும் பயனில்லை. இராவணன் தவத்தால், பிரம்மாவின் வரத்தால் தெய்வப் பெண்கள் ஊழியம் புரிவதையும் அரக்கியர் இருமாந்து ஸ்நானம் செய்து கொள்வதையும் கண்ட பிறகாவது, கண்ணுள்ளவரெல்லாம் கண்டு தெளிந்து கொள்ளுங்களென்று தவத்தின் மேன்மையை விளக்குகிறார் கம்பர். இதில் கம்பருக்கு மிகவும் உணர்ச்சி அதிகம் என்பதை ஏற்கனவே பார்த்தோம்.

உலகெல்லாம் விளக்கி, இருளெல்லாம் போக்கி சந்திரன் பிரகாசிக்கிறார். இயற்கை இன்பத்தை அள்ளி அள்ளிக் கொடுக்கும் வால்மீகர் சந்திரனுடைய காம்பீர்ய அழகை விளக்குகிறார். படியுங்கள்—

ஹம்ஸோ யதா ராஜத பஞ்சரஸ்த:
    ஸிம்ஹோ யதா மந்தர கந்தரஸ்த:
வீரோ யதா கர்வித குஞ்சரஸ்த:
    சந்த்ரோபி பப்ரராஜ ததாம் பரஸ்த:

வெள்ளிக் கூட்டில் விளங்கும் களியன்னம் போல, மந்திர மலையின் குகையில் விளங்கும் வீர சிங்கத்தைப் போல, கர்வமுடைய யானை மீது விளங்கும் ரண சண்ட வீரனைப்போல இப்பொழுது ஆகாயத்தில் சந்திரன் கம்பீர மாய்ப் பிரகாசிக்கிறார்.

லோகஸ்ய பாபானி விநாசயந்தம்
    மகோததிம் சாபி ஸமேதயந்தம்
பூதானி ஸர்வானி விராஜயந்தம்
    ததர்ச சீதாம்சும் அதாபியாந்தம்

இருள் உலகத்தின் பாபம் போலும். சந்திரன் இதைப் போக்கி ஸர்வ ஜீவராசிகளையும் பிரகாசிக்கச் செய்கிறார். அசேதனமான சமுத்திர ஜலம் கூட சந்திரனைக் கண்ட சந்தோஷத்தால் பொங்கிப் பூரிக்கிற தென்றால் சந்திரன் அள்ளி அள்ளித் தெளிக்கும் அமிர்த மயமான இன்பத்தின் அளவெங்கே?

சந்திரனுடைய இன்பத்தைப் பருகி உலகமே மதங் கொண்டது போல் விளங்குகிறது. அரக்கர்களோ இயற்கையாகவே மதங் கொண்டவர்கள். வெற்றி மதம், வீரமதம், தன மதம் கூடிக் கொண்டன. கள் மதமும் கலந்து கொண்டது. இவர்களுடைய மன்மத சேஷ்டைகளைக் கேட்பானேன்?

11. அத்தியாயம்.

சிங்காரச் சித்திரங்கள்

நமது ஆகாரத்தில் ஆறுவித சுவை யிருக்கிறது. ஒரே ரஸத்தைத் தொடர்ச்சியாகச் சாப்பிடக் கூட வில்லை. மாறுதல் வேண்டி யிருக்கிறது.

அறிவுக்கு ஆகாரமான மகா காவியங்களில் வீரம், சோகம், சிங்காரம் முதலான நவரஸங்களுண்டு. கம்பர் எல்லா ரஸங்களிலும் சிறந்த நிபுணர். ஆனால் சிங்காரம் இவரது தனிச் சிறப்பென்று சொல்லலாம்.

போக போக்கியங்கள் நிரம்பி, கவலை யற்ற சிங்கார வாழ்க்கை இலங்கையில் குடி கொண்டிருக்கிறது. இதை நன்றாக வருணிக்க வல்ல கவி கம்பர். ஆனால் அந்தச் சிங்காரக் கடலில் துளைய இது சமய மல்ல. இரண்டொரு காக்ஷிகளை மட்டும் பார்த்துக் கொண்டு போவோம்.

சிங்காரமுடைய பெண்கள் தங்களை அலங்காரம் செய்து கொள்ளுகிறார்கள். எப்படி ?

விற்படர் பவளப் பாதத்
    தலத்தகம் எழுதி, மேனி
பொற்பள வில்லா வாசப்
    புனைநறுங் கலவை பூசி
அற்புத வடிக்கண் வாளின்
    அஞ்சனம் எழுதி, அந்தில்
கற்பகம் கொடுக்க வாங்கி
    கலன் தெரிந் தணிகின்றாரை

இயற்கையிலேயே பவளம் போல் சிவந்த பாதம். இதில் செம்பஞ்சுக் குழம்பினால் எழுதி யிருக்கிறார்கள். மேனியிலோ கம்மென்று மணக்கின்ற பரிமளக் கலவைகள் அளவின்றிப் பூசி யிருக்கிறார்கள். வடிவாள் போன்ற அற்புதமான கூரிய கண்களிலோ மையிட்டிருக்கிறார்கள். ஆபரணங்கள் அணிவதிலோ பெண்கள் ஆசைக்கு அளவே கிடையாதல்லவா? இந்த ஆசை, புருஷர்கள் நகை வாங்கிக் கொடுத்தும் அடங்காது. பொற்கொல்லர்கள் செய்து கொடுத்தும் அடங்காது. இவர்கள் மனதில் உடனுக்குடன் தோன்றும் அற்புதமான கற்பனைகளின்படி சிருஷ்டி செய்து கொடுத்தால் தான் சாத்தியம். இப்படிச் செய்ய வல்லது கற்பக விருக்ஷம். இவர்கள் நினைத்ததை யெல்லாம் கொடுத்துக் கொண்டிருக்கிறது, இவர்கள்

வேண்டியதை யெல்லாம் கேட்கிறார்கள். கேட்பது தான் தாமதம். உடனே அது கொடுக்கிறது. இவர்களும் வாங்கி வாங்கி அணிகிறார்கள்.

இப்படி தங்கள் மேனியை ஆடை யாபரணங்களாலும் சந்தனக் கலவைகளாலும் அலங்காரம் செய்துகொண்டிருக்கும் பொழுதே, இவர்களுடைய உள் மனம் தங்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட காதலரை நாடிக்கொண்டே யிருக்கிறது. கண்கள் சுற்றி அலைந்து கொண்டே யிருக்கின்றன. இந்த காதற் கண், தேடிய கண்ணைக் கண்டு விடுகிறது. என்ன நடக்கிறது?

கோதறும் குவளை நாட்டம்
கொழுநர்கள் நாட்டம் கொள்ள
தூதுளங் கனியை வென்ற
துவர்த்தவாய் வெண்மை தோன்ற
மாதரும் மைந்தர் தாமும்
ஒருவர் மேல் ஒருவர் வைத்த
காதலங் கள்ளுண்டாற் போல்
முறை முறை களிக்கின்றாரை

குவளைப் புஷ்பம் போன்ற பெண்களுடைய கண்கள் காதலர்களுடைய கண்களை சந்தித்தன. ஆ! அந்த சந்திப்பில்தான் என்ன இன்ப வெறி? செக்கச் செவேரென்று சிவந்த வாயெல்லாம் வெள்ளை வெளேரென்று வெளுத்து விட்டது. அந்தக் கட்டுக் கடங்கா காதலுடைய பெண்களும் காளைகளும் காதல் கள்ளை உண்டு வெறி கொண்டிருக்கிறார்கள்.

போதாக் குறைக்கு இதற்கும் மேலான இன்னொரு தேனையும் குடித்து விடுகிறார்கள்.

ஆலையின், மலையின் சாரல்
முழையினில், அமுதவாரி
சோலையில், துவச ரில்லில்
சோனகர் மனையில், தூய
வேலையில் கொளவொணுத
வேற்கணுர் குமுதச் செவ்வாய்
வாலெயிற் றூறும் தீந்தேன்
மாந்தினர் மயங்குவாரை

எப்பேர்ப்பட்ட தேன்? ஆலையில் ஆடிய தேன் பாகா? மலைச் சாரலிலும் குகைகளிலும் சோலைகளிலும் வண்டுகளும் ஈக்களும் கட்டிய தேனு? அல்லது கள்ளிறக்குவோர் வீட்டிலிருக்கும் மதுவா? அல்லது பாற்கடலில் கடைந்த அமிருதமா? இல்லை, இல்லை. வேல் போன்ற கண்ணும், குமுதப் பூ போன்ற வாயும் உடைய காதலிகளின் பவளம் போன்ற இதழ்களில் ஊறும் அருமையான தேன்! இதையும் குடித்து மயங்கிக் கிடக்கிருர்கள்.

இந்த சமயம் அந்தக் காதலன் என்னவோ தப்பு செய்து விடுகிருன். அல்லது என்னவோ தப்பு செய்ததாக இவள் எண்ணி விடுகிருள். வந்தது கோபம். என்ன நடக்கிறது?

புலியடு மதுகை மைந்தர்
புதுப்பிறை உயிரைப் புக்கு
நலிவிட, அமுத வாயால்
நச்சுயிர்த் தயிர்க்கண் நல்லார்
மெலிவுறூஉ மருங்குல் மின்னின்
அலமரச் சிலம்பு விம்மி
ஒலிபட உதைக்குந் தோறும்
மயிர்புள குறிக்கின்ருரை

காட்டுப் புலியோடு கைச் சண்டை செய்யும் மகத்தான பலமுடைய அந்தக் காதலன் எத்தனையோ பிழை செய்திருக்கிறான். அவற்றையெல்லாம் மறந்து விட்டாள். ஆனால் இப்பொழுது ஏற்பட்ட இந்தப் புதிய குற்றம் அவள் உயிரை வாட்டுகிறது, அமிருதம் ஊறிய அந்த செவ்வாயினால் விஷத்தைக் கக்குகிறாள். அவளுடைய கண்ணே வேல்போல் குத்துகிறது. நுண்ணிய இடை மின்னல் போல் துவள, பாதத்தில் அணிந்திருக்கும் சிலம்புகள் கலீர் கலீர் என்று சப்திக்க, கோபத்தால் அவனைத் தனது கால்களால் பலமுறையும் உதைக்கிறாள்.

அவனுக்கு கோபம் வருகிறதா? ஒவ்வொரு உதை விழுந்தோறும் விழுந்தோறும் உடல் சிலிர்க்கிறது. புளகாங்கிதம் கொள்கிறான்.

ஆனால் ஓட ஓட விரட்டுவது ஜீவ சுபாவம். இவன் தாழத் தாழ அவள் ஓங்குகிறாள், "என் முகத்தில் விழிக்காதே, போ" என்று துரத்துகிறாள். பாவம், அவன் என்னவோ கனவு கண்டுகொண்டு வந்தான். இந்தக் கோபம் குறுக்கே நிற்கிறது. குழைந்து குழைந்து நிற்கிறான். நிற்க, நிற்க இவள் கோபம் அதிகமாகிறது. ஆகையால் மனமின்றியே மெதுவாக திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே பின் வாங்குகிறான். அவனுக்கும் கொஞ்சம் ரோஷம் வந்துவிடுகிறது. அணுகாமல் விலகிப் போய்விடுகிறான்.

கண்டால் அநாதரவு செய்தல், காணவிடில் தேடுதல், இது இயற்கைதானே. இவளும் பிரிந்து போன காதலனை நாடித் தாபம் அடைகிறாள். உடல் வெதும்புகிறது. மார்பில் பூசிய சந்தனக் கலவை பொரிந்து உதிர்ந்து போகிறது. மலர் மேல் மலரிட்டது போல், கைம் மலர் மேல் முகமலர் வைத்துக் கவலையோடு உட்கார்ந்து பெருமூச்சு விடுகிறாள்.

காதலனுக்கு ஒரு தூது அனுப்புகிருள். உடல் நிலை கொள்ளவில்லை. இருப்புக் கொள்ள வில்லை.

ஏதியங் கொழுநர் தர்பால்
எய்திய சலத்தர், வைகும்
தாதியங் கமளிச் சேக்கை
உயிரிலா உடலில் சார்வார்
மாதுயர்க் காதல் தூண்ட
வழியின்மேல் வைத்த கண்ணர்
தூதியர் முறுவல் நோக்கி
உயிர் வந்து துடிக்கின்ருரை

உயிரில்லா உடல்போல் படுக்கையில் விழுந்தாள். ஆனால் அந்தக் காதல் சும்மா இருக்கிறதா? இன்னும் தூதி வரவில்லையே என்ற ஏக்கம். இதனுல் துக்கம். வந்து விட்டாளோ என்று பார்க்கத் தூண்டுகிறது. வழியை வழியைப் பார்க்கிருள். பார்த்த கண் பூத்துப் போகிறது. அவர் எங்கே போய்விட்டாரோ? அல்லது நமது பிடிவாதமான கோபத்தால் நொந்து வெறுத்து விட்டாரோ? தாழத் தாழ நமக்கேன் அவ்வளவு கோபம் வந்தது? இந்த சமயம் மட்டும் அவர் திரும்பி வருவாரானுல் அவர் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டுக் கொள்வதோடு இனி நான் அவருக்கு அடிமையாக நடப்பேன் என்று சிந்திக்கிருள்.

அதோ தூதி வருகிருள். காயோ பழமோ? என்ன சொல்வாளோ என்று சந்தேகம். ஆ! தூதி முகத்தில் முறுவல். இந்த முறுவல் தூதிக்குத் தூதாக வருகிறது. மழை கண்டு பயிர் வாட்டம் தெளிவது போல், முறுவல் கண்டு வருகிருர் என்ற சந்தோஷத்தால் உயிர் பெற்ருள். உடல் உயிர் பெற்றது. ஆனுல் காதலன் வருமளவும் ஒவ்வொரு வினுடியும் ஒரு யுகமாக இருக்கிறது. துடிக்கிருள்.

அதோ வந்தான். வந்தான் காதலன். கோபம் பறந்தது. ஊடியிருந்த மனம் கலவிப் போருக்குத் துடிக்கிறது. நாணம் திரை போடுகிறது. அதையும் கிழித் தெறிந்தாள்.

மெள்ளவே இமையை நீக்கி
அஞ்சன விழுது வேய்ந்த
கள்ளவாள் நெடுங்கண் என்னும்
வாளுறை கழிக்கின்றுரை

இமை என்னும் உரையை நீக்கி, அஞ்சனம் என்னும் மெய் பூசிய கண் என்னும் வாளை உருவுகின்ருள். அன்பு கறித்தெழும் காதலர் கண்கள் கலந்தன.

இலங்கையில் மாளிகை தோறும் இந்த வைபவங்களை யெல்லாம் கண்டார் மாருதி. ஆனுல் தேடித் தேடி அலைந்தும் அந்த சீதா தேவியை மட்டும் காணவில்லை.

12. அத்தியாயம்.

கூசினன் குதித்தனன்

தன் உள்ளத்தில் குடி கொண்டிருக்கும் ஸ்ரீ இராமருடைய உள்ளத்தில் குடிகொண்டிருக்கும் சீதா தேவியைத் தேடிக் காணுவிடினும் மாருதி மனங்

களைக்காமல் மேலும் மேலும் தேடிக்கொண்டு போகிறார்.

மங்கள வாத்தியங்களோடும், சிங்கார அலங்காரங்களோடும் தேவப் பெண்கள் பல்லாண்டு கூற, புது மணம் நடக்கும் காட்சிகளைக் கண்டு போகிறார். புதுவீடு குடி புகுகின்ற பெருமைகளைப் பார்த்துப் போகிறார்.

பெண்கள்! பெண்கள்! எத்தனை தேசத்துப் பெண்கள்! எத்தனை ஜாதிப் பெண்கள்! விதம் விதமான நடை, குணம், ஆடை அலங்கார முடைய எத்தனை எத்தனை பேதமான பெண்கள்!

> இயக்கியர் அரக்கி மார்கள்
> நாகியர் எஞ்சில் விஞ்சை
> முயற்கறை மலராத் திங்கள்
> முகத்தியர் முதலினோரை
> மயக்கற நாடி யேகும்
> மாருதி மலையின் வைகும்
> கயக்கமில் துயிற்சிக் கும்ப
> கருணனைக் கண்ணில் கண்டான்

அரக்கியர் தான் எங்கு பார்த்தாலும் இருக்கிறார்கள். இலங்கை இவர்களுக்கு இருப்பிடம். இடையிடையே யக்ஷப் பெண்கள், நாக கன்னியர், வித்யாதர ஸ்திரீகள், தேவ மங்கையர், மனித நங்கையர் இப்படி அளவற்ற பெண்கள் காணப் படுகிறார்கள். களங்கமற்ற பூரண சந்திரன் போன்ற இனிய முகங்கள். வெண்ணிலா பூக்கும் புன்னகைகள்.

இப்படி எத்தனையோ ஸ்திரீகள் இருந்தாலும் மாருதி ஒவ்வொருவரையும் கூர்ந்து கவனித்துப்

போகிறார். பார்த்தவரை மீண்டும் ஒரு முறை பார்க்க வேண்டிய சந்தேக மில்லாமல் தெளிவாகப் பார்த்து விடுகிறார். ஆனால் இவர் தேடும் சீதா தேவி மட்டும் காணக் கிடைக்க வில்லை.

ஒரு விசாலமான மண்டபத்தைக் கண்டார். இரத்தின கசிதமான மண்டபம். இரத்தினத்தின் பிரகாசத்தால் எப்போதும் இருளே அணுகாத மண் டபம். இந்த மண்டபத்துள் இனிய தென்றல் காற்று வீசிக்கொண்டிருந்தது. எத்தகைய தென்றல்?

முன்னிய கனைகடல் முழுகி மூவகைத்
தன்னியல் கதியொடு தழுவித் தாதுகு
மன்னெடுங் கற்பக வனத்துள் வைகிய
இன்னிளந் தென்றல்வந் திழுகி யேகவே.

கடற் காற்று உடலுக்கு நல்லதென்று இப்பொ ழுது அநுபவிக்கிறோம். கம்பர் என்ன சொல்லுகிறார் பாருங்கள். இலங்கையில் நுழைவதற்கு முந்தியே அந்த காற்று கடலில் முழுகித் துளைந்து எழுந்துவந்த தாம். பின்னர் தாதுகு கற்பகச் சோலைக்குள் புகுந் தது. அங்குள்ள நானாவிதமான மலர்களின் புது மணத்தை யெல்லாம் நிரம்பக் குடித்தது. அந்த சோலை நிழலில் குளிர்ந்து, அந்த பரிமள வாடையை சுமந்து கொண்டு மெதுவாக அந்த மண்டபத்தில் நுழையும் இளந் தென்றல் மண்டப முழுவதும் மிருது வான பரிமள இன்பத்தை நிரப்பிப் போகிறது.

அன்னதன் நடுவணோர் அமளி மீமிசை
பன்னக அரசெனப், பரவை தானென-
துன்னிருள் ஒரு வழி தொக்க தாமென
உன்னருந் தீவினை உருக்கொண் டென்னவே.

இந்த மண்டபத்தின் நடுவில் ஒரு படுக்கை காணப் படுகிறது. அந்தப் படுக்கையில் ஆ! இது

என்ன? ஆலகால விஷத்தைக் கக்கும் ஆதிசேஷனோ? பயங்கரமான கருங்கடலா? இல்லை, உலகத்திலுள்ள இருளெல்லாம் ஒருங்கு திரண்டு இங்கு குடி புகுந்திருக்கிறதா? ஸ்வர்க்க மத்திய பாதாளம் என்னும் மூன்று லோகத்திலுள்ள தீவினைகளெல்லாம் உருவெடுத்துப் படுத்திருக்கிறதா? மாருதி இப்படிப் பார்த்து சிந்தித்து நின்று கொண்டிருக்கும் பொழுதே

> மூசிய உயிர்ப்பெனும் முடுகு வாதமும்
> வாசலின் புறத்திடை நிறுவி, வன்மையின்
> நாசியின் அளவையின் நடத்தக் கண்டவன்
> கூசினன் குதித்தனன் விதிர்த்த கையினன்.

அந்த மண்டபத்திலிருந்து புயல்போல் புறப்பட்ட பெருங் காற்று இவரை வாயிலுக்கு வெளியே தள்ளியது. மீண்டும் இவரை மளமள வென்று உள்ளே மண்டபத்துக்குள் அங்கிருந்த படுக்கையில் படுத்திருந்த பயங்கரமான உருவத்தின் மூக்குவரை இழுத்துச் சென்றது. மாருதியை உள்ளும் வெளியும் இழுத்தடித்தது, அங்கு படுத்திருந்த மகத்தான உருவத்தின் மூச்சுக் காற்று! மாருதி கூசினார். தாண்டிக் குதித்தார். கையை உதறினார்.

அந்த சண்ட மாருதம் போன்ற மூச்சுக் காற்றின் போக்குவரத்து ரஸ்தாவுக்கு வெளியே நின்று உற்று நோக்கினார். சந்திரனைப் பிளந்து அருந்துவதற்காக வாயில் திணித்தது போன்ற கோரைப் பற்கள். தேவப் பெண்கள் கால் பிடிக்கப் படுத்துறங்கும் இவன் யாவன்? இராவணனோ? என்று சிந்தித்தார். இல்லை, இல்லை. பத்துத் தலையும் இருபது தோள்களும் இல்லை. ஆகையால் இவன் இராவணனல்ல. பின்னை யார்? என்று எண்ணும் போது கும்பகருண புராணம் இவர் ஞாபகத்திற்கு வந்தது.

இராவணன், கும்பகருணன், விபீஷணர் மூவரும் சகோதரரல்லவா? இவர்கள் இளமையிலேயே கோகர்ண க்ஷேத்திரத்தில் பிரம்மாவைக் குறித்துக் கடுந்தவம் செய்தார்கள். பல ஆயிரக் கணக்கான வருஷங்கள் கடந்தன. பிரம்மா வரவில்லை. இராவணன் தன் தலைகளை அறுத்து யாக குண்டத்திலிட்டுத் தியாகம் செய்தான். கடைசித் தலை அறுக்கும்போது பிரம்மா தோன்றினர். 'என்ன வரம் வேண்டு' மென்று கேட்டார். மனிதரைத் தினம் ஆகாரமாகக் கொள்ளும் இராவணன் மனிதரல்லாத மற்ற யாராலும் மரணமில்லாத வரம் வேண்டினன். பிரம்மா இதைக் கொடுத்து விட்டுக் கும்பகருணனிடம் வந்தார்.

"உனக்கு என்ன வேண்டு" மென்று கேட்டார். தனக்குமேல் தெய்வமே இல்லாமல் போக வேண்டுமென்பது கும்பகருணன் ஆசை. இதற்கு நிர்தேவத்வம் என்பது வார்த்தை. இதைக் கேட்க எண்ணினன். பிரம்மா இதை உணர்ந்தார். ஸரஸ்வதி தேவியை ஏவினர். தேவி கும்பகருணன் நாக்கை நோக்கினுள். நிர்தேவத்வம் என்ற வார்த்தையை உச்சரிக்க முயற்சித்தவன் நித்ரத்வம் (தூங்குவது) என்று சொல்லி முடித்தான். கேட்டதைக் கொடுத்து விட்டார் பிரம்மா. அரும்பாடுபட்டு பெருந்தவம் செய்து பெருந்தூக்கத்தை வரமாகப் பெற்றுக் கொண்டான் கும்பகருணன்.

பிறகு பிரம்மாவின் அருளாலே 6-மாத தூக்கமும் ஒரு நாள் விழிப்புமாக மாற்றப் பட்டது. இந்த ஒரு நாள் விழிப்பையே உலகம் தாங்க முடியவில்லை. எங்கும் யுத்தம்தான். பிறகு படுத்தாலோ 6-மாதம் ஒரே குறட்டை தான். இந்தப் புராணத்தை நினைப்பூட்டிக்கொண்ட மாருதி "இவர் கும்பகருண மகா

ராஜாவோ! நன்றாகத் தூங்கட்டும்" என்று அப்பால் போனார்.

மாட கூடங்கள் மாளிகை ஒளிகை மகளிர்
ஆடரங்குகள் அம்பலம் தேவரா லயங்கள்
பாடல் வேதிகை பட்டிமண் டபமுதல் பலவும்
நாடி யேகினன் ராகவன் புகழெனும் நலத்தோன்

மாடங்களில் குதிக்கின்றார். மாளிகைகளில் புகுகின்றார். யானைக் கூடங்களில் தாவுகின்றார். ஸ்திரீகள் நாட்டியமாடும் இடங்களில் நோக்குகின்றார். சபைகளில் பார்க்கின்றார். தேவர் ஆலயங்களில் தேடுகின்றார். பாடல் மண்டபம், பட்டி மண்டபங்களில் நாடுகின்றார். இராகவன் புகழ்போல் சிறந்த மாருதி தேடாத இடம் ஏது?

13. அத்தியாயம்.

குறிப்புணரும் கூர்மை

எத்தனையோ இடங்கள் தாளிட்டும் பூட்டியு மிருக்குமே. இங்கெல்லாம் எப்படிப் பிரவேசிக்க முடியும்? எப்படித் தேட முடியும்? மாருதி என்ன செய்தார்? என்று கேட்கிறீர்களா? அங்கெல்

ளாம் கூட மாருதி கண்டிப்பாகப் பிரவேசித்தார். தேடினர். எப்படி?

மணி கொள் வாயிலுள்
சாளரத் தாள்களில் மலரில்
கணி கொள் நாளத்தில்
காலினும் புகையினும் கலக்கும்
நுணுகும் விங்குமற் றவனிலை
யாவரே நுவல் வார்?
அணுவின் மேருவின் ஆழியான்
எனச் செலும் அநுமன்

ஸாக்ஷாத் பகவான் அணுவுக்கும் அணுவாகிச் சிறுத்தும், மேருவுக்கும் மேருவாகிப் பெருத்தும் விளங்கவில்லையா? இப்படியே அவரடியராகிய மாருதியும் சிறுத்தும் பெருத்தும் இடத்துக்குத் தக்கபடி உருவெடுத்துத் தேடுகிறார். ஜன்னல் கம்பி வழி புகுந்தும், வாயில் படியில் நுழைந்தும், கதவின் சாவித் துவாரத்தில் சென்றும், புஷ்பங்களின் காம்புகளில் பிரவேசித்தும், இன்னும் காற்றோடும் புகையோடும் கலந்து கொண்டும் எந்த இடமும் பாக்கியில்லாமல் தேடிக் கொண்டு போகிறார்.

ஏந்த லிவ்வகை எவ்வழி
மருங்கினும் எய்திக்
காந்தள் மெல்விரல் மடந்தையர்
யாரையும் காண்பான்
வேந்தர் வேதியர் மேலுளோர்
கீழுளோர் விரும்பப்
போந்த புண்ணியன் கண்ணகன்
கோயிலுள் புக்கான்

இப்படி மாருதி எங்கும் நுழைந்து பெண்கள் யாரையும் விடாமல் பார்த்துக் கொண்டு போகும்

போது, இருள் மத்தியில் ஒளி கண்டதுபோல், பாவத்தின் மத்தியில் புண்ணியத்தைக் கண்டது போல் விசாலமான ஒரு புனித மாளிகையைக் கண்டார். அது யாருடையது? நீதி தெளிந்த அரசர்களும், செந்தண்மை கொண்ட அந்தணர்களும், மற்றெல்லாப் பொது ஜனங்களும், புண்ணியம் புரிந்து சுகமநுபவிக்கும் மேலுலக வாசிகளாகிற தேவர்களும், பாவம் புரிந்து நரகம் அநுபவிக்கும் கீழுலக வாசிகள் உள்ளிட்ட மூன்றுலகத்தோரும் விரும்பி அன்பு செலுத்தும் விபீஷணர் வசிக்கும் கோயில் அது! இவர் யார்? இராவணேச்வரனுக்கும் கும்பகருண மகாராஜாவுக்கும் தம்பிதான்! ஆம்! தம்பி தான்! ஆனால் தம்பியாகப் பிறந்தாரே அல்லாமல் இயற்கைக் குணத்திலும் செயலிலும் அவர்களுக்கும் இவருக்கும் சம்பந்தமே இல்லை. பேதமோ மலைக்கும் மடுவுக்கும் போல் பெரிதானது.

இராவணனே ரஜோகுணத்தின் வடிவம். கும்பகருணனே தாமஸத்தின் பிண்டம். விபீஷணரோ சுத்த சாத்வீகத்தின் உருவம்.

தவம் புரிந்து வரம் பெறும்போதும் இராவணன் மனிதரல்லாத மற்றவரால் மரணமில்லை என்று கேட்டான். கும்பகருணனே நிர்தேவத்வம் விரும்பி நித்ரத்வம் கேட்டுக் கொண்டான். விபீஷணர் என்ன கேட்டார்? ஆச்சர்யம்! சுத்த சாத்வீக மூர்த்தியாகிற பகவான் விஷ்ணுவிடம் மாருத பக்தி வேண்டுமென்று கேட்டுப் பெற்றுக் கொண்டார். அப்படியே நடந்து வருகிறார்.

ஆம். இயற்கையிலேயே நற்குண முடைய விபீஷணர் இயற்கையிலேயே துர்குண முடைய அரக்கர்கள் மத்தியில் எப்படி வசிக்கிறார்? வேறு வழி?

......................கருநிறத் தோரை
வெளித்து வைகுவ தரிதென
அவருரு மேவி
ஒளித்து வாழ்கின்ற தருமம்
அன்னுன் தனை உற்ருன்

தருமம் தனது உண்மையான உருவோடு வெளிப்பட்டால் தரும சத்ருக்களாய் மூன்றுலகை ஆட்சி செய்யும் இராவண கும்பகருண மஹாராஜாக்கள் அதைச் சும்மா விடுவார்களா? ஆனுல் தருமம் என்றும் அழியாமல் இருக்க வேண்டியது. அடடா! அழியாமலிருப்பதிலும் எவ்வளவு தொல்லே? எப்படி யிருப்பது? யோஜனை செய்தது. அந்த அரக்கர் உருவத்தையே எடுத்துக் கொண்டு அவர் மத்தியில் ஒளிந்து வாழ்கிறதாம். இப்படி ஒளிந்து வாழும் தருமம் போல் விளங்கும் விபீஷணரை மாருதி கண்டு உற்று நோக்கினுர். விபீஷணுழ்வாருடைய அந்தரங்கக் கருத்தெல்லாம் தன் அறிவால் உணர்ந்தார். களிப்பும் அன்பும் கொண்டார். இப்படி விபீஷணர் மீது ஏற்பட்ட அன்பால் அரக்கர் குலத்தின் மீது கொண்ட பகை கூட விலகியது. கோபம் குறைந்தது. தனி ஒருவனுல் குலத்துக்கே பழி ஏற்படலாம். ஒருவனுலேயே புகழும் ஏற்படலாம். இராவணனுல் அரக்கர் குலத்துக்குப பழி உண்டானுல் விபீஷணரால் புகழ் உண்டாகலா மல்லவா? இவற்றை யெல்லாம் சிந்தித்து மாருதி சிறிது நிதானித்து மீண்டும் தான் வந்த காரியத்தை நினைத்து அப்பால் தேடிப் போனுர். பல வித விசித்ர கிரகங்களைக் கண்டார்.

லதா க்ரஹாணி சித்ராணி
சித்ர சாலா க்ர ஹாணி ச
க்ரீடா க்ரஹாணி சான்யானி
தாரு பர்வத கானபி

காமஸ்ய க்ரஹம் ரம்யம்
திவா க்ரஹக மேவ ச

ஜீவனுடைய மூளை போகத்தைத் தேடுகிறது. போகம் கிடைத்தால் அதை எப்படி எப்படி யெல்லாம் அநுபவிக்கிற தென்று அந்த மூளை அபூர்வமாக வேலை செய்கிறது.

வெப்பம் தெரியாமல் காலங் கழிக்க பசுங்கொடிகளாலான அழகிய வீடுகள்! கண்ணைக் கவரும் அற்புத வர்ணங்களால் தீட்டப் பெற்ற அதி அற்புதமான சித்திரங்கள் நிறைந்த சித்திர சாலைகள். இன்னும் விளையாடுவதற்கான சாமான்களும் வசதிகளும் நிறைந்த க்ரீடா கிரகங்கள்.

ஆச்சர்யம்! இலங்கை மலைமீது கட்டப்பட்டிருக்கிறது. சமுத்திர மத்தியிலிருக்கிறது. வீட்டை விட்டு வெளியேருமல் மலையையும் கடலையும் காண்பதற்கு மாளிகைக் குள்ளேயே மரத்தினுல் செய்யப்பட்ட மலைகள்! மரக் கலங்கள் ஓடும் அலை கடல்கள்!

இந்த இணை பிரியாத காதலர்கள் ரமிப்பதற்கு உள்ளக் கிளர்ச்சியை ஊட்டும் காம கிரஹங்கள். இன்னும் இவர்கள் பகற்பொழுதை உல்லாஸமாகக் கழிப்பதற் கேற்ற பிரத்யேகமான திவா கிரகங்கள்!

இப்படி எத்தனையோ எண்ணிறந்த போக வீடுகளைக் கண்டு போகும் மாருதி திடீரென்று நின்று உற்று நோக்கினுர். என்ன கண்டார்! பசுக் கூட்டத்தின் மத்தியில் கம்பீரமாக அசைந்து நடக்கும் காளையைப் போல், பெண்கள் கூட்டத்தின் மத்தியில் கம்பீரமாகப் படுத்துறங்கும் ஒரு காளையைக் கண்டார்! யாரது? இதைத் தான் மாருதியும் யோசிக்கிருர்.

வலையும் வாளெயிற் றரக்கனோ?
கணிச்சியான் மகனோ?
அலையில் வாளரி அனையவன்
யாவனோ அறியேன்!
இளைய வீரனும், ஏந்தலும்
இருவரும் பலநாள்
உளைய உள்ளபோர் இவனொடும்
உளதென உணர்ந்தான்.

இவன் யார்? உண்மையில் அரக்கனா? அல்லது சூலமேந்தும் ஈசுவர குமாரன் வேலேந்தும் சுப்ரமணியரா?

மிருகேந்திரனாகிய சிங்கம் எங்கும் யாரையும் லக்ஷியம் செய்வதில்லை. அதன் சொந்தக் குகையில் அதற்கு நிகரேது. இப்படிக் குகையில் படுத்துறங்கும் சிங்கம் போல் நிகரின்றிக் கண்வளரும் இவன் யார்? இவனுக்கு நிகரானவர் யார்? இவனை எதிர்த்துப் போராடக் கூடியவர் யார்? இராமரும் லக்ஷ்மணரும் தனித்தும் சேர்ந்து நின்றும் கூட இவனோடு பல நாள் போராட வேண்டி யிருக்குமென்று எண்ணுகிறேன்.

ஒரு வேளை இவன் இந்திரஜித்தன் என்ற இராவணனுடைய மூத்த குமாரனா? ஆம்! ஆம்! அப்படித் தானிருக்க வேண்டும்.

இராவணன் திக்குபாலர்களையும் மூன்று உலகங்களையும் வென்றான் என்று பெருமையாகப் பேசுகிறார்களே! இத்தகைய வீரப் புதல்வனைத் துணையாகக் கொண்டவன் மூன்றுலகங்களை வெல்வது என்ன பிரமாதம் என்று மாருதி இந்திரசித்தனைக் கண்டு அவன் தோற்றத்திலேயே அவன் வீரத்தை அளந்து கொண்டார். குறிப்புணர்வதை வற்புறுத்துவதில்

கம்பருக்கு அதிக ஆவல். பல இடங்களிலும் இதை வற்புறுத்திக் கொண்டே வருகிறார் என்று பார்க்கிறோம்.

14. அத்தியாயம்

உள்ளமின்றியும் உறங்குகின்றார் சிலர்.

இந்திரசித்தன் மாளிகையைக் கடந்துபோன மாருதி அக்கன், அதிகாயன் மாளிகைகளையும், மற்றும் மந்திரிகள் சேனாபதிகள் மாளிகைகளையும் துருவித் தேடிப் போனார். ஒரு விசாலமான அகழியைக் கண்டார்.

இந்த அகழி ஏழு கடல்களும் இலங்கையைச் சூழ்ந்தது போல் பயங்கரமாகக் கிடந்தது. ஆகையால் அதிக விசை கொண்டு இதைத் தாண்ட வேண்டி இருக்குமென்று கருதினார். அந்த அகழி நீர் வாசனை வீசியது. என்ன வாசனை?

ஆனை மும்மத மும் பரி யாழியும்
வான மங்கையர் குங்கும வாரியும்
நான மாதர் நறக்குழல் ஆவியும்
தேனும் ஆரமும் தேய்வையும் நாறுமால்.

மத யானைகளின் கன்ன மதம், கபோல மதம், கோச மதம், என்ற மும்மதங்களும், துள்ளிக் குதிக்கும் குதிரைகளின் நுரைகளும் நீரில் கலந்திருக்கின்றன.

தேவ மங்கையர்கள் மார்பில் பூசிய குங்குமக் குழம்புகள் கழுவியதால் கலந்த வாசனையும்வீசுகிறது.

மற்றும் பற்பல ஸ்திரீகளுடைய கூந்தலில் கலந்த அகில், புனுகு, கஸ்தூரி முதலான வாசனைகளும் அவர்கள் ஸ்நானம் செய்யும் பொழுது கரைந்து அகழியில் கலந்திருக்கிறது.

இன்னும் அகழியில் தேன் வந்து மண்டி யிருக்கிறது. சந்தனம் முதலான பரிமள வஸ்துக்களும் கலந்து கொண்டிருக்கின்றன. எல்லாம் கலந்து ஒரே வாசனையாய் கம்மென்று மாருதியின் முகத்தில் தாக்கியது.

அந்த அகழியில் தாமரைப் புஷ்பங்கள் குவிந்திருக்கின்றன. இது எப்படி யிருக்கிறது? தாமரைகள் ஒடுங்கி யிருப்பது போல் காணப் படுகிறது. எதற்காக? தம்மைப் போன்ற மலர்ந்த முகமுடைய சீதா தேவி சிறையிலிருக்கிறாளே. அந்தச் செல்வி சிறையிருக்கும் பொழுது நமக்குச் சுகமேது? என்று ஒடுங்கிக் கிடப்பது போல் காணப்படுகிறது.

இந்த அகழியில் படிக்கட்டு அமைத்திருக்கிறார்கள். படிகள் பளிங்குக் கற்களால் ஆனவை. பளிங்கினால் ஆன படிக்கும் பளிங்கு போன்ற ஜலத்திற்கும் வித்தியாசமே தெரிய வில்லை. எதைப் போல?

தெளிந்த சிந்தையை ரும் சிறி யார்களோ(டு)
அளிந்த போதறி தற்கெளி தாவரோ?

தெளிந்த சிந்தையுடைய பெரியோர்கள் சிறிய புத்தியுடையவர்களோடு கலந்து அன்பு மிகுந்து இருக்கும் போது இவர் பெரியவர், இவர் சிறியவர் என்று பேதம் கண்டு பிடிக்க முடியுமா? அந்த பேதம்

மிக நுட்பமாக அல்லவா இருக்கிறது. இதைப் போல பளிங்குப் படியும் அகழி நீரும் கலந்திருக்கும் பொழுது இரண்டும் ஒன்ருகவே காணப் படுகிறது. பேத மிருந்தாலும் அது வெளிக்குத் தெரிய வில்லை.

இத்தகைய படிகளும் வாசனை வீசுகின்ற பளிங்கு போன்ற நீரும், தாமரைகளும் நிறைந்து, கடல்போல் ஆழமும் அகலமுமான அகழியை மாருதி முயற்சியோடு கடந்து போனர். தேடுகிருர். எப்படி?

கரிய நாழிகை பாதியிற் காலனும்
வெருவி யோடும் அரக்கர்தம் வெம்பதி
ஒருவனே ஒரு பன்னிரு யோசனை
தெருவு மும்மைநா ருயிரம் தேடினுன்

என்ன வேளை? இரவு நடு நிசி வேளை. எந்த இடம்? எமனும் கூட அணுக பயப்படும் அரக்கர்களின் ராஜதானி. இதன் பரப்பென்ன? பன்னிரண்டு யோஜனை நீளமுள்ள மூன்று லக்ஷம் தெருக்கள் உடையது இலங்கை. அந்த பயங்கரமான இலங்கையில் எண்ணற்ற லக்ஷக்கணக்கான தெருக்களில் நடு நிசி வேளையில் மாருதி ஒருவரே புகுந்து புகுந்து தேடுகிருர். இச்சமயம் இயற்கையே உறங்குகிறது.

நித்த நியமத்தொழில ராய் நிறையு ஞானத்(து)
உத்தமர் உறங்கினர்கள் யோகியர் துயின்ருர்
மத்தமத வெங்களி றுறங்கின மயங்கும்
பித்தரும் உறங்கினர் இனிப் பிறரி தென்னும்

எப்பொழுது பார்த்தாலும் ஆத்ம அநுபவமுடையவராய் விழிப்பும் மறப்பும் இன்றி யிருக்கும் உத்தமர்களான ஞானியர்களும் மெய்மறந்து உறங்கினர்.

கடுமையான வுடம்பிடித்து வைராக்கியத்தோடு உறங்குவதில்லை என்று தூக்கத்தை ஜெயிக்க விரும்பும் யோகியர்களும் தங்களையும் மறந்து தூங்கிவிட்டார்கள். யானைகளோ அதிகம் தூங்குவதில்லை. அதிலும் மதயானைகளுக்கு உறக்கமேது? இந்த நிசி வேளையின் கொடுமையால் மதம் பிடித்த யானைகளும் கண்ணயர்ந்தன.

பைத்தியம் பிடித்தவர்களுக்கு தூக்கம் வராது. நல்ல தூக்கம் வந்தால் பைத்தியம் தெளிந்துபோகும். அத்தகைய கடும் பித்தர்களும் சொக்கிவிட்டார்கள்.

ஆனால் இராவணனை எண்ணி உருகும் மாதர்கள் எப்படி உறங்குவார்கள்? கண்ணை மட்டும் மூடுகிருர்கள். எதற்காக?

வள்ளல் வெஞ்சர மாரனை அஞ்சியோ?
மெள்ள வேகன வின்பயன் வேண்டியோ?
கள்ள மென்கொல் அறிந்திலம் கண்முகிழ்த்(து)
உள்ள மின்றியும் உறங்குகின் ருர்சிலர்

விழித்திருந்தால் குறித்துப் பாயும் மன்மதனுடைய பஞ்ச பாணங்களுக்குப் பயந்து உறங்கி இந்தத் தொல்லையைத் தவிர்த்துவிட முயற்சிக்கிருர்களா? அல்லது உறங்கினல் கனவு தோன்றும்; கனவிலாவது இராவணனைக் கூடலாம் என்று கனவு காண்பதற்காக உறக்கங் கொள்ள இச்சிக்கிருர்களா? அவர்கள் உள்ளத்தை யார் அறியக்கூடும்? கண்ணென்னவோ மூடியிருக்கிறது. மன மென்னவோ விழித்திருக்கிறது. இப்படிப் பொய்த்துயில் கொள்கிருர்கள் சிலர்.

ஆனல் எத்தனை நாழிக்கு இந்த பொய்த் தூக்கம் கொள்ளமுடியும்? எழுந்து உட்கார்ந்தாள் ஒருத்தி.

புலம்புகின்றாள். யாரோடு? எதிரே இருக்கும் நாகணவாய்ப் பறவையோடு. என்ன கூறுகிறாள்?

ஆவ தொன்றரு ளாய்என தாவியை
கூவு கின்றிலை கூறிலை சென்றெனு
பாவை பேசுவ போற்கண் பனிப்புற
பூவை யோடும் புலம்புகின் றார்சிலர்

'பூவாய்! எனக்கு ஆக வேண்டியதைச் செய்ய மாட்டாயா? என் உயிரனைய காதலனை அழைத்து வர மாட்டாயா? என் நிலையை அவரிடம் போய் சொல்லவாவது மாட்டாயா? என்ன துர் பாக்கியம்' என்று கண்ணிலிருந்து பலபல வென்று நீர் பெருக புலம்புகின்றாள். இவர்களை யெல்லாம் மாருதி கண்டு போகிறார். ஆனால் சீதையை மட்டும் காணக் கிடைக்க வில்லை.

12. அத்தியாயம்.

ராமனைக் கண்ட கண் காமனைக் காணுமோ?

முயற்சியின் உருவமான மாருதி வண்டு போல், பம்பரம்போல் சுழன்று தேடிவருகிறார். இதுவரை கண்ட எல்லாவற்றிலும் மிக கம்பீரமான, மிகச் சிறந்த அற்புத அரண்மனையைக் கண்டார்.

குபேரனுடைய வீட்டிலும், இந்திரனுடைய அந்தப் புரத்திலும் உள்ள செல்வங்களும், லக்ஷ்மி விலாசமும் இங்கு நிரம்பி யிருக்கின்றன.

இதன் மத்தியில் ஜெகஜ் ஜோதியாய் விளங்கும் அற்புதமான புஷ்பக விமானத்தைக் கண்டார்.

எல்லா ரத்தினங்களும் நிறைந்து, எல்லா விதமான சிங்கார அலங்காரங்களும் பொருந்த இந்த புஷ்பக விமானத்தை, தெய்வத் தச்சன் விச்வகர்மா செய்ப வித்து லோகபிதா மகனுகிற பிரம்மாவுக்கு அளித்தார். இதில் ஏறி ஆகாய வீதியில் நினைத்த இடத்திற்குப் போகலாம்.

விச்ரவஸின் பிள்ளை வைசிரவணன் என்கிற குபேரன், மகத்தான தவம் செய்து பிரம்மாவிடம் இந்த விமானத்தைப் பெற்று, இலங்கையை இருப்பிடமாகக் கொண்டு வாழ்ந்து வந்தார். ஒரு நாள் இலங்கையிலிருந்து குபேரன் புஷ்பகத்திலேறி தன் தகப்பனுரை வணங்க வடதிசை நோக்கிப் போகிறார்.

ஏற்கெனவே இலங்கையிலிருந்து துரத்தியடிக்கப் பட்டு பாதாளத்தில் வசித்து வந்த சுமாலி, தன் மகள் கேகஸியோடு பூசஞ்சாரம் செய்ய வந்தான். குபேரன் புஷ்பகத்தில் போகும் காட்சியையும், இவன் தன்னுடைய இலங்கையில் வாழ்வதையும் கண்டு உள்ளம் எரிந்தான். தன் மகளை நோக்கிச் சொல்லுகிருன்.

"மகளே! எந்த விச்ரவஸுக்குப் பிறந்ததால் குபேரன் இந்தப் பெருமையை அடைந்தானே அதே விச்ரவஸினிடம் நீ சென்று, இந்த குபேரனை வென்று இலங்கையையும் புஷ்பகத்தையும் பறிக்கும் படியான ஆற்றலுடைய பிள்ளையை பெற்று, அரக்கர் குலத்தை உய்விக்க வேண்டும்" என்று வேண்டினன்.

இப்படியே கேகஸி விச்ரவஸிடம் சென்று இராவணன் முதலான பிள்ளைகளைப் பெற்றாள். இராவணன் தவஞ் செய்து பிரம்மாவிடம் வரம் பெற்றவுடன் குபேரனிடம் சண்டை செய்து இலங்கையையும் புஷ்பகத்தையும் அபகரித்துக் கொண்டான். இராவண கிரஹத்திலிருக்கும் இந்த மகிமையுள்ள புஷ்பகத்தை மாருதி கண்டார்.

தங்கப் படிகள். தங்கத்தாலும் ஸ்படிகத்தாலும் ஜன்னல்கள். இந்திர நீலத்தால் திண்ணைகள். பவளங்கள், மணிகள், முத்துக்களால் தளவரிசைகள். மண மிகுந்த ரக்த சந்தனம் அப்பி கம கம வென்று வாசனை வீசுகிறது. இந்தப் புஷ்பக விமானத்தில் மாருதி ஏறினார்.

ஆங்காங்கு வைக்கப் பட்டிருக்கும் அன்னம், பானம் பக்ஷணங்களின் திவ்ய வாசனை, 'வாருங்கள்! வாருங்கள்!' என்று அழைப்பது போலிருந்தது. கீழெல்லாம் பூகோள சித்திரங்கள் அமைத்த ரத்தின கம்பளங்கள் விரிக்கப் பட்டிருக்கின்றன.

பஞ்ச இந்திரியங்களுக்கும் பரிபூரண விருந்தளிக்கும் அந்த விமான நிலையைக் கண்டு மாருதி ஆச்சர்யத்தோடு

ஸ்வர்கோயம் தேவ லோகோயம்
இந்த்ரஸ்யேயம் புரீ பவேத்
ஸித்திர் வேயம் பரா ஹி ஸ்யாத்
இத்யமன்யத மாருதி:

இது என்ன ஸ்வர்க்கமா? தேவலோகமா? இந்திரனுடைய அமராவதியா? அல்லது ஏதாவது ஸித்தியின் மகத்துவமா? என்று ஆலோசித்தார்.

ஓ! இதோ! விதம் விதமான வர்ணப் பட்டாடைகளை, விதம் விதமாக உடுத்தி, அலங்காரத்துடன் படுத்திருக்கிற ஆயிரக் கணக்கான ஸ்திரீ ரத்தினங்கள்.

இவர்கள் எல்லாம் மனம் கொண்ட மட்டில் குடித்து, ஆடிப் பாடி விளையாடி, தங்களையும் மீறி அயர்ந்து தூங்குகிறார்கள். என்ன ரமணியமான முகங்கள்!

இமானி முகபத் மானி
நியதம் மத்த ஷட்பதா:
அம்புஜானிவ புல்லானி
ப்ரார்த்நயந்தி புன: புன:

மாலைகளில் தேன் குடிக்கும் மத வண்டுகள் இதோ தாமரை மலரென்று இந்தப் பெண்களின் முகங்களில் மொய்க்கின்றன! மலரல்ல, முக மென்று கண்டு ஏமாந்து திரும்புகின்றன. ஆனால் மீண்டும் சுற்றி வரும் போது, பெண் முகத்தை தாமரை யென்று மயங்கி மொய்க்கின்றன. ஏமாறுகின்றன. இப்படிப் பலதடவையும் நடக்கிறதாம்.

சரத் காலத்தில் நக்ஷத்திரங்களோடு விளங்கும் களங்க மற்ற வான மண்டலத்தைப் போல, இந்த ஸ்திரீ ரத்னங்கள் நிறைந்த சாலைகள் மிகவும் சோபிக்கின்றன. இத்தனை ஸ்திரீகளும் இராவணனிடத்தில் எல்லை யற்ற காதல் கொண்ட மனைவிகள்.

இராவணனிடத்தில் வைத்த அதிக வாஞ்சையில் ஒருத்தி பக்கத்தில் படுத்திருக்கும் சக்களத்தியை இராவணன் என்று எண்ணி ஆர்வத்தோடு முத்தமிடுகிறாள். இப்படி தங்களை அறியாமலே சக்களத்திகளுக்குச் சந்தோஷம் உண்டாக்குகிறார்கள்.

ஒருத்தி கைமீது ஒருத்தி தலைவைத்துப் படுத்திருக்கிறாள். ஒருத்தி மார்மீது மற்றொருத்தி. ஒருத்தி துடைமீது; ஒருத்தி தோள்மீது; இப்படிப் பின்னிக் கொண்டு ஸ்திரிகளால் தொடுக்கப் பட்ட மாலைபோல் கிடக்கிறார்கள். விளக்குகள் ஜ்வலித்துக் கொண்டிருக்கின்றன. இந்தப் பிரகாசத்தில் கந்தர்வப் பெண்கள், யக்ஷ, கின்னர, ராக்ஷஸப் பெண்கள், ராஜரிஷி, பித்ரு, தைத்யப் பெண்கள் கலந்து கிடக்கிறார்கள்.

இவர்களில் யாரும் இராவணனிடத்தில் அன்பில்லாதவர்கள் இல்லை. யாரும் பலாத்காரமாக, இஷ்ட விரோதமாக கொண்டுவரப்பட்ட தில்லை. குலத்தில், குணத்தில், அழகில், கல்வியில், சாமர்த்தியத்தில் குறைந்தவர் யாரும் அங்கில்லை. பலமற்றவளோ இராவணனால் காதலிக்கப் படாதவளோ அங்கு யாரும் இல்லை.

இவர்களுக்கப்பால், ஏகாந்தமான ஒரு இடத்தில் ஜெகஜ் ஜோதியாகப் படுத்திருக்கும் ஒரு ஸ்திரியை மாருதி கண்டார். இவள் மிக ஆடம்பரமாகக் காணப் படுகிறாள். எப்படி?

அரம்பை மேனகை திலோத்தமை உருப்பசி
ஆதியர் மலர்க் காமன்
சரம்பெய் தூனி போல் தளிரடி தான் தொட
சாமரை பணிமாறக்
கரும்பையும் சுவை கைப்பித்த சொல்லியர்
காமரங் கனி யாழின்
நரம்பின் இன்னிசை செவிபுக நாசியில்
கற்பக விரை நாற

தெய்வப் பெண்களில் சிறந்த அரம்பை, மேனகை, திலோத்தமை, ஊர்வசி முதலானவர்கள்

மஞ்சத்தில் படுத்திருக்கும் அந்த மகஷிக்குக் கால் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். எத்தகைய கால்? மலரம்பு கொண்ட மன்மதனுடைய அம்பருத் தூணி போன்ற தளிரடி. சிலர் சாமரை வீசுகிறார்கள். சிலர் வீணையோடு இனிய குரலில் பாடுகிறார்கள். எத்தகைய குரல்? இந்த இனிய குரலோடு ஒத்திட்டால் இனிக்கும் இயற்கையுள்ள கரும்பும் கசப்பாகத் தோன்றுமாம். வீணையோடு கலந்த இவர்களுடைய இனிய நாதம் அவள் காதில் சுகமாக விழுந்து கொண்டிருக்கிறது. பரிமள மிகுந்த கற்பக புஷ்பத்தின் இனிய வாசனை இவளுடைய நாசியில் வந்து மோதிக் கொண்டிருக்கிறது.

எத்தனையோ மாளிகைகளில் இந்த அரண்மனை அழகுடையது. இந்த அரண்மனையில் புஷ்பகம் விசேஷம். ஒளி மிகுந்த புஷ்பகமும் இவளுடைய ஒளியால் அழகாகக் காணப் படுகிறது.

இவ்வளவு மேன்மையாகப் படுத்திருக்கும் ஸ்திரீ ரத்னத்தை மாருதி உற்றுப் பார்த்தார். அழகும் வெள்ளையும் சொல்லத் தரமன்று. "இவள் சீதையோ" என்று மாருதிக்கு சந்தேகம் உண்டாயிற்று. இவ்வளவு மேன்மை யுடையவள் வேறு யாரா யிருக்கக் கூடும்? ஒரு வேளை சீதையானால் என்று எண்ணும் போது மாருதிக்கு ஆத்திரமும் ஆவேசமும் உண்டாயிற்று. ஏன்?

> எற்பு வான் தொடர் யாக்கையால் பெறும்பயன்
> இகந்தனன், இது நிற்க
> அற்பு வான்தனை இற்பிறப் பதனெடும்
> இகழ்ந்துதன் அருந் தெய்வக்
> கற்பு நீங்கிய கனங்குழை இவளெனில்
> காகுத்தன் புகழோடும்

பொற்பும் யானுமிவ் விலங்கையும் அரக்கரும்
பொன்றுதும் இன்றென்றுன்

இல்லற அன்பின் மகிமை, குலத்தின் பெருமை இவற்றை அடியோடு புறக்கணித்து, தனது தெய்வீக மான கற்பை இழக்கத் துணிந்து, அந்த சீதையே இப்படி இராவணன் அந்தப்புரத்தில் போகங்களைப் புசிப்பாளானால், ஆ! இனி வரம்பெங்கே? தர்மமெங் கே? இராமர் புகழெங்கே?

சீ! என்ன வாழ்க்கை? இன்றே அரக்கரை மடித்து, இலங்கையை கவிழ்த்து, யானும் தற்கொலை செய்து கொள்வேன்" என்று துடித்தார்.

ஆனாலும் மாருதி சற்று நிதானித்தார்.

கானுயர்த்த தார் ராமன்மேல் நோக்கிய காதல்
காரிகை யார்க்கு
மீனுயுர்த்தவன் மருங்குதான் மீளுமோ? நினைந்தது
மிகை யென்றுன்

"இராமனைக் கண்டு காதல் கொண்டவள் மீண் டும் காமனைக் கண்டாலும் காதல் கொள்வளோ? இல்லை, இல்லை. நான் நினைத்தது சுத்தத் தவறு" என்று ஊன்றிக் கவனித்தார். லக்ஷணங்கள் ஒத்திருந் தாலும் வேற்றுமைகள் இருக்கின்றன. ஏதோ இவள் புலம்புகிறாள். இவள் முகத்தில் ஆபத்து நிழ லாடுகிறது. இவள் சீதையல்ல என்று நிர்மானித்து அப்பால் போனார்.

16. அத்தியாயம்

ஆவியை அம்மியிட் டறைக்கின்ருன்.

பத்துத் தலைகளும் இருபது தோள்களும் புரள இராவணன் படுத்துக் கிடக்கிருன். எப்படி?

மாஷ ராசி ப்ரதீகாசம்
நிச்வஸந்தம் புஜங்கவத்
கங்கே மஹதி தோயாந்தே
ப்ரஸுப்தமிவ குஞ்சரம்

கங்கா ஜலத்தில் மதயானை உறங்குவது போல கன்னங் கரேலென்று உளுந்துக் குவியலைப் போலக் காணப்படுகிருன். இவன் மூச்சு விடுவது ரோஷங் கொண்ட ஸர்ப்பம் சீறுவது போலிருக்கிறது. வெள்ளை வெண்பட் டுடுத்தி மேலே மஞ்சள் பட்டுப் போர்த்தி யிருக்கிருன். தங்க வளை பூண்ட தோள்கள். யானைத் துதிக்கை போன்ற கைகள். ரத்னங்கள் பதித்த கிரீடங்களும் குண்டலங்களும் முகத்தை ஜ்வலிக்கச் செய்கின்றன. விசாலமான மார்பில் பூசிய ரக்த சந்தனக் கலவையில் வண்டுகள் உழுகின்றன. எந்த வண்டுகள், இவை?

தோடுழு தண்டார் வண்டும்
திசையானை மதந்துதைந்த வண்டும் சுற்றி
மாடுழுத நறுங்கலவை வயக்களிற்றின்
சிந்துரத்தை மாறு கொள்ளக்
கோடுழுத மார்பானை, கொலையுழுத
வடிவேலின் கொற்றம் அஞ்சி
தாடொழுத பகை வேந்தர் முடியுழுத
தழும்பிருந்த சரணத்தானை

இராவணன் திக்கு விஜயம் செய்யும் பொழுது திக்கு கஜங்களோடு சண்டை செய்தான். அந்த யானைகளின் கன்ன மதத்தில் மொய்த்துக்கொண்டிருந்த வண்டுகள், இவன் மார்பில் மலர்ந்த பூமாலைகளில் மொய்த்துக் கொண்டிருந்த வண்டுகளோடு கலந்தன. அதன் பரம்பரை இன்றும் இவன் மாலைகளில் மொய்த்துக் கொண்டிருக்கின்றன. இந்த வண்டுகள் இவன் மார்பில் பூசிய சந்தனச் சேற்றில் உழுகின்றன. எத்தகைய மார்பு?

திக்கு கஜங்கள் பூணிட்ட கூரிய கொம்புகளால் குத்தின மார்பு. கொம்புகள் அப்படியே ஒடிந்து போக, அவற்றை வாள் கொண்டு அறுத்து விட்டான். ரத்தினம் பதித்தது போல் யானைத் தந்தம் இந்த மார்பில் பதிந்திருக்கிறது.

மார்பில் இருக்கும் இந்தத் தழும்பைத் தவிர காலிலும் தழும்பிருக்கிறது. என்ன தழும்பு? இவனது வேலாயுதத்துக்குப் பயந்து எத்தனையோ பகையரசர்கள் இவன் காலில் வந்து விழுந்தார்கள். அவர்களுடைய மணிமுடி பட்டுப் பட்டு இவன் காலில் தழும்பேறி யிருக்கிறது. மார்பில் இடி பட்ட தழும்பும் காலில் முடிபட்ட தழும்பும்! அந்த மார்பிலும் தோளிலும் சில புதுப் புண்கள் தென்படுகின்றன. என்ன புண்?

குழந்தை வெண்மதிக் குடுமியன்
நெடுவரை குலுக்கிய குலத்தோளை
கழிந்து புக்கிடை கரந்தன
அநங்கன்வெங் கடுங்கணை பலபாய
உழந்த வெஞ்சமத் துயர்திசை
யானையின் ஒளிமருப் புற்றிற்ற
பழந்தழும்பினுக் கிடையிடை
யேசில பசும்புண்கள் அசும்பூற

மூன்றாம் பிறைச் சந்திரனை சடையில் தரித்த ஸாக்ஷாத் பரமேச்வரன் வீற்றிருக்கும் கைலைமலை குலுங்கப் பெயர்த்த தோளுடையவனல்லவா, இராவணன்? இந்த பலம் பொருந்திய தோளிடை இப்பொழுது மன்மதனுடைய மலரம்புகள் கிழித்து உள்ளே மறைகின்றன.

யானைக் கொம்பு குத்திய பழந் தழும்புடைய மார்பில் இப்பொழுது இந்த மன்மதனுடைய பஞ்ச பாணங்கள் துளைத்து புதுப் புண்கள் காணப் படுகின்றன. மார்பிலும் தோளிலும் இத்தனை புண் களிருக்கத் தூக்கம் வருமா? தூக்கம் ஏது? பின்னே-

தேவியல் நேமியானில்
சிந்தைமெய்த் திருவினைப்
பூவியல் அமளி மேலாப்
பொய்யுறக் குறங்குவானை
கூவியங் கன்னி தன்பால்
கண்ணிய காதல் நீரில்
ஆவியை உயிர்ப் பென் றேதும்
அம்மியிட் டறைக்கின்றானை

சக்ரபாணியாகிய பகவான் எப்படி நெஞ்சில் லக்ஷ்மியைத் தரித்திருக்கிறாரோ, அப்படியே இராவண னும் லக்ஷ்மி போன்ற சீதையையே நினைந்திருக்கிறான். அவர் எப்படி அறிதுயில் கொண்டிருக்கிறாரோ, அப் படியே இராவணனும் பொய்த்துயில் கொண்டிருக் கிறான். ஆனால் ஒரு பெரிய வித்யாஸம். அவர் முற் றிலும் பற்றில்லாதவர். இவனோ காமத்தில் மூழ்கிக் கிடக்கிறான். இதனால் தன் உயிரை அம்மியில் வைத்து அறைக்கிறான். மூச்சே அம்மி. இதில் இராவணன் உயிரை இட்டு சீதைபால் வைத்த காதல் என்ற ஜலம் விட்டு அறைக்கிறான். காமத்தால்

தீய்ந்த இவனது உயிர் ஒவ்வொரு மூச்சுக்கும் தேய்கிறது.

ஒவ்வொரு மூச்சுக்கும் தேயும் உயிர் பல மாதங்கள் தாங்குமா? தாங்காது. இடையிடையே அந்த உயிர் தளிர்க்கிறது. எப்படி?

மிகுந்தகை நினைப்பு முற்ற
 உருவெளிப் பட்ட வேலை
நகுந்தகை முகத்தன், காதல்
 நடுக்குறு மெய்யன், வார்தேன்
உகுந்தகை மொழியாள் முன்னம்
 ஒருவகை உறையுள் உள்ளே
புகுந்தனள் அன்றே என்று
 மயிர் புறம் பொடிக்கின் றானே

இராவணன் நினைப்பில் சீதையின் எண்ணமே பொங்கிப் பொங்கி எழ, இதன் மிகுதியால் இவன் முன்னே சீதை போன்ற "உருவெளித் தோற்றம்" தோன்றுகிறது. இப்படித் தான் காதலிக்கும் சீதையின் உருவைக் கண்டவுடன் இராவணன் முகத்தில் சந்தோஷம் மலர்கிறது. ஆனால் அதே காதலால் இவன் உடலெல்லாம் நடுங்குகிறது. என்றாலும் நம்பிக்கை அளிக்கும் ஒரு சந்தோஷ உணர்ச்சி. என்ன? "எப்படியாவது சீதை நம் வீட்டிற்குள் வந்து விட்டாளல்லவா? நம் வீட்டில் இப்பொழுதும், இனி எப்பொழுதும் இருப்பாளல்லவா?" இந்த சந்தோஷத்தால் புளகாங்கிதம் கொள்கிறான். காமத்தால் தேய்ந்த உயிர் இந்தப் பூரிப்பால் தளிர்க்கிறது. ஆகையால் தரித்திருக்கிறது.

இந்த நிலையில் தான் மாருதி இராவணன் இருக்குமிடத்தை அடைந்தார். இவர் அங்கு புகுந்தவுடன், சில சகுனங்கள் உண்டாயின.

நிலந் துடித்தன, நெடுவரை பொடித்தன
　　நிருதர்தம் குலமாதர்
பொலந் துடிக்கமை மருங்குல்போல் கண்களும்
　　புருவமும் பொற்றேளும்
வலந் துடித்தன, மாதிரம் துடித்தன
　　தடித்தின்றி மதிவானம்
கலந்திடித்தன, வெடித்தன பூரண
　　மங்கல கலசங்கள்

மண் துடித்தது. மலைகள் பிளந்தன. அரக்கிகளுடைய கண்ணும், புருவமும், தோளும் வலப்பாகம் துடித்தன. திசைகள் துடித்தன. மேக மின்றியே இடிகள் உண்டாயின. பூரண கும்பங்கள் படீரென்று வெடித்தன.

நிற்க, நாலா பக்கங்களிலும் பார்த்து வந்த மாருதி,

பாஸ்வரே சயனே வீரம்
　　ப்ரஸுப்தம் ராக்ஷஸாதிபம்
ஆஸாத்ய பரமோத்விக்ன:
　　ஸோபாஸர்பத் ஸுபீதவத்

ஒளி பொருந்திய மஞ்சத்தில் உறங்கும் வீரனுகிய இராவணனை அணுகினவுடன் தடையுண்டு பயந்தவர் போல் பின் வாங்கினுர். இராவணனுடைய தேஜஸ் அப்பேர்ப் பட்டது. கீழிறங்கி மேடையில் நின்று உற்று நோக்கினுர், மாருதி.

கொண்டதோர் உருவம் மாயன்
　　குறளினும் குறுக நின்றுன்
திண்டலை பத்தும் தோள்கள்
　　இருபதும் தெரிய நோக்கிக்

கண்டனன், காண்ட லோடும்
கருத்தின் முன் காலச் செந்தீ
விண்டன, கண்கள் கீண்டு
வெடித்தன கீழும் மேலும்

பகவான் வாமன உருவம் கொண்டது போல் சிறிய உருவத்தோடு நின்ற மாருதி, பத்துத் தலைகளையும் இருபது தோள்களையும் உற்று நோக்கினர். இவன் தான் இராவணன் என்று நிச்சயித்தார். தேவியைப் பிரித்த பாவியைக் கண்டவுடன் அவர் உள்ளத்தில் காலாக்கினி போல் கோபம் எழுந்தது. கண்களில் தீப்பறந்தன. ஆத்திரத்துடன்

தோளாற்றல் என்னுரும்
மேனிற்கும் சொல்லென்னும்
வாளாற்ற கண்ணாளை
வஞ்சித்தான் மணிமுடியென்
தாளாற்ற லாலிடித்துத்
தலைபத்தும் தகர்த்தென்றன்
ஆளாற்றல் காட்டேனல்
அடியேனுய் முடியேனே.

'பத்தினியான சீதாதேவியை அபகரித்த பாவியை என் காலால் உதைத்து, பத்துத் தலைகளையும் பனங்காய் போல் உருட்டாமல் போனால் இராமருக்கு எப்படி நான் அன்பனுவேன்? என் பலத்தால்தான் என்ன பயன்? உலகத்தார் என்னைப் பற்றி என்ன சொல்வார்கள்? சரித்திரக்காரர்கள் என்ன எழுதிவைப்பார்கள்? இப்பொழுதே இவனைக் கொல்வதே சரி' என்று ஆக்ரோஷத்தோடு கிளம்பினர், மாருதி.

என்றுக்கி யெயிறு கடித்(து)
இருகரனும் பிசைந் தெழுந்து

நின்றாக்கி உணர்ந்துரைப் பான்
நேமியோன் பணியன்றுல்
ஒன்றாக்கி ஒன்றிழைத்தல்
உணர்வுடைமைக் குரித்தன்றுல்
பின்றாக்கின் இதுசாலப்
பிழையாகும் எனப்பெயர்ந்தான்

பல்லை நெற நெற வென்று கடித்தார். இரண்டு கைகளையும் பிசைந்து குத்துவதற்கு ஓங்கினர். ஆனால் இந்த ஆத்திரத்தை அறிவு தடுத்தது. ஆத்திரத்தில் செய்யப் படும் காரியங்கள் ஆலோசனையற்றதாகும். 'ஆத்திரக் காரனுக்கு புத்தி மட்டல்லவா?' ஆகையால் சற்று நிதானித்தார். யோசித்தார். "ஓ சீதா தேவியைக் கண்டு வரும்படி நமக்கு இராமர் கட்டளை இட்டாரே அல்லாமல், இராவணனைக் கொன்று வரும்படி சொல்ல வில்லை. அல்லாமலும் நமக்கு இட்ட கட்டளையை இன்னம் நிறைவேற்ற வில்லை. ஆரம்பித்த காரியத்தை விட்டு அடுத்த காரியத்தைத் தொட்டுச் சீரழிவது அறிவாளிகள் செயலல்ல. அல்லாமலும் இன்னம் யோசித்தால் இவனோ உறங்குகிறுன். உறங்குபவனைக் கொல்வது வீரனுடைய செயலல்ல. இது பேடிகள் செய்யும் பெருங் குற்றம் என்று தெளிந்தார். அடங்கினர்.

ஆலம்பார்த் துண்டவன் போல்
ஆற்றலமைந் துளரெனினும்
சீலம் பார்க் குரியோர்கள்
எண்ணுது செய்பவோ
மூலம் பார்க் குறினுலகை
முற்றுவிக்கும் முறை தெரினும்
காலம்பார்த் திறை வேலை
கடவாத கடலொத்தான்

ஆலகால விஷத்தை அள்ளி விழுங்கிய பரமேச்வரனைப் போல் ஒருவனுக்கு பலமிருந்தாலும் கூட யோசிக்காமல் ஒரு காரியத்தையும் செய்யக் கூடாது. சமுத்திரம் பொங்கி உலகை அழிக்கக் கூடுமானாலும் அது காலமின்றிக் கரைகடப்பதில்லை. ஆகையால் காலத்தை எதிர்பார்த்து மாருதி அப்பால் போனார்.

17. அத்தியாயம்

போக பூமி—மனமே மூலம்

ஆனால் மாருதிக்கு இராவணனைக் கண்டதால் ஒன்று மட்டும் நிச்சயமாகத் தெரிந்தது. சீதா தேவியை அபகரித்துக் கொண்டு வந்த இராவணன் செல்வ போகங்களைக் காட்டி பிரார்த்தித்தும், படை பலத்தைக் காட்டி பயமுறுத்தியும் இருக்கக் கூடுமானாலும் அந்த உத்தமி மட்டும் நயத்தில் மயங்கி விடாமல், பயத்தில் கலங்கி விடாமல் தனது அருங் கற்பையும், இராமர் பெருமையையும் நிலை நிறுத்திக் கொண்டிருக்கிறாள் என்று மாருதி தெளிந்தார். எதனால்? இராவணன் நிலையால்?

புன்னிலைய காமத்தால்
புலர்கின்ற நிலை, பூவை
நன்னிலையில் உள்ள் என்னும்
நலனெனக்கு நல்குமால்

அழகிலும், ஆர்வத்திலும், அறிவிலும், சிறந்த எத்தனையோ மங்கையர்கள் சூழப் படுத்திருக்கும் இராவணன் தணியாத காமத்தால் தவிப்பதைக் கண்டால் இவன் எண்ணம் ஈடேற வில்லை; சீதையிடம் ஜம்பம் பலிக்க வில்லை; அவள் கற்புக் கோட்டையைத் தகர்க்க முடியவில்லை என்று தெளிவாகத் தெரிய வில்லையா? இராவணனுடைய முக வேறுபாடுகளையும் இதனால் அவனுடைய மனோபாவங்களையும் கவனித்தால் 'சீதையை எண்ணி உருகுகிறான்; எப்படியாவது அவளை அடைந்து விடலாமென்று மனப் பால் தான் குடிக்கிறான்' என்று விளங்க வில்லையா? 'இதனால் சீதா தேவி உயிரோடிருக்கிறாள்; உத்தம நன்னிலையில் இருக்கிறாள்' என்று மாருதி ஊகித்துக் கொண்டதாக கம்பர் வெளியிடுகிறார்.

உத்தமியாய் உயிரோ டிருக்கிறாள் என்ற உணர்ச்சியே மேலும் தேடுவதற்கு மாருதிக்கு அதிக உற்சாகம் அளித்தது. ஆகையால் தேடுவதில் முனைந்தார். சுற்றிப் பார்த்தார். இராவணனைச் சூழ்ந்து எத்தனையோ ஸ்திரிகள் படுத்திருக்கிறார்கள். இவர்களுடைய முக விலாசத்தால், நக்ஷத்திரங்களால் ஜொலிக்கும் வான மண்டலத்தைப் போல், அந்த விமானமும் ஜொலிக்கிறது.

ஸங்கீதத்தில் திளைத்துக் களைத்து, நடினமாடிக் களைத்து, மதன லீலையில் களைத்து ஆங்காங்கே அப்படியப்படியே படுத்து உறங்குகிறார்கள்.

ஒருத்தி தான் வாசித்த உயர்ந்த வீணையைத் தழுவிக் கொண்டு படுத்திருக்கிறாள்.

பச்சைக் குழந்தையை அணைத்துப் படுத்திருக்கும் தாயைப் போல, ஒருத்தி மட்டுகம் என்ற வாத்தி

யத்தை அணைத்துப் படுத்திருக்கிறாள். ஒருத்தி டிண்டிமத்தைக் குழந்தைபோல் அணைத்திருக்கிறாள்.

அங்கமெல்லாம் அழகு பூத்த ஒருத்தி நீண்ட நாளுக்குப் பிறகு கிடைத்த காதலனைப் போல் பிடகம் என்ற வாத்யத்தைக் கட்டிக் கொண்டு படுத்திருக்கிறாள்.

அதிக ஆசைகொண்ட ஒருவனை தனியே வரவழைத்து, காமங் கொண்டவள் அவனை காமத்தோடு ஏற்பது போல, ஒருத்தி புல்லாங் குழலைக் கட்டிக் கொண்டு படுத்திருக்கிறாள்.

நாட்டியத்தில் சிறந்த ஒருத்தி காந்தனோடு இணைந்த காதலியைப் போல விபஞ்சி என்ற 7 தந்தி வாத்தியத்தோடு படுத்திருக்கிறாள்.

மதங்கொண்ட கண்ணுளொருத்தி மிருதங்கத்தையும், மதமோகம் கொண்ட தாமரைக்கண்ணியொருத்தி ஆடம்பரம் என்ற வாத்தியத்தையும் தழுவிக்கொண்டு படுத்திருக்கிறார்கள். ஒருத்தி மற்றொருத்தியை ஆலிங்கனம் செய்து படுத்திருக்கிறாள். இப்படி எத்தனையோ விதமாக ஸ்திரீகள் படுத்துறங்குகிறார்கள். பசுக்கள் மத்தியில் விளங்கும் காளையைப்போல, இவர்கள் மத்தியில் இராவணன் விளங்குகிறான். பின்னும் இஷ்டமானதெல்லாம் நிறைந்திருக்கும் 'பான பூமி' (தாகசாந்தி செய்துகொள்ளும் இடம், அல்லது சிற்றுண்டிச் சாலை) யை மகாத்மாவான மாருதி கண்டார்.

மான், எருமைக் கடா, பன்றி மாமிசங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. விசாலமான தங்கப் பாத்திரங்களில் பாதி சாப்பிட்டு மிஞ்சிய மயில், கோழி மாமிசங்கள், நல்ல நல்ல பழங்கள், புஷ்பங்கள் எல்லாம்

நிரம்பி யிருக்கின்றன. மஞ்சங்களாலும் ஆஸனங்களாலும் அந்தப் பானபூமி தீயின்றியும் எரிவது போல் ஜ்வலித்தது.

சர்க்கரையாலும், புஷ்பத்தாலும், பழங்களாலும் இறக்கப்பட்ட வாசனை பொருந்திய சாராயங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன.

தங்கம், வெள்ளி, ஸ்படிக பாத்திரங்களில் பானங்கள் சிலது சிறிது குடிக்கப் பட்டிருக்கிறது. சிலது முழுதும் காலி செய்யப் பட்டிருக்கிறது. சிலது வைத்தபடியே இருக்கிறது. மாலைகள், பழங்கள், புஷ்பங்கள் வாசனைத் திரவியங்கள் வைக்கப் பட்டிருக்கின்றன. ஸ்திரிகள் படுத்திருக்கிறார்கள். ஒருத்தி மற்றொருத்தி வஸ்திரத்தை இழுத்து போர்த்தியிருக்கிறாள். சிலர் சியாமள வர்ணம். சிலர் கருப்பு. சிலர் தங்கமேனி.

குளிர்ந்த சந்தனம், புஷ்பம், தூபம் இவைகளின் வாசனை அந்த புஷ்பக விமானத்தில் கம்மென்று நிரம்பியிருந்தது.

இராவணனுடைய இந்த அந்தப்புர மெங்கும், மூலை முடுக்கு எங்கும் பாக்கி இல்லாமல் மாருதி தேடி விட்டார். ஆனால் ஜானகியை மட்டும் காண முடியவில்லை. சீதை இங்கிருக்க மாட்டாள். ஆனால் எங்கே யிருக்கிறாள்? மாருதிக்குக் கவலை உண்டாயிற்று. அன்றியும் மற்றொரு சந்தேகம் மாருதியின் மனதில் புகுந்து கொண்டது.

"இத்தனை ஸ்திரிகளைப் பல்வேறு நிலையில் கண்டேனே. இதனால் எனது பிரம்மசர்ய தர்மத்திற்குப் பங்கம் வந்துவிட்டதோ" என்று சிந்தித்தார்.

காமம் த்ருஷ்டா மயா ஸர்வா
விச்வஸ்தா ராவண ஸ்திரிய:
நஹி மே மனஸ: கிஞ்சித்
வைக்ருத்யம் உபபத்யதே

இந்த இராவணனுடைய காதலிகளையெல்லாம் நான் நன்றாகத்தான் பார்த்தேன். ஆனாலும் என் மனம் மட்டும் இதனால் சிறிதுகூட சலிக்க வில்லை. கொஞ்சங் கூட விகாரம் அடையவில்லை. பிரம்ம சரியத்திலிருந்து வழுவ வில்லை.

மனோஹி ஹேது: ஸர்வேஷாம்
இந்த்ரியாணாம் ப்ரவர்த்தனே
சுபா சுபாஸு அவஸ்தாஸு
தஸ்ச மே ஸுவ்யவஸ்திதம்

மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற பஞ்ச இந்திரியங்களும் நன்மை தீமைகளில் சஞ்சரிப்பதற்கு மனம் தான் மூல காரணம். இந்த மனம் சுத்தமாக இருந்தால் நல்ல கண்ணோடு பார்க்கிறோம். மனத்தில் மாசிருந்தால் தீக்கண்ணோடு பார்க்கிறோம். ஆகை யால் கண்ணால் பார்ப்பதில் ஒன்றும் குற்றமில்லை. எந்தக் கண்ணோடு பார்க்கிறோம் என்பதுதான் பிரச்னை. இதற்கு நல்ல மனம் அல்லது கெட்ட மனம் தான் மூலம். கண்ணை மூடிக் கொண்டு மன தில் ஆசையை வைத்துக் கொண்டிருப்பவன் கள்ள வேஷக்காரன். ஆசையற்ற மனத்தை உடையவன் கண் திறந்திருந்தாலும் எதைப் பார்த்துக் கொண் டிருந்தாலும் ஒரு விதமான தோஷமு மில்லை. என் மனமோ சரியான நிலையில் இருக்கிறது. கொஞ்சம் கூட தோஷமில்லை. நல்ல மனத்தோடும் நல்ல கண் ணோடும் பார்த்தால் அந்தப் பார்வையினால் குற்ற மொன்று மில்லை. அன்றியும் நான் இவர்கள் மத்தி

யில் தேடுவதற்கும் அவசியம் ஏற்பட்டிருக்கிறது. ஒரு ஸ்திரீ காணுமல் போனல் அவளை ஸ்திரீகள் மந்தியில் தான் தேடவேண்டும். மான்கள் மந்தியிலா காண முடியும்? ஆகையால் நான் சுத்தமான மனதோடு எங்கும் தேடினேன். ஆனல் அந்த ஜானகியைக் கிடைக்க வில்லை. நான் தேடியதில் தோஷமொன்று மில்லை. ஆனல் பலன் ஒன்றும் இல்லையே! என்ன செய்வது என்று சிந்தித்தார்.

18. அத்தியாயம்.

காணுமல் திரும்பேன், தெய்வங்காள்!

சித்திர விடுகள், கொடி விடுகள், இரா விடுகள் எங்கெங்கும் சுற்றிச் சுற்றித் தேடியும் மாருதி சீதா தேவியைக் காணவில்லை. 'தேவி இலங்கையில் இருக்கிருளா?' என்று அவருக்குச் சந்தேகம் உண்டாகி விட்டது. "இருந்தால் ஏன் காணக் கிடைக்க வில்லை? இராவணன் என்ன செய்து விட்டானே? அந்த உத்தமி தன் கற்பைக் காத்துக் கொள்ள என்ன பாடுபட்டாளோ? ஆ! ஆ!

கொன்ருனே கற்பரியாக்
குலமகளைக் கொடுந் தொழிலால்
தின்ருனே அப்புறத்தே
செறித்தானே சிறை யறியேன்

சீதா தேவி குல ஸ்திரிகளின் உயர்ந்த தர்மத்தைக் கடைப் பிடித்து இவனுக்கு உடன்பட மறுத்திருப் பாள். கற்பிழக்க மறுத்திருப்பாள். காம வெறி கொண்ட இராவணனோடு எதிர்த்துப் போராடி இருப்பாள். இதனால் இராவணன் கோபங் கொண்டு இந்தக் கோப வெறியினால் கொன்று விட்டானோ? கட்டிக் கரும்பு போன்ற தேவியை கடித்து மென்று தின்று விட்டானோ? இருக்காது. கோப வெறியை யும் ஆசை தடுத்திருக்கும். கொன்றிருக்க மாட் டான். தின்றிருக்க மாட்டான். அப்படியானால் சீதை எங்கே? இலங்கையில் காணவில்லையே! வேறு எங்காவது சிறை வைத்திருக்கிறானோ?

ஒன்றும் உணரகிலேன்
மீண்டினிப்போய் என்னுரைக்கேன்?
பொன்றாத பொழுதெனக்குக்
கொடுந்துயரம் போகாதால்

ஒன்றும் தெரிய வில்லையே. ஒரு விதமான துப் பும் கிடைக்க வில்லையே. வெறுங்கையோடு திரும் பிப் போவதா? அவர்களிடம் போய் என்ன சொல் வது? ஆ! கடல் கடந்து வந்ததும், இலங்கை யெங் கும் தேடியதும் வீண் தானா? நல்ல சமாச்சாரம் கொண்டு வருவேன் என்று என்னை நோக்கி ஒற்றைக் காலில் நின்று தவங்கிடக்கும் அங்கதன், ஜாம்பவான், மற்ற வானரர்கள் நான் வெறுங்கையோடு திரும்பு வதைக் கண்டால் எப்படி நெஞ்சு வெடித்துப் போவார்கள்? அவர்கள் துக்கத்தைக் கண்டு நான் எப்படி சகிப்பேன்? நான் மாண்டால் அல்லாமல் இந்தத் துக்கம் தீர வழி காணவில்லை. அந்தோ? என்னிடம் என்னைப் பற்றி எத்தனை பேர் எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்!

கண்டுவரும் என்றிருக்கும்
காகுத்தன், கவிகுலக்கோன்
கொண்டுவரும் என்றிருக்கும்
யாவிழைத்த கோளிதுவால்

எத்தனையோ வானர வீரர்கள் எல்லாத் திசையிலும் தேடிப் போனாலும் என்னை மட்[illegible]டியே அழைத்து தனது ஒப்பற்ற கணையாழி[illegible]டம் கொடுத்தனுப்பினாரே! அந்த இராம[illegible]ரிடம் எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்க வேண்டும்? நான் சீதா தேவியை நிச்சயமாகக் கண்டு தரிசித்து வருவேன் என்று எவ்வளவு ஆவலாக அவர் எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்.

அன்றியும் சீதையின் பிரிவால் இராமர் அடைந்திருக்கும் துக்கத்தைக் கண்டு சுக்ரீவர் மிகவும் வருந்தியிருக்கிறார். சீதா தேவியை இராமரோடு சேர்த்து வைக்க கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார். என்னிடம் அதிகம் பழகின சுக்ரீவர் என் ஆற்றலில் அளவற்ற நம்பிக்கையும் கொண்டிருக்கிறார். அவர் மனநிலையை உணர்ந்த நான் சீதா தேவியைக் கண்டு வருவது மன்றி இராவணனைக் கொன்று, தேவியைச் சிறை மீட்டுக் கொண்டு வருவேன் என்று எதிர்பார்த்துக் கொண்டிருப்பாரே. நானோ அவரிட்ட தவணையும் கடந்து, இலங்கையில் வந்து தேடியும் ஒரு துப்பும் தெரியாமல் தவிக்கிறேன். என்ன செய்வேன்?

புண்டரிக நயனத்தான்
பாலினும் போவேனோ
விண்டவரோ டுடன்வியா(து)
யான் வாளா விவேனோ

ஆ! அந்த செந்தாமரைக் கண்ணன், ஸ்ரீ ராமரை இன்னு மொரு முறை தரிசிப்பேனோ? அவரிடம்

மீண்டும் போகும் பாக்கியம் எனக்கு இருக்கிறதா? அல்லது இங்கேயே நான் வீணே மாண்டு போக வேண்டுமா? அப்படியானாலும் என்னை அனுப்பின வர்களுக்கு பதில் சொல்லி அவர்களோடு கூடவாவது மாளும் பாக்கியம் எனக்குண்டா? நம்பிக்கையோடு புகழ்ந் தனுப்பிய ஜாம்பவந்தர் என்னைக் கண்டவுடன் என்ன சொல்வார் என்று மாருதி வருந்தித் தவித் தார். “ஆகையால் நான் தளரக் கூடாது” என்று மாருதி மீண்டும் உற்சாகம் கொண்டார்.

அனிர்வேத: ச்ரியோ மூலம்
அனிர்வேத பரம் ஸுகம்
அனிர்வேதோ ஹி ஸததம்
ஸர்வார்த்தேஷு ப்ரவர்த்தக:

வெற்றி, புகழ், செல்வம் அனைத்திற்கும் உற்சா கமே ஆதாரம். உற்சாகமே பேரின்பம். காரியம் செய்ய உற்சாகந்தான் தூண்டு கோல். காரியத்தை நிறைவேற்றிக் கொடுப்பதும் உற்சாகந்தான். ஆகை யால் உற்சாகத்தோடு மீண்டும் தேடுகிறேன் என்று மாருதி கிளம்பினார்.

தாண்டியும், குதித்தும், ஓடியும், உட்கார்ந்தும், திறந்த வீட்டிலும், தாளிட்ட இடங்களிலும், பிராகா ரங்களிலும், திண்ணைகளிலும், சோலைகளிலும், புஷ் கரணிகளிலும் எங்கும் தேடுகிறார்.

கோர ரூபமுடைய அரக்கியர் பலரைப் பார்க் கிறார். ஆனால் ஜானகியை மட்டும் காணவில்லை.

அழகில் நிகரற்ற வித்யாதர ஸ்திரிகளைப் பார்க் கிறார். ஆனால் அந்த ராமப்பிரியை தென்பட வில்லை.

பூரண சந்திரன் போன்ற முகமுடைய நாக கன்னியர் காணப் படுகின்றனர். ஆனுல் நுண் ணிடைச் சீதை யில்லை.

வானரர்களும் தானும் பட்டதெல்லாம் இப்படி வீணனதைக் கண்டவுடன் மாருதி துக்கத்தோடு தனக்குள்ளே பேசிக் கொள்ளுகிருர்.

ஆழிதா யிடராழி
இடையே விழ்ந் தழிவேனே

கடக்கரிய கடல் கடந்து வந்து இந்த இடர்க் கடலில் அழிந்து போவேனு? இல்லையானுல்

வல்லரக்கன் தனைப்பற்றி
வாயாறு குருதி யுகக்
கல்லரக்கும் கரதலத்தால்
காட்டென்று காண்கேனே?
எல்லரக்கும் அயில் நுதிவேல்
ராவணனும் இவ்வூரும்
மெல்லரக்கின் உருக்கி யுக
வெந்தழலால் வேய்கேனே?

அந்த இராவணனைப் பிடித்து "எங்கே சீதை காட்டென்று கேட்கட்டுமா? சொல்ல மறுத்து மௌனமா யிருந்தால் கல்லை நொறுக்கும் என் கை யால் வாய்களில் குத்தி, பல்லை உடைத்து இரத்தம் கக்க, சீதையை ஒளித்து வைத்திருக்கு மிடத்தையும் கக்கும்படி அடிக்கட்டுமா? தழல் வாய்ப் பட்ட மெழுகு போல் பொன்மயமான இலங்கை உருகும் படி திக் கொளுத்தட்டுமா?

ஆனுல் இப்படி யெல்லாம் ஆத்திரத்தைக் காட் டிக் கொள்வதால் தேவியிருக்கு மிடத்தைக் கண்டு

பிடித்து விட முடியுமா? ஸம்பாதியோ தேவி இலங்கையிலிருப்பதாகக் கூறினரே. அதுவும் பொய்த்ததே.

தேவி இந்தத் துஷ்டன் வீட்டில் இவ்வளவு காலம் பொறுத்து உயிர் வாழ்ந்திருப்பாளா?

இராம பாணத்துக்குப் பயந்து இராவணன் அவசரமாக அந்தரத்தில் தூக்கி வரும் போது வீழ்ந்து மாய்ந்திருப்பாளா?

அல்லது ஆகாயத்தில் வெகு உயரத்தில் போகும் போது கீழே பயங்கரமான கருங்கடலைக் கண்டு தேவியின் இருதயம் நின்று போய் விட்டதா?

இராவணனுடைய முரட்டுப் பிடியில் நசுங்கி மாய்ந்து போனளா? அல்லது துடித்துப் புரளும் போது சமுத்திரத்தில் விழுந்து விட்டாளா?

அல்லது இராவணன் தின்று விட்டானா? பொறாமை கொண்ட அவனது பத்தினிகள் தின்று விட்டார்களா?

பூரண சந்திரன் போன்ற இராமருடைய முகத்தை நினைந்து நினைந்து இந்தப் பிரிவை சகிக்க மாட்டாமல் உருகி உயிர் நீத்தாளா?

ஆ ராமா! ஆ லக்ஷ்மணா! ஆ அயோத்தி! என்று கதறிக் கதறிச் செத்து விட்டாளா?

இல்லை! இல்லை! கூண்டிலடைத்த பஞ்சவர்ணக் கிளியைப் போல் இராவணன் வீட்டில் எங்கேயோ சீதை சிறை வைக்கப்பட்டிருக்கிருள் என்றே எண்ணுகிறேன்.

எப்படியும் சீதையைக் காணமல் இராமரிடம் போகக் கூடாது. ஏன்? நான் சீதையைப் பார்க்க முடியவில்லை என்று சொன்னவுடன் அவர் உயிர் விட்டு விடுவது நிச்சயம். பின்னுல் அன்புள்ள தம்பி லக்ஷ்மணர் உயிர் தரிப்பாரா? பரத சத்ருக்னரும் தாய்மார்களும் வாழ்வரா? சுக்ரீவர் மட்டும் வாழ் வாரா? இதனுல் ருமையும் தாரையும் மடிவார்கள். எல்லாரையும் இழந்து அங்கதன் இருப்பாரா? துக் கம் தாங்காமல் வானரர்களும் மண்டையை பாறை யில் மோதி உடைத்துக்கொண்டு மடிவார்கள். அல் லது மலை உச்சியிலிருந்து கீழே உருண்டு மாள்வார் கள். விஷத்தாலோ தூக்காலோ ஆயுதங்களாலோ மாய்வார்கள் என்பது திண்ணம்.

ஆகையால் வெறுங் கையோடு நான் திரும்பக் கூடாது. போகாமலிருந்தாலும் ஒரு வேளை வருவான் வருவான் என்று உயிர் தரித்திருப்பார்கள்.

இங்கேயே கிடைத்ததை உண்டு வாழ்கிறேன். அல்லது சமுத்திரக் கரையில் தீ மூட்டி வீழ்கிறேன். அல்லது பிராயோபவேசம் செய்கிறேன். என் உடலை நாய் நரிகளும், காக்கை கழுகுகளும் தின்னட்டும். சீதையைக் காணமல் மட்டும் திரும்ப மாட்டேன். ஆனல்—

விநசே பஹவோ தோஷா
ஜீவந் பத்ராணி பச்யதி

தற்கொலை செய்து கொள்வது மகா பாவம். உயிரிருந்தால் என்றைக்காவது நன்மையை அடைய லாம்.

ஆகையால் தேவியைக் காணும் பாக்கியம் கிடைக்கும் வரை இந்த இலங்கையில் திரும்பத் திரும்

பத் தேடிக் கொண்டே இருக்கிறேன்" என்று முடிவு செய்து மாருதி

எள்ளுறையும் ஒழியாமல்
யாண்டையுளும் உளனுய்த் தன்
உள்ளுறையும் அழகனைப் போல்
எம் மருங்கும் உலாவினுன்

எள் விழும் இடமும் பாக்கி யில்லாமல் எங்கும் தேடுகிருர். எதைப் போல? தன்னுள்ளத்தில் கோயில் கொண்டிருக்கும் அழகன் ஸ்ரீ ராமர் சர்வ வியாபியாயிருப்பது போல, மாருதியும் சர்வ வியாபியோ என்னும்படி ஒரு இடமும் பாக்கி இல்லாமல் தேடுகிருர். அப்பொழுது

புள்ளுறை உய்யானத்தை
உறநோக்கி அயல் போவான்
கள்ளுறையும் மலர்ச் சோலை
அயலொன்று கண்ணுற்ருன்.

பக்ஷிகள் மிகுந்த ஒரு தோப்பை நன்ருக உற்று நோக்கிப் போகிற மாருதி பக்கத்தில் தேனொழுகும் பூஞ்சோலை ஒன்றைக் கண்டார். ஓ நான் இதுவரையில் தேடாத இடம் இது. அசோக வனம். இங்காவது தேவியைக் காணும்படி தெய்வங்களையெல்லாம் வணங்கிப் போகிறேன்.

நமோஸ்து ராமாய ஸ லக்ஷ்மணய
தேவ்யை ச தஸ்யை ஜனகாத்ம ஜாயை
நமோஸ்து ருத்ரேந்த்ர யமானிலேப்யோ
நமோஸ்து சந்த்ரார்க்க மருத் கணேப்ய:

அந்த இணைபிரியாத லக்ஷ்மணரோடு கூடிய இராமருக்கு நமஸ்காரம். ஜனகன் மகளாகிற அந்த

சீதா தேவிக்கு நமஸ்காரம். ருத்ரன், இந்திரன், யமன், அக்னி, வாயு, சந்திர, சூரியர் அனைவருக்கும் நமஸ்காரம். சுக்ரீவருக்கு நமஸ்காரம் என்று யாவரையும் வணங்கி, எல்லா தேவர்களும் ரிஷிகணங்களும் தேவியைக் காணும்படி அநுக்ரகிக்கட்டும் என்று பிரார்த்தித்து அசோக வனத்தை நோக்கினார்.

19. அத்தியாயம்.

அசோக வனம்

மாருதி மஹேந்திர கிரியில் நின்று இலங்கையை நோக்கி கடல் கடக்க எண்ணும் பொழுதே தெய்வப் பிரார்த்தனை செய்து கொண்டுதான் உடல் வளர்த்தார். கடல்மீது தாவினவர் இடையில் வந்த இடையூறுகளை வெற்றியோடு சமாளித்து, மனத்தினாலும் கூட யாரும் நினைக்க முடியாத காரியத்தைச் சாதித்தார். அதாவது நூறு யோஜனை விஸ்தீர்ணமுள்ள கடலைக் கடந்து இலங்கையை அடைந்தார்.

இலங்கை எங்கும் தேடியும் தேவியைக் காணாமல் தளர்ச்சி அடைந்தார். கடைசியாக அசோக வனத்தைக் கண்டு தேடப் போகிறார். இப்பொழுது ஒரு முறை மனமார தெய்வப் பிரார்த்தனை செய்கிறார்.

இங்காவது தேவியைக் காணுமாறு அநுக்ரஹிக்கும்படி வேண்டுகிறார்.

மனிதன் தனது புத்தியினாலேயே வெற்றிபெற்று விடுவதில்லை. தெய்வ சிந்தனை வேண்டும். பலமான முயற்சி செய்தும் தோல்வி அடைந்து மனமுடைந்து போகிறான். சில சமயம் அற்ப முயற்சியினாலேயே வெற்றி பெறுகிறான். தெய்வ பலம் அல்லது கால பலத்தின் அநுகூலம் வேண்டும்.

ஆனால் நம்மால் என்ன ஆவது என்று முயற்சி யின்றி சோம்பித் திரியும் பேர்வழிகளுக்குத் தெய்வ அநுக்ரகம் ஒரு நாளும் உண்டாகாது. சோம்பேறிக்குச் சோறு கூட கிடைக்காது. சோம்பித் திரியும்படி தெய் வம் மனிதனைச் சிருஷ்டிக்க வில்லை. கை கால் அவய வங்களை வீணே கொடுத்திருக்க வில்லை. இவற்றை நன்றாக உபயோகித்து முன்னேற முயற்சிக்க வேண்டும்.

ஆனால் அகில பிரபஞ்சத்தையும் அற்புத மாக நடத்தும் ஆண்டவன் சக்தியை மறந்து "நானே சாதிப் பேன்" என்று இறுமாந்து போகக் கூடாது. இவன் கையையும் காலையும் இயக்கும் சக்தி வேறாக இருக்கி றது. ஒரு நிமிஷ நேரத்தில் கை கால்கள் அசைக்க முடியாதபடி வீழ்த்தப் படுவதைப் பார்க்கிறோம்.

மனிதன் முயற்சி செய்ய வேண்டும். தெய்வ சிந்தனையோடு, நல்ல எண்ணத்தோடு, நல்ல காரியத் தில் முயற்சி செய்ய வேண்டும். அப்பொழுது தெய் வம் இவனுக்கு வழி காட்டிப் போகிறது. இவனைத் தாங்கி நின்று முயற்சியில் வெற்றி யளிக்கிறது. சூழ்ந்து நின்று பாதுகாக்கிறது.

இந்த அற்புதமான தெய்வ சக்தியை உணர்ந்து, அனுபவத்தில் கண்டு, அதன் வழி நடப்பவன், தகப்பன் தோள் மீது, அல்லது தாயின் மடிமீது இருக்கும் குழந்தையைப் போல் நிம்மதியாக இருக்கிறான். எந்தக் காரியத்தைச் செய்தாலும் இவன் சலிப்பதில்லை.

இப்படித் தங்கள் அகம்பாவத்தை அடியோடு விடுத்து தெய்வம் காட்டும் வழியில் நாட்டமுடையவர்கள் தெய்வத்தின் சரியான கருவி யாகிறார்கள். இவர்களைக் கொண்டு தெய்வம் உலகை உபகாரமான காரியத்தை நிறைவேற்றுகிறது. இவர்கள் செயற்கரிய காரியங்களை அனுயாஸமாகச் சாதிக்கிறார்கள். உலகெங்கும் இவர்கள் புகழ் பரவி நிலை பெறுகிறது.

உலகில் அரும்பெரும் காரியங்களைச் சாதித்தவர்கள் எல்லாம் தெய்வ நம்பிக்கை கொண்டவர்களே. அல்லது தங்களுக்கு மேற்பட்ட ஒரு சக்தியில் அல்லது அதிருஷ்டத்தில் நம்பிக்கை கொண்டவர்களே.

மாருதி தெய்வ நம்பிக்கை கொண்டவர். இதனால் அரும்பெரும் காரியத்தை சாதித்தவர். இப்பொழுதும் தனது முயற்சியில் வெற்றி தரும்படி தெய்வத்தைப் பிரார்த்திக்கிறார். பிரார்த்தனையில் இவர் நம்பிக்கை கொண்டிருக்கிறார். இதில் நல்ல பலனுமிருக்கிறது.

தெய்வப் பிரார்த்தனையோடு மாருதி அசோக வனத்தின் மதில் மீது தாவினார். அவர் அங்கம் எல்லாம் பூரித்தது. இது வெற்றிக்கு அறிகுறி. சில சமயம் காரணமின்றியும் மனதில் தளர்ச்சியும் தூக்கமும் உண்டாகிறது. இது ஆபத்துக்கு அறிகுறி.

சந்தோஷமும் இதனால் உற்சாகமும் கொண்ட மாருதி மதில் மீதிருந்தே அசோக வனத்தைப் பார்த்

தார். எத்தனையோ விதம் விதமான மரங்கள். செடி கொடிகள். உள்ளே நுழைந்தார். தேடி வருகிறார். மரங்களிலிருந்த பலவித புஷ்பங்கள் எல்லாம் இவர் மீது உதிர்கின்றன. மாருதி புஷ்பமலை போல் விளங்கினார்.

மனதிற்கு ரம்யமான இடங்களை எல்லாம் கண்டார். தங்கமயமான, வெள்ளி மயமான, ரத்தின மயமான பிரதேசங்கள். ஜலம் நிறைந்த தடாகங்கள். மணிமயமான படிகள். தடாகக் கரையில் அழகான, பொன் மயமான மரங்கள். உட்காருவதற்குத் தகுந்த திண்ணைகள்.

அதோ! மரமடர்ந்த மலை. அங்கிருந்து துள்ளிக் குதித்து விழுந்தோடுகிறது இன்ப மயமான அருவி! எதைப் போல!

அங்காதிவ ஸமுத்பத்ய
ப்ரியஸ்ய பதிதாம் ப்ரியாம்

அன்பனுடைய மடியிலிருந்து கோபத்தால் குதித்தோடும் யுவதியைப் போல!

இந்த நீரோட்டத்தை படர்ந்து தழைத்த மரக் கிளைகள் தகைகின்றன. எதைப் போல?

வார்ய மாணம் இவ க்ருத்தாம்
ப்ரமதாம் ப்ரிய பந்துபி:

காந்தனிடத்தில் கோபித்தோடும் காமினியை அன்புள்ள பந்துக்கள் நய வார்த்தைகளால் தடுப்பது போல!

ஆ! தெய்வலோகத்தின் நந்தன வனம் போலே என்ன இன்பமயமான வனம்! புஷ்பங்களின் நறு

மணம் மனதைப் பரவசப் படுத்துகிறது. எல்லாக் காலங்களிலும் மலரும் பழமும் இருக்கும் மரங்களெல்லாம் இங்கு நிறைந்திருக்கின்றன. மிருகங்களும் பக்ஷிகளும் நிறைந் திருக்கின்றன. மனங் கவரும் இனிய குரலுடைய குயில்கள் கூவிக் கொண்டிருக்கின்றன. எத்தனையோ அழகான மண்டபங்கள் எங்கும் பிரகாசத்தால் ஜொலித்துக் கொண்டிருக்கின்றன. இந்த ரம்யமான இடத்திலிருந்து மாருதி சிந்தித்தார்.

"இது மிக அழகான இடம். இராமரை நாடியிருக்கும் சீதை தற்செயலாக இங்கு வரக் கூடும்.

இதோ அழகான தாமரைத் தடாகம். இராம மகிஷி இங்கு நிச்சயம் வருவாள். வன சஞ்சாரம் செய்வதில் பிரியமுடைய சீதை கட்டாயம் இங்கு வருவாள்.

இராமரை எண்ணி எண்ணித் துன்புற்று மெலிந்திருக்கும் சீதை ஆறுதலுக்காக இங்கு வருவாள்.

அல்லது இந்த மங்களமான நதி ஜலத்தில் ஸ்நானம் செய்து ஸந்தியா வந்தனம் செய்யும் பொருட்டாவது அதிகாலையில் சீதை இங்கு வருவாள்.

இராமருக்குத் தகுந்த அழகி அவள் தான். அந்த அழகி சீதைக்குத் தகுந்த அழகான இடம் இந்த இலங்கைக்குள் இது தான்.

ஆகையால் பூரண சந்திரன் போன்ற முகமுடைய சீதாதேவி உயிரோடிருந்தால் கட்டாயம் இங்கே வருவாள் என்று மாருதி எதிர்பார்த்திருந்தார்.

20. அத்தியாயம்

பிரிவின் உருவம்

நிற்க, இராம லக்ஷ்மணரை மாய மானால் அப்புறப் படுத்தி, இராவணன் சீதா தேவியை அப கரித்துக் கொண்டு வந்து, அசோக வனத்தில், அரக் கியர் காவலில் சிறை வைத்தானல்லவா? தேவி என்ன செய்து கொண்டிருக்கிறாள்? என்ன மன நிலையோடிருக்கிறாள்? எப்படிக் காலம் கழிக்கிறாள்? கம்பர் சித்திரிக்கிறார். படியுங்கள்

துயிலெனக் கண்கள் இமைத்தலும்
முகிழ்த்தலும் துறந்தாள்
வெயிலிடைத் தந்த விளக்கென
ஒளியிலா மெய்யாள்

நாதனாகிற இராமரைப் பிரிந்த ஏக்கத்தாலும் மீண்டும் அவரைக் காண வேண்டுமே என்கிற ஊக்கத் தாலும், இஷ்டப்படி செய்யும் துஷ்டர்கள் மத்தியில் தன் அருங் கற்பைக் காத்துக் கொள்ள வேண்டுமே என்ற ஜாக்ரதையாலும் கண்ணை மூடாமல் தவங் கிடக்கிறாள். இமை கொட்டுவதும் இல்லை. சூரியன் வெளிச்சத்தின் முன் விளக்கு மங்கிப்போவது போல் தன்னைச் சூழ்ந்திருக்கும் துன்பத்தால் ஒளியிழந்து உடல் எல்லாம் வெளுத்துப் போயிருக்கிறாள்.

மயிலியல் குயில் மழலையினாள்
மானிளம் பேடை

அயிலெயிற்று வெம் புலிக்குழாத்
தகப்பட்ட தன்னுள்

மயில் போன்ற சாயலும், குயில் போன்ற குரலும், கிளி போன்ற மழலைச் சொல்லுமுடைய சீதை இப்பொழுதோ பயங்கரமான புலிக் கூட்டத்தில் அகப்பட்டுக்கொண்ட இளமையான பெண் மானைப் போல பெரும்பாலும் நம்பிக்கை இழந்திருக்கிருள். என்ருலும் நடுக்கடலில் கப்பலுடைந்தவன் நம்மை மீட்க யாராவது வரமாட்டார்களா என்று நாலா பக்கமும் சுற்றிச் சுற்றிப் பார்ப்பது போல் எல்லாத் திசைகளிலும் பார்க்கிருள். யாரும் காணவில்லை. ஆகையால்

விழுதல் விம்முதல், மெய்யுற
வெதும்புதல், வெருவல்
எழுதல், ஏங்குதல், இரங்குதல்,
இராமனை எண்ணித்
தொழுதல், சோருதல், துளங்குதல்,
துயருழந் துயிர்த்தல்,
அழுத லன்றிமற் றயலொன்றும்
செய்குவ தறியாள்

சோர்ந்து விழுகிருள். விம்மி விம்மி அழுகிருள். உடம்பெல்லாம் தாபத்தால் வெப்பம் அடைகிருள். என்ன நடக்குமோ என்று அஞ்சுகிருள். ஆகையால் எழுந்திருக்கிருள். ஏங்கி ஏங்கித் தவிக்கிருள். பரிதபிக்கிருள். "இராமா!" என்று தியானிக்கிருள். "என்னைக் கை விடலாமா? வந்து காக்க மாட்டீரா" என்று கை கூப்பித் தொழுகிருள். இப்படிப் பலகாலம் பிரார்த்தித்தும் பயனில்லையே என்று சோர்வடைகிருள். "நமக்கு விமோசன மில்லையா? இராமருக்குரிய இந்த உடலை அற்ப அரக்கிகள் மென்று தின்னத்தான் போகிருர்களா" என்று எண்ணும் போது

உடம்பெல்லாம் நடுங்குகிறது. அப்படியே அசைவற்றிருக்கிறாள். துக்கம் நெஞ்சை அடைக்கிறது. பெருமூச்சு விடுகிறாள். சில சமயம் தாங்க மாட்டாமல் ஓ வென்று வாய்விட்டுக் கதறுகிறாள். பொழுது இப்படித் தான் போகிறது.

அரிய மஞ்சினே டஞ்சனம்
முதலிவை அதிகம்
கரிய காண்டலும் கண்ணின் நீர்
கடல்புகக் கலுழ்வாள்

கார் மேகத்தையோ, அஞ்சனத்தையோ, அல்லது நல்ல கருமையான எந்தப் பொருளையோ கண்டு விட்டால், இராமர் நிறம் என்று எண்ணி, இதனுல் இராமரை எண்ணி கண்ணீர் பெருக்குவாள். இது ஆருகப் பெருகிக் கருங் கடலில் போய்க் கலக்குமாம்! இப்படித் துக்கப்படுவாள்.

தான், காவலுடைய இலங்கையில் சிறை வைக்கப் பட்டிருந்தாலும், இலங்கை நூறு யோஜனை விஸ்தீரண முள்ள சமுத்திரத்துக்கு இப்பாலிருந்தாலும், சீதை மனதில் நம்பிக்கை மட்டும் அடியோடு அழிந்து போக வில்லை.

சுருதி நாயகன் வரும் வரும்
என்பதோர் துணிவால்
கருதி மாதிரம் அனைத்தையும்
அளக்கின்ற கண்ணுள்

அறிவின் கரைகண்ட இராமர் தன்னை அனுதையாக விடமாட்டார். வருவார். எப்படியும் வருவார் என்று துணிவு கொண்டாள். ஆகையால் இராமர் எந்தத் திசையிலிருந்தும் வருவாரென்று எல்லாப் பக்

கங்களிலும் தனது நெடிய கண்களால் பார்த்துக் கொண்டே இருக்கிருள்.

கூந்தல் எண்ணெய் காணவும் இல்லை. சிடுக்கு விடுக்கவும் இல்லை. அன்று வாரிவிட்டது தான். இப்பொழுதோ,

குமையுறத் திரண்டொரு
சடையாகிய குழலாள்

அப்படியே இரண்டு சடையாகப் புரண்டு கொண்டிருக்கிறது.

ஆவியந் துகில் புனைவதொன்
றன்றி வேறறியாள்
தூவியன்னமென் புனலிடைத்
தோய்கிலா மெய்யாள்

சேலை ஒன்று மட்டும் தரித்திருக்கிருள். வேறெவ்வித ஆபரணமும் அலங்காரமும் இல்லை. ஜலத்தில் இறங்கி ஸ்நானம் செய்யவும் இல்லை. ஆகையால்,

தேவுதண் கடல் அமிழ்துகொண்
டநங்க வேள் செய்த
ஓவியம் புகை யுண்டதே
ஒக்கின்ற உருவாள்

அழகில் சிறந்த மன்மதன் இனிமையில் சிறந்த அமிர்தத்தால் ஒரு ஓவியம் செய்தான். அது கரும் புகை படர்ந்து மாசுண்டது போல், வர்ணிக்க முடியாத அழகிய சீதையின் வடிவம் துக்கத்தாலும் கவனிப்பில்லாமையாலும் மங்கி யிருக்கிறது.

ஒரு வேளை இளையவர் இராமரைச் சந்திக்கவே இல்லையோ என்று சந்தேகிப்பாள். இல்லை, இல்லை. இருவரும் சந்தித்திருப்பார்கள். ஆனால் இலங்கை இருக்கும் இடம் தெரியாமல் அலைகிறார்களா? இராவணன் என்னைத் தூக்கிக் கொண்டு வந்ததைப் பார்த்தவர் ஜடாயு ஒருவர் தான். அவரும் தான் இராவணன் வாளால் குற்றுயிராய் வீழ்ந்தாரே! என்னைப் பற்றி யார் இராமருக்குச் சொல்லப் போகிறார்கள்? அந்தோ! நான் இப்படியே மக்கி மடியத் தான் வேண்டுமா? என்று விம்முவாள்.

"இளையவரை நான் தகாத வார்த்தைகளால் புண்படுத்தினேனே. இதைக் கேட்டு சுத்த முட்டாளென்று என்னைக் கைவிட்டுப் போய் விட்டாரா? அப்படி அவரே கை விட்டாலும் நான் எப்படி மறப்பேன். அந்தோ! என்னை யின்றி அவர் எப்படிக் காலங் கழிப்பார்?

அருந்து மெல்லட காரிட
அருந்துமென் றழுங்கும்
விருந்து கண்டபோ தென்னுறு
மோவென்று விம்மும்
மருந்து முண்டுகொல் யான்கொண்ட
நோய்க்கென்று மயங்கும்
இருந்த மாநிலஞ் செல்லரித்
திடவுமாண் டெழாதாள்

காட்டில் காய்கனிகளை இளையவர் கொண்டு வருவார். நான் எடுத்துக் கொடுத்தால்தான் இராமர் உண்பார். இப்பொழுது அவருக்கு யார் ஆகாரம் எடுத்துக் கொடுப்பார்கள்?

அல்லது யாராவது விருந்தாளி வந்து விட்டால் அவருடன் இருந்து நான் எல்லா உபசாரமும் செய்ய

வேண்டும். விருந்தாளிக்கு இனியவை அமைத்துக் கொடுக்க வேண்டும். அவர் இல்லாத சமயத்திலும் அவர் இருப்பது போலவே விருந்தாளியைக் கவனிக்க வேண்டும். இதனால் தான் இல்லாள் என்று பெயர். இப்பொழுது யார் இந்த வேலையைச் செய்வார்கள். யாராவது விருந்து வந்தால் நான் இல்லாததால் இராமர் எப்படி உபசரிப்பார்? எப்படி வருந்துவார்? என்று எண்ணி இருந்த இடம் செல்லரிக்க அசையாமல் இருப்பாள்.

ஆனாலும் அவர் சமாளித்துக் கொள்வாரென்றே நம்புகிறேன். சுகத்திலும் துக்கத்திலும் அவருக்கு சமபாவம் உண்டு.

மெய்த்திருப் பதம் மேவென்ற போதினும்
இத்திருத் துறந் தேகென்ற போதினும்
சித்தி ரத்தின் அலர்ந்த செந் தாமரை
ஒத்தி ருந்த முகத்தினை உன்னுவாள்

எனது மாமனார் தசரதர் "தனக்குப் பதிலாக சக்கரவர்த்தி பதவி ஏற்றுக் கொள்ளும்படி இராமரைக் கேட்டுக் கொண்ட போதும், இராமர் இதில் களிப்படைய வில்லை.

அடுத்தாற் போல் பட்டாபிஷேகத்துக்கு ஆயத்தமா யிருந்த சமயத்தில் கைகேயி வரத்தால் காட்டிற்குப் போ என்று சொன்ன போதும் கவலை அடைய வில்லை. இந்த இரண்டு சமயத்திலும் வாழ்விலும் தாழ்விலும் சித்திரத்தில் எழுதிய செந்தாமரை போல் அவர் முகம் மாறுபாடின்றி இருந்தது. ஆகையால் சமபாவமுடைய இராமர் என் பிரிவைச் சமாளித்துக் கொள்வார். ஆனால் நானோ அவருடைய அன்பை

எப்படி மறப்பேன்? என்னிடம் மட்டுமா? சர்வ ஜீவராசிகளிடத்திலும் அன்புடையவர்.

ஆழநீர்க் கங்கை அம்பி கடாவிய
ஏழை வேடனுக் கெம்பிநின் தம்பிநீ
தோழன், மங்கை கொழுந்தியெனச் சொன்ன
வாழி நண்பினை உன்னி மயங்குவாள்

காட்டிலே, கங்கைக் கரையிலே, ஓடம் விடும் வேடர் தலைவர் குகனுடைய அன்பைக் கண்டு "குகா! நீ என் சகோதரன். லக்ஷ்மணன் உன் தம்பி. சீதை உன் கொழுந்தி" என்று சகோதரத்வமும் தன்னோடு சமத்வமும் கொடுத்த அவருடைய விசாலமான அன்பை எப்படி மறந்து அவரை எப்படிப் பிரிந்து உயிர் வாழ்வேன்?" என்று தத்தளித்தாள்.

ஆனால் சிவதனுசை முறித்து, காக்கையைக் கண்ணறுத்து, விராதனைக் கொன்று, கர தூஷணாதி முதல் பதினாலாயிரம் அரக்கர்களை ஒரு முகூர்த்தத்தில் அழித்து வெற்றிகொண்ட அவர் வல்லமையை எண்ணி வியப்பாள். இதனால் சிறிது தேறுதல் அடைவாள். சுருங்கச் சொல்லில்

உரிய காதலின் ஒருவரோ
டொருவரை உலகில்
பிரிவெனும் துயர் உருவுகொண்
டாலன பிணியாள்

அந்தரங்க அன்புடைய காதலனும் காதலியும் பிரிய நேர்ந்தால் அந்த துயரம் எப்படி இருக்குமோ அந்த துயரமே உருவு கொண்டது போலிருக்கிறாள்.

உத்தம பத்திரிகள் கணவனைப் பிரிந்தால் எப்படி அலங்காரமற்று அவர் சிந்தனையாகவே இருப்பார்களோ, அப்படி யிருக்கிருள் சீதை.

21. அத்தியாயம்.

சூரியும் குணமும்

மருண்ட கண்ணுடைய இள மானுக்கு புலிக்கூட்டத்தைக் காவலிட்டது போல், மிருதுவான ஸ்வபாவமுடைய சீதா தேவிக்குக் கொடிய அரக்கிகளை இராவணன் காவல் வைத்திருக்கிருன். நெடு நாளாக இவர்கள் வெகு ஜாக்ரதையாகத்தான் காவலிருக்கிருர்கள். நிசியின் கொடுமை இன்று தங்களையும் மீறி உறங்குகிருர்கள்.

திரிசடை என்ற ஒருத்தி மட்டும் விழித்திருக்கிருள். இவள் தர்மாத்மாவான விபீஷணர் மகள். நல்ல ஸ்வபாவ முடையவள். சீதையிடம் பரம அன்புடையவள். எப்படியாவது சீதா தேவி விடுதலை பெற்று இராமரை அடைந்து சந்தோஷமாக வாழ வேண்டு மென்று மனமார விரும்பிப் பிரார்த்திப்பவள். ஆகையால் பல சமயங்களில் தேவிக்கு ஆறுதல் கூறித் தேற்றி வருபவள். சுருங்கக் கூறின் சீதா தேவிக்கு இலங்கையாகிற பாலை வனத்தில் திரிசடையே பசுஞ்சோலையாக இருந்தாள். கடலில் ஆழ்கிறவனுக்குத் தெப்பக் கட்டை கிடைத்தது போல்,

திரிசடை தேவிக்கு உயிர் தாங்கியாக இருந்தாள். ஆகையால் சீதா தேவி இவளிடம் மனம் விட்டுப் பேசுவாள். உறக்கம் என்பதையே அறியாத தேவி, திரிசடை மட்டும் தனித்திருக்கும் இச் சமயம் அவளோடு ஏதோ சொல்லிக் கொண்டிருக்கிருள். என்ன?

"தோழீ! இன்று எனக்குப் பல தடவை இடக் கண்ணும், புருவமும், தோளும் துடிக்கின்றன. இதனுல் என்ன நேருமோ தெரியவில்லை. ஆனுல் இதற்கு முன் ஒரு சமயம் இப்படி இடம் துடித்த ஞாபகம் வருகிறது. எப்பொழுது சொல்லட்டுமா?

முனியொடு மிதிலையின் முதல்வன் முந்துநாள்
துணியறு புருவமும் தோளும் நாட்டமும்
இனியன துடித்தன, ஈண்டும் ஆண்டென
நனிதுடிக் கின்றன, ஆய்ந்து நல்குவாய்!

நன்ருக ஞாபகம் இருக்கிறது, திரிசடை! எனது அறிவுள்ள தந்தை ஜனக மஹாராஜாவின் அரண் மனையில், கன்னி மாடத்தில் தோழியரோடு நான் விளையாடிக் கொண்டிருந்த போது, அந்த மிதிலை வீதியிலே, முன்னே முனிவரும், பின்னே இளையவரும் சூழ, வீர கோதண்டம் ஏந்தி, புன்முறுவல் பூத்த முகத்தோடு, முதல் முதலாக அந்த முதல்வன் பிரவேசித்த நாளிலே எனக்கு இம்மாதிரி துடிப்புகள் ஏற்பட்டன. அதைப் போலவே இன்றைக்கும் அதிகமான துடிப்பு ஏற்பட்டிருக்கிறது. இதனுல் நன்மை உண்டாகுமா என்று யோசித்துச் சொல்லம்மா!

இன்னென்றும் எனது அநுபவத்தில் இருக்கிறது. அதாவது இராமர் அரசிழந்து காட்டிற்குப் புறப்பட்ட நாளிலும், பஞ்சவடி ஆசிரமத்திலிருந்து என்னை இந்தப் பாதகன் தூக்கிவந்த நாளிலும், இந்த

இரண்டு சமயங்களிலும் எனது வலக் கண்ணும், புருவமும் தோளும் துடித்தன. ஆனால் இன்று இடந் துடிப்பதால் அஞ்சாதே என்று என்பால் இரக்கம் காட்டி யார் வரப் போகிறார்கள்? தெரியவில்லையே! என்று சந்தேகமும் சந்தோஷமும் கலந்த தொனியோடு கேட்டாள், சீதா தேவி.

திரிசடை நம்பிக்கை யற்ற காலத்திலும் கூட தேறுதல் கூறுபவள். இப்படி நல்ல குறி கேட்டபோது கேட்க வேண்டுமா? உற்சாகத்தோடு பேசுகிறாள்.

தாயே! உன்னுடைய அனுபவத்திலிருந்தே இடந் துடிப்பது மங்களமானது என்று உனக்கே தெரியும். இதோ உன் ஆருயிர் நாயகன் உன்னை வந்து அழைத்துக்கொண்டு போகப் போகிறார்!

அன்றியும் நானும் இதோ ஒரு குறி கண்டேன். உனது காதில் அன்போடு ஒரு பொன்வண்டு வந்து ஊதிப் போகிறது. ஆகையால் இராமச் சந்திரனிடமிருந்து உனக்கு இதோ ஒரு தூது வரப்போகிறதென்று உணர்கிறேன். தவிர அக்ரமம் செய்தவர் அழிவது திண்ணமென்பதற்கு நான் பல அறிகுறிகளைக் காண்கிறேன். எனக்குத் தூக்கமே இல்லை. என்றாலும் என்னையுமறியாமல் எனக்கு ஸ்வப்பனம் உண்டாகி யிருக்கிறது. அதில் ஆச்சரியப் படத்தக்க சம்பவங்களைக் கண்டிருக்கிறேன்.

எண்ணெய்பொன் முடிதொறும் இழுகி ஈறிலாத்
திண்ணெடுங் கழுதை பேய் பூண்டதேரின்மேல்
அண்ணலவ் விராவணன் அரத்த ஆடையன்
நண்ணினன் தென்புலன் நவையில் கற்பினாய்

கனவில் நான் இராவணனைக் கண்டேன். எப்படி? எண்ணெய்த் தலையோடு! பத்துத் தலையிலும்

எண்ணெய்! செக்கச் செவேலென்று ரத்தம் போல் சிவந்த ஆடை உடுத்தி யிருந்தார். தேர்மீது கண்டேன். அந்தத் தேரில் கழுதையும் பேயும் பூட்டி யிருக்கிறது. கற்புடைய தாயே! அந்த தேர் எங்கே போகிறது தெரியுமா? யமனிருக்கும் தென்திசை நோக்கிப் போயிற்று. அன்றியும் இராவணனுடைய மக்களும் சுற்றமும் அவரைப் பின் தொடர்ந்து சென்றார்கள். யாரும் திரும்பவே இல்லை. இன்னும் எத்தனை எத்தனையோ கண்டேன். இரண்டொன்று கூறுகிறேன்.

தோரணம் முறிந்தன துணியச் சூழிமால்
வாரணம் முறியுமால் வலத்த வாண்மருப்(பு)
ஆரண மந்திரத் தறிஞர் நாட்டிய
பூரண குடத்து நீர் நறவு பொங்குமால்

மங்கள தோரணங்கள் அறுந்து விழுந்தன. யானைகள் கொம்பு பொடிந்தன. வேத மந்திரங்களால் புனிதமாக்கி வைத்திருந்த பூரண கும்பங்களில் நாற்ற மெடுத்த கள் பொங்குகிறது.

மங்கையர் மங்கலத் தாலி மற்றையோர்
அங்கையின் வாங்கினர் எவரும் இன்றியே
கொங்கையின் வீழ்ந்தன, குறித்த ஆற்றினால்
இங்கிதன் அற்புதம் இன்னும் கேட்டியால்

இலங்கை மங்கையர் கழுத்திலுள்ள மங்களத் தாலிகள் யாரும் கை வைக்காமலே அறுந் தறுந்து அவர்கள் மார்பில் விழுகின்றன. அன்றியும் இன்னொன்று கேள். இராவணனுடைய பட்ட மகிஷி, மயன் மகள் மண்டோதரி கூந்தலில் தீப் பற்றிக் கொண்டது. அந்தக் கூந்தல் சுழன்று கீழே விழுந்தது.

இன்னொரு ஆச்சர்யம் தேவி! இதோ இப்பொழுது கண்டேன். இரண்டு சிங்கங்கள் புலிக் கூட்டத்

தோடு புகுந்தன. இங்குள்ள யானைகளை யெல்லாம் பிணக் காடாக்கின. இங்கிருந்த மயிலொன்றும் வெளியே புறப்பட்டுப் போகக் கனடேன். அச் சமயம்

ஆயிரம் திருவிளக் கமைய மாட்டிய
சேயொளி விளக்கதொன் றேந்திச் செய்யவள்
நாயகன் திருமனை நின்று நன்னுதல்
மேயினள் விடணன் கோயில் மென்சொலாய்!

மறை லக்ஷ்மி போன்ற ஒரு தெய்வப் பெண், ஆயிர முக முடைய ஜெகஜ்ஜோதியான விளக்கொன் றைக் கையில் ஏந்திக் கொண்டு இராவணேச்வரன் அரண்மனையிலிருந்து புறப்பட்டு எங்கள் தந்தை விபீஷணர் திருமனையில் புகுந்தாள். இந்த சமயம் நீ கூப்பிட்டாய். நான் விழித்துக் கொண்டேன். கனவு முடிந்த தில்லை தாயே!" என்ருள் சந்தோஷத் தோடு, திரிசடை.

இவையெல்லாம் நல்ல குறியென்று கண்ட சீதா தேவி அந்த கனவின் மிகுதிப் பாகத்தையும் தெரிந்து கொள்ளும் ஆவலோடு திரிசடையை இன்னும் கொஞ் சம் தூங்கும்படி இருகை கூப்பினுள் என்கிருர் கம்பர்

கனவின் தோற்றங்களும் குறிகளும் சகுனங் களும் வரப்போவதை ஒருவாறு அறிவிக்கின்றன. வரப் போவதைத் தடுக்க முடியாது. ஆனால் குறிக ளால் அவற்றை உணர்பவர் தங்களை ஆயத்தம் செய்துகொள்ள வசதி ஏற்படுகிறது. இந்த அள வுக்கு இவை பிரயோஜன முடையவைகளே. குறி களைக் கண்டு மனஞ் சோர்ந்து விடக் கூடாது. இவற் றிற்கு அநுகூலமாகத் தங்கள் போக்கைச் செப்பனிட் டுக் கொள்வது அறிவாளிகள் செயலாகும்.

நல்ல கனவைத் தொடர்ந்து காண மீண்டும் உறங்கும்படி சீதா தேவி திரிசடையைப் பிரார்த்தித்துக் கொண்டிருக்கும் பொழுதே, உறங்கிக் கிடந்த அரக்கியர் விழித்தெழுந்தனர். கூரிய ஆயுதத்தோடும், கோரமான உருவத்தோடும் நாலா பக்கமும் சுற்றிச் சூழ்ந்தனர். எத்தகைய உருவம்?

வயிற்றிடை வாயினர் வளைந்த நெற்றியின்
குயிற்றிய விழியினர், கொடிய நோக்கினர்
எயிற்றினுக் கிடையிடை யானை யாளி பேய்
துயிற்கொள்வெம் பிலனெனத் தொட்ட வாயினர்

வயிற்றில் வாயுடையவர்கள். வளைந்த நெற்றியில் கண்ணுடையவர். நெருப்பைப் போல் கொடுமையாகப் பார்க்கின்றனர். வாய் எப்படி இருக்கிறது? ஒரு பல்லுக்குப் பல் உள்ள இடைவெளி, யானையும் யாளியும் தூங்கும் குகைபோல் காணப்படுகிறது. இன்னும் பாருங்கள்—

ஒருபது கையினர் ஒற்றைச் சென்னியர்
இருபது தலையினர் இரண்டு கையினர்,
வெருவரு தோற்றத்தர், விகட வேடத்தர்

பத்துக் கையும் ஒற்றைத் தலையும் உடையவர். இருபது தலைகளும் இரண்டு கைகளும் உடையவர். சிலர் தோற்றம் பயங்கரமானது. சிலர் உருவம் வேடிக்கையானது.

கரிபரி வேங்கைமா-கரடி யாளி பேய்
அரிநரி நாயென அனரி முகத்தினர்
வெரிநுறு முகத்தினர் விழிகண் மூன்றினர்
புரிதரு கொடுமையர் புகையும் வாயினர்

யானை முகம். குதிரை மூஞ்சி. நாய், நரி, சிங்கம், யாளி, கரடி, பேய் போன்ற முகத்தை உடையவர்கள். இன்னும் முதுகில் முகத்தை உடையவர்கள். மூன்று மூன்று கண்களை உடையவர்கள். வாயிலும் மூக்கிலும் புகையைக் கக்குகிறார்கள். கொடுமையே எண்ணுகிறவர். கொடுமையே பண்ணுகிறவர்.

பெண்ணெனப் பெயர்கொடு
திரியும் பெற்றியர்

உருவத்தில் பெண் தான். ஆனால் பெண்ணுக்குரிய அன்பும் அடக்கமும் மருந்துக்கும் இல்லாதவர். பயங்கரமான குணமும் செயலும் உடையவர்கள். இவர்கள் விழித்தெழுந்தவுடன் ஆயுதங்களைத் தூக்கிக் கொண்டு சீதா தேவியைச் சுற்றி வருகிறார்கள். தேவி பேச்சை நிறுத்தினாள். இவர்களுடைய நெருப்பை ஒத்த பயங்கரமான தோற்றத்தைக் கண்டு ஏக்கம் அடைந்தாள். இதிலிருந்து எப்பொழுது விடுதலையோ என்று பெருமூச்சு விட்டாள்.

22. அத்தியாயம்.

தேடினான், கண்டனன், தேவியே

இச்சமயம் அசோக வனத்தில் நுழைந்து தேடி வருகிறார், மாருதி. பயங்கரமான அரக்கியர் கூட்டத்தைக் கண்டார். ஜாக்கிரதையாகக் காவல் செய்யும் இத்தனை அரக்கியர் ஒன்று கூடி யிருக்கிறார்

களே! என்ன காரணம்? என்று உற்று நோக்கினர். ஆ! கண்டார்!

விரிமழைக் குலங்கிழித் தொளிரும் மின்னெனக்
கருநிறத் தரக்கியர் குழுவில் கண்டனன்
உருநிறத் தொருதனிக் கொண்டல் ஊழியான்
இருநிறத் துற்றவெற் றியைந்த காந்தத்தை

கன்னங் கரேலென்று பொங்கும் மேகக் கூட்டங் களுக்கு மத்தியில் பளிச்சென்று கண்ணைப் பறித்துத் தோன்றும் மின்னலைப் போல, கருத்த அரக்கியர் மத்தியில் ஆ! தோஜோமயமாய் விளங்கும் சீதா தேவியைக் கண்டார்! கார்மேனி ராமனுடைய உள்ளத்தை ஆகர்ஷித்துக் கொண்டிருக்கும் காந்தத்தைக் கண்டார். சுக்ல பக்ஷ ஆரம்பத்திலிருக்கும் சந்திர ரேகையைப் போல் மெலிந்திருக்கும் தேவியைக் கண்டார். கண்ணில் தாரை தாரையாக நீர் பெருகிக் கொண்டிருக்கிறது. துக்கத்தால் தகிக்கப் பட்டிருக்கிறாள். ஆகாரமின்றி இளைத்திருக்கிறாள். இனத்தை விட்டுப் பிரிந்த மான்குட்டி, நாய்க் கூட்டத்தில் அகப் பட்டுக் கொண்டது போல் தவித்துக் கொண்டிருக்கிறாள்.

ஆகையால், இவள் சீதா தேவியாகத் தான் இருக்க வேண்டுமென்று மாருதி எண்ணினர். பூரண சந்திரன் எல்லாருடைய கண்ணுக்கும் மனதுக்கும் சந்தோஷத்தை அளிக்கிறது. இப்படியே சீதையின் உருவமும் கண்டவர் கண்ணுக் கெல்லாம் இன்பக் காட்சியாக இருக்கிறது. உற்று நோக்கினர்.

அன்று அங்கு மலையில் கண்டு எடுத்த ஆபரணங் கள் இவளுடம்பில் இல்லை. இவளுடம்பிலுள்ள ஆபரணங்கள் அங்கு இல்லை. ஆம்! அதே உத்தரியத்

தின் பகுதி தான் அணிந்திருக்கிருள். ஆனல் நாளான தால் மலினமாகி யிருக்கிறது. ஆம்! இவள் தான் ராம மகிஷி. இவளால் தான் இராமர் காருண்யம், பச்சாதாபம், சோகம், மோகத்தால் தவிக்கின்ருர்.

ஸ்திரீ ப்ரனஷ்டேதி காருண்யாத்
ஆச்ரிதேத் யான்ரு சம்ஸ்யத:
பத்னீ நஷ்டேதி சோகேன
ப்ரியேதி மதனேன ச

ஒரு ஸ்திரீ காணுமல் போனுள் என்ற காருண்யம். நம்மைச் சேர்ந்தவள் என்ற பாசம். பத்னி என்ற துக்கம். பிரியை என்ற காதல். அந்த ராமருக்குத் தகுந்தவள் இந்த சீதை தான். இந்த சீதைக்குத் தகுந்தவர் அந்த ராமர் தான். இவளுடைய மனம் இராமரிடம் பதிந்திருக்கிறது. இராமருடைய மனம் சீதையிடம் இருக்கிறது. ஆச்சர்யம்!

துஷ்கரம் குருதே ராமோ ய இமாம் மத்த காசினீம்
ஸீதாம் விநா மஹா பாஹு: முஹூர்த்தமபி ஜீவதி

இந்த சீதையைப் பிரிந்து அந்த இராமர் எப்படி ஒரு நிமிஷமாவது உயிரோடிருக்கிருர். ஆச்சர்யம்! ராமர் உயிர் பிடிந்திருப்பதே அரிய பெரிய காரியம் தான். சந்தேக மில்லை. சீதா தேவி தான் இவள்" என்று மாருதி நிச்சயித்தார். அவர் மனதில் குதூகல மெழுந்தது. என்ன சந்தோஷம்?

விடின தன்றறன் யானும் விகலேன்
தேடினென் கண்டனென் தேவியே எனு
ஆடினன் பாடினன் ஆண்டும் ஈண்டும் பாய்ந்(து)
ஓடினன் உலாவினன் உவகைத் தேனுண்டான்

தருமம் அழியவில்லை. எனக்கும் சாவில்லை. தேடித் தேடி அலைந்து தேவியைக் கண்டு கொண்டேன். கண்டு கொண்டேன் என்று சந்தோஷத்தால் கூத்தாடினார். பாட்டுக் கிளம்பியது. அங்கு மிங்கும் குதித் தோடினார். சந்தோஷத் தேனைக் குடித்து மெய் மறந்து போனார்.

ஆவதே ஐயமில் அரவின் நீங்கிய
தேவனே அவனிவள் கமலச் செல்வியே

அந்த ராமன் பகவானே. இந்த சீதை லக்ஷ்மி தான். சந்தேகம் இல்லை. இரும்பை விழுங்கிய மீன் அதை செறித்துக் கொள்ள முடியுமா? சீதையின் இருதயத்தை இராவணன் என்ன செய்ய முடியும்?

காசுண்ட கூந்தலாள் கற்புங் காவலும்
ஏசுண்ட தில்லையால் அறத்துக் கீறுண்டோ?

சீதையின் கற்புக்கு ஒரு நாளும் ஊனமில்லை. தருமத்துக்கு அழிவேது? ஆ! ஆ!

புனைகழ லிராகவன் புயத்தையோ? புகழ்
வனிதையர் திலகத்தின் மனத்தின் மாண்பையோ?
வனைகழல் அரசரின் வண்மை விக்கிடும்
ஜனகர்தம் குலத்தையோ? யாதைச் சாற்றுகேன்!

இத்தகைய உத்தமியைப் பத்தினியாகப் பெற்ற இராமருடைய பாக்கியத்தைப் புகழட்டுமா? அந்த ராமர் இருதயத்தையும் தன்னிடம் இழுத்துப் பாது காத்து வைத்திருக்கும் இந்த சீதா தேவியின் மனச் சிறப்பை வாழ்த்தட்டுமா? அல்லது இவளைப் பெற்று வளர்க்கும் பாக்கிய முடைய மிதிலை மன்னன் ஜனகர் குலத்தை பாடட்டுமா? எதைச் சொல்வேன்? ஏதோ தவம் செய்கிறார்களே!

வெங்கனன் மூழ்கியும் புலன்கள் விக்கியும்
நுங்குவ அறுந்துவ நீக்கி நோற்றவர்
எங்குளர்? குலனில்வந் தில்லின் மாண்புடை
நங்கையர் வளத்தவம் நவிலற் பாலதே!

பஞ்சாக்னி மத்தியிலிருந்து இந்திரிய நிக்ரகம் பண்ணி, அன்ன ஆகாரமின்றி எத்தனையோ கஷ்டப் பட்டுத் தவம் செய்கிறார்களே! நல்ல குலத்தில் பிறந்து, இல்லற தர்மத்தை ஒழுங்காய் அநுஷ்டித்து, இத்தனை துன்பத்தின் மத்தியில், நெருப்பின் மத்தி யில் தங்கத்தைப் போல் ஜ்வலித்துக் கிடக்கும் இந்த சீதா தேவியின் தவத்துக்கு இணையேது?

பேண நோற்றது மனை, பிறவி
    பெண்மைபோல்
நாண நோற்றுயர்ந்தது, நங்கை
    தோன்றலால்
மாண நோற் றீண்டிவள் இருந்த
    வாறெலாம்
காணநோற் றிலனவன் கமலக்
    கண்களால்

இவள் பிறந்த வீடு பாக்கியம் செய்தது. சீதை தோன்றியதால், நாணியிருந்த பெண் ஜென்மமே உயர்ந்தது. இவள் தவம் கிடக்கும் இந்தக் கோலத்தை எல்லாம் கண்ணால் பார்க்க அந்த ராமர் கொடுத்து வைக்க வில்லையே என்று மாருதி வியந்து புகழ்கிறார்.

23. அத்தியாயம்.

பெண்ணே தரும தேவதை

உத்தமிகளில் உத்தமி சீதா தேவி. இவளைப் பத்தினியாகப் பெற்றார் இராமர். ஆ! அவர் பாக்கியமே பாக்கியம்! இராமர் தனது அருங் குணங்களால் உலகத்தையே சந்தோஷிக்கச் செய்கிறார். இதை என் கண்ணால் கண்டேன். ஆனால் அந்த ராமரையும் சந்தோஷிக்கச் செய்யும் குண முடைய சீதையை இதோ காண்கிறேன். ஆம்!

தனிமையும் பெண்மையும் தவமும் இன்னதே!

இதுவரையில் நான் எங்கும் காணாத, கேளாத ஒரு அற்புதக் காட்சியை இங்கே காண்கிறேன். இனி ஒரு காலத்திலும் காணமுடியாத காட்சியைக் காண்கிறேன். அது என்ன? இதோ இங்கே நான் ஒரு **பெண்ணைப்** பார்க்கிறேன். இதுவரை எத்தனையோ பெண்களைப் பார்த்திருக்கிறேன். இன்றிரவிலும் எத்தனையோ கோடிக் கணக்கான பெண்களைப் பார்த்தேன். அவர்கள் எல்லாம் பெண் உருவம் தான். பெண் வேஷம் தான். ஆனால் பெண்ணுக்குரிய உயர்ந்த குணங்களெல்லாம் திரண்ட ஒரு வடிவத்தை இதோ இங்கு தான் காண்கிறேன். ஆம்! இவள் தான் பெண். சீதா தேவி தான் பெண். ஆகையால் **பெண் என்ற வார்த்தைக்கு சீதா தேவி என்று தான் பொருள்** சொல்ல வேண்டும்.

அன்றியும் கணவனை, காதலனைப் பிரிந்திருக்கும் எத்தனையோ பெண்களைக் கண்டிருக்கிறேன். இவர்களைப் பற்றிக் கேட்டும் இருக்கிறேன். ஆனால் உள்ளன்புடைய புருஷனைப் பிரிந்த உள்ளன்புடைய பெண் எப்படி இருப்பாள் என்பதை இங்கு தான் காண்கிறேன். தனிமை எப்படி இருக்கும் என்று இங்கு தான் படிக்கிறேன். இராமரைப் பிரிந்திருக்கும் இந்த சீதா தேவியினிடத்தில்தான் பார்க்கிறேன்.

தவிர நான் எத்தனையோ தபசிகளைக் கண்டிருக்கிறேன். தவத்தைப் பற்றி அளவற்ற நூல்களைப் படித்திருக்கிறேன். சிறிது அப்யாசமும் செய்ய முயற்சித்திருக்கிறேன். ஆனால் சுற்றியுள்ள பொருள்களில் சிறிதும் பற்றின்றி, லக்ஷியத்தில் மூழ்கி, பரிபூரணமான ஏகாக்ரத்தோடிருக்கும் பரிபூரணமான தபஸை இதோ இங்கு தான், இந்த சீதா தேவியினிடத்தில் தான் பார்க்கிறேன்.

பெண்மை, தனிமை, தவம் என்ற மூன்று வார்த்தைகளின் பொருள்களை, லக்ஷியங்களை, உருவங்களை இதோ இங்கு இந்த சீதா தேவியினிடத்தில் காண்கிறேன்.

தவத்திற்கு அளவற்ற பெருமை கூறப்பட்டிருக்கிறது. இதற்கு எத்தனையோ கடின மார்க்கங்களும் இருக்கின்றன. பெரும்பாலும் ஆண்கள் தான் இதில் அதிகம் ஈடுபட்டிருப்பதாக கருதப் படுகிறது. பெண்களைத் தவத்திற்கு உதவியாகத் தான் கருதுகிறார்கள். பெண்களைத் தவத்திற்கு விரோதி என்று எண்ணுபவரும் பலர் இருக்கின்றனர். இவர்கள் தவத்தை நாடி பெண் காற்றே இல்லாத இடத்திற்கு ஓடுகிறார்கள். பெண்ணுக்கும் தவத்திற்கும் வெகு தூரம் என்று எண்ணுகிறார்கள்.

ஆனால் இங்கு நான் என்ன காண்கிறேன்? உயர் தவத்தின் உயர்வை இந்தப் பெண்ணிடத்தில்தான், சீதா தேவியிடத்தில்தான் காண்கிறேன். ஆகையால் நான் என்ன முடிவிற்கு வருகிறேன்

வனிதையர்க் காகநல் லறத்தின் மாண்பெலாம்

உலகத்தில் தருமம் சிறந்தது. தருமந்தான் தெய்வம். அந்த தெய்வீக தருமத்தை இந்தப் பெண்ணிடத்தில், சீதா தேவியிடத்தில் பூரணமாகக் காண்கிறேன். பெண்ணால்தான் தருமம். பெண்ணே தருமம். தருமமே பெண். தருமத்திற்கு அதி தேவதை பெண்ணென்று தானே சொல்லுகிறார்கள். தரும தேவதை என்று பெண்பாலாகச் சொல்லுகிறார் களே அல்லாமல் தரும தேவன் என்று வழங்குவ தில்லையே!

இத்தகைய பெண்ணைத் தருமத்திற்கு இடையூ றென்றும், விரோதி யென்றும் கருதுவது எவ்வளவு முட்டாள் தனம்! தருமத்திற்கு இவர்கள் லாயக் கில்லை என்று சொல்வது எவ்வளவு பைத்தியக்காரத் தனம். பெண்ணாலே தான் தர்மம் பிறக்கிறது. வளர் கிறது. பாதுகாக்கப் பட்டிருக்கிறது. தருமத் துக்குப் பெண்ணே 'தர்ம கர்த்தா.' இதை உணராம லிருப்பது—பெண்களே இதை உணராமலிருப்பது! எவ்வளவு ஆச்சர்யமாக இருக்கிறது? இனி வருங் காலத்திலாவது பெண்கள் தங்கள் ஸ்தானத்தை உணரட்டும். தருமத்தைத் தலைமை வகித்து நடத் தும் பொறுப்பை ஏற்கட்டும்.

வனிதையர்க் காகநல் லறத்தின் மாண்பெலாம்

தருமத்தின் பெருமை எல்லாம் பெண்களுக்கே உண்டாகட்டும் என்று மனமார வாழ்த்துகிறேன்"

என்று சிந்தித்து மாருதி சீதா தேவியை மீண்டும் ஒரு முறை பார்த்தார்.

பாரத்தால் சமுத்திரத்தில் மூழ்கும் கப்பலைப் போல், துக்க பாரத்தால் சோக சமுத்திரத்தில் மூழ்கும் சீதா தேவியை கண்டு மாருதிக்குத் துக்கம் தாங்க முடியவில்லை. சிறிது நேரம் ஒன்றும் தோன்ருமல் ஸ்தம்பித்துப் போனுர். கண்களில் தாரை தாரையாக நீர் பெருகுகிறது. கலங்காத நெஞ்சுடைய மாருதியின் கல் நெஞ்சும் கலங்கியது. தன்னையும் மீறி துக்கம் பீறிடுகிறது. பிரலாபித்து அழுகிருர். என்ன சொல்லுகிருர்?

மான்யா குரு வினீதஸ்ய லக்ஷ்மணஸ்ய குருப்பிரியா
யதி ஸீதாபி துக்கார்த்தா காலோஹி துரதிக்ரம:

உலகமெங்கும் எந்தக் காலத்திலும் மரியாதை செய்து பூஜிக்கும் உயர் குணங்களுடையவள் இந்த சீதா பிராட்டி.

பெரியோர்களிடத்தில் நல்ல வணக்கமுள்ள லக்ஷ்மணருக்குத் தமயனை ஸாக்ஷாத் ராமருக்குப் பிரியுமானவள் இந்த ராமப் பிரியை.

அந்த ராமரோ மற்றவருக்கு அஸாத்தியமான காரியங்களை எல்லாம் சாதிக்க வல்லவர். இந்த சீதைக்காக வில்லொடித்தது முதல் பல காரியங்களைச் செய்தவர். ஆற்றலுடைய அந்த ராமருக்குப் பிரியையாய் போற்றத் தக்கவள் இந்த சீதை.

மூன்று லோக ராஜ்யமா, சீதையா? எது தேவை யென்ருல் மூன்றுலக ஆட்சியும் சீதையின் காலெழுத்துப் பெருது. மூன்றுலக ஆட்சியைக் காட்டிலும் சீதையைத் தான் ராமர் அதிகம் விரும்பு

வார் என்பதில் சந்தேகமில்லை. அத்தகைய ராமர் பாதுகாப்பிலிருந்த இத்தகைய சீதையும் கூட துக்கப் பட்டுத் தவிக்கும் காலம் வந்த தென்றால் காலத்தை யாரும் கடக்க முடியாது போலிருக்கிறதே!" என்று மாருதி நொந்தழுதார்.

காலம், விதி, கருமம் மூன்றும் தொடர்புடை யவை. ஒருவர் செய்யும் நன்மை தீமையான காரியத் தின்படி அவருக்குப் பலன் கிடைப்பது விதி. விதி என்பது இயற்கையின் சட்டம். இந்த விதி அதற் குரிய காலத்தில் நிறைவேற்றி வைக்கப் படுகிறது. இந்தக் கால பலனை யாரும் கடக்க முடியாது, காலத் திற்குத் தக்கபடி, விதிக்குத் தக்கபடி, மதியும் பிர வர்த்திக்கிறது. ஊசியின் பின்னே நூல் தொடர் வது போல் விதியின் பின்னே மதி தொடர்கிறது. விதிக்கும் மதிக்கும் முரணில்லை. ஒன்றை யொன்று பூர்த்தி செய்கிறது. ஒன்றை யொன்று வெல்வ தென்ற பேச்சுக்கே இடமில்லை. குறிப்புணரும் அறி வாளிகள் காலத்தின் போக்கை உணர்ந்து தங்கள் மனத்தை அதற்கு ஆயத்தப் படுத்தி விடுகிறார்கள். ஆயத்தமாயிருப்பவர் எந்த நிலையிலும் மனங் கலங்குவ தில்லை. ஆயத்தமற்றிருப்பவர் திடீரென்று தாக்கப் பட்டுத் திகைத்துத் தடுமாறுகிறார்கள். இருக்கும் சட்டத்தை உணர்ந்து அதற்கு இணங்க நடப்பவர் களுக்கு ஆபத்தில்லை. இயற்கைச் சட்டமாகிய விதியை உணராமலும், அதைப் புறக்கணித்தும், குறிப்புணர்ந்து ஆயத்தம் கொள்ளாமலும் தான் மக்கள் தத்தளிக்கின்றனர்.

ஆனால் விதி வலிமை யுடையது. இயற்கையின் சட்டத்தை யாரும் புறக்கணிக்க முடியாது. சீதை யையும் துயரத்தில் ஆழ்த்தும் விதியின் பலத்தை மாருதி சிந்தித்தார்.

22. அத்தியாயம்.

இராமனையே காண்கிறள்

என்றாலும் சீதா தேவி இத்தனை துக்கத்திலும் சலிக்காமல் இருக்கிருள். ஆச்சர்யம்! ஆனால் இராமருடைய ஆற்றல் தேவிக்குத் தெரியும். லக்ஷ்மணருடைய ஊக்கத்தையும் அவள் அறிவாள். இருவரும் ஒரு கணமும் சும்மா இருக்க மாட்டார்கள். தான் இருக்கு மிடத்தைக் கண்டு பிடிக்க அல்லும் பகலும் முயற்சித்துக் கொண்டுதான் இருப்பார்கள். ஆகையால் சீக்கிரமே வந்து சேருவார்கள். இலங்கையை அழித்து, இராவணனை வீட்டி, சிறை மீட்பார்கள் என்ற திடம் சீதா தேவிக்கு இருக்கிறது. ஆகையால் தான் இத்தனை கொந்தளிப்பிலும் கலங்காதிருக்கிருள்.

பந்து ஜனங்களையும், சுக போகங்களையும் விட்டு இராமரைக் காட்டுக்கு தொடர்ந்து வந்தாள். நாதனே பரம பந்து. அவருக்குப் பணிவிடை செய்வதே பரம இன்பம். அவர் உண்ணும் காய்கனிகளே மேலான அமிர்தம் என்று கருதி நடந்தாள். ஆ! என்ன துர்பாக்கியம்! அந்த நாதனையும் பிரிய நேர்ந்ததல்லவா?;

ஆனால் சீதை இராமரைப் பிரிந்திருக்கிருளா? இவள் உடல் இங்கு இலங்கையில் சிறை இருப்பது உண்மையே. ஆனால் இவள் உயிர் இங்கு இருக்கிறதா? மனம் இங்கு இருக்கிறதா? இந்திரியங்கள் இங்கு சரிக்கின்றனவா? இல்லை. இல்லை.

நைஷா பச்யதி ராக்ஷஸ்யோ
நேமான் புஷ்ப பலத்ருமான்
ஏகஸ்த ஹ்ருதயா நூனம்
ராம மேவாநு பச்யதி

சுற்றிக் காவலிருக்கும் கொடிய ராக்ஷஸிகளேயும் சீதை கவனிக்க வில்லே. கண்ணுல் காணவும் இல்லே. லக்ஷியம் செய்யவும் இல்லே. அன்றியும் மணமிகுந்த மலர்கள், ருசி மிகுந்த கனிகள் குலுங்கும் இந்த மரங்களேயும் இவள் நோக்க வில்லே. விரும்ப வில்லே. தேவியின் நாட்டம் ஒரே இடத்தில் தான் இருக்கிறது. உண்மையிலேயே அந்த இராமரைத்தான் காண்கிருள். அந்த கண்கொள்ளாக் காட்சியில்தான் மூழ்கி இருக்கிருள். இராமர் தான் இவள் லக்ஷியம்.

பர்த்தா நாம பரம் நார்யா
பூஷணம் பூஷணுதபி
ஏஷா து ரஹிதா தேந
பூஷணுர்ஹா ந சோபதே

ஆம். பத்தினிக்குப் புருஷன் தான் சிறந்த உயர்ந்த ஆபரணம். அலங்காரம், உணவு, இன்பம் உயிர் எல்லாம் அவரே. அந்த இராம ஆபரணத்தைப் பிரிந்திருக்கும் சீதை பிரகாசிக்க வில்லே.

இமாம் து சீல ஸம்பன்னும்
த்ரஷ்டும் அர்ஹதி ராகவ:

இப்படித் தன்னேயே நோக்கித் தவங் கிடக்கும் இந்த சீதையை இந்தக் கோலத்தோடேயே அந்த இராமர் கண்ணுல் பார்க்க வேண்டும்!

அந்தோ! இந்த சீதையையும் அந்த இராமர் பிரிந்திருக்கிருரே! சீதையைப் பிரிந்த துக்கத்தால்

இராமர் உன்மத்தம் பிடித்தது போலிருப்பதைப் பார்த்திருக்கிறேன். அப்பொழுது நான் யோசிப்ப துண்டு. இந்த அறிவாளி இராமர் ஒரு பெண்ணுக் காக இவ்வளவு துக்கப் படுகிருரே, என்று. ஆனல் இந்த சீதையைப் பார்த்த பிறகு என் தவறை உணர் கிறேன். துக்கம் என்னையே பிடித்துக் கொண்டது. நான் இப்போழுது ஆச்சர்யப் படுகிறேன். அவர் எப்படி உயிரோடிருக்கிருர் என்று. ஆகையால்—

துஷ்கரம் குருதே ராம:
ஹீனே யதனயா ப்ரபு:
தாரயத் யாத்மனே தேஹம்
துக்கே னவ ஸீதது

இத்தகைய உத்தம பத்தினியைப் பிரிந்தும் இந்த துக்கத்தினுல் இராமர் இடிந்து அழிந்து போகாமல் உயிர் தாங்கி இருக்கிருரே! ஆச்சர்யம்! இராமர் அஸாத்யமான காரியத்தைச் சாதித்துக் கொண்டிருக் கிருர் என்று தான் சொல்ல வேண்டும். அவர் மிக வும் திடமுடையவர். கல்நெஞ்சர் என்று கூடச் சொல்ல வேண்டும் என்று மாருதி சிந்தித்தார். அப் பொழுது நீல வானத்தில், ஜலத்தில் மிதக்கும் அன்னத் தைப்போல சந்திரன் பிரகாசித்துக் கொண்டிருந்தார். குளிர்ந்த கிரணங்களால் மாருதியையும் குளிரச் செய்தார்.

இந்த நிலா வெளிச்சத்தில் மாருதி பூரண சந்தி ரன் போன்ற முகத்தையுடைய சீதா தேவியைப் பார்த்தார். சுற்றிலும் அரக்கிகள் காவலிருக்கின்ற னர். பயங்கரத் தோற்ற முடையவர்கள். வேடிக் கையான வடிவம் உடையவர்கள். இவர்கள் மத்தி யில் தன்னுடைய ஒழுக்கத்தாலேயே காப்பாற்றப் பட்டிருக்கும் சீதா தேவியை மாருதி கண்டார். அவர் கண்ணில் நீர் பெருகியது. என்ன நீர்?

ஹர்ஷ ஜானி ச ஸோச்ருணி
தாம் த்ருஷ்ட்வா மதிரேக்ஷணும்
முமோச ஹநுமான் தத்ர
நமச் சக்ரே ச ராகவம்

இத்தகைய உத்தமியும் இந்த உலகத்தில் இருக்கிருளல்லவா? இவளைத் தரிசிக்கும் பாக்கியமும் நமக்குக் கிடைத்த தல்லவா? என்ற சந்தோஷத்திஞல் மாருதி ஆனந்த பாஷ்பம் பெருக்கினர். உடனே இராமருக்கும் நமஸ்காரம் செய்தார். எதற்காக? எத்தனையோ காரண மிருக்கலாம். ஆனல் இந்த நமஸ்காரத்திற்கு சிறப்பான காரண மிருக்கிறது. இந்த சீதைக்கு நாதன் என்ற காரணத்திற்காகவே இந்த நமஸ்காரம் செய்தார் என்று கொள்வது பொருந்தும்.

25. அத்தியாயம்.

கர்ப்பே காக்கும்

இங்க மாருதி சீதையைத் தேடிக் கொண்டு அசோக வனத்தில் நுழைந்த போதே இரவில் சிறிது நேரம்தான் பாக்கி இருந்தது. விடியற்காலம் ஆகிவிட்டதால் பிரம்ம ராக்ஷஸர்கள் வேத கோஷம் செய்தார்கள். மங்கள வாத்தியங்கள் முழங்கின. காதுக்கும் மனதுக்கும் இனிமையான கீதங்கள்

கேட்டன. இராவணன் காலத்தில் கண்விழித்துக் கொண்டான். கண்விழித்ததும் முதல் சிந்தனை சீதை தான். சீதையின் வடிவமே அவன் மனக்கண் முன் நின்றது. பொங்கிப் பூரிக்கும் அந்த எண்ணத்தை அடக்கிக் கொள்ள முடியவில்லை. மூன்று உலகங்களையும் அடக்கி ஆளும் இராவணேச்வரனுக்கும் மனத்தில் பொங்கி எழும் காம வேகத்தை அடக்கிக் கொள்ள முடியவில்லை. எழுந்து, ஆடையாபரணங்களையும் மாலைகளையும் சரிப்படுத்திக் கொண்டு நடந்தான்—அசோக வனத்தை நோக்கி.

இராவணன் எழுந்து நடந்தபோது பரிவாரங்களும் சூழ்ந்து தொடர்ந்தன. சந்திரனைச் சூழ்ந்த நக்ஷத்திர மண்டலம் போல் ஸ்திரீ மண்டலங்கள் அவனைச் சூழ்ந்தன. விளக்கேந்தினர் பலர், விசிறி, குடை, சாமரம் பற்றினர் சிலர். இராவணன் அப்பொழுது வரும் ஆடம்பர நிலையை கம்பர் வருணிக்கிறார். படியுங்கள்.

உருப்பசி உடைவாள் எடுத்தனள் தொடர
மேனகை வெள்ளடை உதவச்
செருப்பினைத் தாங்கித் திலோத்தமைசெல்ல
அரம்பையர் குழாம்புடை சுற்ற
கருப்புரஞ் சாந்தும் கலவையும் மலரும்
கலந்துமிழ் பரிமள கந்தம்
மருப்புடைப் பொருப்போர் மாதிரக் களிற்றின்
வரிக்கை வான் மூக்கிடை மடுப்ப

இராவணனுடைய உடைவாளை ஊர்வசி எடுத்து வந்தாளாம். இவள் யார்? தேவப் பெண்களுக்குள் சிறந்தவள். எப்படி?

பதரிகாச்ரமத்தில் தவம் செய்யும் நாராயணருடைய தவத்தை அழிப்பதற்காக ஒரு சமயம் அழ

கில் சிறந்த தேவப்பெண்கள் எல்லாம் அங்கு சூழ்ந்து ஆடியும் பாடியும் அவர் கவனத்தை இழுக்க முயற்சித்தார்கள். நாராயணன் கண் விழித்தார். நிலையை உணர்ந்தார். இவர்களுக்குப் புத்தி கற்பிக்க எண்ணினர். தன் நகத்தால் ஊருவில் அதாவது தொடையில் கீறினர். அதிலிருந்து ஒரு பெண் உண்டானுள். இவள் அழகையும் சிங்காரத்தையும் கண்டவுடன் வந்திருந்த அழகிகள் எல்லாம் சூரியனைக் கண்ட மின்மினி போல் ஒளி மழுங்கிப் போனார்கள். வெட்கித் திரும்பினர்கள். இது முதல் இவள் தேவப் பெண்களுக்குத் தலைவியானுள். ஊருவில் உதித்ததால் இவளுக்கு ஊர்வசி என்று பெயர். இந்த ஊர்வசி இப்பொழுது இராவணனுக்கு உடைவாள் சுமந்து வருகிருள். எப்படி!

நிற்க, மேனகை என்பவள் இராவணனுக்கு வெற்றிலை பாக்கு மடித்துக் கொடுத்து வருகிருள். மேனகையைப் பற்றி ஏற்கெனவே கேட்டிருக்கிறோம். தவத்தில் சிறந்தவர் விச்வாமித்திரர். இவர் 10 வருஷ காலம் சுத்தமாகத் தவத்தை மறந்து தன்னிடத்தில் ஈடுபட்டிருக்கும்படி செய்தவள் மேனகை. சாகுந்தலம் என்ற இணையற்ற சரிதத்தை உலகத்துக்கு அளித்த சகுந்தலையை இந்த விச்வாமித்திரரிடம் பெற்றெடுத்தவள் இந்த மேனகை. இவள் தாம்பூலம் கொடுத்து வருகிருள்!

பாவம்! திலோத்தமை என்பவள் இராவணனுடைய செருப்பைத் தூக்கி வருகிருள்! இன்னும் எத்தனையோ தேவப் பெண்கள் சூழ்ந்து வருகிருர்கள்.

தவிர, இராவணன் மூக்குக்கு வாசனை ஊட்டி வருகிறதாம். எது? ஒரு திக்கு கஜம்? எப்படி? பச்சைக் கருப்பூரம், செஞ்சந்தனம், மண மலர்கள்

முதலிய வாசனைத் திரவியங்கள் எல்லாம் நிறைந்த ஒரு கும்பாவை, அந்த திக்கு யானை மரியாதையாக பயந்து தூரத்தில் இருந்து கொண்டு தன் துதிக்கை யால் தாங்கி இராவணன் மூக்குகளெதிரே பிடித்துக் கொண்டு வருகிறதாம். கம்பர் கற்பனை சித்திரத்தின் உயர்வைப் பாருங்கள்!

இப்படி ஆடம்பரமாக வருகிற இராவணனை அப்படிச் சிந்தனையில் ஆழ்ந்திருந்த மாருதி கண்டார். இராவணனைக் கண்டவுடன் அவருக்குக் கோபம் பொங்கியது. 'இப்பொழுது விழித்திருக்கிறன், இவனை வீழ்த்துகிறேன்' என்று கிளம்பினர். ஆனால் உடனே அடங்கினர். வந்த காரியம் இன்னம் முடியவில்லை. சீதா தேவியை இன்னமும் சந்திக்க வில்லை.

ஒன்றாக்ரி ஒன்றிழைத்தல்
உணர்வுடைமைக் குரித்தன்ருல்

தொட்ட காரியத்தை விட்டு மற்ற காரியத்தை தொடுவது அறிவாளி செயலல்ல. ஆகையால் இப் பொழுதும் உடனே வெளிப்பட்டுச் சண்டையில் இறங்குவது உசித மில்லை என்று அடங்கினர்.

ஆனல் இராவணன் வந்து அணுகுவதற்குள் சீதா தேவியைச் சந்தித்து சந்தோஷத்தையும் நம்பிக் கையையும் திடத்தையும் உண்டாக்கலாமா என்று எண்ணினர்.

ஆனல் இதுவும் அவ்வளவு சுலபமாக இல்லை. இது நம்பிக்கை யற்ற இடம். அன்றியும் நம்பிக்கை யற்றவன் வரும் சந்தர்ப்பம். நம்மிடத்திலும் அவ நம்பிக்கையே உண்டாகும். நம்பிக்கை உண்டாவது அவ்வளவு சுலபமான தல்ல. அதற்கு நிதானமாக

நடந்துகொள்ள வேண்டும். இதற்கு அவகாசமில்லை. அவசரப் பட்டுக் காரியத்தைக் கெடுத்துவிடக் கூடாது. ஆகையால் பொறுத்துப் பார்ப்போம். அப்படிப் பொறுத்தால்

வினையமும் செயலும் மேல்வினை பொருளும்
இவ்வழி விளங்குமென் றெண்ணி
வனைகழலிராமன் பெரும்பெய ரோதி
இருந்தனன் வந்தயல் மறைந்தே

இங்கு இப்பொழுது இராவணன் சீதா தேவியை சந்திக்கப்போகிறான். அவன் மனம் எப்படி இருக்கிறதென்று உணரலாம். உத்தமியான தேவியின் சித்தத்தையும் நன்கு தெளியலாம். இதற்குத் தக்கபடி பின்பு நான் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்பதும் விளங்கும். அல்லாமலும் இராமரிடம் போகும்போது இந்த சந்திப்பில் கண்ணால் கண்டதையும் காதால் கேட்டதையும் பிரத்யக்ஷமாக உணர்ந்ததையும் அறிவிக்க முடியும். ஆகையால் பொறுமையுடன் ஒளிந்திருந்து கவனிப்பதே சிறந்தது.

ஆனால் இராவணன் ஒரு வேளை தேவியைத் தொந்திரவு செய்வானோ என்று அஞ்சுகிறேன். அப்படியானால் அவசியமான சமயத்தில் உடனே வெளிப்பட்டு அவனை பூமியோடு தேய்த்துப் போடுகிறேன். சே! நான் என்ன எண்ணுகிறேன். இத்தனை நாள் தன்னைக் காத்துக் கொண்ட தேவி இப்பொழுதும் காத்துக் கொள்ள மாட்டாளா? அவளது அருங் கற்பு அவளைப் பாது காக்காதா? ஆகையால் நான் இப்பொழுது செய்ய வேண்டிய தொன்றுமே இல்லை. அந்த பெருமைதங்கிய சீதாராமனைத் தியானித்துக் கொண்டு ஒளிந்திருந்து நடப்பதைக் கவனிக்கிறேன் என்று மரத்தின் மீதிருந்த மாருதி இலை மறைவில் ஒதுங்கி யிருந்தார்.

26. அத்தியாயம்,

வாழி ஜானகி! வாழி ராகவன்!

கற்புத் தெய்வம், சீதாதேவி இருக்கும் இடத்தை நோக்கி இராவணன் ஆடம்பர பரிவாரங்களோடு வருகிறான். இன்னும் சிறிது தூரமே இருக்கிறது. அப்பொழுது

ஆயிடை அரக்கன் அரம்பையர் குழுவும்
அல்லவும் வேறயல் அகல,
மேயினன் பெண்ணின் விளக்கெனும் தகையாள்
இருந்துழி, ஆண்டவள் வெருவி
போயின உயிராள் ஆமென நடுங்கி
பொறிவரி எறுழ்வலிப் புகைக்கட்
காய்சின உழுவை தின்னிய வந்த
கலையிளம் பிணையெனக் கரைந்தாள்

இராவணனைச் சூழ்ந்து வந்த தேவ ஸ்திரீகளும் மற்ற பரிவாரங்களும் பின்னே விலகி நின்றனர். இராவணன் மட்டும் முன்னேறி வருகிறான். சீதை கண்டாள். நடுங்குகிறாள். எப்படி?

ஒரு இள மான். பெண் மான். கூட்டத்திலிருந்தும் தன் ஆணிலிருந்தும் பிரிந்து தனித்து விட்டது. இந்த மான் முன்னே பயங்கரமான புலி தோன்றியது. மானைத் தின்ன வருகிறது. தன்னைத் தின்ன வரும் புலியைக் கண்ட மான் எப்படி குலை நடுங்குமோ, அப்படி காம வெறி கொண்ட இராவணன் தன்னை நோக்கித் தனித்து வருவது கண்டு சீதாதேவி நடுங்கித்

துடித்தாள். பெருங் காற்றில் அகப்பட்டுக் கொண்ட இள வாழையைப் போல் தவிக்கிருள்.

ஆச்சாத் யோதரம் ஊருப்யாம்
பாஹூப் யாம் ச பயோதரௌ
உபவிஷ்டா விசாலாக்ஷீ
ருதந்தீ வரவர்ணினீ

அழுகிருள் பிராட்டி. எதற்காக? "இந்தக் காமுகனுடைய துஷ்டக் கண்களில் நாம் விழவேண்டியிருக்கிறதே. மிட்டாயைக் கண்டவுடன் குழந்தைகள் நாக்கில் ஜலம் ஊறுவது போல் நமது அங்கங்களைக் கண்டவுடன் மதோன் மத்தனை இராவணன் நெஞ்சத்தில் அழலும் காமத்தீ பொங்கு எழுமே. இதைத் தடுக்க வேண்டுமே. தீயை வளர விட்டு அணைக்க முயலுவதைக் காட்டிலும் தீப்பற்ருமல் தடுக்க முயற்சிப்பதே மேல். இவனது கண்களில் நாம் படாமலிருப்பதே மேல். இது சாத்தியமில்லை. ஆனல் இவனது காமக் கண்களில் நமது அங்கங்கள் படாமல் மறைப்போம்" என்று எண்ணினுள் போலும் பிராட்டி. தனது இடையைத் துடைகளால் மறைத்துக் கொண்டாள். இரு கைகளாலும் மார்பைக் கட்டி மறைத்துக் கொண்டாள். இந்த நிலையில் தன்னுலான தற்காப்பைச் செய்து உட்கார்ந்து கொண்டு சீதா தேவி துக்கத்தால் அழுது கொண்டிருந்தாள். இப்படி—

கூசி ஆவி குலைவுறு வாளையும்
ஆசை யாலுயிர் ஆசழி வானையும்
காசில் கண்ணினை சான்றெனக் கண்டனன்
ஊச லாடி உளையும் உளத்தினுன்

கூசிக் குலையும் சீதா பிராட்டியையும் ஆசையால் அழிந்து அனுகும் இராவணனையும் மரத்

தில் மறைந்திருந்த மாருதி தம் கண்களால் கண்டார். உடனே கீழே குதித்து, தனித்திருக்கும் உத்தமியைத் துன்புறுத்த வரும் பாவியாகிய இராவணனைக் குத்திக் கொல்ல அல்லது இந்த முயற்சியில் பிராணனை விட நினைக்கிறார். இது சரியல்ல என்று அடங்குகிறார். தேவியைச் சந்தித்து தைரியம் சொல்ல எண்ணுகிறார். இது சாத்தியமல்ல என்று தெளிகிறார். இன்னும் பொறுத்துப் பார்ப்போம் என்று நிதானிக்கிறார். இப்படி மாருதியின் உள்ளம் ஊஞ்சல் போல் இப்படியும் அப்படியும் ஆடிக் கொண்டிருக்கிறது. ஆனால் இதற்கு மத்தியில் சீதா பிராட்டியின் மேன்மையான உள்ளமும், ஒழுக்கமும் மாருதியின் உள்ளத்தைக் கொள்ளை கொள்கிறது. பரவசப்படுத்துகிறது. இந்தப் பூரிப்பில் தேவியை மனமார வாழ்த்துகிறார்.

வாழி ஜானகி வாழியி ராகவன்
வாழி நான்மறை வாழியர் அந்தணர்
வாழி நல்லறம் என்றுற வாழ்த்தினன்
ஊழி தோறும் புதிதுறும் கீர்த்தியான்

ஜனக நந்தினியாகிய இந்த சீதா தேவி வாழட்டும். கற்பரசியாகிய இந்தப் பிராட்டி வாழட்டும். இந்தப் பிராட்டியைப் போன்ற கற்பரசிகள் எல்லாரும் வாழட்டும். உலகத்திலுள்ள பெண்மக்கள் எல்லாம் இந்தப் பிராட்டியை வழி காட்டியாகக் கொண்டு கற்பரசிகளாக வாழட்டும்.

இந்த உத்தமியைப் பத்தினியாகப் பெறும் பாக்கியம் உடைய அந்த தரும மூர்த்தி இராமச்சந்திரன் வாழட்டும். ஸ்ரீ ராமர் போல் தருமத்தில் ஊக்கமுள்ள ஆண்கள் எல்லாம் வாழட்டும். உலகத்திலுள்ள ஆண் பிள்ளைகள் எல்லாம் ஸ்ரீ ராமர் போல் ஏக பத்னி விரதத்தோடு தரும சீலர்களாய் வாழட்டும்.

... அந்த இராமர் எந்த வேத தருமத்தை நிலை நிறுத்தி, தனது நடத்தையால் பிரகாசிக்கச் செய்கிறாரோ அந்த அநாதியான வேதம், நித்யமான வேதம் வாழட்டும்.

... இந்த வேதத்தையே தங்கள் பொக்கிஷமாகக் கொண்ட அந்தணர் வாழட்டும்.

சகல ஜீவராசிகளுக்கும் மாசற்ற அன்புடையராய், ஜீவ சேவையையே தேவ சேவையாகக் கொண்டு, அந்த சேவையாகிய பலி பீடத்தில் தங்கள் உடல் பொருள் ஆவி மூன்றையும் உள்ளன்போடு அர்ப்பணம் பண்ணி, இந்த தியாகத்தையே அஸ்திவாரமாகக் கொண்ட பரோபகார வாழ்க்கையில் தங்களைத் தேய்த்து விடும் உத்தமர்களான அந்தணர்கள் வாழட்டும். அந்தணர்கள் எல்லாம் இத்தகைய உத்தம லக்ஷியம் கொண்ட உத்தமர்களாய் வாழட்டும்.

இவர்கள் எல்லோருக்கும் பிரகாசம் கொடுக்கும் தருமம் வாழட்டும். தருமம் அழியாதது. கடவுள் மயம். ஒரு மாலையில் இருக்கும் பல முத்துக்களையும், ரத்தினங்களையும் கோத்துத் தாங்கி நிற்கும் ஒரு சரட்டைப் போல் அனைவரையும் தாங்கி நிற்பது இந்த தருமம். பதிவிரதா தருமம் என்ற பெயரால் சீதா தேவிக்கு மகத்துவம் அளிப்பது இந்த தருமம்.

ஏக பத்னி விரதம், அடைந்தவரை ஆதரித்தல், ஸத்யம், பகைவரிடத்தும் அன்பு என்ற பல்வேறு பெயர்களால் இராமருக்குப் பெருமை அளிப்பது இந்த தருமம்.

அழியாத இந்த தருமத்தைப் பிரகாசப் படுத்துவதால் தான் வேதத்திற்கு மகிமை.

இந்த தருமத்தைப் பயின்று அதன் வழி நடந்து பிறருக்கும் வழிகாட்டி உபதேசிப்பதால் தான் அந்தணருக்குச் சிறப்பு.

தங்கம் ஒன்று, ஆபரணம் பல. வெல்லம் ஒன்று, பலகாரம் பல. இதுபோல் தருமமாகிய மூல வஸ்து ஒன்று. பற்பல இடத்திலும் இது பற்பல பெயரோடு விளங்கி பிறரையும் விளக்குகிறது. இந்த தருமம் வாழட்டும் என்று மாருதி வாழ்த்தினர். எந்த மாருதி? அந்தந்தக் காலத்திலும் வளரக்கூடிய புகழை வளர்க்கும் பிரபாவமுடைய மாருதி. இப்படி மனமார வாழ்த்தி மேலே நடப்பதை பார்ப்போம் என்று கூர்ந்து கவனித்துக் கொண்டு மரத்தின் இலைகளில் தம்மை மறைத்துக்கொண்டிருந்தார்.

27. அத்தியாயம்.

இராவணன் பிரார்த்தனை

கிளிக் குலையும் சீதையின் அருகே ஆசையாலழியும் இராவணன் தனித்து நெருங்கி வந்தான். அல்லும் பகலும் தான் விரும்பித் தவங்கிடக்கும் அந்த அழகின் வடிவத்தைக் கண்டவுடன் பூரிப்படைகிருன். ஆனல் தன்னைக் கண்டவுடன் சீதை பயந்து அங்கங்களை மறைத்துக் கொள்ளுவதால்

துக்கம் அடைகிருன். மெள்ள அவள் பயத்தைத் தெளிய வைத்து, மனத்தைக் கரைத்து தன்னிடம் ஈடுபடும்படி செய்ய விரும்புகிருன். ஆனல் எத்தனையோ சுந்தரிகள் தன்னை நோக்கித் தவங்கிடக்கிருர்கள். அத்தகைய இராவணன் ஒரு பெண்ணை நோக்கிப் பிரார்த்திப்பதென்றல் இது அவனுக்கு நாணமாயிருக்கிறது. நிற்க, சீதை மிக்க உறுதியோடிருப்பதையும் உணருகிருன். ஆகையால் தன் பிரார்த்தனையை அலக்ஷியம் செய்து விட்டால் எவ்வளவு அவமானம் என்பதையும் நினைக்கிருன். ஆனல் அவன் உள்ளத்தில் கொதித்தெழும் ஆசை இந்த மானுபிமானங்களை எல்லாம் மறக்கச் செய்கிறது. எப்படியாவது சீதையை வசப்படுத்தி விடவேண்டும் என்று முனைகிருன். காரியத்தைச் சாதித்துக் கொள்ள நயந்தான் சரியான சாதனமென்று இராவணனும் உணருகிருன். ஆகையால் மிக இனிய தொனியோடு, மிக இனிய சொற்களால் ஆரம்பிக்கிருன்.

காமயே த்வாம் விசாலாக்ஷி
பஹு மன்யஸ்வ மாம் ப்ரியே!
ஸர்வாங்க குணஸம்பன்னே!
ஸர்வ லோக மனேஹரே!

விசாலமான கண்களையுடைய சீதா! உன் மீது ஆசை கொண்டிருக்கிறேன். என்னை ஆதரித்து கௌரவப் படுத்து. அன்பே! அங்கமெல்லாம் அழகு பூத்த அமிர்தமே! உலகில் யாருடைய மனதையும் ஆகர்ஷித்து, அபகரித்து, அடிமைப் படுத்தும் லோக காந்தமே! இந்த பயத்தை விட்டு விடு. உன்னைக் பாதுகாக்க மூன்று லோகத்தையும் எதிர்க்கவும், என் உயிரையும் கொடுக்கவும் தயாராயிருக்கும் என்னைக் கண்டு நீ பயப்படுவதுதான் விசனத்தைத் தருகிறது.

ஆனால் உனக்கு என் மீது வருத்தம் இருக்கலாம். உன் இஷ்ட விரோதமாக பலாத்காரமாக அபகரித்து வந்ததைப் பற்றி. அன்யனுக்குச் சொந்தமான உன்னைக் கொண்டு வந்தது பற்றி. ஆனால் இது தவறல்ல என்பதை நீ உணர வேண்டும். எப்படி?

ஸ்வதர்மோ ரக்ஷஸாம் பீரு
ஸர்வதைவ ந ஸம்சய:
கமனம் வா பரஸ்திரீணாம்
ஹரணம் ஸம்ப்ரமத்ய வா

எங்களுக்கு இது ஸ்வதர்மம். பரஸ்திரீ கமனம் பண்ணுவதும், பலாத்காரமாக அவர்களை அபகரித்துக் கொண்டு வருவதும் ராக்ஷஸ தர்மம். எங்கள் தர்மத்தையே நான் நிறைவேற்றினேன். நான் எந்த தவறும் செய்ய வில்லை. நான் தவறு செய்ததாக எண்ணியிருக்கும் உன் எண்ணம் மாற வேண்டும். அப்பொழுது என் அன்பு உனக்குத் தெரியும். நான் உன்னை எவ்வளவு மரியாதையாக நடத்துகிறேன் என்பதையும் அறிவாய். உன்னிடத்தில் அளவு கடந்த ஆசையுள்ளவனு யிருக்கிறேன். நான் ஆசைப் படுவது என்ன பெரிது? உன்னைப் படைத்த பிரம்மாவே உன்னைக் கண்டாலும் ஆசைப்படுவார் என்பது திண்ணம். இப்படி அளவற்ற ஆசையிருந்தும் உன்னைத் தொந்திரவு செய்ய விரும்ப வில்லை.

ஏவம் சைதத் அகாமாம் து
நத்வாம் ஸ்பரக்ஷ்யாமி மைதிலி
காமம் காம: சரீரேமே
யாதா காமம் ப்ரவர்த்ததாம்

என்னிடம் நீ அன்பு கொள்ளாமலிருக்கையில் உன்னைத் தொட விரும்ப வில்லை. பலாத்காரத்தால்

அபகரித்துக் கொண்டு வந்தாலும் பலாத்காரத்தால் தொட விரும்ப வில்லை. உனது பயந் தெளிந்து, உண்மை உணர்ந்து, எனது அன்பையும் அதன் அருமையையும் நீ உணர்ந்து கொண்டால், உன் மனம் தானே என்மீது பாய்ந்து பற்றிக் கொள்ளும். அது வரை பொறுத்திருப்போம் என்றுதான் பல மாதங்களாகக் காத்திருக்கிறேன். எனக்குள்ள உள்ளக் கிளர்ச்சியில் நான் இப்படிக் காத்துப் பொறுத்திருப்பது எவ்வளவு கஷ்டம் என்பதை நீ உணர வில்லை. நிமிஷத்துக்கு நிமிஷம் இந்த அன்புணர்ச்சி என்னை மென்று தின்று கொண்டிருக்கிறது. இப்படி எத்தனை காலம்?

இன்றிறந்தன நாளையிறந்தன
என்றிறந் தரும் தன்மையி தாலெனைக்
கொன்றிறந்தபின் கூடுதியோ? குழை
சென்றிரங்கி மறந்தரு செங்கணாய்?

இன்றைக்கு நாளைக்கு என்று பலகாலம் கழிந்தன. இத்தனை காலம் கழிந்தும் உன் பயத்தை விட வில்லை. அன்பு கொள்ள வில்லை. இந்த அன்பு என்னைக் கொன்று வருவதை உணர வில்லை. உன்னால் நான் இறந்த பிறகு தான் என் அன்பு உனக்கு விளங்குமா? உயிரோடு உன் அன்பை சுவைக்கும் பாக்கியமில்லையா? நான் மாண்டு மடிந்த பிறகு தான் இந்த அன்பிருந்த கட்டையை காதலித்து அழுவாயா? இப்படி சில பெண்கள் தங்கள் காதலர்களை கொன்று சுகிப்பதில் காதல் கொள்வது ஆச்சர்யமாக இருக்கிறது. நீ இப்படி விரும்பாமல் இருக்கலாம். இன்னும் சில காலம் பரிசீலித்து உன் சந்தேகத்தையும் பயத்தையும் மெதுவாக களைய விரும்பலாம். ஆனால் வாழ்க்கை நிலையானதா?

ஈண்டு நாளும் இளமையும் மீண்டில
மாண்டு மாண்டு பிறிதுறு மாலேய
வேண்டு நாள்வெறி தே விளிந் தாலினி
ஆண்டு வாழவ் விடருமுன் ருழ்தியோ ?

ஆற்றிலே ஓடும் ஜலம் மீண்டும் திரும்புவ தில்லே. இளமைக் காலமும் போனது போனது தான். திரும்பி வருமா? ஒவ்வொரு நிமிஷமும் இளமை கழிய, முதுமை அல்லவா மூண்டு வருகிறது. இப் படிக் காலமெல்லாம் கழிந்து விட்டால் பின்னர் நீ விரும்பியும் பயனென்ன? முதுமை மிகத் துக்ககர மானது. ஏன்? ஆசை மிகுதியாக மூள்கிறது.

அருத்திவந் தடையும் கட்டை
மரம்கழு கடையுமா போல் (வாசிட்டம்)

கிளேகள் இழந்த மொட்டையான கட்டை மரத் தில் கழுகு வந்து உட்காருவது போல், சக்தி யற்று, பலஹீனமடைந்து, தளர்ச்சி யுற்ற முதுமைப் பிரா யத்திலே ஆசையெல்லாம் கொந்தளித் தெழுகிறது. பதார்த்தங்களே சாப்பிட அதிக ஆசை. ஆனல் ஜீரணமாகாத துக்கம். விஷயங்களே நிரம்ப அநுப விக்க அதிக ஆசை. ஆனல் இதற்கான சக்தியில் லாத துக்கம். ஐயோ! அநுபவிக்க முடிய வில்லேயே என்ற ஏக்கம். பிறர் அநுபவிக்கிருர்களே என்ற பொருமை. இப்படித் துக்கம், ஏக்கம், பொருமை, ஆத்திரம் நிறைந்த முதுமைப்பருவம் வருமுன்னே ஒரு வர் எல்லாவற்றையும் அநுபவித்துவிட வேண்டும். இப்படி அநுபவிப்பதற்கான காலத்தையும் சந்தர்ப் பத்தையும் விணுக்கிக் கொண்டு, முதுமையை வர வழைத்துக் கொள்கிருயே! ஐயோ! அப்பொழுதே அநுபவிக்க வில்லேயே என்று மூண்டு வருகிற முது மையில் துக்கிக்க விரும்புகிருயா?

நல்ல, நல்ல ஆடையாபரணங்களை அணிந்து, அன்னபானாதிகளை அருந்தி, கீத இன்பங்களைப் பருகி, சந்தோஷமாகக் காலங்கழிக்க வேண்டிய சந்தர்ப்பமெல்லாம் உன் காலடியில் இருக்கிறது. நீ யாவருக்கும் சிறந்த பட்டமகிஷியாயிரு. உலகங்களை எல்லாம் ஜயித்து உன் தகப்பனுக்கு கொடுக்கிறேன். மீண்டும் இராமன் உன்னைக்காணக்கூடும்; நீ இராமனைக் காணக் கூடும் என்று கனவிலும் நினையாதே. என் கையிலிருந்து யாரும் உன்னைக் கொண்டுபோய் விட முடியாது.

ஆகையால் சாச்வதமாய் நீ என்னிடத்தில் இருப்பாய் என்பதில் எனக்கு சந்தேகமில்லை. ஆனால் உன் இருப்பின் பயனை எனக்கு அருள வில்லையே! இது என்னை வதைக்கிறதே!

சாருஸ்மிதே! சாருததி!
சாரு நேத்ரே! விலாஸினி!
மனோ ஹரஸி மே பீரு!
ஸுபர்ண: பன்னகம் யதா

ஆ! என்ன அழகிய புன்முறுவல்! என்ன அழகான கண்கள்! என்ன அழகிய முகவிலாசம். இத்தனையும் ஒன்றாகக் கொண்ட நீ, கருடன் பாம்பைக் கொத்திப் போவது போல், என் உள்ளத்தை கொள்ளை கொண்டு விட்டாயே! என் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட நீ, என் அன்பை மறுக்கிறாயே. என் செல்வத்தை மறுக்கிறாயே. உன் பாக்கியத்திலும் இது துர்பாக்கிய மென்றே எண்ணுகிறேன். இனியும் பிடிவாதம் வைத்துக் கொள்ளாதே.

குடிமை மூன்றுலகும் செய்யும் கொற்றத்தேன்
அடிமை கோடி அருளிதி யாலென

முடியின் மீது முகிழ்த்துயர் கையினன்
படியின் மேல்விழுந் தான்பழி பார்க்கலான்

"மூன்றுலகமும் எனக்கு ஏவல் செய்கின்றது. நான் உனக்கு ஏவல் செய்ய விரும்புகிறேன். ஏற்றுக் கொள்" என்று கைகளைத் தலைமேல் குவித்து பூமியில் விழுந்து நமஸ்காரம் செய்து பிரார்த்தித்தான்-பாவம், பழி உணராத இராவணன்.

28. அத்தியாயம்.

சீதையின் கீதை

சீதையின் மனத்தை அபகரிக்க இராவணன் இனிய குரலில் இனிய வார்த்தைகளால் தான் பிரார்த்தித்தான். ஆனால் சீதை துக்கத்தையே அடைந்தாள்.

இனிய வார்த்தைகள் நல்லதுதான். ஆனால் இனிய வார்த்தைகளால் முழுப்பயனையும் அடைய அதனடியில் இனிய கருத்துக்கள் இருக்க வேண்டும். கொடிய கருத்துக்களை இனிய வார்த்தைகளால் மறைப்பது எட்டிப் பழம் போல் வஞ்சிப்ப தாகும். அறிவாளிகள் இதில் ஏமாற மாட்டார்கள். இவர்கள் கருத்தையே முக்கியமாகக் கவனிக்கிறார்கள். இனிய

வார்த்தையுடைய கொடிய கருத்தைக் காட்டிலும், கொடிய வார்த்தை யிருந்தாலும் இனிய கருத்தையே விரும்புகிறார்கள்.

ஆகையால் இராவணனுடைய இனிய வார்த்தை சீதா தேவிக்கு கொடிய துன்பத்தையே கொடுத்தது. இதனால் அழுதாள். உடல் நடுங்கினாள். இராமரை எண்ணித் தவங்கிடக்கும் உத்தம பதிவிரதையான சீதை, தவறான மார்க்கத்தில் தன்னையும் இழுக்க விரும்பும் அந்த இராவணனும் கெட்டு அழிந்து போகக் கூடாதே என்று இரக்கம் கொண்டாள். நல் வழியில் நடக்க இராவணனுக்கும் நல்லறிவூட்ட நினைத்தாள்.

அவன் கேட்க மாட்டான் என்ற எண்ணம் உண்டு. ஆனாலும் தன் மனத்தை வெளிப்படுத்த விரும்புகிறாள். இராவணனோ காமுகன். அவனோடு நேரில் எப்படிப் பேசுவது? ஆகையால் ஒரு துரும்பைக் கிள்ளி இடையில் போடுகிறாள்.

சீதை இந்த துரும்பைக் கிள்ளிப் போட்டதற்கு எத்தனையோ கருத்துக்கள் சொல்லுகிறார்கள்.

1. உன் செல்வத்தையும் போகத்தையும் நான் இந்த துரும்பளவுகூட மதிக்கவில்லை.

2. என் உயிரைத் துரும்பாக மதித்துப் பிராணனை விடுவேனே அல்லாமல் மானத்தை இழக்க மாட்டேன்.

3. சீக்கிரம் நீ போன இடம் புல் முளைத்து போகப் போகிறது. இலங்கையும், அரக்கரும், நீயும் அழிவது திண்ணம். ஏன்?

4. என் நாதனிட மிருந்து புறப்படும் ஒரு துரும்பு உன்னை நாசமாக்கும். மூன்றுலகத்திலும் உன்னைக் காப்பார் யாரும் இருக்க மாட்டார்கள் என்பது இராமர் ஒரு துரும்பால் காக்கையின் கண்ணறுத்த அநுபவத்திலிருந்து எனக்குத் தெரிகிறது.

5. இராமருடைய உயர் குணங்களோடும் பலத்தோடும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது நீ ஒரு துரும்புக்கும் சமமாக மாட்டாய்.

இப்படி எத்தனையோ பொருள்கள் சொல்லிக் கொண்டு போகிறார்கள். ஆனால் இத்தனை கருத்துக்களையும் சீதை வாயினாலேயே வெளியிடப் போகிறாள். ஆகையால் துரும்பை இடையில் போட வேண்டியதில்லை. அந்தத் துரும்பின் மீது இத்தனை கருத்துக்களை ஏற்ற வேண்டியதில்லை.

“ஆனால் பதிவிரதையான பெண்ணானவள் காமுகனான பரபுருஷனோடு வார்த்தையாடக் கூடாது. அப்படி அவசியமும் நிர்ப்பந்தமும் ஏற்பட்டால் பக்கத்தில் யாரையாவது வைத்துக்கொண்டு பேச வேண்டும். நேரே பேசக் கூடாது. இது சாத்திய மில்லையானால் அசேதனமான ஒரு துரும்பாவது இடையில் இருக்க வேண்டும். நேரே பார்ப்பதும் சம்பாஷிப்பதும் விலக்கப்பட வேண்டும்” என்ற கருத்தே இதில் சிறப்பாக விளங்குகிறது.

இப்படி சீதா தேவி இராமரையே நினைந்து இடையில் துரும்பிட்டுப் பேசத் துணிந்தாள். ஆனாலும் இது பிரியமில்லாத காரிய மாகையால் வார்த்தைகள் புறப்பட வில்லை.

தீனமான குரலில் மெதுவாக அமிர்தம் போன்ற கருத்தை ஒவ்வொரு வார்த்தையாகச் சொல்லுகிறாள்.

நிவர்த்தய மனோ மத்த:
ஸ்வஜனே க்ரியதாம் மன:

மனத்தை என்னிடத்தில் இருந்து திருப்பிக் கொள். உனக்குச் சொந்தமானவர்களிடத்தில் மனத்தைச் செலுத்து. என்னைப் பிரார்த்திப்பது சரியல்ல.

அகார்யம் ந மயா கார்யம்
ஏகபத்னியா விகர் ஹிதம்
குலம் ஸம்பிராப்தயா புண்யம்
குலே மஹதி ஜாதயா

மகத்தான ராஜரிஷியாகிய ஜனகருடைய பெருங் குலத்திலே பிறந்தேன். மகத்தான ராஜரிஷியாகிய தசரத சக்ரவர்த்தியின் புண்ணிய குலத்திலே புகுந்தேன். மகத்தான ராஜரிஷியாகிய ஸ்ரீ ராமருடைய தரும பத்னியானேன். அந்த உத்தமர் ஒருவருக்கே உரியவளென்ற ஏக பத்னி விரதமும் கொண்டேன். இப்படி ஒருவருக்கே சொந்தமாயிருக்க உறுதி கொண்ட நான், மற்றொருவரை எப்படி நினைக்க முடியும்? நிந்திக்கத் தக்க இந்த பாப காரியத்தை நான் செய்யக் கூடாது. செய்ய முடியாது. ஆகையால் என்னிடத்திலிருந்து மனத்தைத் திருப்பி உனக்குச் சொந்தமானவர்களிடத்தில் வை! என்று போதித்தாள்.

ஆனால் இராவணன் காதில் இந்த தர்ம உபதேசம் ஏறுமா? ஏறவில்லை என்று கண்டாள் தேவி. உடனே இராவணனுக்கு முகத்தைக் காட்டாமல் அவனைப் பின்புறமாக வைத்துத் திரும்பி உட்கார்ந்து கொண்டாள். இன்னும் சொல்லுகிறாள்.

"நான் இன்னொருவருக்குச் சொந்தமான தரும பத்னி. உனக்குச் சொந்தமானவளல்ல. சன்மார்க்கத்தைச் சிந்தித்துப் பார். நல்ல வழியில் நட."

என்று மறுமுறையும் கூறினாள். ஆனால் இராவணன் மனதில் இது சிறிதும் படவில்லை. ஆகையால் படக்கூடிய விஷயம் ஒன்று கூறுகிறாள்.

யதா தவ ததான்யேஷாம்
தாரா ரக்ஷ்யா நிசாசர
ஆத்மானம் உபமாம் க்ருத்வா
ஸ்வேஷு தாரேஷு ரம்யதாம்

இருளில் சஞ்சரிப்பவனே! உன்னுடைய மனைவியை நீ பாதுகாக்க விரும்புவது போல் பிறருக்குச் சொந்தமான பத்தினிகளையும் அவர்கள் விரதம் கெடாமல் பாதுகாக்க வேண்டும். கொஞ்சம் சிந்தித்துப் பார். இதே சமயத்தில் உன்னுடைய பட்டமகிஷியிடம் ஒரு அன்னியன் வார்த்தையாடி தன் துரோக இச்சைக்கு இணங்கும்படி வற்புறுத்துகிறான் என்று வைத்துக்கொள். இதை நீ சகித்துக் கொண்டிருப்பாயா? அவள் அவனுக்கு இணங்குவதற்கு நீ உடன் படுவாயா? உன் ரத்தம் கொதிக்காதா? அவனை வீழ்த்திவிட மாட்டாயா? உன் பத்தினியைக் காக்க விரும்ப மாட்டாயா? அவள் உன்னிடமே அன்புகொண்டு பரிசுத்தமாக இருக்க விரும்ப மாட்டாயா? நல்ல ரத்தமுள்ள எந்த ஜீவனும் இப்படித்தான் விரும்பும். இது தான் இயற்கை. உன்னுடைய பத்தினி உன்னிடமே அன்பு கொண்டிருக்க நீ விரும்புவது போல் தான், நான் என் நாதனான இராமரிடமே அன்பு கொண்டிருக்கிறேன். அன்னியன் உன் பத்னியை நெருங்க நீ சகிக்காதது போல் தான், இராமரும் உன்னைக் கண்டு சகிக்க மாட்டாரென்று உணர்ந்துகொள். உன் பத்னியை நெருங்கும் ஒருவனை வீழ்த்த நீ துடிப்பது போல்தான் இராமரும் இந்த நிமிஷம் துடித்துக் கொண்டிருக்கிறார். பிறர் உன்னிடம் எப்படி நடந்து கொள்ள விரும்பு

கிருயோ அப்படியே நீயும் பிறரிடம் நடந்து கொள்ள வேண்டும். ஆகையால் என்னிடத்திலிருந்து மனத்தைத் திருப்பி உன் பத்னிகளிடத்தில் நாட்டம் கொண்டு சந்தோஷம் அடை. உன்னுடைய தவருன போக்கு எந்த வகையிலும் உனக்கு நன்மை அளிக்காது.

அதுஷ்டம் ஸ்வேஷு தாரேஷு
சபலம் சலிதேந்திரியம்
நயந்தி நிக்ருதி ப்ரஞ்ஞம்
பரதாரா: பராபவம்

சொந்த மனையாளிடத்தில் திருப்தி அடையாமல், சபல சித்தத்தோடு, கண்ட இடத்தில் மனத்தை அலையவிடும் புத்திகெட்ட மனிதர்கள் பர ஸ்திரிகளால் அவமானத்தையும் நாசத்தையும் அடைகிருர்கள். உனக்கு யாரும் இப்படி நல்ல புத்தி புகட்டுவதில்லையா?

இஹ ஸந்தோ நவா ஸந்தி
ஸதோ வா நாநு வர்த்தஸே

இங்கு நல்ல புத்தி கூறும் நல்லவர்கள் இல்லையென்று நினைக்கிறேன். ஒரு வேளை அவர்கள் சொல்லியும் நீ கேட்பதில்லையா? இப்படி நல்ல புத்தியும், விசாலமான நோக்கமும் இல்லாத அரசர்களாலும் தலைவர்களாலும்தான் அரசாங்கங்களும் நகரங்களும் அழிந்து போகின்றன. உன்னுடைய பாபத்தால் ரத்ன மயமான இலங்கை சீக்கிரம் அழியுமென்று என்றுகிறேன். உன் எண்ணம் ஒருக்காலும் நிறைவேறப் போகிற தில்லை.

ரக்யா லோபயிதும் நாஹம்
ஐச்வர்யேண தனேன வா.

இந்த மண்ணாலும் ஆதிபத்யத்தாலும் தனதான்ய போகப் பொருள்களாலும் என்னை வசப்படுத்தி விட முடியாது. இராமரிடத்திலிருந்து பிரித்துவிட முடியாது. ஏன்?

அனன்யா ராகவேணாஹம்
பாஸ்கரேண ப்ரபா யதா

சூரியனிடத்திலிருந்து ஒளியை வேருகப் பிரித்து எடுத்து விட முடியுமா? முடியாது. சூரியனும் ஒளியும் வேருன பொருள்களல்ல. இது போல இராமரும் நானும் வேருனவர்களல்ல. ஆகையால் என்னை அவரிடம் இருந்து பிரித்து விட முடியாது, இந்தப் பகற் கனவை மறந்து விடு.

அல்லாமலும் அந்த இராமரைப் பற்றி நீ அதிகம் அறிந்திருக்க மாட்டாய். சொல்லுகிறேன் கேள்.

விதித: ஸ ஹி தர்மஞ்ஞ:
சரணாகத வத்ஸல:
தேந மைத்ரீ பவது தே
யதி ஜீவிதும் இச்சஸி

அவர் விநய முணர்ந்தவர். தர்மம் உணர்ந்தவர். தவறு செய்யும் மனித ஸ்வபாவத்தை உணர்ந்தவர். ஆகையால் மன்னிக்கும் இயற்கை உடையவர். அடைந்தவரை ஆதரிக்கும் சிறந்த தருமத்தை உறுதியாக அநுஷ்டிப்பவர். அவரிடம் உனக்கு நல்லெண்ணமும் சிநேகமும் இருக்கட்டும். இன்னும் உயிரோடிருக்கும் இச்சை இருந்தால் அவரிடம் சிநேகம் கொள்.

சீக்கிரமே, கருடன் பாம்பைக் கொத்துவது போல், இராம பாணம் ராக்ஷஸர்களை நாசம் செய்யப்

போகிறது. இராம லக்ஷ்மணருடைய பலம் உனக்கு நன்ருகத் தெரிந்தே இருக்கிறது. இதனுல் தான் அவர்களில்லாமல் ஆசிரமம் சூனியமாயிருக்கும் சமயம் பார்த்து கிழ் மகனைப் போல் என்னை அபகரித்து வந்தாய்.

புலிகள் மத்தியில் நாய் எதிர்க்க முடியுமா? இராம லக்ஷ்மணர் ஸன்னிதியில் நீ எம்மாத்திரம்? எங்கு போனுலும் உனக்கு பிழைக்க வழியில்லை. இன்னும் பிழைத்திருக்க விருப்பம் இருக்குமாஞல் என்னைக் கொண்டு போய் விட்டு இராமரிடம் சிநேகம் செய்து கொள் என்று போதித்தாள் சீதா தேவி.

29 அத்தியாயம்,

ஆட்சி அளித்தது எது?

சீதா பிராட்டியின் அமிர்த மயமான இனிய மொழிகள் இராவணனுக்கு ஏறவில்லை. இதில் ஆச்சர்யம் ஒன்றும் இல்லை. ஆனல் தன் வார்த்தைகள் சீதைக்கு ஏறவில்லையே; இன்னும் பிடிவாதமாகத்தானே பேசுகிருள் என்று இராவணன் ஆச்சர்யப் படுகிருன். துக்கப் படுகிருன். ஆத்திரம் கொள்கிருன். இதற்கு என்ன காரணம் என்று சிந்திக்கிருன். கூறுகிருன்—

யதா யதா ஸாந்த்வயிதா
வச்ய: ஸ்த்ரீணாம் ததா ததா
யதா யதா ப்ரியம் வக்தா
பரிபூத: ததா ததா

"ஸ்திரிகளை சமாதானப் படுத்த முயற்சிக்க முயற்சிக்க அவர்களுக்கு அடிமையாக வேண்டியது தான். அவர்களோடு எவ்வளவு பிரியமாகப் பேசுகிறோமோ அவ்வளவுக் கவ்வளவு அவமானம் அடையலாம். இது திண்ணம். பிரத்யக்ஷமாகப் பார்க்கிறேன்.

இராவணன் முன்னால் இத்தகைய வார்த்தைகளை யாராவது பேசத் துணிவார்களா? பேசினால் அவர்கள் உயிர் ஒரு கணம் நிற்குமா? சீதா! நீ பேசி விட்டாய். ஒவ்வொரு வார்த்தையும் உன்னைக் கொலைத் தண்டனைக்கு உரியவளாக்குகிறது. கொலைக்கு உத்திரவு கொடுக்க என் உள்ளமும் துடிக்கிறது. ஆனால் உன் மீது வைத்த ஆசை தடுக்கிறது. இந்த ஆசைதான் எவ்வளவு பொல்லாதது! எவ்வளவு பலமுள்ளது! என் கோபத்தை எல்லாம் அது விழுங்கி விடுகிறது. யார்மீது அன்பு வைக்கிறோமோ அவர் மீது இரக்கமும் சிநேகமும் உண்டாகி விடுகிறது.

நல்லது இருக்கட்டும். உன் உள்ளத்தில் குடி கொண்டிருக்கும் ஒரு தப்பு அபிப்ராயத்தை மாற்றுவது என் கடமை என்று நினைக்கிறேன். இராம லக்ஷ்மணர் இல்லாத சமயம் உன்னை எடுத்து வந்தது எனது பலஹீனத்தாலும் பயத்தாலும் என்று நீ நினைக்கிறாய். பார்ப்பதற்கு அப்படித் தோன்றுவதும் சகஜம். ஆனாலும் இது உண்மை அல்ல. சண்டை செய்யாமல் உன்னைக் கொண்டு வந்ததற்கு மூன்று காரணங்கள் உண்டு.

1. இராவணேச்வரன் என்ற பட்டம் பெற்று மூன்று உலகங்களையும் ஆண்டு வரும் நான், கேவலம்

என் காலை ஆகாரத்திற்கும் காணாத ஒரு மனிதனை எதிர்ப்பதென்றால் என்னுடைய பெருமைக்கு அது சரியா என்று நீயே சிந்தித்துப் பார்.

2. நீ அந்த மனிதன் இராமனிடத்தில் அதிக அன்பு வைத்திருப்பதாகக் கேள்விப் பட்டேன். அவனை எதிர்த்தால் வீழ்த்த வேண்டி யிருக்கும். உன் கண் முன்னே இது நடந்தால் ஒரு வேளை நீ துக்கப்படுவாய். நீ துக்கப் படுவதை நான் எப்படி சகிப்பேன் ?

3. அல்லாமலும் எங்கேயோ இருந்த உன்னை எனக்குச் சமீபமாக அழைத்து வந்து உதவி செய்தான். இந்தச் செய்நன்றி மறந்து, செய்நன்றி கொன்று எப்படி அவனைக் கொல்வேன். இத்தகைய உயர்ந்த சிறந்த காரணங்களால் இராமனை நேரில் எதிர்க்காமல், சண்டை செய்யாமல் உன்னைக் கொண்டு வந்தேன். பயத்தாலும் பல ஹீனத்தாலும் அல்ல. இப்பொழுது வேண்டுமானாலும் சொல். அவனைக் கட்டிக் கொண்டு வரட்டுமா? வெட்டிக் கொண்டு வரட்டுமா? உன் வாயிலிருந்து சொல் புறப் படுவதற்கு முன் அது நிறைவேற்றி வைக்கப்படுவதைப் பார். இராமன் தலை இந்த நிலத்தில் உருளுவதைப் பார்" என்று இராவணன் வீரம் பேசினான்.

ஆனால் இந்த வார்த்தைகள் சீதையின் காதுக்கு நாராசம் போலிருந்தது. தன் நாதனை தன் முன்னே இகழ்வதை அவளால் சகிக்கக் கூடவில்லை. குத்துப் பட்ட பெண்புலி போல் கொதித்தாள். கூறுகிறாள்.

மேருவை உருவல் வேண்டின்
விண்பிளந் தேகல் வேண்டின்
ஈரேழு புவனம் யாவும்
முற்றுவித் திடுதல் வேண்டின்

ஆரியன் பகழி வல்லது
அறிந்திருந் தறிவி லாதாய்
சீரிய அல்ல சொல்லித்
தலை பத்தும் சிந்து வாயோ?

மேரு மலையை உருவி ஓடவேண்டுமானால், தேவலோகத்தை பிளந்தெறிய வேண்டுமானால், இந்தப் பதினான்கு லோகங்களையும் உடனே அழித்துச் சாம்பலாக்க வேண்டுமானால், இராம பாணம் அதைச் செய்யுமே. இது உனக்கும் தெரியுமே. அறிவில்லாதவனே! இராமருடைய ஆற்றலை நீ அறிந்திருந்தும் அறியாதவன் போல் அவர் இல்லாத சமயத்தில் தகாத வார்த்தைகளைப் பேசுகிறாய். இராமர் தலை உருளாது. பனங்காய் போல் உன் பத்து தலைகளும் பூமியில் உருளப்போவது திண்ணம்.

அல்லாமலும் மூன்றுலகை ஆட்சியைப் பற்றி அடிக்கடி பேசுகிறாய். இது கிடைத்ததெப்படி?

ஏவலெவ் வுலகும் செய்யச்
செல்வம் நிற் சிசைந்த தென்றால்
பாவமோ முன்னி செய்த
தருமமோ? தெரியப் பாராய்!

பதினாயிரம் வருஷம் இந்திரியங்களை உலர்த்தி, தலையை அரிந்து, நெருப்பிலிட்டுச் செய்த தவத்தின் புண்ணியத்தினால் இந்தப் பதவி அடைந்தாயா? அல்லது பதிவிரதைகளான பரஸ்திரிகளை சிறையில் கொண்டு வைத்து வதைக்கும் பாவத்தால் பதவி கிடைத்து விட்டதா? புண்ணியத்தால் கிடைத்த பதவி இந்தப் பாவத்தால் அழிவது தான் உறுதி. அந்தோ! உனக்கு இடித்துப் புத்தி கூறுவார் யாருமில்லையா?

கடிக்கும்வல் லரவும் கேட்டும்
மந்திரம், களிக்கின் ருேயை
அடுக்கும் தடாதென் ருன்ற
ஏதுவோ டறிவு காட்டி
இடிக்குநர் இல்லை, உள்ளார்
எண்ணிய தெண்ணி உன்னை
முடிக்குநர் என்ற போது
முடிவன்றி முடிவ துண்டோ?

சீறிக் கடிக்கும் விஷப்பாம்பும் ஒரு மந்திரத்துக்குக் கட்டுப் படுகிறது. தவருன வழியில் களித்துத் திரியும் உன்னை இது தகும் தகாதென்று எடுத்துக் காட்டி இடித்துக் கூறித் திருத்துவார் இங்கு யாரும் இல்லை.

இங்கு இருப்பவர் எல்லாம் ஊசி போன வழி நூல் போவது போல், நீ போன வழியெல்லாம் பின் சென்று கூத்தாடும் ஆமாம் சாமிகள் போல் இருக்கிறது. அழிவுக்கே வழி தேடும் உன்னைத் தடுப்பார் யாருமில்லை. ஆகையால் நீ அழியத் தான் போகிருய்'' என்று வருத்தத் தோடு கூறினுள் சீதா தேவி.

இதனுல் இராவணனும் கோபத்தையே அடைந்தான். கூறுகிருன். "உனக்குக் கொடுத்த தவணை காலம் இன்னும் 2 மாதம் இருக்கிறது. அதுவரை நான் பொறுக்க வேண்டும்.

ஊர்த்வம் த்வாப்யாம் து மாஸாப்யாம்
பர்த்தாரம் மாம் அனிச்சதீம்
மம த்வாம் ப்ராத ராசார்த்தம்
ஆரபந்தி மஹாநஸே

இந்த இரண்டு மாதத்தில் நீ என் படுக்கையில் ஏறவில்லையானுல், மறுநாள் உன்னை என் காலை ஆகா

ரத்திற்குச் சரிப்படுத்தி விடுவார்கள். ஜாக்ரதை என்று எச்சரித்தான் இராவணன். சுற்றிக் காவலி ருந்த அரக்கிகளையும் தனியே அழைத்து, நயத்தாலும் பயத்தாலும், சீதையை வசப்படுத்த முயற்சிக்க வேண்டுமென்று கடுமையான கட்டளை இட்டான். தன் பரிவாரங்கள் சூழ வந்தவழியே திரும்பிப் போனன். பயங்கரமான ஆயுதங்கள் தாங்கிய கோர மான காவல் அரக்கிகள் சீதைமீது திரும்பினர்கள்.

அத்தியாயம். 30

செந்நாய் இடையே சிறுமான்

தெள்ளிய வானத்தில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் பூரண சந்திரனை கிரஹணம் பிடித்துக் கொள்கிறது. அந்த காரம் சூழ்கிறது. கிரஹணம் விட்டவுடன் மீண்டும் சந்திரன் சுடர்விட்டு பிரகாசிக் கிறதல்லவா?

இப்படியே இராவணனல் பிடிக்கப் பட்ட சீதை துக்கத்தில் மூழ்கியிருந்தாள். அந்த ராவணன் வெளி யேறியவுடன் கிரஹண மோக்ஷமான சந்திரனைப் போல் பிரகாசிக்கிருள் என்று கம்பர் வருணிக்கிருர்.

ஆனல் கிரஹணம் விட்டாலும் சந்திரனைக் கரிய மேகங்கள் சூழ்ந்து கொள்ளலாமல்லவா? இப்படித்

தான் சீதா தேவியை கொடிய ராக்ஷஸிகள் சூழ்ந்து கொண்டார்கள்.

பார்ப்பதற்கு பயங்கரமான உருவம் உடையவர்கள். பச்சை ரத்தத்தையும் கள்ளையும் குடிப்பவர்கள். வெறியும் மதமும் கொண்டவர்கள். கொடுமையான குண முடையவர்கள். கையில் பயங்கரமான கூரிய ஆயுதங்களை ஏந்தியிருக்கிறார்கள்.

இயற்கையிலேயே கோபத் தீ ஜொலிக்கின்றவர்கள். இராவணனுடைய கட்டளையாகிற காற்றும் கலந்து கொண்டது. அக்னி ஜ்வாலை போலே நாக்குகளைப் பிதுக்கித் தொங்க விட்டுக்கொண்டு கண்களை உருட்டி மிரட்டி, பள பள வென்னும் ஆயுதங்களை வீசிச் சுழற்றிக்கொண்டு சீதையைச் சூழ்ந்துவருகிறார்கள். எப்படி?

முன்முன் நின்றார் கண்கனல்
சிந்த முடுகுற்றார்
மின்மின் என்னும் சூலமும் வேலும்
இவை ஓச்சி
கொன்மின்! கொன்மின்! கொன்று
குறைத்துக் குடராரத்
தின்மின்! தின்மின்! என்று
தெழித்தார் சிலரெல்லாம்

முன்னாலே உள்ளவர்கள் கண்களில் தீப் பறக்க ஆயுதங்களை வீசிக் கொண்டு முடுக்குகிறார்கள். பின்னாலுள்ளவரோ "கொல்லுங்கள் கொல்லுங்கள். கொன்று, கண்ட துண்டமாக்கி, குடல் நிரம்பத் தின்னுங்கள் தின்னுங்கள் என்று அதட்டுகிறார்கள்.

சீதா தேவி எதற்கும் அசைய வில்லை. மிரட்டுதல் பயனில்லை என்று கண்ட ராக்ஷஸிகள் சமாதான

மாக உபதேசம் செய்ய ஆரம்பித்தார்கள். நல்லவர்கள் முதலில் சமாதானத்தில் முயற்சித்து; முடியாமல் போனால்தான் கடைசியாக தண்டோபாயத்தைக் கையாளுகிறார்கள். ஆனால் பலத்தில் நம்பிக்கை கொண்ட முரடர்களோ முதலில் தண்டோபாயத்தைக் கைக்கொண்டு இது பலிக்காமல் போனால் சமாதானம் பேசுகிறார்கள். அரக்கிகளும் இப்படியே. இப்பொழுது ஒவ்வொருத்தியாக தங்கள் கக்ஷியின் நியாயத்தை சீதைக்கு விளக்குகிறார்கள்.

கோபத்தால் கண் சிவந்த ஏக ஜடை கூறுகிறாள்.

"பிரஜாபதிகள் ஆறு பேரில் 4-வது பிரஜாபதி, பிரம்மாவின் மானஸ புத்திரர், புலஸ்தியர். இவருடைய கீர்த்தி பெற்ற பிள்ளை தான் விச்ரவஸ். சத்ருக்களைக் கதறச் செய்யும் ராவணன் இந்த விச்ரவஸுக்குப் பிள்ளையாகப் பிறந்தார். ராக்ஷஸேந்திரனாகிய ராவணனுக்கு நீ மனைவியாகத் தகும். நான் சொல்வதை நீ ஏன் கௌரவிக்கவில்லை சீதா!" என்று இராவணனுடைய பரம்பரைப் பெருமையை எடுத்து வீசினாள்.

அப்பொழுது ஹரிஜடை என்பவள் தனது பூனைக் கண்ணை உருட்டிக் கொண்டு—

"முப்பத்து முக்கோடி தேவர்களையும் இந்திரனையும் ஜெயித்த எங்கள் ராவணனுக்கு நீ மனைவியாய் இருக்கலாமடி" என்று பெருமையோடு சிபார்சு செய்தாள்.

கோப மூர்ச்சை அடைந்த பிரகஸை கூறுகிறாள்—

"வீராதி வீரன். போரில் புறமுதுகிடாத சூராதி சூரன். மஹா பலசாலியான ராவணன் தனது மிகப் பிரியமான பட்டமகிஷி மண்டோதரியை விட்டு உன்னை நாடி வந்திருக்கிறான். நவ ரத்னங்களால் அலங்கரித்து, ஸ்திரீ ரத்னங்களால் நிறைந்த அந்தப் புரத்தை விட்டு உன்னை நாடி வந்திருக்கிறான். அவனுக்கு மனைவியாகும் பாக்கியம் உனக்கு ஏன் இல்லை?" என்று சீதையின் துர்பாக்கியத்தை நினைத்து வருத்தத்துடன் உருகினாள்.

உடனே விகடை என்பவள்

"தேவர்கள் மட்டுமல்ல நாகர்கள், கந்தர்வர்கள், தானவர்கள் எல்லாரையும் ஜெயித்தவனுக்கும் உன் பக்கத்தில் வந்திருக்கிறான். அஷ்ட ஐச்வர்யமும் நிரம்பிய மகாத்மாவான ராவணனுக்கு மனைவியாயிருக்க மறுக்கிறாயே, அடி கீழ் மகளே!" என்று இரங்கினாள்.

அப்பொழுது துர்முகி சொல்கிறாள்—

"இராவணனுக்கு பயந்து சூரியன் இலங்கையில் நுழைந்து கொளுத்துவதில்லை. காற்று வீசுவதில்லை. மரங்களெல்லாம் பயத்தால் புஷ்ப மழை பெய்கின்றன. மலைகளும் மேகங்களும் ஜலத்தைக் கொடுக்கின்றன. அந்த ராவணனுக்கு மனைவியாயிருக்க நீ விரும்பவில்லை. நல்லது. நல்ல வார்த்தையாகச் சொன்னோம். எங்கள் வார்த்தையைத் தட்டினாயோ ஒரு நிமிஷம் உயிரோடிருக்க மாட்டாய்." என்று மிரட்டினாள்.

சீதை அசையவே இல்லை. சீதையின் நடத்தை அரக்கிகளுக்கு புரியவே இல்லை. ஆச்சர்யத்தையே

உண்டாக்கியது. பலம், அதிகாரம், செல்வம், போகம் இவற்றை வேண்டாம் என்று மறுக்கும் முட்டாள் உண்டா? அல்லது மரணத்துக்குப் பயப் படாத ஜென்மம் உண்டா? சீதை நயத்துக்கும் இணங்க வில்லை. பயத்துக்கும் மயங்கவில்லை. இது என்ன மனோ நிலை? அரக்கிகளுக்கு ஒன்றும் விளங்க வில்லை. மேலே என்ன செய்வதென்றும் தெரிய வில்லை. ஆத்திரமும் ஆவேசமும் உண்டது. அணை உடைந்த நீர் போல் எல்லோரும் வரம்பின்றி ஏக காலத்தில் தங்களுக்குத் தோன்றியவாறெல்லாம் கூவு கிறார்கள். அந்த சந்தை இரைச்சலில் அவர்கள் வாயினின்றும் உதிர்ந்த விஷய ரஸத்தை எல்லாம் பொறுக்கித் திரட்டி வால்மீகி பகவான் கொடுக்கிறார். படியுங்கள்.

"சீதா! அழகான மஞ்சங்களும், பஞ்சணைகளும், வாசனைத் திரவியங்களும், அன்ன பானங்களும் நிறைந்து, எல்லா ஜீவர்களுடைய சித்தத்தையும் அபகரிக்கும் இராவணனுடைய அந்தப் புரத்தில் வசிக்க நீ ஏன் விரும்ப வில்லை?

சரிதான், சரிதான். நீ மனிதப் பெண்ணல்லவா? ஆகையால் தான் மனிதனை விரும்புகிறாய். இது இயற்கை தான். ஆனால் இனி நீ அந்த ராமனைப் பார்க்கப் போகிறதில்லை. மூன்று உலக ஐச்வர்யங் களையும் அநுபவிக்கும் இராவணனை அடைந்து சந்தோஷம் அடை.

அல்லது அந்த இராமனிடத்தில் தான் என்ன இருக்கிறது? நாட்டை இழந்து, காட்டை அடைந்து காய்கனிகளையும் வேர்களையும் தின்று, உயிருக்கு மன்றாடும் அந்த மனிதனிடத்தில் உனக்கு என்ன ருசி இருக்கிறது? பைத்தியக் காரி!"

என்று கலக்கத்தை உண்டாக்கும் வார்த்தை களைக் கூறினார்கள். ஆனால் சீதா தேவி இவற்றால் கலங்கிவிட வில்லை. இப்படிக் கலங்கக் கூடியவளா யிருந்தால் அவள் சரிதத்தை ஆயிரக்கணக்கான வருஷத்திற்குப் பிறகும் கோடிக் கணக்கான மக்கள் விருப்பத்தோடு படிப்பார்களா? ஸமுத்திரத்தின் பேரலைகளாலும் கலங்காத மலை போல் நின்றாள். பேச ஆரம்பித்தாள். கூச்சலிட்டு அலுத்துப்போன ராக்ஷஸிகள் சீதை பேச ஆரம்பித்தவுடன் அடங்கினார் கள். மழை பெய்து ஓய்ந்தது போல் அமைதி உண் டாயிற்று. அந்த அமைதியில் இனிமையான சீதை யின் குரல் தெளிவாகவும் உறுதியாகவும் கேட்டது. என்ன சொன்னாள்—

ந மாநுஷீ ராக்ஷஸஸ்ய
பார்யா பவிதும் அர்ஹதி
காமம் காதத மாம் ஸர்வா
ந கரிஷ்யாமி வோ வச:

ஒரு மனிதப் பெண் ராக்ஷஸனுக்கு மனைவியாவது தகுதியல்ல. நீங்கள் எல்லாரும் என்னைத்தின்று போடுங்கள். உங்கள் சொற்படி நான் நடக்கமாட் டேன் என்று கண்டிப்பாகக் கூறினாள். என்ன தீரம்! மேலும் "என்னைத் தின்று போடுங்கள். என் உடல் உங்கள் ஆதீனத்திலிருக்கிறது. உங்கள் இஷ்டப்படி செய்யுங்கள். ஆனால் என் மனம் உங்கள் வசத்திலில்லை. என் மனத்தை அசைக்கும் சக்தி உங்களிடத்திலில்லை. உங்களிஷ்டப்படி அதைச் சிறை வைக்கவோ, கொல்லவோ, தின்னவோ முடி யாது. அதன் சுதந்திரத்தில் நீங்கள் ஒரு நாளும் தலை யிட முடியாது. அது இராமரிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. நயத்துக்கும் பயத்துக்கும் கலங் காத தருமத்தின் சக்தியை நீங்கள் உணர முடியாது. கற்பின் உறுதியை நீங்கள் அறியவில்லை. நீங்கள்

பெண்களாக இருக்கிறீர்கள். ஆனால் பெண்ணின் உயர்ந்த தருமத்தை நீங்கள் தெரிந்து கொள்ளவில்லை. ஆகையால் தான் இராமர் நாடிழந்தவர், ஐச்வர்ய மற்றவர் என்று பேசுகிறீர்கள். இதோ என் மனத்தைத் தெரிந்து கொள்ளுங்கள்.

தீனோவா ராஜ்ய ஹீனோவா
யோ மே பர்த்தா ஸ மே குரு:
தம் நித்யம் அநுரக்தாஸ்மி
யதா ஸூர்யம் ஸுவர்ச்சலா

நாட்டை இழந்தாலும், காட்டை அடைந்தாலும், இன்னும் எந்த தீனமான நிலையை அடைந்து விட்டாலும், என் கணவர் எவருண்டோ அவரே தான் எனக்குப் பெரியவர். ஸுவர்ச்சலா தேவி ஸூர்யனிடத்தில் அன்பு கொண்டிருப்பது போல் நான் அவரிடத்திலேயே அன்பு கொண்டிருக்கிறேன்.

இந்திராணி இந்திரனிடத்தில், அருந்ததி வசிஷ்டரிடத்தில், ரோஹிணி சந்திரனிடத்தில், லோபாமுத்திரை அகஸ்தியரிடத்தில், ஸுகன்யை ச்யவனரிடத்தில், ஸாவித்திரி ஸத்தியவானிடத்தில், ச்ரீமதி கபிலரிடத்தில், மதயந்தி ஸௌதாஸரிடத்தில், கேசினி ஸகரரிடத்தில், தமயந்தி நளனிடத்தில் பற்றுக் கொண்டிருந்தது போல், அந்தப் பதி விரதைகளின் மார்க்கப்படி நான் இக்ஷ்வாகு நாதனுகிற இராமரிடத்தில், என் கணவரிடத்தில் பற்றுக் கொண்டிருக்கிறேன். இந்த தெய்விக அன்பு நினைத்தபடி மாற்றக் கூடியதல்ல என்று சீதா தேவி தன் உள்ளத்தை விரித்தாள்.

இதனால் ஒழுங்கான குடும்ப வாழ்க்கைக்கு அஸ்திவாரமிட்டாள். ஒருத்தி, தானே தேடி மணந்தாலும், பெற்ருேர் தேடி மணம் செய்வித்தாலும் கலி

யாணத்திற்குப் பிறகு, தன் கணவனைக் காட்டிலும் அழகிலும், ஆற்றலிலும், செல்வத்திலும், அன்பிலும் சிறந்த புருஷர்களைச் சந்திக்கலாம். உடனே கணவனைக் கைவிட்டு மற்றவரைப் பற்றி விடுவதென்றால் இதற்கு முடிவே இல்லை. தேடுவதும் கைப்பிடிப்பதும் கைவிடுவதுமாக முடியுமே அல்லாமல், சிறிதளவும் மன அமைதி பொருந்தின குடும்ப வாழ்க்கை இருக்க முடியாது. இவற்றை நன்கு சிந்தித்துத் தான் பெண்களுக்கு வழி காட்டிய பெண்மணிகள் ஒருத்தி ஒருவனோடேயே வாழும் சிறந்த தர்மத்தை நிலை நிறுத்தினார்கள். அவனோடேயே வாழ்விலும் தாழ்விலும் ஒத்துழைத்து வாழ்க்கையை இன்பமயமாக்கி சிறப்புப் பெற்றார்கள். குடும்ப தருமத்தைச் செப்பவிட்டார்கள்.

பெண்கள் இந்த தருமத்தை சரியாக அநுஷ்டிக்கும்படி எதிர் பார்க்கப் படுகிறார்கள். ஆனால் ஆண்கள் தாங்கள் மணந்து கொண்ட பத்னிமாரோடு மனத்திருப்தி கொள்ளாமல் சகஜமாக சலிக்கிறார்கள். இதனால் தான் குடும்ப வாழ்க்கை ஒருவாறு நடந்தாலும் அல்லல் அடைந்திருக்கிறது. இந்த தருமம் இருபாலாருக்கும் பொதுவாக நடைபெறுமானால், ஒருவன் ஒருத்தியோடும், ஒருத்தி ஒருவனோடும் மட்டும் வாழ திட சங்கல்பம் செய்து கொண்டு, வழுவாமல் நடப்பார்களானால் மண்ணுலக வாழ்க்கை பொன்னுலக வாழ்க்கையாகும்.

“ஆகையால் தீனனாயிருந்தாலும், ராஜ்ய ஹீனனாயிருந்தாலும், என் பர்த்தாவே எனக்குப் பெரியவர்” என்று வற்புறுத்தும் சீதா தேவியின் வார்த்தைகள் ஆழ்ந்து சிந்திக்கத் தக்கவை.

ஆனால் அந்த அரக்கிகளுக்கு இவற்றை எல்லாம் சிந்திக்க அவகாசமேது? அல்லாமலும் இராவணனால்

தூண்டப் பட்டு சீதையை அவனுக்கு வசப்படுத்தி விடும் ஒரே நோக்க முடையவர்கள். சீதை இணங்க வில்லையே, தங்கள் நோக்கம் ஈடேற வில்லையே என்ற கோபத்தால் பொங்கி சீதா தேவியைப் பயங் கரமாகப் பயமுறுத்தினார்கள்.

மரத்தில் ஒளிந்திருந்த மாருதி துடிப்போடு இத் தனையும் பார்த்துக் கொண்டும் கேட்டுக் கொண்டும் இருந்தார்!

அரக்கிகளோ உதட்டைப் பிதுக்கி ஆயுதங்களை நீட்டிக் கொண்டு "இராவணேச்வரனை அடையும் பாக்கியமற்றவள்" என்று கோரமாகப் பயமுறுத்து கிறார்கள்.

சீதையோ கண்ணீரைத் துடைத்துக் கொண்டு அந்த சிம்சுபா விருக்ஷத்தை அடைந்தாள். துக்கத் தின் கரைகாணாத சீதை அரக்கிகள் சூழ, அந்த மரத் தடியில் நின்றாள்.

அப்பொழுது வினதை கூறுகிறாள்.

"சீதை! இராமனிடத்தில் சிநேகம் காட்டியது போதும். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷமா கும். என் வார்த்தையைக் கேள். ரசிக்க அழகுடை யவன், சாமர்த்தியக்காரன், கொடையாளி ராவணனை அடைந்து போகங்களை அநுபவி. சொன்னபடி கேட் காமல் போனால் நாங்கள் இப்பொழுதே உன்னைத் தின்று விடுவோம்" என்றாள்.

விகடை என்பவள் முஷ்டியை ஓங்கிக் கொண்டு சொல்லுகிறாள்:-

" சமுத்திரம் கடந்து, அந்தப் புரத்தில் எங்கள் காவலிலிருக்கும் உன்னை இந்திரனும் விடுவிக்க முடி

யாது. ஸ்திரீகளுடைய யௌவனம் சீக்கிரம் மாறிப் போவது. சீக்கிரமே இராவணனிடம் இன்பத்தை அடை. இல்லையோ உன் ஹிருதயத்தைப் பிடுங்கித் தின்று விடுவோம்'' என்றாள்.

சண்டோதரி என்பவள்

''இவளை இராவணன் கொண்டு வந்தது முதல் எனக்கு நாக்கு ஊறுகிறது. தலையையும் அங்கங்களையும் கடித்துத் தின்னலாமென்றும் நினைக்கிறேன் என்று நாக்கைச் சப்பினாள்.

பிரகஸை சொல்லுகிறாள்—

"இந்தப் பீடையைக் கழுத்தைத் திருகுங்கள். செத்துவிட்டாளென்று ராஜாவிடம் சொல்லுவோம். தின்னுங்கள் என்று உத்திரவு கொடுப்பார். நிச்சயம் என்று உறுதி கூறினாள்.

அஜாமுகி என்பவளுக்கு, இப்படி விவாதம் பண்ணிக் கொண்டிருப்பது பிடிக்க வில்லை—

"இவளைக் கூறு போட்டுப் பங்கு போடுங்கள். மதுவையும் லேகியத்தையும் கொண்டு வாருங்கள்" என்று ஊக்கினாள்.

சூர்ப்பநகைக்கும் இது தான் பிடித்திருந்தது. "சீக்கிரம் கள்ளைக் கொண்டு வாருங்கள். இவளுடைய மாமிசத்தைத் தின்று, குடித்துவிட்டு நிகும்பலை முன் கூத்தாடுவோம்?'' என்று கொதித்தாள்.

யார் எப்படி மிரட்டியும் "உங்களிஷ்டப்படி நான் நடக்க முடியாது" என்று சீதை உறுதியாக மறுத்து

விட்டாள். என்றாலும் செந்நாய்களால் துரத்தப் பட்ட மான்போல் சீதை ஒடுங்கிப் போனாள். புஷ்பங்கள் நிறைந்த அந்த மரக்கிளையைப் பிடித்துக் கொண்டு நின்றாள். கண்ணிலிருந்து தாரை தாரையாக நீர் வழிந்து மார்பையெல்லாம் நனைத்தது. துக்கத்தால் பெருமூச்சு விட்டாள். தாங்க மாட்டாமல் வாய் விட்டு

ஹா ராமேதி ச துக்கார்த்தா
ஹா புனர் லக்ஷ்மணேதி ச
ஹா ச்வச்ரு மம கௌஸல்யே
ஹா ஸுமித்ரேதி பாமினீ

ஹா ராமா! ஆ லக்ஷ்மணா! மாமி கௌஸல்யே! ஆ ஸுமித்ரே! என்று கதறினாள். அந்தோ கால மானாலன்றி மரணம் வராதென்று பண்டிதர்கள் சொல்வது உண்மையா யிருக்கிறதே! இந்தத் துக்கத்திலும் என் பிராணன் போக வில்லையே!

ஆ! தாமரை இதழ் போன்ற கண்கள்! சிங்கம் போன்ற கம்பீரமான நடை. பிரியமான பேச்சு. நன்றியறியும் நற்குணமுள்ள அந்த ராமரை பாக்கிய சாலிகள் பார்க்கிறார்கள். நானோ இனி உயிர் வாழ முடியாது. என்ன பாபம் செய்தேனோ? இஷ்டப் படி பிராணனையும் விட முடிய வில்லையே! சீ! என்ன மனித ஜென்மம் என்று வருந்தினாள்.

அத்தியாயம். 31

பெருந் தன்மை

அல்லாமலும் எவ்வளவு ஆபத்தையும் எதிர்க்கலாம். எவ்வளவு துன்பத்தையும் ஏந்தலாம். துக்கப்பட்டுக் கொண்டே நெடிய நாள் எதிர்பார்த்துக் காத்திருப்ப தென்பது மிகக் கொடுமையான துக்கம். ஆகையால் சீதை நினைக்கிருள்—

பித்யதாம் பக்ஷ்யதாம் வாபி
சரீரம் விஸ்ருஜாம் யஹம்
ந சாப்யஹம் சிரம் துக்கம்
ஸஹேயம் ப்ரிய வர்ஜிதா

என்னை இந்த அரக்கிகள் கண்ட துண்ட மாக் கட்டும். அங்கம் அங்கமாக மென்று தின்னட்டும். அல்லது நானே இந்த சரீரத்தை விட்டு விடுகிறேன். எப்படியாவது இந்த துக்கத்திலிருந்து விடுதலை வேண்டும். ஆ! அன்புள்ள அந்த இராமரைப் பிரிந்து எத்தனை காலம் இந்த துக்கத்தைத் தாங்குவேன். என்ருல் சகிக்கக்கூட வில்லை. ஆகையால் இது எப்படியாவது ஒரு வழியில் முடிந்து தீரவேண்டும்.

இவ்வாறெண்ணி மேலும் சீதை அரக்கிகளை நோக்கி—

"அந்த ராவணனை நான் இடது காலாலும் தொடமாட்டேன். அவன் மீது அன்பு கொள்வ

தெப்படி? ஆகையால் நீங்கள் கண்ட துண்ட மாக்கி ளுலும் நெருப்பில் கொளுத்தினுலும் உங்கள் சொற் படி கேட்க மாட்டேன். ஏன் வீணுகப் பேசுகிறீர் கள்'' என்ருள்.

பின்னும் அந்த ராமருடைய பராக்ரமத்தை எண்ணி இன்பத்தையும் துன்பத்தையும் அடை கிருள்.

"பதினுலாயிரம் அரக்கர்களை ஒருவராக நின்று அழித்தவர் என்னை ஏன் சிறை மீட்காதிருப்பார்? அந்த பயங்கரமான விராதனைக் கொன்றவருக்கு இது என்ன பெரிய காரியம்? இலங்கை சமுத்திர மத்தி யில் அரணுடையதா யிருக்கலாம். ஆனுல் இராம பாணத்தை தடைப் படுத்தக்கூடியது இங்கு எது வும் இல்லையே!

நான் இங்கிருப்பது ஒரு வேளை அவருக்குத் தெரி யாதிருக்கலாம். தெரிந்தால் உலகத்திலேயே அரக்கர் பூண்டு இல்லாமல் அழித்து விடுவார். இருந்தாலும் இந்த துக்கம் என்னுல் சகிக்கக் கூட வில்லை. இங்கு யாராவது எனக்குக் கொஞ்சம் விஷம் கொடுத்தால் இந்த தொல்லை நீங்கிப் போகும்.

ஒரு வேளை என்னைப் பிரிந்த துக்கத்தால் இரா மர் பிராணனை விட்டு விட்டாரா? அல்லது ராஜரிஷி யாகிய அந்த இராமர், தருமத்தில் பிரியமுடைய அந்த அறிவாளி, இவளால் என்ன பிரயோசன மென்று எண்ணிவிட்டாரா? கண்டால் பிரியமும் காணுவிட்டால் மறப்பும் உலக சகஜம். ஆனுல் இராமர் ஒரு நாளும் அப்படி யில்லை. என்னுடைய பாக்கியக் குறைவினுல்தான் நாதனைப் பிரிந்து நான் தவிக்கிறேன்.

ஒரு வேளை இந்த துராத்மாவான இராவணன் ஏதாவது வஞ்சனையினால் அவர்களை வீழ்த்தி விட்டானோ? எப்படியிருந்தாலும் இந்த துக்கத்தை நான் இனி சகித்திருக்க முடியாது. இதைக் காட்டிலும் மரணத்தையே விரும்புகிறேன்.

இப்படி துக்கத்தில் கலங்காமலும் சுகத்தில் மூழ்காமலும் இந்திரிய ஜெயம் பண்ணியிருக்கிற மஹாத்மாக்களே பாக்கிய சாலிகள்.

ப்ரியாத் ந ஸம்பவேத் துக்கம்
அப்ரியாத் அதிகம் பயம்
தாப்யாம் ஹி யே வியுஜ்யந்தே
நமஸ் தேஷாம் மஹாத்மனும்

"சந்தோஷத்தில் மூழ்குவதும், பிறகு பிரிவால் துக்கப் படுவதும், துக்கத்தால் பயங் கொள்ளுவதும் ஆ! இவை எப்படி உடலையும் உயிரையும் அரிக்கின்றன. இவற்றிலிருந்து விலகி, இந்த சுக துக்கச் சுழலிலிருந்து நீங்கி, உப சாந்தி அடைந்து, அசையாத நிலையுடைய மஹாத்மாக்களுக்கு, அந்த தீரர்களுக்கு, அந்தப் புண்ணிய புருஷர்களுக்கு நமஸ்காரம் செய்கிறேன்" என்று சிந்தித்தாள் சீதை.

இப்பொழுது சீதையை மீண்டும் இராக்ஷஸிகள் சூழ்ந்து கொண்டு கொல்லுவோம் மெல்லுவோமென்று பயமுறுத்தினார்கள். படுத்திருந்த திரிசடை எழுந்து கூறுகிறாள். "ஏ! பாபிகளே நீங்கள் உங்களையே தின்று கொள்ளுங்கள். இந்த ஜனக நந்தினியை, தசரதன் மருகியை, சீதையை நீங்கள் ஒரு நாளும் தின்ன முடியாது. நான் இப்பொழுது ஒரு சொப்பனம் கண்டேன். இராக்ஷஸர்களுக்கு பயத்தையும், சீதைக்கு ஜெயத்தையும் கொடுக்கும் சொப்பனம்" என்றாள்.

இதைக் கேட்ட இராக்ஷஸிகள் பயங் கொண்டு அது என்ன சொப்பனம்? எங்களுக்குச் சொல் என்று கேட்டார்கள். திரிசடை கூறுகிருள். ஆயிரம் அன்னப் பறவைகளோடு தந்தத்தால் செய்யப் பட்ட சிவிகையில் வெள்ளை ஆடைகளையும், மாலைகளையும் தரித்த இராமர் இங்கு வரக் கண்டேன். இப்படியே வெள்ளையாடை தரித்த சீதை, ஒளி சூரியனைக் கூடுவது போல், இராமரைக் கூடக் கண்டேன். பிறகு இராம லக்ஷ்மணருடன் யானைக் கழுத்தில் ஏறிக் கொண்ட சீதை, சந்திர சூரியர்களைத் தொடக் கண்டேன். இராமர் பட்டாபிஷேகம் கொண்டார். சீதையும் அங்கு பிரகாசிக்கிருள். தேவர்களும் ரிஷிகளும் சூழ்ந்திருக்கின்றனர். பிரம்மாவும் அவரை வணங்குகிருர். பின்னர் அவர் சாக்ஷாத் விஷ்ணுவாக விளங்கக் கண்டேன். இராமர் சீதையோடு புஷ்பகத்தில் வட திசையில் ஏகக் கண்டேன். இராவணனே குடிவெறியால் மயங்கி, உடம்பில் எண்ணெய் பூசி, செவ்வாடை தரித்து புஷ்பகத்திலிருந்து கீழே விழக் கண்டேன். இவரை தலை மொட்டை யிட்டு கருப்பாடை தரித்த ஸ்திரிகள் இழுக்கக் கண்டேன். பிறகு அவர் நரகம் போன்ற மலச் சேற்றில் விழக் கண்டேன். ஒரு கரிய ஸ்திரீ இராவணனைக் கழுத்தைக் கட்டி தென் திசையில் இழுக்கக் கண்டேன். கும்பகர்ணன் இந்திரசித்து முதலானோரும் தென் திசை போகக் கண்டேன்.

விபீஷணர் மட்டும் நான்கு மந்திரிகளோடு கூட நான்கு கொம்புடைய யானையிலேறி வெள்ளையாடை வெள்ளை மாலை, வெண் குடை தரித்து, சங்க துந்துபி கோஷங்களோடு ஆகாயத்தில் விளங்கக் கண்டேன்.

இராவணனால் காக்கப் பட்ட இந்த இலங்கை இராம தூதனை ஒரு வானரனல் எரியக்கண்டேன்.

ஆகையால் இலங்கைக்கு பேராபத்து எதிர் நிற்கிறது. சீதைக்கோ சம்பத்து வரப்போகிறது. உங்கள் சேஷ்டைகளெல்லாம் போதும். தன்னுடைய பிரிய பார்யையான சீதையை துன்பப் படுத்தினார்களென்றால் அந்த இராமர் ஒரு க்ஷணம் பொறுக்கமாட்டார். அந்த இராமனால் இராக்ஷஸர்களுக்கு ஆபத்து வந்திருக்கிறது. ஆகையால் சீதை காலில் விழுங்கள். யோசனை யென்ன? நீங்கள் பிரார்த்தித்தால் சீதை மன மிரங்குவாள். இராக்ஷஸிகளுக்கு வந்திருக்கும் மகத்தான பயத்திலிருந்து காப்பாற்ற இந்த சீதை ஒருத்தியே போதும்.

சீதை அங்கங்களில் ஒருவிதமான குற்றத்தையும் காண வில்லை. இவள் நிழலில் சிறிது கோளாறு இருக்கிறது. இதனால் தான் துக்கத்தை அனுபவிக்கிறாளென்று எண்ணுகிறேன். இதோ பாருங்கள். இவளது இடது கண் துடிக்கிறது. இடத்தோளும், இடத்துடையும் துடிக்கின்றன. இந்த மரக்கிளையிலிருக்கிற பக்ஷியும் நல்வரவு உண்டாகிறதென்று அடிக்கடி கூவுகிறது என்றெல்லாம் திரிசடை எடுத்து விளக்கினாள். அரக்கிகளும் ஒருவாறு எதிர் காலத்தை உத்தேசித்து ஒடுங்கி, சீதையை பிரார்த்தித்தார்கள். அந்தப் பெருந்தன்மையுடைய இராம மஹிஷியும் இவள் கூறுகிறபடி நடந்தால், எனக்கும் நல்ல காலம் வருமானால் உங்களை யெல்லாம் காக்கிறேனென்று உறுதி கூறினாள்.

32. அத்தியாயம்.

தொல்லையின் எல்லை.

சீதா தேவி தங்களைக் காப்பதாகக் கூறிய உறுதி மொழியால் ராக்ஷஸிகள் பயந் தெளிந்தார்கள். திரிசடை கண்ட கனவுகளை நினைந்து நினைந்து அவர்கள் ஆர்ப்பாட்டங்களும் அடங்கின.

மரத்தில் மறைந்திருந்த மாருதி இராவணன் வந்து நயத்தாலும் பயத்தாலும் பிரார்த்தித்ததையும், சீதா தேவி நிராகரித்ததையும், அரக்கிகள் ஆர்ப்பாட்டத்தையும், தேவியின் உறுதியையும் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறார். பல சமயங்களில் பல்வேறு எழுச்சியோடு ஊசலாடிக் கொண்டிருந்த அவருடைய மனம், சீதா தேவி காட்டிய உயர் குணங்களால் மகிழ்ச்சியையும் ஆச்சர்யத்தையும் அடைந்திருக்கிறது. ஆனால் சீதை படும் துக்கத்தால் வருந்தி இருக்கிறது.

சீதா தேவியின் சகிக்க முடியாத துக்கத்தை நீக்கி சந்தோஷத்தை உண்டாக்க உடனே முயற்சிக்க வேண்டும் என்று தீர்மானித்தார். இது தான் சமயம் என்றும் எண்ணினர். ஆனால் அரக்கிகள் விழித்திருக்கிறார்கள். இவர்கள் முன்னிலையில் தேவியைச் சந்திப்பது உசிதமல்ல. இவர்களும் உறங்குவதாகத் தெரியவில்லை. என்ன செய்வதென்று சிந்தித்தார்.

வேண்டத் துஞ்சார் என்றொரு விஞ்சை
வினை செய்தான்
மாண்டற் குற்ற ராமென எல்லாம்
மயர் வுற்றார்

"நான் சீதா தேவியைச் சந்திக்க வேண்டும்; அரக்கிகளே! கொஞ்சம் தயவு செய்து தூங்குங்கள்" என்றால் தூங்குவார்களா? பின் என்ன செய்வது? மாருதி மந்திர சக்தியைப் பிரயோகித்தார். உடனே அரக்கிகள் காலை நீட்டிக் குறட்டை விட ஆரம்பித்து விட்டார்கள். மாண்டவர் போல் எல்லோரும் மயங்கிக் கிடந்தார்கள்.

உறங்காத அரக்கிகள் உறங்குவதைக் கண்டாள் பிராட்டி. இப்பொழுது தேவி தனித்திருக்கிறாள். இதுவரை அடக்கி வைத்திருந்த துக்கம் எல்லாம் பிறிக்கொண்டு வருகிறது. பட்டாபிஷேகத்துக்கு ஜோடித்தது முதல் சங்கிலித் தொடர் போல் எத்தனை துன்பம்? இராவணனாலும் அரக்கிகளாலும் பட்ட துன்பம் சகிக்கக் கூடவில்லை. வாய் விட்டுக் கதறுகிறாள். எப்படி?

காந்தார மத்யே விஜனே விஸ்ருஷ்டா
பாலேவ கன்யா விலலாப ஸீதா

ஜன சஞ்சாரமே இல்லாத பயங்கரமான காடு. இங்கே இளங் கன்னிகை ஒருத்தியை தனியே விட்டு விட்டால் இவள் எப்படி நடுங்குவாள்! எப்படிப் புலம்புவாள்! இப்படியே ராக்ஷஸக் காட்டிற்குள், தனியே அகப்பட்டுக் கொண்ட சீதை புலம்புகிறாள்.

ஹா ராம! ஸத்ய வ்ரத! தீர்க்க பாஹோ!
ஹா பூர்ண சந்த்ர ப்ரதிமான வக்த்ர!
ஹா ஜீவ லோகஸ்ய ஹித: ப்ரியச்ச!
வத்யாம் ந மாம் வேத்ஸி ஹி ராக்ஷஸானாம்

ஹா ராமா! ஸத்ய விரதம். நீண்ட நீண்ட கைகள். பூரணச் சந்திரன் போன்ற இனிய முகம். ஸர்வ ஜீவர்களுக்கும் நன்மையும், இனிமையும் செய்யும்

விரிந்த இருதயம். இத்தனையும் உடைய நீர் உமக்குப் பிரியமான என்னை இங்கு ராக்ஷஸிகள் கண்ட துண்டமாக்கப் போவதை அறிய வில்லையே!

அனன்ய தெய்வத்வம் இயம் க்ஷமா ச
பூமௌ ச சய்யா நியமஸ்ச தர்மே
பதிவ்ரதாத்வம் விபலம் மமேதம்
க்ருதம் க்ருதக்னேஷ் விவ மானுஷாணும்

ஆ! நாதா! உம்மை அன்றி வேறு தெய்வத்தை நான் சிந்தித்த தில்லை. பல மாதங்களாக இங்கு அளவற்ற துன்பத்தை எல்லாம் சகித்துப் பொறுத்தேன். தர்மத்தில் உறுதியோடு, பூமியில் படுத்து, கடினமான நியமங்களை அனுஷ்டித்து, சிறந்த பதிவிரதா தர்மத்தை அநுசரித்துத் தவங் கிடந்தேன். இத்தனையும் வீண் தானு? நன்றி கெட்ட மனிதருக்குச் செய்த உதவியைப் போல் வியர்த்தம் ஆய்விட்டதா? ஆ! இனி என் கதி என்ன?

நீரோ தந்தையின் கட்டளைப்படி வனவாசத்தை முடித்துத் தர்மத்தை நிறைவேற்றி விட்டு, அயோத்திக்கு மீண்டு, பயமும் கவலையு மின்றி விசாலமான கண்களையுடைய ஸ்திரிகளோடு விளையாடிக் கொண்டிருக்கலாம். என் கதி என்ன?

அஹம் து ராம த்வயி ஜாத காமா
சிரம் விநாசாய நிபத்த பாவா
மோகம் சரித்வாத தபம் வ்ரதஸ்ச
த்யக்ஷ்யாமி திக்ஜீ விதமல்ப பாக்யா

இராமா! நானே உம்மிடத்திலேயே அன்பு வைத்து விட்டேன். இப்படி நாசமடையத் தானே என்னவோ உம்மிடம் அதிகப் பற்று வைத்து விட்டேன். எப்படியாவது உமது திருமுகத்தைத் மீண்

டும் காணலாமென்ற ஆசையால் தவங் கிடக்கிறேன். விரதங்களை அநுஷ்டித்தேன். எல்லாம் வீணாயின. சே! நான் மிகவும் அல்ப பாக்கியம் உடையவள். என்னுடைய துர்பாக்கியம் மானுருக்கொண்டு வந்தது. அதன் பின்னே அனுப்பி உம்மை இழந்து விட்டேன். மீண்டும் காணலாம் என்ற ஆசையையும் இப்பொழுது இழந்து விட்டேன். இனி நான் உயிர் வாழத் தகாது. இதோ இந்த நிந்திக்கத் தக்க பிராணனை விட்டு விடுகிறேன். இதற்கும் வழியொன்றும் காணவில்லை. இங்கு யார் எனக்கு விஷம் கொடுத்து உதவி செய்வார்கள்? எனக்கு உதவி செய்பவர் இந்த உலகத்தில் யாருமே இல்லையென்று நினைக்கிறேன். உபகாரம் செய்யாமல் போனாலும் அபகாரம் செய்யாமலிருக்கக் கூடாதா? இயற்கையே என் மீது இரக்கம் இழந்திருக்கிறது. நாதனோடு இருந்த போது இந்த சந்திரன் எவ்வளவு இனிமையாக இருந்தது. இப்பொழுது எவ்வளவு கொடுமை? ஆ!

கல்லா மதியே! கதிர் வாள் நிலவே!
செல்லா இரவே! சிறுகா இருளே!
எல்லாம் எனையே முனிவீர் நினையா
வில்லா ளனையா தும்விளித் திலிரோ

ஏ! அறிவற்ற சந்திரனே! துன்புறுத்தும் நிலவே! கழியாத இரவே! ஒழியாத இருளே! நீங்கள் எல்லாம் என்னைத் தான் உபத்ரவிக்கிறீர்கள். என்னை நினையாமல் தவிக்க விட்டிருக்கும் அந்த வில்லாளி இராமரிடத்தில் உங்கள் சாமர்த்தியத்தைக் காட்டக் கூடாதா?

இத்தனை பேர் இத்தனை உபத்ரவம் செய்தும் இதுவரை உயிர் தாங்கி இருக்கிறேன். எதனால்?

வாரா தொழியான் எனும்வன் மையினால்
ஓரா யிரகோடி இடர்க் குடையேன்
தீரா ஒருநாள் வலிசே வகனே!
நாரா யணனே! தனிநா யகனே!

அழியாத அளவற்ற பலமுடைய அந்த வீரர், தனித் தலைவர், ஸாக்ஷாத் நாராயணன் வராமலிருக்க மாட்டார். எப்படியும் வந்து காப்பார் என்ற நம்பிக் கையினால் கோடிக் கணக்கான துன்பத்திலும் உயிர் விடாமல் பொறுத்திருக்கிறேன்.

ஆனால் தந்தை இறக்கவும், நாட்டார் பறக்கவும் இரக்கமின்றிப் பிடிவாதமாகக் காட்டிற்கு வந்தவர் என்மீது மட்டும் இரக்கம் காட்டி இலங்கைக்கு வரு வார் என்று எப்படி நம்புவது? நம்பி, நம்பி எத்தனை நாள் துன்பத்தில் காலங் கழிப்பது?

அன்றியும் ஒரு மயிரிழந்தால் உயிர் விடும் கவரி மான் போல் நல்ல குல ஸ்திரிகள் தங்களுக்குச் சிறி தளவு அவமானம் நேர்ந்தாலும் உயிர் தாங்க மாட் டார்கள். நானோ!

உன்னினர் பிறரென உணர்ந்தும், உய்ந்தவர்
சொன்னன சொன்னன செவியிற் றாங்கவும்
மன்னுயிர் காத்திருங் காலம் வைகினேன்
என்னின்வே றரக்கியர் யாண்டை யார்கொலோ?

என்னை மற்றொருவன் எண்ணினான் என்று தெரிந்தும் உயிரோடிருக்கிறேன். அவன் என் முன்னே வந்து கூறிய விகாரமான வார்த்தைகளையும் காதில் வாங்கினேன். பொழுது போக்கிக் கொண் டிருக்கிறேன். என்னைக் காட்டிலும் நாணமற்றவர், மானமற்றவர் யாரிருக்கிறார்கள்? கொடிய என்னைக் காட்டிலும் இந்த அரக்கிகள் கொடியரா? கணவனைப்

பிரிந்தும் என்னைப் போல் உயிர் வாழ்ந்த குல ஸ்திரி வேறு யாரும் உண்டா?

நல்லது. இனி இராமர் வருவார் என்ற எண்ண இடமில்லை. மற்றொருவனால் தூக்கிக் கொண்டு போகப்பட்டவள் நமக்குத் தேவையில்லை யென்று அவர் போயிருக்க வேண்டும். அவருக்கும் பேச்சு. எனக்கும் ஏச்சு. எதற்காக நான் உயிர் வாழ வேண்டும்? என்னுடைய குற்றத்தை உலகம் மன்னிக்காது.

வஞ்சனை மானின்பின் மன்னைப் போக்கியென்
மஞ்சனை வைதுபின் வழிக்கொள் வாயென
நஞ்சனை யானகம் புகுந்த நங்கையான்
உஞ்சனென் இருத்தலும் உலகம் கொள்ளுமோ?

வஞ்சனையாக வந்த மாய மானின் பின்னே என் அரும் நாதனை வற்புறுத்தி அனுப்பினேன். அல்லும் பகலும் என்னைத் தாயாகப் பாவித்துக் காத்திருந்த அந்த இளையவரைத் திட்டி அனுப்பினேன்.

யோசித்துப் பார்த்தால், இராவணனுக்கு நானே உடந்தையாக இருந்து, அந்த வீரர்களை அப்பால் அனுப்பி விட்டு, இவன் வீட்டிற்கு வலிய வந்து விட்டதாக எண்ணுவதற்கல்லவோ இடங் கொடுக்கிறது! இத்தகைய பாவி இன்னும் உயிரோடிருந்தால் இந்த உலகம் ஒப்புக் கொள்ளுமா?

உலகம் எப்படியாவது நினைக்கட்டும். இராமர் என்னை அறிவார்; அவராவது என்னை அங்கீகரிப்பார் என்று நிச்சயமாக எண்ண முடியுமா? ஒருவேளை—

அற்புதன் அரக்கர்தம் வருக்க மாசற
விற்பணி கொண்டருஞ் சிறையின் மீட்ட நாள்
இற்புகத் தக்கலை என்னின் யானுடை
கற்பினை எப்பரி சிழைத்துக் காட்டுகேன்

அற்புதமான பலபராக்ரமம் உடைய அந்த இராமர், அரக்கர் எல்லோரையும் தனது வில்லாற்ற லால் அழித்து, தனது கௌரவத்தைக் காத்துக் கொள்ளும் பொருட்டு என்னைச் சிறையிலிருந்து விடுவித்தாலும் "பிறர் வீட்டிலிருந்த நீ என் வீட்டில் புகாதே" என்று உதறி விட்டால், நான் உத்தமி யாகவே இருந்ததை எதைக் கொண்டு நிரூபித்துக் காட்டுவேன்?

யோசித்துப் பார்த்தால் இராமர் இங்கு வருவதே நிச்சய மில்லை. ஒரு வேளை வந்து ஜெயித்தாலும் என்னை ஏற்றுக் கொள்வது நிச்சய மில்லை. நான் எதற்காக இந்தத் துன்பத்தின் மத்தியில் உயிர் வாழ்வது?

ஆதலால் இறத்தலே
அறத்தின் ஆறெனுச்
சாதல் காப் பவருமென்
தவத்தில் சாம்பினுர்
ஈதலா திடமும் வே
றில்லை என்றெரு
போதுலா மாதவிப்
பொதும்பர் எய்தினுள்

ஆகையால் எப்படிப் பார்த்தாலும் நான் உயிர் விட்டு விடுவதே தர்மமாக காண்கிறது. சாக விடா மல் பாதுகாத்திருந்த அரக்கியரும் இப்பொழுது நல்ல வேளையாக உறங்குகிறுர்கள். இது தான் சமயம்; இது தான் இடம் என்று புஷ்பங்கள் நிறைந்த மரத் தடியில் வந்தாள்.

ஆனால் பிராணனை எப்படி விடுவது? தனது சடையிட்ட நீண்ட கூந்தலை கழுத்தில் சுருக்கி, மரத்தில் தொங்கி விடத் தீர்மானித்தாள். அந்த மரக்கிளையைப் பிடித்துக் கொண்டு, அந்த கடைசி காலத்தில் மறுமுறையும் இராமரையும், லக்ஷ்மணரையும், மற்ற பந்துக்களையும், தாய் தந்தையரையும் நினைத்தாள்.

அப்பொழுது சீதா தேவிக்கு சில சுப சகுனங்கள் ஏற்பட்டன. இடது கண்ணும், புஜமும், துடையும் துடித்தன. நிச்சயமான இந்தக் குறிகளால் இராமர் முன்னே நிற்கிறார் என்று தோன்றியது. இதனால் சீதை துக்கம் நீங்கினாள். சந்தோஷம் அடைந்தாள். சந்திரோதயமான இரவு போல் அவள் முகம் பிரகாசித்தது.

33. அத்தியாயம்.

சிந்தனை சக்தி

பாலை வனத்தில் தடுமாறியவர் பசுஞ் சோலை கண்டது போல், நடுக் கடலில் தத்தளிப்பவர் கட்டுமரம் கண்டது போல, நற்குறிகளைக் கண்டு சீதா தேவி சிறிது நிம்மதி அடைந்தபோது, மாருதி சிந்தனையில் ஆழ்ந்திருந்தார்.

"இந்த சீதா தேவியைக் கண்டு பிடிப்பதற்குக் கோடிக் கணக்கான வானரர்கள் எல்லாத் திசைகளி

லும் சுற்றித் திரிகிறார்கள். இந்த உத்தமியைக் காணும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. கட்டுக் காவலுடைய இந்த இலங்கையில் ரகஸ்யமாகத் தேடி அலைந்து தேவியைக் கண்டேன்.

இராமரையே எண்ணி எண்ணித் தவங்கிடக்கும் இந்த தேவியைச் சந்தித்துத் தேற்றுவது அவசியம். சீதைக்கு சமாதானத்தையும், நம்பிக்கையையும், தைரியத்தையும் அளிக்காமல் நான் இங்கிருந்து புறப் படுவது பாபமாகும். ஏன்? தேவி இனி உயிர் தரிக்க மாட்டாள்.

ஆனால் சீதையைக் காணும் ஆவலோடு துடித் துக் கொண்டிருக்கும் இராமருக்கு இந்த சந்தோஷ சமாசாரம் சொல்லுவதும் அவசியமாகிறது. இந்த அரக்கிகள் மத்தியில் தேவியைச் சந்திப்பதும் முறை யல்ல. விடிவதற்குள் சீதையைத் தேற்றாமல் போனால் உயிரிழப்பது நிச்சயம். தேவியைச் சந்திக் காமல் இராமரிடம் போவதும் உசிதமல்ல. 'சீதை என்ன சொன்னாள்' என்று கேட்டால் என்ன பதில் சொல்வது? சந்திப்பதற்கும் வழியைக் காணவில்லை. இந்த தரும சங்கடத்திற்கு என்ன செய்வது?

என்று மாருதி சிந்தித்தார். கம்பர் இங்கு இந்த சங்கடம் தீர மாருதி மந்திர சக்தியால் அரக்கிகளை உறங்கச் செய்தார் என்று கூறி உடனே சந்திப்பை ஏற்படுத்தி விடுகிறார். ஆனால் வால்மீகியோ இந்த சந்தர்ப்பத்தை மிக்க விரிவாகவும் ஆலோசனை மிகுந்த தாகவும் வர்ணிக்கிறார். அரக்கிகளுக்குத் தெரியா மல் சந்தர்ப்பம் பார்த்து தேவியைத் தேற்றத் தீர்மா னித்ததாகவும் கூறுகிறார்.

சரி, தேவியைச் சந்தித்து விட்டுத்தான் புறப்படு வது என்று தீர்மானித்துக் கொண்டார். ஆனால் இதிலும் ஒரு சங்கடம் இருக்கக் கண்டார்.

"சீதா தேவியோடு பேச வேண்டுமானல் மனித பாஷையில்தான் பேச வேண்டும். ஒரு குரங்கு நல்ல மனித பாஷையில் பேசினல் சீதா தேவி சந்தேகங் கொள்வாள். மாறு வேடம் கொண்டுவந்த இராவணனே என்று எண்ணி விடுவாள். ஒரு குரங்கு எப்படிப் பேசும்? அதுவும் நல்ல மனித பாஷையில் எப்படிப் பேசும் என்று நினைப்பாள். ஆனல் சீதா தேவியிடம் வேறு எப்படிப் பேசுவது? மனிதப் பெண்ணிடம் மனித பாஷை தவிர வேறு எதில் பேச முடியும்? ஆகையால் வேறு வழி யில்லை. மனித பாஷையில் தான் பேசவேண்டும் என்று மாருதி தீர்மானித்தார். ஆனல் இதனல் நேரக் கூடிய பலா பலன்களையும் ஆலோசித்தார்.

"சீதா தேவி ஏற்கனவே அரக்கிகளாலும், இராவணனலும் பயமுறுத்தப் பட்டிருக்கிருள். என்னுடைய உருவத்தையும் பார்த்து பேச்சையும் கேட்டால் மீண்டும் பயமடையலாம். பயந்து கூச்சலிடலாம். இதைக் கேட்டு அரக்கிகள் என்னைச் சூழ்ந்து கொள்ளலாம். என்னுடைய பலத்தைக் கண்டு அவர்கள் பயந்து துணைக்கு அரக்கர்களை அழைக்கலாம். அவர்களும் ஆயுதங்களோடு வரலாம்.

அரக்கர்களோடும் சண்டையிட்டு சமுத்திரத்தையும் கடப்பது சுலபமாகத் தோன்ற வில்லை. அவர்கள் என்னைப் பிடித்துக் கொள்ளலாம். சீதையையும் உபத்ரவிக்கலாம். இராம சுக்ரீவருடைய காரியம் வீணுகும்.

அணுகுவதற்கு அரிதான இந்த இடத்தில் சீதை காவலில் இருக்கிருள். என்னைக் கொன்று விட்டாலோ அல்லது கட்டிப் போட்டு விட்டாலோ வேறு யார் இங்கு வந்து காரிய சாதகம் செய்துகொண்டு போவார்கள் என்று தெரிய வில்லை. யோசித்து

யோசித்து பார்த்தாலும் 100 யோசனை விஸ்தீர்ண முள்ள கடலைக் கடந்து வரக்கூடியவர் யாரென்று தெரிய வில்லை.

அரக்கர்கள் எத்தனை ஆயிரக் கணக்கில் எதிர்த் தாலும் கொன்று குவிக்கத் தைரியம் இருக்கிறது. ஆனுல் இவர்களிடம் போரிட்டுக் கொண்டே கடலைக் கடக்க வேண்டுமே. இது சாத்தியமாகத் தோன்ற வில்லை. தவிர

அஸத்யானி ச யுத்தானி
ஸம்சயோ மே ந ரோசதே

யுத்தம் செய்தால் அது எப்படி முடியுமென்று யாரும் சொல்ல முடியாது. இப்படி சந்தேகமான காரியத்தைச் செய்ய எனக்குப் பிடிக்க வில்லை.

இத்தனை சங்கடம் எதற்கு? தேவியைச் சந்திக் காமல் உடனே திரும்பி விடுவோமென்ருலோ சீதை உயிர் விட்டு விடுவாள் என்று பயமாயிருக்கிறது. சந்தித்தாலும் ஆபத்திருக்கிறது. நான் ஒக்க யோஜனையோடு நடந்து கொள்ள வேண்டும். இல்லை யானுல் எல்லாம் அவமாகும். தூதர்களின் தவறு களால் பல நல்ல காரியங்கள் கெட்டுப் போகின்றன.

தேவியைச் சந்திக்கவும் வேண்டும். இதனுல் தொந்திரவும் வரக்கூடாது. கடல் கடந்து வந்தது வீணுகக் கூடாது. இதற்கு என்ன வழி?

நான் பேசுவதைக் கேட்டு தேவி பயப்படாமல் இருக்க வேண்டும். என் வார்த்தையை இனிமை யாகக் கேட்க வேண்டும். எந்த வார்த்தை தேவிக்கு இப்படி ருசியாயிருக்கும்? என்று ஆலோசித்தார்.

சரி, கண்டு கொண்டேன். சீதைக்கு மனோஹர மாய் இனிக்கக் கூடியது இராமருடைய வார்த்தை தான். இதில் சந்தேகம் என்ன?

ஆகையால் இக்ஷ்வாகு சிரேஷ்டரான அந்த அறி வாளி இராமருடைய மங்களகரமான தர்ம சரிதையை இனிமையாகக் கூறுகிறேன். தேவி இதைக் கேட்டு நம்பிக்கை கொண்டால் பின்னர் எல்லாவற்றையும் கூறி விடுகிறேன் என்று ஆலோசித்துத் தீர்மானித்து இனிமையாகப் பேச ஆரம்பித்தார்.

"ராஜா தசரதர் மிக்க புண்ய சீலர். நேர்மை உடையவர். கீர்த்தி உடையவர். இவருக்கு ஏராள மான ரதங்களும் யானைகளும் குதிரைகளும் உண்டு.

ஆனால் அவர் ராஜரிஷி போன்றவர். சக்ரவர்த்தி குலத்தில் பிறந்தவர். பலத்திலோ இந்திரனைப் போன்றவர். அஹிம்ஸையில் அதிகப் பிரியமுடைய வர். இரக்க முள்ளவர். லக்ஷ்மி களை யுடையவர்.

இவருடைய மூத்த பிள்ளை எல்லா வில்லாளி களிலும் சிறந்தவர். சந்திரன் போன்ற முகார விந்த முடையவர். இராமர் என்று பெயர். இவரோ—

ரக்ஷிதா ஸ்வஸ்ய வ்ருத்தஸ்ய
ஸ்வஜனஸ்ய ச ரக்ஷிதா
ரக்ஷிதா ஜீவ லோகஸ்ய
தர்மஸ்ய ச பரந்தப:

தன் நடத்தையில் மிக்க நேர்மை யுடையவர். தன் ஜனங்களும் ஒழுங்காக நடக்கும்படி பார்த்துக் கொள்வார். தர்மத்தைப் பாது காப்பவர். ஸர்வ ஜீவர்களையும் பாது காப்பவர்.

இந்த பிரபு இராமர், தந்தையின் வார்த்தையைக் காப்பாற்ற வேண்டி, தம்பியோடும், தையலோடும் காட்டிற்கு வந்து விட்டார். ஜனஸ்தானத்தில் இவரை எதிர்த்த பதினுலாயிரம் அரக்கர்களை ஒருவரே கொன்ருர்.

ஜனஸ்தானத்தில் கர தூஷணுதி 14 ஆயிரம் பேர் மாண்டதைக் கேட்டு இராவணன், மாயமாகுல் வஞ்சித்து, அவரது தர்ம பத்தினி சீதா தேவியை அபகரித்துக் கொண்டு வந்து விட்டான்.

இராமலக்ஷ்மணர் இந்த சீதா தேவியைத் தேடிக் கொண்டே வரும்போது காட்டில் சுக்ரீவன் என்ற ஒரு நண்பனை அடைந்தனர்.

அந்த சுக்ரீவனுக்காக வாலியைக் கொன்று இராமர் வானர ராஜ்யத்தை அவனுக்குப் பட்டாபிஷேகம் செய்து வைத்தார்.

இராமரிடத்தில் நன்றியுள்ள அந்த உத்தம நண்பனை சுக்ரீவனுடைய கட்டளையால் கோடிக் கணக்கான வானரர்கள் எல்லாத் திசைகளிலும் அந்த சீதா தேவியைத் தேடித் திரிகிருர்கள்.

நானே, ஸம்பாதி என்ற கழுகரசன் கூறியபடி 100 யோசனை விஸ்தீரண முள்ள சமுத்திரத்தைக் கடந்து இங்கு வந்தேன். ஆ!

யதா ரூபம் யதா வர்ணம்
யதா லக்ஷ்மீம் ச நிஸ்சிதாம்
அச்ரௌஷம் ராகவஸ்யாஹம்
ஸேயமாஸாதிதா மயா

அந்த இராமர் சீதா தேவியைப் பற்றி எப்படி எல்லாம் அடையாளம் சொன்னரோ அதே ரூபம், அதே வர்ணம், அதே அழகு, அதே சீதையைத் தான் இங்கு காண்கிறேன்"

என்று மாருதி கூறி நிறுத்தி விட்டார். இதை முழுதும் கேட்ட சீதை ஆச்சர்யம் அடைந்தாள். சந்தேகமும் பயமும் உள்ளவளா யிருந்தாலும் ஆச்சர்ய உணர்ச்சியால் தூண்டப் பட்டு, தனது சுருண்ட குழல் மொய்க்கும் முகத்தை அண்ணாந்து, சப்தம் வந்த திசையில் மரத்தில் பார்த்தாள். வாயு புத்திரனை அனுமானைக் கண்டாள்.

மாருதி முறை பயனளித்தது. ஒவ்வொரு சங்கடமான நிலையிலும் இவர் ஆலோசனை செய்வதும், அந்த சங்கடம் தீர முடிவு செய்வதும் அற்புதமாக இருக்கிறது. மனிதருடைய சிந்தனா சக்தியை விருத்தி செய்கிறது. சீதை பயப்படாமல் இனிமையாகக் கேட்க, மாருதி இராம சரித்திரத்தைச் சொல்ல ஆரம்பித்தது மிக்க அற்புதமாக இருப்பதுடன் மனோ தத்துவ சாஸ்திரப் பாண்டித்யத்தையும் வெளிப் படுத்துகிறது. இவற்றை உள்ளது உள்ளபடி வெளியிட்ட வால்மீகி பகவான் மனித உலகத்துக்குப் பேருதவியைச் செய்கிறார்.

34. அத்தியாயம்.

இருதயத்தின் சாவி

அசோக வனம் சீதா பிராட்டிக்கு சோக (துக்க) வனமாக இருந்த சமயம். தேவி இதயத்தில் துக்கம், பயம், சந்தேகம் நிரம்பியிருக்கிறது. இந்த நிலையில் எந்த வார்த்தையைச் சொன்னால் சீதை கலங்க மாட்டாள், சந்தோஷப் படுவாள் என்று நன்றாக ஆலோசித்து மாருதி ராம சரிதத்தை சொல்லி நிறுத்தினார். மாருதியின் முறை உடனே நல்ல பலனையும் கொடுத்தது. சீதா தேவி சந்தோஷத்தோடு இத்த சப்தம் வந்த திசையில் உற்றுப்பார்த்தாள். இப்படித் தன் காரிய ஆரம்பத்தில் வெற்றி பெற்றுக் கொண்டது மாருதியின் அறிவும் ஆலோசனை சக்தியும் அல்லவா?

அறிவு ஒவ்வொருவரிடமும் இருக்கிறது. இது உபயோகப் படுத்தப் படாமல் மழுங்கி இருக்கிறது. சிந்தனை சக்தியை உபயோகப் படுத்திப் பழகியவருக்கு இந்த அறிவு காமதேனுவைப் போல், கற்பக விருக்ஷத்தைப் போல் வேண்டியதை எல்லாம் கொடுக்கிறது. ஆ! இந்த கற்பகத்தைக் கையில் வைத்துக்கொண்டு இதன் பலனை அடையாத மனிதர்களின் துர்பாக்கியம் தான் என்ன!

மாருதியோ சங்கடமான நிலைமை ஏற்படும் பொழுதெல்லாம் இந்த அறிவுப் பொக்கிஷத்தைத் தட்டுகிறார். வழி திறக்கிறது. இதைப் பல சமயங்களிலும் பார்த்து வருகிறோம். மனதை நேர்மைப் படுத்தி வைத்திருப்பவர் சிந்தித்துத் தட்டும் போதெல்

வாம் அறிவுக் கதவு திறந்து நிச்சயமான வழி விளங்கு வதை அநுபவத்தில் காண்கிறோம்.

மாருதி இப்படிப் புத்திசாலித் தனமாக சீதா தேவியின் உள்ளத்தில் சந்தோஷத்தையும் நம்பிக்கை யையும் சிறிது உண்டாக்கிக் கொண்டார். இன்னும் இந்த நம்பிக்கைக் கட்டிடத்தை தனது இனிமையான, சாதுர்யமான மொழிகளால் எப்படி வலுப்படுத்து கிறார் என்று பாருங்கள்.

மாருதியின் மனோஹரமான மொழிகளைக் கேட்டு தேவி ஆச்சர்யத்தோடு அண்ணாந்து பார்த்தாள். 'ஆ கண்கொண்டு காண முடியாத உருவம்' என்று மீண்டும் மயங்கிக் கலங்கினாள். பயமும் பற்றிக் கொண்டது. "இராமா! இராமா! லக்ஷ்மணா! லக்ஷ்மணா! என்று மெதுவாக அழுகிறாள்.

மாருதி மிக அடக்க ஒடுக்கமாகத்தான் உட் கார்ந்திருக்கிறார். ஆனால் இவர் கூறிய சந்தோஷ சமாசாரம் உண்மை தானா, தனக்கும் நல்ல காலம் பிறக்குமா என்று சீதை சந்தேகப் படுகிறாள். "இது ஒரு வேளை ஸ்வப்பனமாக இருக்குமா?" என்று எண்ணுகிறாள்.

"அந்தோ ஸவப்பனத்தில் குரங்கைப் பார்க்கக் கூடாதென்று பெரியோர்கள் சொல்லுகிறார்களே! இராம லக்ஷ்மணருக்கும், என் தந்தை ஜனகருக்கும் ஒன்றும் நேராமல் இருக்க வேண்டுமே! இவர்களுக்கு மங்களம் உண்டாகட்டும்" என்று வாழ்த்துகிறாள். ஆனால் மற்றொரு எண்ணம் உண்டாகிறது. 'எனக் குத் தான் தூக்கமே இல்லையே, பூர்ண சந்திரன் போன்ற அந்த நாதனுடைய திருமுகத்தைக் காணா மல் சோகத்திலும் துக்கத்திலும் மூழ்கி இருக்கிற எனக்குச் சுக மேது? தூக்கமேது? தூக்கமே இல்லாத

போது ஸ்வப்பன மேது? ஆகையால் இது ஸ்வப்பன மல்ல.

ஒரு வேளை இரவு பகல் ஓயாமல் இராமரையே சிந்தித்து, வாயாலும் புலம்பிக் கொண்டிருப்பதால் அவர் சம்பந்தமான கதையும் காக்ஷியும் தோன்று கிறதா? இது என்னுடைய மனோ விகாரந் தானோ?

ஆனால் இன்னும் யோசித்துப் பார்த்தால் மனோ விகாரத்திற்கு உருவமேது? இதோ பிரத்யக்ஷமாக உருவத்தைப் பார்க்கிறேனே! தெளிவாகப் பேச்சைக் கேட்டேனே!

ஆகையால் இது ஸ்வப்பனமு மல்ல. மனோ விகாரமு மல்ல. உண்மையாகத் தானிருக்க வேண் டும். தெய்வமே! உன்னைப் போற்றுகிறேன். இந்த வானரன் சொல்லியது எல்லாம் உண்மையாக இருக்க வேண்டும்" என்று பிரார்த்தித்தாள்.

தனது வார்த்தைகள் தேவியின் இருதயத்தில் உண்டாக்கக் கூடிய கொத்தளிப்புச் சிறிது தணியும் வரையில், தேவி இவற்றைச் சிந்தித்துத் தெளியும் வரையில், மாருதி மௌனமாகப் பார்த்துக் கொண்டி ருந்தார். மள மள வென்று பேசிக் கொண்டே போவ தால் பிரயோஜனம் இல்லை. ஆகாரத்தை மேலும் மேலும் போட்டு வயிற்றை நிரப்புவதால் பயனில்லை. இது ஜீரணமாக அவகாசம் கொடுக்க வேண்டும். இது போல் பேசுகிற பேச்சைக் கிரகித்துத் தெளிவு படுத்திக் கொள்ள அவகாசம் கொடுப்பது அவசிய மாகும். சொல்லின் செல்வனாகிற மாருதி இந்த நல்ல முறைகளை யெல்லாம் கையாளுவதைப் பார்க்கிறோம்.

ஆகவே இப்படிச் சிறிது நேரம் பொறுத்திருந்த மாருதி, தேவியின் முகக் குறிகளால், அவள் உள்ளத் தில், தனது வார்த்தைகள் உண்மையானவை என்ற

நம்பிக்கையையும் அமைதியையும் உண்டாக்கி யிருப்பதை உணர்ந்தார். மேலும் பேசுகிறார். எப்படி? மேல் கிளையிலிருந்து சிறிது கீழ்க் கிளைக்கு இறங்கி வந்தார். மிக்க அடக்க ஒடுக்கமாக கைகள் இரண்டையும் தலை மேல் குவித்துக் கொண்டு கூறுகிறார்.

"அம்மா! தாமரை இதழ் போன்ற கண்ணுடைய தாயே! மலினமான பட்டுடுத்திய மாதாவே! இந்த மரக்கிளையைப் பிடித்துக் கொண்டு நிற்கும் தாங்கள் யாரம்மா?

கிமர்த்தம் தவ நேத்ராப்யாம்
வாரி ஸ்ரவதி சோகஜம்
புண்டரீக பலாசாப்யாம்
விப்ர கீர்ணம் இவோதகம்

தாமரை இதழிலிருந்து தண்ணீர் பெருகுவது போல, தங்கள் கண்களிலிருந்து, ஏனம்மா கண்ணீர் பெருகிக் கொண்டிருக்கிறது?

தேவர்கள், அஸுரர்கள், நாக கந்தர்வர்கள், யக்ஷ கின்னரர்கள், ருத்ரர்கள், மருத்துக்கள், வஸுக்கள் இவர்களில் நீங்கள் யாரைச் சார்ந்தவரம்மா? உங்களைத் தெய்வப் பிறப்பாகவே கருதுகிறேன்.

எல்லா நற்குணங்களும் நிறைந்த ரோகிணி தேவியைப் பற்றி கேள்விப் பட்டிருக்கிறேன். நீங்கள் அந்த ஒளி மிகுந்த ரோகிணியா? சந்திரனிடமிருந்து பிரிந்து வந்து விட்டீர்களா?

அல்லது நீங்கள் அருந்ததியா? கோபத்தாலோ வேறு எக்காரணத்தாலோ வஸிஷ்ட பகவானைப் பிரிந்து வந்து விட்டீர்களா?

நீங்கள் ஏனம்மா இப்படித் தேம்பித் தேம்பி அழுகிறீர்கள்? உங்களுக்குப் பிரியமான பந்து யாரா

வது இந்த உலகை விட்டுப் பிரிந்து போய் விட்டார்களா?

உங்கள் பாதம் பூமியில் தோய்ந்து நிற்கிறது. அழுகையும் பெரு மூச்சும் இருக்கிறது. தெய்வப் பெண்களுக்கு இவை யில்லை. அல்லாமலும் அங்க அடையாளங்களைப் பார்த்தால் ராஜ கன்னிகை போலிருக்கிறது. நீங்கள் யாருடைய பட்ட மகிஷி யம்மா?

ஜனஸ்தானத்தில், பஞ்சவடி ஆசிரமத்திலிருந்த எங்கள் தாய் சீதா தேவியை, அந்த துராத்மாவான இராவணன் திருட்டுத் தனமாக பலாத்காரமாக அபகரித்துக் கொண்டு வந்து விட்டான். ஒரு வேளை தாங்கள் அந்த சீதா தேவியா, அம்மா! எத்தனையோ கோடிக் கணக்கான வானரர்கள் எல்லாத் திசைகளிலும் அந்த தேவியைத் தேடித் திரிகிறார்கள். நான் ஒருவன் பயங்கரமான நூறு யோசனை விஸ்தீரண முள்ள கடலைக் கடந்து இலங்கையை அடைந்து, ஒரு இடம் கூடப் பாக்கியில்லாமல் இரவெல்லாம் தேடியும் காணக்கிடைக்க வில்லை. வெறுங் கையோடு திரும்புவதா, தற்கொலை செய்து கொள்வதா என்று தத்தளித்துக் கொண்டிருக்கும் நானும், என்னை அனுப்பிய வானரக் கூட்டத்தாரும், ராஜா சுக்ரீவரும், புருஷோத்தமர்களான இராம லக்ஷ்மணரும் நல்லுயிர் பெற்று உஜ்ஜீவிக்கும்படி "ஆம்! நான் சீதை தான்" என்ற அமிர்த மயமான வார்த்தையைத் தங்கள் செம்பவள வாய் திறந்து சொல்லுங்களம்மா!

யதா ஹி தவவை தைன்யம்
ரூபம் சாப்யதி மாநுஷம்
தபஸா சான்விதோ வேஷ:
த்வம் ராம மஹிஷீ த்ருவம்

இந்த இலங்கையில் இன்றிரவு நான் கோடி, கோடிக் கணக்கான ஸ்திரிகளைப் பார்த்தேன். உம்மைப் போல் பரிதாபமான நிலையில் இதுவரை யாரையுமே பார்த்த தில்லை.

மனித லோகத்திலும் எத்தனையோ அழகுடைய ஆண்கள் பெண்கள் இருக்கிறார்கள். உம்முடைய ரூபம் மனித ஜாதிக்கு அதீதமா யிருக்கிறது. இத்தகைய அதிமாநுஷ ரூபத்தை இராம லக்ஷ்மணரிடம் தான் கண்டேன்.

அல்லாமலும் அந்த இராமர் ஜடை முடியும் மரவுரியும் தரித்து தவக் கோலத்தோடு இருக்கிறார். நீரும் ஒரே ஜடை போன்ற கூந்தலும், அழுக்காடையும் கொண்டு எவ்வித அலங்காரமும் இன்றித் தவக் கோலத்தோடு இருக்கிறீர். இவற்றை யெல்லாம் நன்கு யோசித்துப் பார்த்தால் அந்த இராமர் தேடும் சீதை நீர்தான் என்று நிச்சயமான தைரியம் உண்டாகிறது." என்று மாருதி தகுதியாகப் பேசினார்.

உண்மையும் உருக்கமும், இனிமையும் அடக்கமும், பொருளும் வினயமும், புத்தியும் சாதுர்யமும் நிறைத்த மாருதியின் மொழிகளால் சீதா தேவியின் இருதயம் திறந்தது. இராம சரிதம் தேவியைப் பரவசப் படுத்தியது. முக மலர்ந்து, வாய் மலர்ந்தாள்.

"உலகிலுள்ள அரசர்களுக் கெல்லாம் முக்கியமானவர். சத்ருக்களைத் தபிக்கச் செய்யும் அந்த தசரதருக்கு மருமகள் நான். மஹாத்மாவான ஜனகருக்கு மகள். அந்த மேதாவியான இராமருக்குப் பத்தினியான சீதை நான் தான்.

நாங்கள் அயோத்தியில் 12 வருஷ காலம் எல்லா போகங்களையும் அநுபவித்துக் கொண்டு சுகமாகவே

வாழ்ந்திருந்தோம். 13ம் வருஷத்தில் தசரதர் இராமருக்குப் பட்டம் கட்ட ஏற்பாடு செய்தார். தசரதருடைய இளைய மனைவி கைகேயியோ "இராமருக்குப் பட்டம் கட்டினால் உயிர் விட்டு விடுவேன். என் வரத்தை நிறைவேற்றும்" என்று வற்புறுத்தினாள். தசரதர் தர்ம சங்கடத்தில் தத்தளித்து இராமரை வேண்டினார்.

இராமருக்கோ ராஜ்யத்தைக் காட்டிலும் தந்தை வாக்கியமே இனிமையானது. அல்லாமலும்—

தத்யான் ந ப்ரதிக்ரண்ஹீயாத்
ந ப்ரூயாந் கிஞ்சி தப்ரியம்
அபிஜீவித ஹேதோர் வா
ராம: ஸத்ய பராக்ரம:

ஸத்ய பலமுடைய இராமரோ பிறருக்குக் கொடுக்கும் ஸ்வபாவமுடையவர். பிறரிடம் வாங்கும் இயற்கை அவருக்கு இல்லை. உயிர் போனாலும் பிறரைப் புண் படுத்த மாட்டார். தந்தையின் வார்த்தையை மனவால் ஏற்றுக் கொண்டார். ராஜ்யத்தை மனப் பூர்வமாக விட்டார். என்னைத் தன் தாயிடம் இருக்கும்படி கூறினார். ஆனால் நானும் தொடர்ந்து புறப்பட்டேன். லக்ஷ்மணரும் மரவுரி தரித்துக் கொண்டு புறப்பட்டு விட்டார். நாங்கள் தசரதர் ஆணையின்படி காட்டில் வசித்து வந்தோம். துராத்மாவான இராவணன் என்னைத் தூக்கிக்கொண்டு வந்து விட்டான். எனக்கு இன்னும் 2 மாதம் உயிர்ப் பிச்சை அளித்திருக்கிறான். அதற்கு மேல் நான் உயிரை விட்டு விடுவேன்" என்றாள்.

துக்கம் மிகுந்த சீதா தேவியின் வார்த்தைகள் மாருதிக்கு மிகுந்த துக்கத்தை உண்டாக்கியது. ஆனாலும் தன்னிடம் நம்பிக்கை கொண்டு தேவி பேச

ஆரம்பித்தது சந்தோஷத்தையும் தைர்யத்தையும் உண்டாக்கியது. தேவியை சாந்தப்படுத்த எண்ணி மாருதி மேலும் மிக உருக்கமான வார்த்தைகளைக் கூறுகிறார்.

'தாயே! நான் இராமருடைய ஆணையால் உம்மிடம் தூது வந்திருக்கிறேன். அந்த இராமர் க்ஷேமமாக இருக்கிறார். உமக்கு க்ஷேமம் சொன்னார். பிரம்மாஸ்திரம் முதலான அஸ்திர சஸ்திரங்களை அறிந்தவரும், வேத வேதாங்கங்களில் சிறந்தவருமான அந்த இராமர் உமக்கு க்ஷேமம் சொன்னார்.

இராமரை நிழல் போல் பின் தொடர்ந்திருக்கும் அந்த பலசாலி லக்ஷ்மணர் மிகத் துக்கத்தோடு கூட உமக்குத் தலையால் வணக்கம் தெரிவித்தார் என்று கூறினார். இந்த வார்த்தைகளின் ஆழ்ந்த பொருளை கூர்ந்து கவனியுங்கள்.

இங்க இராம லக்ஷ்மணருடைய க்ஷேமத்தைக் கேட்டு சீதா தேவி புளகாங்கிதம் அடைந்தாள். சந்தோஷத்தோடு கூறுகிறாள்.

கல்யாணீ பத காதேயம்
லௌகிகீ ப்ரதிபாதி மா
ஏதி ஜீவந்தம் ஆனந்தோ
நரம் வர்ஷ சதாதபி

உலகத்தில் ஒரு பழமொழி வழங்குகிறது. '100 வருஷம் (கஷ்டத்தோடு) கழித்தாலும், உயிரோடிருந்தால் கடைசியாக மனிதன் சுகத்தை அடைகிறான்' என்று சொல்லுகிறார்கள். இது உண்மை என்று இப்பொழுது எனக்கு விளங்குகிறது என்றாள்.

இப்படி நம்பிக்கையும் அன்பும் ஏற்பட்டு பரஸ்பரம் விச்வாஸத்தோடு பேச ஆரம்பித்தார்கள். நம்

பிக்கை தான் அன்புக்கு அஸ்திவாரம். இருதயப் பூட்டைத் திறக்கும் சாவி. இப்படிப் பூரண நம்பிக்கை ஏற்படுவது சுலபமல்ல. அவசரத்தில் ஒன்றும் நடை பெறாது. அமைதியாகவும் நேர்மையாகவும் காலமறிந்து நடப்பவரே நம்பிக்கைக்குப் பாத்திரமாகின்றனர். நம்பிக்கை பெற மாருதி நடந்து கொண்ட முறை குறிப்பிடத் தக்கது.

35. அத்தியாயம்.

உயிரினும் இனியது இராம கதை

பரஸ்பரம் மனங்கலந்து பேசுவதற்கு ஆதாரமான நம்பிக்கை உண்டாகி யிருக்கிற தென்று உணர்ந்து மாருதி, தனது பேச்சை தேவி நன்ருகக் கேட்கும் பொருட்டு மரக்கிளையிலிருந்து இன்னும் கொஞ்சம் கீழே இறங்கி வந்தார். இப்படி நெருங்கி வருவது சீதா தேவிக்குச் சந்தேகத்தை உண்டாக்கி விட்டது. "இவன் இராவணனே மாறுவேடம் பூண்டு, மனோகர மான இனிய கதையைப் பேசிக் கொண்டே நெருங்குகிருனே" என்று எண்ணி விட்டாள். "இவனோடு இவ்வளவு நேரம் ஏன் பேசினேன்?" என்று வருந்தினாள்.

ஆகையால் அந்த அசோக மரக்கிளையைப் பிடித்துக் கொண்டிருந்தவள் அதை விட்டு விட்டு பூமியில் உட்கார்ந்தாள். இப்படி சீதைக்கு அவ நம்பிக்கை

யும் பயமும் உண்டாயிருப்பதைக் கண்ட மாருதி இதை நீக்கும் பொருட்டு வினயத்தோடு வணங்குகிறார். ஆனால் பயங்கொண்ட சீதை மாருதியைத் திரும்பிப் பார்க்கவில்லை. துக்கத்தால் பெருமூச்சு விடுகிறாள். சொல்லுகிறாள்.

" நீ மாயக் குரங்குருவம் தரித்த இராவணனானால் மீண்டும் என்னை இப்படித் துன்புறுத்த வந்திருப்பது உனக்கு நல்லதல்ல. உள்ள வடிவை மறைத்து, தவக்கோலம் கொண்டு வந்த உன்னை ஜனஸ்தானத்தில், பஞ்சவடி ஆசிரமத்தில் பார்த்தேன். இப்பொழுது குரங்கு வடிவம் கொண்டு இனிய கதையைப் பேசும் நீ, அதே இராவணன் தான் என்று எண்ணுகிறேன். உன்னு விரதத்தால் நான் தாபம் அடைந்திருக்கிறேன். இந்த நிலையில் மீண்டும் என்னைத் துன்புறுத்துவது நல்லதல்ல.

ஒரு வேளை நான் இப்படிச் சந்தேகிப்பதே தவறாயிருக்கலாம். ஏனென்றால் உன்னைக் கண்டது முதல் என் மனதில் சந்தோஷம் பொங்குகிறது. நீ இராவணனாயிருந்தால் எனக்குச் சந்தோஷம் எப்படி உண்டாகும்? துக்கமல்லவா பொங்கும்.

ஆகையால் நீ இராம தூதனாக வந்திருப்பது உண்மையானால் உனக்கு மங்களம் உண்டாகட்டும். இராம கதை எனக்கு உயிரினும் பிரியமானது. இராம சரித்திரத்தைக் கூறியதால் என் உள்ளத்தைக் கவர்ந்து விட்டாய். உன்னை வேண்டிக் கொள்கிறேன். அந்த இராம கதையை இன்னும் கொஞ்சம் சொல்லு'' என்றாள். பின்னும் தனக்குள்ளேயே சிந்திக்கிறாள்.

ஒரு வேளை இத்தனையும் ஸ்வப்பனமாயிருக்குமா? ஆகா! இஷ்டமான ஸ்வப்பனம் எவ்வளவு

இன்பமா யிருக்கிறது! இராம லக்ஷ்மணரை இப்படி ஸ்வப்பனத்தில் கண்டாலும் ஆறுதல் அடைவேன். ஸ்வப்பனம் கூட அல்லவா எனக்குச் சத்துருவாயிருக் கிறது. சீ! இது ஸ்வப்பனமா யிருக்காது. கனவில் குரங்கைக் கண்டால் சந்தோஷம் உண்டாகாது. எனக்கு இப்பொழுது சந்தோஷம் உண்டாகி யிருக் கிறது. ஆகையால் இது கனவு அல்ல.

அல்லது இது சித்த பிராந்தியா? மனோ விகா ரமா? பித்தம் முற்றி விட்டதா? அல்லது கானல் நீர் போல் ஏமாற்றமான தோற்றமா?

இல்லை. இல்லை. உன்மத்தம் பிடித்திருந்தால் மயக்கமாக அல்லவோ இருக்கும். இப்பொழுது நான் தெளிவாக விஷயங்களை உணர்கிறேனே!

இப்படி சீதை பலவாறு சிந்தித்தாள். மாயாவி இராவணன் தானோ? என்ற சந்தேகம் பலமாயிருந் தது. ஆகையால் மாருதியோடு பேசாமலிருந்தாள். மாருதி இதை உணர்ந்தார். இந்த சந்தேகக் கோட்டை உடைக்கத் தீர்மானித்தார். சீதா தேவி யின் காதுக்கும் மனதுக்கும் இனிமையான இராம சரித்திரத்தைச் சொல்ல ஆரம்பித்து விட்டார்.

ஆதித்ய இவ தேஜஸ்வீ லோககாந்த: சசீ யதா
ராஜா ஸர்வஸ்ய லோகஸ்ய தேவோ வைச்ரவணோ யதா
விக்ரமேண உபபன்னஸ்ச யதா விஷ்ணு: மஹா யசா:

சூரியனைப் போல் தேஜஸுடையவர். சந்தி ரனைப் போல் உலகை யெல்லாம் களிக்கச் செய்பவர். ஸர்வ லோகங்களுக்கும் ராஜா. குபேரனைப் போன்ற வர். பலத்திலோ கீர்த்தி மிக்க விஷ்ணுவை நிகர்த்தவர்.

ஸத்ய வாதீ மதுர வாக்
தேவோ வாசஸ்பதிர் யதா
ரூபவான் ஸுபக: ச்ரீமான்
கந்தர்ப்ப இவ மூர்த்திமான்.

ஸ்தானக்ரோத: ப்ரஹர்த்தா ச
ச்ரேஷ்டோ லோகே மஹாரத:
பாஹுச்சாயாம் அவஷ்டப்தோ
யஸ்ய லோகோ மஹாத்மன:

எப்பொழுதும் ஸத்யமே பேசுகிறவர். ஆனால் ஸாக்ஷாத் பிரகஸ்பதியைப் போல் இனிமையோடும் மேதையோடும் பேசுகிறவர். உருவெடுத்த மன்மதனைப் போல் அழகுடையவர். லக்ஷ்மிகளை யுடைய பாக்கிய சாலி.

கால மறிந்து அவசியமான போது தான் கண்டன தண்டனைகளை உபயோகிப்பார். உலகத்திலுள்ள மஹாரதர்களில் எல்லாம் சிறந்தவர். இந்த மஹாத்மாவின் புஜபல நிழலில் இந்த உலகம் இளைப்பாறிக் கொண்டிருக்கிறது.

இந்த வீரரை மாயமானால் ஆசிரமத்திலிருந்து வெளியே இழுத்து விட்டு, யாருமில்லாத சமயத்தில் திருட்டுத் தனமாக உம்மை இராவணன் அபகரித்துக் கொண்டு வந்தானல்லவா? அதன் பலனை சீக்கிரமே அனுபவிக்கப் போகிறான். நீர் கண்ணால் காணப் போகிறீர். ரோஷமுள்ள பாணங்களால் சீக்கிரமே இராமர் இராவணனை வீழ்த்தப் போகிறார். அந்த இராமர் தான் உம்மிடம் என்னைத் தூதனுப்பினார்.

உமது பிரிவால் துன்புற்றிருக்கும் அந்த இராமர் உமக்கு க்ஷேமம் சொன்னார்.

சுமித்திரைச் சிங்கம், அந்த லக்ஷ்மணர் உம்மை வணங்கினார். க்ஷேமம் சொன்னார்.

அன்றியும் இராமருடைய சிநேகிதர் சுக்ரீவர். வானரக் கூட்டங்களுக்கெல்லாம் இவர் தான் ராஜா. அந்த சுக்ரீவர் உமக்கு க்ஷேமம் சொன்னார். இராமர் எப்பொழுதும் உம்மைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கிறார். இந்தக் கொடிய ராக்ஷஸிகள் மத்தியில் நல்ல வேளையாக நீர் உயிர் தரித்திருக்கிறீர். இராம லக்ஷ்மணரையும் வானர ராஜா சுக்ரீவரையும் நீர் சீக்கிரமே காணப் போகிறீர். ஆகையால்

ஐயுற லின தடை யாளம் ஆரியன்
மெய்யுற உணர்த்திய உரையும் வேறுள
கையுறு நெல்லியங் கனியில் காண்டியால்
நெய்யுறு விளக்கனாய் நினையல் வேறென்றான்

தாயே! இராமர் சில அடையாளங்களை எல்லாம் சொல்லி அனுப்பியிருக்கிறார். உள்ளங்கை நெல்லிக் கனிபோல் உமக்கு உண்மை விளங்கும். நீர் என்னைப் பற்றி கொஞ்சம் கூட சந்தேகப்பட வேண்டாம்.

என்று மாருதி உறுதி கூறி வணங்கினார்.

என்றவன் இறைஞ்ச நோக்கி
இரக்கமும் முனிவும் எய்தி
நின்றவன் நிருதன் அல்லன்
நெறி நின்று பொறிகள் ஐந்தும்
வென்றவன் அல்லனாகில்
விண்ணவன் ஆகவேண்டும்
நன்றுணர் உரையன் தூயன்
நவையிலன் போலும் என்னா

இதைக் கண்டு சீதா பிராட்டி ஆலோசிக்கிறாள்.

"இவர் எனது நிலையைக் கண்டு இரக்கம் காட்டுகிறார். தீங்கு செய்த அரக்கர்களிடம் கோபம்

காட்டுகிறார். ஆகையால் இவர் அரக்கன் அல்ல. ஒரு வேளை பஞ்சேந்திரியங்களையும் வென்ற யோகியாயிருக்க வேண்டும். அல்லது தேவர்களைச் சேர்ந்தவராயிருக்க வேண்டும். நன்கு தெரிந்து பேசுகிறார். அத்தனையும் பரிசுத்தமாக இருக்கிறது. ஆகையால் இவர் உண்மையில் இராம தூதராகவே இருக்க வேண்டும். அரக்கனல்ல. எப்படி யிருந்தாலும் சரி.

அரக்கனே ஆக, வேறோர்
அமரனே ஆக, அன்றிக்
குரக்கினத் தலைவனே தான்
ஆகுக, கொடுமை யாக
இரக்கமே யாக வந்திங்
கெம்பிரான் நாமம் சொல்லி
உருக்கினன் உணர்வைத் தந்தான்
உயிரிதின் உதவி உண்டோ?

இவர் ராக்ஷஸனாகத்தா னிருக்கட்டும். தேவனாக இருக்கட்டும். அல்லது குரங்காக இருக்கட்டும். நெடு நாளாக கேளாத எனது இராம நாமத்தைச் சொல்லி என்னை உருக்கி விட்டார். நான் தற்கொலை செய்து கொள்ளும் சமயம் எனக்கு உயிர் கொடுத்துக் காத்தார். இதைக் காட்டிலும் என்ன உபகாரம் செய்ய வேண்டும்?

என நினைந் தெய்த நோக்கி
இரங்குமென் உள்ளம் கள்ளம்
மனனகத் துடைய ரான
வஞ்சகர் மாற்றம் அல்லன்
நினைவுடைச் சொற்கள் கண்ணீர்
நிலம்புகப் புலம்புகின்றான்
வினவுதற் குரியன் என்று
வீர! நீ யாவன்? என்றாள்

தேவி இவ்வாறு சிந்தித்து மாருதியை ஏறிட்டுப் பார்த்தாள். கூர்ந்து கவனித்தாள். தனக்குள் சொல்லுகிறாள்.

“இவரைப் பார்த்தால் எனக்கு இரக்கமே உண்டாகிறது. கோபம் உண்டாகவே இல்லை. ஏன்? இவர் உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுபவராகத் தெரியவில்லை. இவர் வார்த்தையில் கொஞ்சமும் வஞ்சம் இல்லை. அந்தரங்கத்தில் என்ன நினைக்கிறாரோ அதையே பேசுகிறார், கண்களில் தாரை தாரையாக நீர் பொழிந்து நிலத்தை நனைக்கிறது. ஆகையால் இவரிடத்தில் சந்தேகம் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை” என்று தீர்மானித்து வீரனே! நீ யார்? உன் வரலாறு என்ன? வந்த வகை என்ன? என்று கேட்டாள் சீதா தேவி.

36. அத்தியாயம்.

வாலில் கட்டித் தோளில் மாட்டி.

இருளும் ஒளியும் ஒன்றை யொன்று தொடர்ந்து வருகின்றது. சுகமும் துக்கமும் இப்படித் தான் பின்னிக் கொண்டிருக்கிறது. சீதா தேவியின் இருதயத்தில் நம்பிக்கையும் அவநம்பிக்கையும், சந்தேகமும் தெளிவும் மாறி மாறி எழுகின்றன. மாருதியின் அகம், முகம், மொழி, பாவம் முதலியவை நம்பிக்கையையும் தெளிவையும் உண்டாக்குகின்றன. ஆனால்

மாருதியின் குரங்குருவம், மனிதப் பேச்சு முதலியவை சந்தேகத்தை அளிக்கின்றன.

ஆகையால் கொஞ்சம் நம்பிக்கை கொண்டு "வீர! நீ யாவன்?" என்று கேட்ட தேவி, பின்னும் தன் சந்தேகங்களை நீக்கும்படியும் கேட்கிறாள்.

க்வ தே ராமேண ஸம்ஸர்க்க:
கதம் ஜானாஸி லக்ஷ்மணம்
வானராணாம் நராணாம் ச
கதமாஸீத் ஸமாகம:?

வீரரே! நரர் (மனிதர்)களுக்கும் வானரர்களுக்கும் எப்படி சம்பந்தம் உண்டாயிற்று? இராமரை எப்படிச் சந்தித்தீர்? லக்ஷ்மணரோடு எப்படி சிநேகம் கொண்டீர்? என் சந்தேகம் நீங்கும்படி இதை விரித்துச் சொல்லும்" என்று கேட்டாள்.

மாருதி இந்த வரலாற்றை விரிக்கிறார்—

"தாயே! அபயக் குரலைக் கேட்டு உம்மால் உதவிக்கு அனுப்பப் பட்ட லக்ஷ்மணர், வேகமாகவே சப்தம் வந்த திசை நோக்கிப் போனார். ஆனால் எதிரே இராமர் வரக் கண்டார். மாய மானாக வந்த மாரீசனை அப்பால் வீழ்த்தி, அவன் போட்ட அபயக் குரலால் சந்தேகம் கொண்டு, இராமரும் ஆசிரமத்தைநோக்கி வேகமாகவே வந்து கொண்டிருந்தார்,

சகோதரர் இருவரும் சந்தித்துக் கலந்த போது ஏதோ தவறு நடந்து விட்டது. இதுவரை சீதைக்கு ஆபத்து நேரிடாமலிருக்க வேண்டுமே என்று பதைத்து ஆசிரமத்துக்கு ஓடி வந்தனர்.

ஆசிரமம் அலங்கோலமாகவும் சூன்யமாகவும் இருந்தது. உம்மைக் காணவில்லை. இராமர் திகைத்

துப் போனார். எங்காவது வெளியே போயிருப்பீர் என்று எண்ணினார்கள். பரிகாசத்துக்காக மறைந்து விளையாடுகிறீரோ என்று கருதினார்கள். சுற்று முற்றும் தேடினார்கள். கோதாவரி நதிக்கு ஓடினார்கள். மலையெங்கும் துருவினார்கள். எங்கும் காணக் கிடைக்கவில்லை என்ற போது அப்படியே ஓய்ந்து போனார்கள்.

பின்னர் இளையவருடைய ஆலோசனையின் படி தேர் போயிருந்த சுவட்டின் வழியே தென் திசையில் வந்தனர். முறிந்து விழுந்து கிடந்த ஆயுதங்கள், கவசங்கள், தலையறுந்த குதிரைகள், சாரதி இவற்றைக் கண்டார்கள். ஏதோ யுத்தம் நடந்திருக்கிற தென்று ஊகித்தார்கள். தொடர்ந்து நடந்தார்கள். இரத்த வெள்ளத்தில் கிடந்த மகாத்மாவான சடாயுவைக் கண்டார்கள். நல்ல வேளையாக அவருக்குக் கெ ந் சம் பிரக்ஞை இருந்தது. உம்மை இராவணன் அ கரித்து வந்ததையும், தான் எதிர்த்து வீழ்ந்ததையும் அறிவித்து பிராணனை விட்டார். இராம லக்ஷ்மணர் துக்கத்தில் மூழ்கினர். அந்த தர்மாத்மாவான சடாயுவை சிதையிலேற்றி தாங்களே ஸம்ஸ்காரம் செய்து தர்ப்பணமும் செய்தார்கள். உமக்குச் சேவை செய்து உயிர்த் தியாகம் செய்த பாக்கியத்தால் அந்த பக்ஷி ராஜன் பெரும் பேறு பெற்றார்.

பின்னும் இராம லக்ஷ்மணர், உம்மைத் தேடிக் கொண்டே தென் திசையில் வந்தனர். நீண்ட கரங்களையுடைய கபந்தனை வீழ்த்தினர். சாப விமோசனம் பெற்ற கபந்தன் தான், முதன் முதலாக இராமருக்கு எங்கள் சுக்ரீவ மஹாராஜாவைப் பற்றி அறிவித்தார். சபரி என்ற தபஸ்வினி இராமரை உபசரித்து எங்கள் மதங்க மலைக்கு வழி காட்டினாள்.

நீண்ட வில்லேந்தி இராம லக்ஷ்மணர் மதங்க மலையில் ஏறி வந்தனர். இவர்கள் எதிரி வாலியால் அனுப்பப் பட்டவர்களோ என்று சுக்ரீவர் சந்தேகம் கொண்டார். நான் ஒரு பிரம்மசாரி வேடம் கொண்டு இராம லக்ஷ்மணரைச் சந்தித்தேன். இவர்கள் நண்பர்களாக வருகிறார்கள் என்று உணர்ந்து சுக்ரீவரோடு சந்திப்பு உண்டு பண்ணினேன்.

சுக்ரீவர் தனது தமயனும் சத்ருவுமான வாலியால் அரசையும் மனைவியையும் இழந்து தனித்துத் தவித்திருந்தார். அந்த வாலியைக் கொன்று இவற்றைத் திருப்பித் தருவதாக இராமர் உறுதி கூறினார். இராவணனால் அபகரிக்கப் பட்ட உம்மைக் கண்டு பிடிக்கவும், திரும்பப் பெறவும் உயிர் கொடுத்து உழைப்பதாக எங்கள் சுக்ரீவ மஹாராஜா சபதம் செய்தார். இப்படி இருவருக்கும் அக்னி சாக்ஷியாகவே நட்பு ஏற்பட்டது.

இராமருடைய பராக்ரமத்தை சுக்ரீவர் கேள்விப் பட்டிருக்கிறார். ஆனால் கண்ணால் கண்டதில்லை. ஆகையால் இராமர் ஏழு மராமரங்களைத் துளைத்துக் காட்டினார். சுக்ரீவருக்கு நம்பிக்கை உண்டாயிற்று. ஏனென்றால் எதிரியான வாலி மகத்தான பலத்தையும் வரத்தையும் உடையவன். அற்புத மான காரியங்களைச் செய்ய வல்லவன்.

மற்றவன் முன்னோன் அன்னாள்
  இராவணன் வலிதன் வாலில்
இற்றுகக் கட்டி எட்டுத்
  திசையினும் எழுந்து பாய்ந்த
வெற்றியன், தேவர் வேண்ட
  வேலையை விலங்கல் மத்தில்
சுற்றிய நாகம் தேய
  அமுதெழக் கடைந்த தோளான்

கேளும் தாயே! ஒரு சமயம் இராவணேச்வரன் தனக்கு நிகர் தானே என்று தன் மார்பையே பார்த்துக் கொண்டு இறுமாந்து சிங்காதனத்தில் உட்கார்ந்திருந்தான். இத்தகைய சமயங்களில் தானே தோன்றுகிற நாரத பகவான் "நாராயணா!" என்று பாடிக் கொண்டு அவன் முன் தோன்றினார்.

நாரதரை உபசரித்து இராவணன் "என்ன சமாசாரம்? மூன்று லோகங்களிலும் என்ன விசேஷம்?" என்று கேட்டான்.

தன் பெருமையைக் கேட்பதில் யாருக்கும் பிரியமிருக்கிறது. அகம்பாவம் பிடித்தவர்களுக்கு இந்த ஆசை மிக அதிகம். இராவணனுடைய மனோநிலையை நன்குணர்ந்த நாரதர் கூறுகிறார்.

"இராவணேச்வரா? நான் மூன்று லோகங்களிலும் சுற்றி வருகிறேன். எங்கு பார்த்தாலும் இராவணேச்வரன், இராவணேச்வரன் என்ற ஒரே பேச்சாக இருக்கிறது. உன்னுடைய புகழ் இப்படி எங்கும் பரவி இருப்பது ஆச்சர்யமாயிருக்கிறது" என்றார். இராவணனுக்கு உச்சி குளிர்ந்து போய் விட்டது. இப்படியான வார்த்தைகளையே மேலும் மேலும் கேட்க விரும்பினான்.

ஆனால் நாரதர் "ஆனால்"-- என்றார். இந்த "ஆனால்" என்ற வார்த்தை மிகப் பயங்கரமானது. மேலே என்ன சொல்லப் போகிறார் என்று கூர்ந்து கவனித்தான் இராவணன்.

"ஆனால் இராவணா! இந்த வாலி என்ற குரங்கு மட்டும் உன்னை அவ்வளவு லக்ஷியம் செய்வதாகத் தெரியவில்லை" என்றார்.

இராவணன் கண்கள் தீப்பறந்தன. "எங்கே அந்தக் குரங்கு. உடனே அதன் கொழுப்பை அடக்கி யாக வேண்டும்" என்று கொதித்தான்.

"வாலி கிஷ்கிந்தையில் தான் இருக்கிறான்" என்று நாரதர் நழுவி விட்டார். ஏகாதிபத்திய வாதி களுக்கு மற்றொரு பலசாலி உயிர் வாழ்வது எப்படி சகிக்கும்? ஆகையால் உடனே இராவணன் கிஷ்கிந் தைக்கு வந்தான். "எங்கே வாலி" என்று ஆர்ப் பாட்டம் செய்தான்.

வாலி வீட்டிலில்லை. அவன் மனைவி அறிவுள்ள தாரை இராவணனை வரவேற்றாள். 'வாலி மாலையில் வருவார்' என்றும் அறிவித்தாள்.

'ஓகோ இந்த துரையை பேட்டி காண மாலை வரை இராவணேச்வரன் காத்துக்கொண்டிருக்க வேண்டுமோ? இப்பொழுது அந்த குரங்கு எங்கே இருக்கிறது, சொல். உடனே நான் போக வேண் டும்" என்று அதட்டினான்.

இராவணனுடைய துடுக்கை தாரை உணர்ந் தாள். "அவர் தெற்கு சமுத்திரக் கரையில் ஸ்நானம் செய்து சிவ பூஜை செய்து கொண்டிருப்பார். உடனே பார்க்க வேண்டுமானால் அங்கே போகலாம்" என்று போய் விட்டாள். இராவணன் கோபத் தோடு கடற் கரைக்குத் தாவினான்.

வாலி சமுத்திர ஸ்நானம் செய்து, மணலால் லிங்கம் பிடித்து வைத்துப் பூஜை செய்து, அதன் முன்னே கண் மூடி நிஷ்டையி லிருக்கிறான். 'இந்தப் பொல்லாத குரங்கை ஒரே அமுக்காக அமுக்கிப் போட இது தான் சமயமென்று இராவணன் பின்

ஞலே வந்து தனது இருபது கைகளாலும் வாலியை இறுகப் பிடித்துக் கட்டினன். வாலிக்கு இது எறும்பு கடித்தது போல் இருந்தது. சிறிது நிஷ்டையும் கலைந்தது. "இதென்ன உபத்ரவம்" என்று இடது கையைப் பின்னே விட்டான். இராவணனுகிற பெரிய பிராணி அகப்பட்டது. இவனைக் கட்டிப் போட அங்கு வேறென்றும் காணவில்லை. நிஷ்டையைக் கலைத்து எழுந்திருக்க வாலி விரும்பவில்லை. ஆகையால் தன் வாலை வளைத்து இராவணனை சுருக்கிக் கட்டினன். பிறகு பார்த்துக் கொள்வோம் என்று தோளில் போட்டான். நிஷ்டையில் மூழ்கி விட்டான்.

நிஷ்டை கலைந்து எழுந்த வாலி மேற்கு சமுத்திரத்தில் போய் ஸ்நானம் செய்து பூஜை செய்தான், இப்படியே வடக்கு, கிழக்கு திசைகளிலும் பூஜையை முடித்துக் கொண்டு வீட்டுக்குத் திரும்பினன். இப்படி எட்டுத் திக்கிலும் வாலி சுற்றித் திரிந்த போதும் இராவணன் அவன் தோளில்தான் தொங்கிக் கொண்டிருந்தான்.

அல்லாமலும் வாலி ஒரு சமயம் பெண்கள் மத்துக் கடைவது போல் கடலைக் கடைந்து தேவர்களுக்கு அமிர்தம் அளித்தான். இத்தகைய பலசாலியாகும் வாலி. ஆகையால் தான் சுக்ரீவர் இராமருடைய பலத்தை அறிந்து கொள்ள விரும்பினர். ஆனல் ஸ்ரீ இராமருடைய பலம் எப்படிப் பட்டது?

அன்னவன் தன்னை உங்கோன்
அம்பொன்றால் ஆவி வாங்கிப்
பின்னவர்க் கரசு நல்கித்
துணையெனப் பிடித்தான், நங்கள்

மன்னவன் தனக்கு நாயேன்
மந்திரத் துள்ளேன், வானின்
நன்னெடுங் காலின் மைந்தன்
நாமமும் அநுமன் என்றான்

அத்தகைய பலமுள்ள வாலியை, இந்த இராவணேச்வரனை வாலிலே கட்டித் தோளிலே மாட்டி எட்டுத் திசையிலும் சுற்றித் திரிந்த ஒப்பற்ற வீர வாலியை, உங்கள் நாதனாகிற இராமபிரான் ஒரே அம்பினால் வீழ்த்தினார்.

வானர ராஜ்யத்தையும் சுக்ரீவருக்குப் பட்டம் கட்டி, அவரது மனைவி ருமையையும் திருப்பிக் கொடுத்தார். நான் அந்த சுக்ரீவருக்கு மந்திரி அம்மா! அநுமான் என்று எனக்குப் பெயர். நான் வாயு பகவானுடைய புத்திரன். சுக்ரீவருக்கு 70 வெள்ளம் வானரச் சேனை இருக்கிறது. வானரர்கள் உலகெங்கும் உம்மைத் தேடித் திரிகிறார்கள். வாலி புத்திரன் அங்கதனைத் தலைமையாகக் கொண்ட நாங்கள் தென்திசையில் தேடி வந்தோம். ஸம்பாதி என்ற கழுகரசன் சொல்லால் 100 யோசனை விஸ்தீர்ண முள்ள கடலை என் காலால் கடந்து வந்து இலங்கை எங்கும் தேடினேன். உம்மைக் காணும் பாக்கியம் பெற்றேன். சுக்ரீவர் சேனையில் என்னைக் காட்டிலும் பலசாலிகள் எத்தனையோ பேரிருக்கிறார்கள்'' என்று தைரியம் ஊட்டினார் மாருதி.

தேவி 'நீ யார்' என்று கேட்டதற்கு வாலி சரிதத்தை மாருதி கூறுவானேன்?

இராவணனுடைய பலத்தையும், படையையும், சமுத்திர அரணையும் கண்டு தேவி சற்று கலக்க முற்றிருக்கலாம் என்று நினைத்த மாருதி அது திரும்

பொருட்டு இந்த இராவணனை வாலில் கட்டித் திரிந்த வாலியைக் கொல்ல இராமருக்கு ஒரே அம்பு போதுமானதா யிருந்தது. அவருடைய அம்பறுத் தூணியில் இப்படி எத்தனையோ அம்புகள் உறங்கு கின்றன என்று தைரியம் ஊட்டுகிறார்.

அன்றியும் இராமருக்கு உதவியாக, உயிர்த்துணை வராக, தன் போல் எண்ணற்ற தலைவர்களையும், 70 வெள்ளம் படையையும் கொண்ட சுக்ரீவர் வருகிறார் என்று கூறி தேவிக்கு அதிக நம்பிக்கையை உண் டாக்குகிறார். மாருதியின் அறிவின் மேன்மை இதில் விளங்குகிறது.

37. அத்தியாயம்.

மங்கலம் காத்த மணி அணிகள்.

ஸ்ரீ ராமருடைய பலத்தைப் பற்றி மாருதி விரித்துச் சொன்னது நல்லது தான். சீதா தேவியின் புண் பட்ட மனதிற்கு இது மிகுந்த ஆறுதலையும் உற்சாகத்தையும் அளிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

ஆனால் சீதா பிராட்டி ஸ்ரீ இராமருடைய பலத்தை அறியாதவரா?

பிறந்தகத்தின் பெருமையை உடன் பிறந்தா னிடம் கூற வேண்டுமா? ஆனால் எதிரியினால் அப

கரித்துக் கொண்டு வரப்பட்ட தன்னிடம், இராமர் என்ன மனோ பாவத்தோடு இருக்கிறார். இராவணனை வீழ்த்தித் தன்னைச் சிறை மீட்டாலும், மீண்டும் தன்னைப் பத்தினியாக ஏற்றுக் கொள்வாரா? அல்லது நிராகரிப்பாரா? நிராகரித்தால் இத்தனை கஷ்டங்களுக்கிடையே இத்தனை நாள் உயிர் தாங்கியிருந்தது வீணாக அல்லவா முடிகிறது. ஆகையால் தன்னைப் பற்றி இராமருடைய மனோ நிலை எப்படி இருக்கிறதென்று அறிந்து கொள்ள சீதா தேவி அதிக ஆவல் கொள்ளலாம். இதை நன்குணர்ந்த மாருதி மிக நுட்பமான இந்த விஷயத்தைப் பற்றி மிக கௌரவமான முறையில் அறிவிப்பதைப் பாருங்கள்.

"அம்மா! ஒரு நாள் நாங்கள் எங்கள் சுக்ரீவரைச் சூழ்ந்து மதங்க மலையில் நின்று கொண்டிருந்தோம். அப்பொழுது பயங்கரமான தோற்றமுடைய ஒரு அரக்கன் ஆகாய வீதியில் போனான். ஒரு வேளை அவன் இராவணனாயிருக்கலாம் என்று நினைக்கிறேன். அந்தக் கொடிய அரக்கன் மின்னல் கொடி போல் துடித்துத் துவண்டு புலம்புகின்ற ஒரு பெண் மணியைத் தூக்கிக்கொண்டு வேகமாகப் போகக் கண்டோம். ஒரு வேளை அந்த ஸ்திரீ ரத்னம் நீர் தானோ என்று எண்ணுகின்றேன்.

எங்களைக் கண்டவுடன் அந்த அம்மணி என்ன எண்ணினாளோ தெரியாது. தனது உத்தரீயத்தில் சுற்றிய மூட்டை ஒன்றை எங்கள் மத்தியில் நழுவ விட்டாள். போகும் வேகத்தில் அந்த அரக்கன் அதைக் கவனிக்கவில்லை. நாங்கள் அந்த மூட்டையை எடுத்து அவிழ்த்துப் பார்த்தோம். கண்ணைப் பறிக்கின்ற ஆபரணங்களைக் கண்டோம். நாங்கள் அதை என்ன செய்வது? அப்படியே பத்திரமாகக் குகையில் வைத்திருந்தோம்.

பிறகு சில நாளில் இராம லக்ஷ்மணர் மதங்க மலைக்கு வந்தனர். எங்கள் சுக்ரீவரோடு நட்புக் கொண்டனர். நண்பராகிய சுக்ரீவரிடம் எவ்வளவு அன்பாக நடந்து கொண்டாலும் இடை யிடையே இராமர், ஸீதா! ஸீதா! என்று பெருமூச்சு விடுவார். இப்படி அவர் சிந்தை எல்லாம் வேறெங்கேயோ லயித்திருப்பதை நாங்கள் உணர்ந்தோம். எங்களுக்கும் அந்த ஆபரண மூட்டை ஞாபகம் வந்தது. அதைக் குகையிலிருந்து எடுத்து வந்து இராமர் முன் வைத்து அவிழ்த்தோம். அது கிடைத்த வகையையும் கூறினோம்.

ஆபரணங்களைக் கண்டவுடன் இராமர் கண்களில் நீர் பெருகின. இளையவர் லக்ஷ்மணரைப் பார்த்து "குழந்தாய்! இது சீதையின் ஆபரணந்தானா பார்" என்றார். இளையவரும் ஆபரணங்களை நன்றாகப் பார்த்தார். கூறுகிறார்.

> நாஹம் ஜாநாமி கேயூரே
> நாஹம் ஜாநாமி குண்டலே!
> நூபுரம் த்வபி ஜாநாமி
> நித்யம் பாதாபி வந்தநாத்!

அண்ணா! இந்தக் கேயூரங்களும் குண்டலங்களும் யாருடையதோ தெரியாது. இந்த பாதசரம் மட்டும் என்னுடைய தாய் ஜானகியினுடையதுதான் என்று நிச்சயமாக அறிகிறேன். நித்யம் நான் எனது தாய் சீதா தேவியை வணங்கும்போது இந்த பாதசரத்தைக் கண்டிருக்கிறேன். கேயூரத்தையாவது குண்டலத்தையாவது நான் பார்த்ததில்லை என்றார். அபூர்வமான நடத்தையுடைய இந்த இளையவரை நினைக்குந்தோறும் எனக்கு மயிர் சிலிர்க்கிறதம்மா!

இராமரோ அந்த ஆபரணங்களை ஒவ்வொன்ருகக் கையில் எடுத்தார். கண்ணில் ஒத்திஞர். அவரு டைய நிலையை என்னென்று சொல்வேன்?

கொற்றவற் காண்டு காட்டிக்
கொடுத்தபோ தடுத்த தன்மை
பெற்றியின் உணர்த்தற் பாற்றே
உயிர்நிலை பிறிது முண்டே
இற்றை நாள் அளவும் அன்ருய்
அன்று நீ இரித்து நீத்த
மற்றைநல் அணிகள் காணுன்
மங்கலம் காத்த மன்னே!

எங்கெந்த ஆபரணங்கள் எத்தெந்த அங்கங்களில் அணியப் படுமோ அந்தந்த அங்கங்களையும் நினைந்து நினைந்து இராமர் நெருப்பிலிட்ட மெழுகு போல் உருகிஞர். ஆ! அந்த உணர்ச்சியின் வெள்ளத்தை உணரத்தான் முடியுமா? தாயே! நான் அதை வெளிப் படுத்துவது எப்படி? அந்த உம்முடைய ஆபரணங் கள்தான் இராமருக்கு உயிர் நிலையாகி விட்டது. அவற்றையே பார்த்துப் பார்த்து உயிர் தாங்கி யிருக்கிருர்.

அம்மா! பர்த்தாவோடு வாழும் பாக்கிய முடைய குல ஸ்திரிகள் தங்கள் ஆபரணங்களைக் கழற்றிப் போட மாட்டார்கள். இதை அச்சான்யமாக நினைப் பார்கள். ஆனல் நீர் அன்று அந்த ஆபரணங்களைக் கழற்றிப் போட்டதுதான் உமக்கு மங்களம் உண் டாக்கியது என்று உணர்கிறேன். ஆபரணங்களைப் பார்த்துப் பார்த்து இராமர் உயிர் தரித்திருக்கிருர். இதனல் நீர் கழற்றிப் போட்ட ஆபரணந்தான் உம் முடைய தாலியைக் காத்தது என்று மாருதி, லக்ஷ் மணர் சீதையிடம் வைத்திருக்கும் பக்தியையும்,

இராமர் சீதை யிடம் கொண்டிருக்கும் அன்புணர்ச்சியின் வேகத்தையும் வெளிப்படுத்தினர். இராமருடைய இந்த அன்புணர்ச்சியைக் கேட்டதினலே சீதா தேவியின் துக்கச் சிறை சிதறுண்டது. ஆம். தனது பாத்தா தன்னிடமே அன்பு கொண்டிருக்கிருர் என்பதை உணரும் பாக்கியத்தை விட உத்தம பத்தினிகளுக்கு வேறு என்ன வேண்டும்? இப்படியே தன்னுடைய பத்தினி தன்னிடமே மனத்தை ஒப்படைத்திருக்கிருள் என்பதை அறிவதைக் காட்டிலும் புருஷர்கள் அடையக் கூடிய பாக்கியம் வேறு என்னதான் இருக்கிறது? இப்படிப் பரஸ்பரம் மாருத உள்ளன்புடைய தம்பதிகளின் புனித வாழ்க்கையல்லவா இந்த இருள் உலகத்திற்கு ஒளி கொடுக்கிறது. சுழல் மிகுந்த வாழ்க்கைக் கடலுக்குக் கப்பலாகிறது. கரடு முரடான இந்த வாழ்க்கைப் பாதையை எளியதாக்கி இனிமை அளிக்கிறது.

ஆகையால் மாருதியின் வார்த்தைகளைக் கேட்கக் கேட்க சீதா பிராட்டியின் உள்ளமும் உருவமும் கூட மாறிக் கொண்டே வந்த தென்கிருர் கம்பர்.

எய்தவ னுரைத்த லோடும்
　　எழுந்துபே ருவகை ஏற
வெய்துற ஒடுங்கு மேனி
　　வானுற விம்மி ஓங்கி
உய்தல்வந் துற்ற தோவென்
　　றருவிநீர் ஒழுகு கண்ணுள்
ஐய! சொல் அய்யன் மேனி
　　எப்படிக் கறிதி? என்ருள்

இராமருடைய அன்புணர்ச்சியை மாருதி வெளிப்படுத்தக் கேட்ட சீதா பிராட்டி அளவற்ற சந்தோஷம் கொண்டாள். இந்த சந்தோஷத்தால் மெலிந்திருந்த அவள் மேனியும் பூரித்தது. கோடை...

யானது செடி கொடிகளை வற்றி வறண்டு போகச் செய்கிறது. மழையோ வறண்டு மெலிந்து போன வற்றைப் பூரித்துப் பருக்கச் செய்கிறது.

இதைப் போல துன்பமும் துயரமும் மக்கள் உள்ளத்தையும் உடலையும் உலர்த்தி விடுகிறது. சந்தோஷமோ பூரித்துப் பருக்கச் செய்கிறது.

நாதனைப் பிரிந்த துன்பத்தாலும், கொடிய அரக்கர்கள் மத்தியில் சிறைப்பட்ட துயரத்தாலும், ஒடுங்கி மெலிந்திருந்த சீதா பிராட்டியின் மேனி, இராமருடைய அன்பைப் பொழியும் மாருதியின் அமிர்த வர்ஷத்தால் வானளாவப் பூரித்துப் பருத்தது என்கிறார் கம்பர்.

இராமருடைய பராக்ரமத்தையும் அன்பையும் அறியக் கேட்டதால் "நாமும் சிறை மீளும் நல்ல காலம் வந்து விட்டதா" என்று சீதை ஆனந்தக் கண்ணீர் பெருக்கினாள்.

ஆனால் அந்த உத்தமமான நாதனைப் பிரிந்து, குழந்தை லக்ஷ்மணனைப் பிரிந்து, நரகம் போன்ற இலங்கையில் இன்னும் தனித்து சிறையிருக்க வேண்டி யிருக்கிறதே என்று எண்ணும் போது துக்கம் தேவியின் தொண்டையை அடைக்கிறது. ஆகையால் இந்தத் துக்கம் வந்தணுகாதபடி சந்தோஷத்தையே அள்ளி வீசும் இராம சரித்திரத்தையும் அங்க அடையாளங்களையும் சொல்லும்படி மாருதியைக் கேட்கிறாள்.

யானி ராமஸ்ய லிங்கானி
லக்ஷ்மணஸ்ய ச வானர
தானி பூய: ஸமா சக்ஷ்வ
ந மாம் சோக: ஸமாவிசேத்

வானரோத்தமரே! இராம லக்ஷ்மணருடைய அங்க அடையாளங்களைப் பற்றி மீண்டும் சொல்லும். என்னை இதனால் துன்பம் தொடரா திருக்கட்டும்.

கீத்ருசம் தஸ்ய ஸம்ஸ்தானம் ?
ரூபம் ராமஸ்ய கீத்ருசம் ?
கதமூரு ? கதம் பாஹூ ?
லக்ஷ்மணஸ்ய ச சம்ஸ மே !

இராமருடைய அங்கங்களின் மேன்மை எப்படி இருக்கிறது? அவருடைய வடிவம் எப்படி இருக்கிறது? இராமருடைய தோள்களும் தாள்களும் எப்படி இருக்கின்றன? என் குழந்தை லக்ஷ்மணனுடைய அங்க அடையாளங்கள் எப்படி? இவை எல்லாம் விரித்துச் சொல்லும் என்று மனமுருகிய சீதா பிராட்டி மனம் விட்டுக் கேட்டாள்.

38. அத்தியாயம்.

ஆனந்தக் கண்ணீர்.

இராமரது திவ்ய மங்கள விக்ரகத்தையும் திவ்ய சரித்திரத்தையும் பற்றிக் கேட்க இன்றைக்கும் மக்களுக்குப் பிரிய மிருக்கிறது. சொல்லவும் அறிவாளிகளுக்கு அதிகப் பிரிய மிருக்கிறது.

ஆனால் இராமரைப் பற்றி காது குளிரக் கேட்க சீதா பிராட்டியைக் காட்டிலும் அதிகப் பிரிய முள்ள

வர் யார் இருக்கக் கூடும்? அல்லது இராமரைப் பற்றிச் சொல்ல மாருதியைக் காட்டிலும் அதிக உற்சாக முள்ளவர் யாரிருக்கக் கூடும்?

ஆகையால் நம்பிக்கையோடும் அன்போடும் கேட்கும் சீதைக்கு இராமரைப் பற்றி மாருதி உற்சாகத்தோடும் பணிவோடும் சொல்லுகிறார்.

“அம்மா! அன்றலர்ந்த செந்தாமரையை வென்று பொலிந்த திருமுக மண்டலம். கருணை ததும்புகின்ற தாமரைக் கண்கள். உள்ளத்தில் கிளர்ந்தெழும் ஆனந்த வெள்ளம் பொங்கித் ததும்பி வாய் வழியே வழிவது போல் மோகன புன் சிரிப்புத் தவழும் இதழ்கள். வெளேரென்று வெளுத்த, முத்துக் கோவை போன்ற பற்கள். மலைபோல் பருத்துத் திரண்டு, நாண் தழும்புண்ட தோள்கள். முழங்கால் வரை தொங்கும் நீண்ட அழகிய கைகள். தாமரையில் வசிக்கும் லக்ஷ்மியும் விரும்பும் விசால மான மார்பு. திரண்டுருண்ட துடைகள். அழகிய தாமரைப் பாதங்கள். மறுவற்ற சந்திரன் போன்ற நகங்கள். அறுகம்புல் போல் பச்சைப் பசேலென்ற நிறம். மத்தகஜம் போன்ற அழகிய நடை. சமுத்திரம் போல் கம்பீரமான தோற்றம்.

உலகத்தை எல்லாம் மகிழ்விக்கும் சந்திர கிரணம் போன்ற வசீகரம். ஸர்வ ஜீவராசிகளிடத்திலும் அன்பு பொங்கும் உள்ளம்.

இராமர் சூரியனைப் போல் சக்தி படைத்தவர். ஆனால் பூமியைப் போல் பொறுமை மிகுந்தவர். பிரகஸ்பதியைப் போல் புத்தி படைத்த மேதாவி. ஆனால் குழந்தையைப் போல் கபடற்ற எளிமை உடையவர். மிக்க சாமர்த்திய முடையவர். ஆனால் அதிக அடக்க முடையவர்.

நூல்களில் வல்லவர். ஆயுதங்களில் தேர்ந்தவர். அரசியலில் நிபுணர். அறிவில் சிறந்தவர். ஆனால் பெரியோர்களைப் பூஜிப்பவர். மரியாதையுடையவர். ஒழுக்கத்தில் கருத்துடையவர். பிரம்ம சரிய விரதத்தில் நிலை நிற்பவர்.

ரக்ஷிதா ஜீவ லோகஸ்ய
ஸ்வஜனஸ்யாபி ரக்ஷிதா
ரக்ஷிதா ஸ்வஸ்ய வ்ருத்தஸ்ய
தர்மஸ்ய ச பரந்தப :

தாயே! சூரியனை எதிர்த்து யார் அணுக முடியும்? இதைப் போல் யாராலும் எதிர்த்து அணுக முடியாத பிரபாவ முடையவர் இராமர். ஆனால் எல்லா ஜீவர்களையும் ரக்ஷிக்க வேண்டும் என்ற விசாலமான இருதயமுடையவர். அதே சமயத்தில் தன்னைச் சேர்ந்தவர்களைப் பாதுகாப்பதிலும் ஊக்க முடையவர். தன் நடத்தையிலோ கண்ணுங் கருத்துமா யிருப்பவர். தர்மத்தில் உயிர் வாழ்பவர்.

இளையவர் லக்ஷ்மணரோ குணத்திலும் உருவத்திலும் ஆற்றலிலும் இராமருடைய பிரதி பிம்பம் போன்றவர். நிறத்தினால் தான் பேதம் காணலாம். லக்ஷ்மணர் தங்கமலை. இராமரோ மரகத மலை.

உம்மைத் தேடிக்கொண்டு வரும் பொழுதுதான் இந்த வீரர்கள் இருவரும் எங்களைச் சந்தித்தார்கள். உம்மைப் பிரிந்த சோகத்தால் பூகம்பத்தால் நடுங்கும் மலையைப் போல் இராமர் சலித்திருக்கிறார். எதிலும் அவருக்கு இன்பமில்லை.

இராமர் சீக்கிரமே உம்மைக் காண்பார். பந்து மித்ர சேனைகளோடு இராவணனை வீழ்த்தி இராமர் உம்மைச் சிறை மீட்பதைச் சீக்கிரமே காண்பீர்.

அந்த வீர முள்ள இராமர் உமக்கு க்ஷேமம் சொன்னார். தமயனுக்கு பணிவிடை செய்வதையே தெய்வ பூஜையாகக் கொண்ட அந்த லக்ஷ்மணர் உமக்கு க்ஷேமம் சொன்னார்.

நல்ல வேளையாக நான் உம்மைக் கண்டேன். 100 யோசனை விஸ்தீர்ண முள்ள சமுத்திரத்தைக் கடந்து வந்து இலங்கை எங்கும் தேடியது வீணாக வில்லை. அல்லாமலும் உம்மை தேடிக் கண்டு பிடித்த புகழ் என்றென்றைக்கும் எனக்கு உண்டா கப் போகிறது.

உம்மைப் பற்றிய சந்தோஷ சமாசாரத்தைக் கேட்க ஆவல் கொண்டு, கடற் கரையில் ஒற்றைக் காலில் நின்று தவம் புரியும் எண்ணற்ற வானரர் களுக்கு உம்முடைய செய்தியைக் கூறி தாபத்தை நீக்கப் போகிறேன். இந்த சந்தோஷ சமாசார மின்றி நான் வெறுங் கையோடு திரும்பினால் வானரர் கள் தற்கொலை செய்து கொள்ளத் தயாராக இருக்கி றார்கள். அவர்களுக் கெல்லாம் உம்முடைய செய்தி உயிர்ப் பிச்சை அளிக்கப் போகிறது.

கோடையால் வாடிய பயிர்போல், உமது பிரி வால் தாப முற்றிருக்கும் இராமருக்கு உமது இனிமை யான செய்தி அமிர்த வர்ஷம் போல் புத்துயிரளிக்கப் போகிறது.

உம்முடைய செய்தியைக் கேட்டவுடன் எங்கள் சுக்ரீவ மஹாராஜா இராம லக்ஷ்மணரோடும், 70 வெள்ள வானரச் சேனைகளோடும் இலங்கையில் வந்து குதிக்கப் போகிறார்.

தாயே! இனி நான் என்ன செய்ய வேண்டும், எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று கட்டளை

இடும் என்று மாருதி உணர்ச்சியோடும், உற்சாகத்தோடும், வினயத்தோடும் கூறினர்.

இவை யாவும் ஆழ்ந்த கவனத்தோடு கேட்ட சீதா பிராட்டி, மாருதியையும் அவரது வார்த்தைகளையும் முற்றிலும் நம்பினுள். இவர் இராம தூதரே என்று உணர்ந்தாள். அளவற்ற சந்தோஷம் கொண்டாள். ஆனந்தக் கண்ணீரைப் பெருக்கினுள்.

செம்மையும் வெண்மையும் கலந்த விசாலமான கண்களுடைய சீதாப் பிராட்டியின் அழகிய முகமானது, அப்பொழுது ராகு கிரஹணத்திலிருந்து விடுதலையடைந்த பூர்ண சந்திரனைப் போல் மிகவும் பிரகாசித்தது.

39. அத்தியாயம்.

வாழி மணி ஆழி

இருள் நீங்கி ஒளி வளர்வது போல் சீதா பிராட்டியின் அகத்திலும் முகத்திலும் சந்தேகம் நீங்கி சந்தோஷம் வளர்வதைக் கண்டு மாருதி சந்தோஷப் பட்டார்.

ஒவ்வொரு ஜீவனும் சந்தோஷம் அடையவே பிரயத்தனப்படுகிறது. தானடையும் சந்தோஷத்தையும் பலருடன் அனுபவிக்கவே விரும்புகிறது.

அமிர்தமே கிடைத்தாலும் தனித்துச் சாப்பிடுவதில் ருசியில்லை. பலருடன் கலந்து சாப்பிடுவதில் ஒரு தனி இன்பம் இருக்கிறது. ஆகையால் பிறர்க்கும் சந்தோஷம் அளிப்பதே ஜீவனுடைய இயற்கையான குணம்.

அவசியமின்றி பிறருக்குத் துன்பத்தை உண்டாக்குவதே பாபம். நியாயமான முறையில் பிறருக்குச் சந்தோஷம் உண்டாக்குவதே புண்ணியம்.

பிறருக்கும் சந்தோஷம் உண்டாக்குபவனே பூரண சந்தோஷத்தை அடைகிறான். பிறர் துன்புற, தான் மட்டும் இன்பம் அடைய விரும்புகிறவன் சந்தோஷத்தின் எல்லையை அடைவதில்லை.

அறிவாளிகளோ பிறருக்குச் சந்தோஷம் உண்டாக்குவதையே தங்களுக்குப் பரம சந்தோஷமாகக் கொள்கிறார்கள்.

சிறந்த அறிவாளியாகிய மாருதி, சீதா பிராட்டி சந்தேகமும் துன்பமும் நீங்கி சந்தோஷம் அடைவதைக் கண்டு சந்தோஷப்படுவது இயற்கை யல்லவா? இதை இன்னம் விருத்தி செய்து கொள்ள விரும்புவதும் சகஜமல்லவா ? ஆகையால் தேவிக்குப் பூரண நம்பிக்கையையும் சந்தோஷத்தையும் அளிக்கக் கூடிய இன்னும் சில விபரங்களைக் கூறுகிறார்.

" தாயே ! உமக்கு ஞாபக மூட்டும்படி ஸ்ரீராமச்சந்திரர் சில அடையாளங்களை என்னிடம் சொன்னார்.

அம்மா! தாய் தந்தையருடைய கட்டளையின்படி இராமர் காட்டிற்குப் புறப்படும்போது, வனவாசம் செய்வது உமக்கு சிரமமாக இருக்குமென்று எண்ணி, கோசலை முதலான தாய்மாருக்குப் பணி

விடை செய்துகொண்டு அயோத்தியிலேயே இருக்கும் படி உம்மிடம் கூறினாராம். அப்பொழுது

உடுத்த துகி லோடுமுயிர் உக்கவுடலோடும்
எடுத்தமுனி வோடுமயல் நின்றதும் இசைப்பாய்

உமக்கு அசாத்தியமான கோபம் வந்து விட்டதாம். உயிரே போய் விட்டது போல் சோகத்தை அடைந்து விட்டீராம். மறு நாளைக்கு ஒரு ஆடை வேண்டுமே என்று கூட நினைக்காமல் உடுத்த துணியோடு நீர் அவருக்கு முன்னால் புறப்பட்டு விட்டீராம். மறக்க முடியாத இந்தக் காட்சியை, ஆனால் அந்தப் புரத்தில் நடந்த இந்த ரகஸியத்தை உமக்கு அடையாளமாகச் சொல்லச் சொன்னார்.

இப்படி அந்தப் புரத்தை விட்டு புறப்பட்டு கோட்டை வாயில் கூடக் கடக்க வில்லை.

ஆண்டநகர் ஆரையொடு
வாயிலக லாமுன்
யாண்டையது கானென
இசைத்ததும் இசைப்பாய்

இதற்குள்ளாக, காடு எங்கே யிருக்கிறது என்று கேட்டீராம். நாட்டிலே நாட்டமில்லை. நாதன் காட்டிற்குப் போகிறார் என்றவுடன் காட்டிலே நாட்டத்தை நாட்டி விட்ட உம்முடைய தீவிரம் இராமருடைய இருதயத்தில் பதிந்திருக்கிறது. ஆகையால் இதையும் ஞாபகப்படுத்தச் சொன்னார். இன்னும் பல உண்டு, ஆனால்—

மீட்டுமுரை வேண்டுவன
இல்லையென மெய்ப்போர்
தீட்டியது தீட்டரிய
செய்கையது செவ்வே

நீட்டிதென நேர்ந்தனன்
எனு நெடிய கையால்
காட்டினன் ஓர் ஆழியது
வானுதலி கண்டாள்

வாயினால் இன்னும் பல அடையாளங்களைச் சொல்வது அவசியமில்லை. கண்ணால் கணட்வுடன் நீர் அறிந்து கொள்ளக்கூடிய பேரடையாளம். அற்புத சக்தியுடையது. இராம நாமம் பொறிக்கப் பட்டது. இந்தக் கணையாழியை உம்மிடம் கொடுக்கச் சொன்னார்'' என்று மாருதி தனது நீண்ட கையை நீட்டிக் கணையாழியைக் காட்டி—

வானரோஹம் மஹா பாகே!
தூதோ ராமஸ்ய தீமத:
ராம நாமாங் கிதம் சேதம்
பச்ய தேவ்யங்கு லியகம்

அம்மா! நான் ஒரு வானரன் தான். பாக்கிய முள்ள தாயே! உம்முடைய நாதன், அந்த மேதாவி யாகிற இராமருக்குத் தூதனாகத்தான் வந்திருக்கி றேன். அவருடைய கணையாழியை இதோ பாரும். அவருடைய நாமம் பொறிக்கப்பட்டிருக்கும் இந்தப் பேரடையாளத்தை இதோ பாரும் என்று காட்டினார்.

கண்டாள் சீதை கணையாழியை. இராமரையே கண்டது போல் ஆனந்தம் கொண்டாள். ஆகா! என்ன சந்தோஷம்! என்ன குதூகலம்! என்ன பூரிப்பு! அந்த உணர்ச்சியை எப்படி வெளியிடுவது?

இழந்த மணி புற்றர
வெதிர்ந்ததென லானாள்

பழந்தன மிழந்தன
படைத்தவரை ஒத்தாள்
குழந்தையை உயிர்த்த மல
டிக்குவமை கொண்டான்
உழந்து விழி பெற்றதோர்
உயிர்ப் பொறையும் ஒத்தாள்

ஸர்ப்பம் வெகுநாள் ஜீவித்திருக்கிறது. அப்பொழுது நாக ரத்தினம் உண்டாகிறது. ரத்தினம் இருக்கும் போது இதற்குக் கண் தெரிவதில்லையாம். கக்கிவிட்டுத்தான் ஆகாரம் தேடவேண்டும். அப்பொழுது ரத்தினம் தவறிப் போகலாம். யாராவது மறைத்துவிடலாம். இப்படி எந்தக் காரணத்தினுலாவது ரத்தினத்தை இழந்து விட்டால், மீண்டும் உயிர் வாழாது. அதைக் கண்டுபிடிக்கவே அலையும். இப்படி ரத்தினத்தை இழந்து தவிக்கும் ஸர்ப்பமானது மீண்டும் அதைக் கண்டுபிடித்து விட்டால் என்ன சந்தோஷத்தை அடையும்? அந்த சந்தோஷத்தை இப்பொழுது சீதாபிராட்டி அடைந்தாள்.

பரம்பரையாக வரும் குல தனத்தை ஒருவன் இழந்துவிட்டால் மிக்க வேதனை அடைவானல்லவா? மீண்டும் அதைக் கண்டுபிடித்து விட்டால் என்ன சந்தோஷம் அடைவான்? அந்த சந்தோஷத்தை சீதை அடைந்தாள்.

குழந்தை பெறுவதை இந்த தேச ஸ்திரீகள் ஒரு பாக்கியமாக கருதுகிறுர்கள். மனைவியாகி விடுவது பெரிய மரியாதையல்ல. தாயாகிவிடுவது தான் ஸ்திரீயின் லக்ஷியபூர்த்தி என்று நினைக்கிறுர்கள். குழந்தை இல்லாவிட்டால் குறைவாக நினைக்கிறுர்கள். அவளை மலடி மலடி என்று அழைக்கிறுர்கள். இப்படி நெடுநாள் மலடியாகக் குறைவடைந்தவளுக்கு தங்க விக்ரகம் போல் ஒரு குழந்தை பிறந்து

விட்டால் எவ்வளவு சந்தோஷமாக இருக்கும்? அந்த சந்தோஷத்தை சீதை அடைந்தாள்.

வாழ்க்கைக்குக் கண் தான் பிரதானம். கண்ணில்லாதவனுக்கு ஒரே இருள் தான். கண் ஒளி இன்றி இப்படி அந்தகாரத்தில் கஷ்டப்பட்ட ஒருவனுக்கு திடீரென்று கண் தெரிந்து விட்டால் எவ்வளவு சந்தோஷமாய் இருக்கும்? அந்த சந்தோஷத்தை சீதை அடைந்தாள்.

வாங்கினள் முலைக் குவையில்
வைந்தனள் சிரத்தால்
தாங்கினள் மலர்க் கண்மிசை
ஒத்தினள் தடந்தோள்
வீங்கினள் மெலிந்தனள்
குளிர்ந்தனள் வெதுப்போ(டு)
ஏங்கினள் உயிர்த்தனளி
தின்னதென லாமே!

மாருதி கையிலிருந்த கணையாழியை ஆவலோடு வாங்கினாள். மார்போடணைத்தாள். தலைமீது வைத்தாள். கண்ணில் ஒத்தினாள். இதற்குள் உடம்பெல்லாம் பூரித்தாள். இப்படியே இளைத்தாள். ஏன்? அந்த நாதனைப் பிரிந்திருக்கிறோமே என்று. ஆனால் மீண்டும் தன்னை அவரோடு கூட்டி வைக்கும் கணையாழியால் உள்ளமே குளிர்ந்தாள். இந்தப் பிரிவு இன்னும் எத்தனை நாளைக்கோ என்று தாபம் அடைந்தாள். இதனால் ஏக்கத்தோடு பெருமூச்சு விட்டாள். மாறி மாறி வரும் தேவியின் மனோ நிலையையும் உடல் நிலையையும் எப்படி வருணிப்பது?

கணையாழியை மோந்து பார்க்கிறாள். மார்போடணைக்கிறாள். நீர் ததும்புகின்ற கண்களால் நெடு

நேரம் அதையே உற்றுப் பார்க்கிருள். ஏதோ சொல்ல நினைக்கிருள். ஆனுல் வார்த்தை புறப்பட வில்லை. விம்முகின்ருள். வார்த்தையை விழுங்கு கின்ருள். ஆனுல் மின்னல் போல் வெளுத்திருந்த சீதையின் மேனி கணையாழி பட்டவுடன் பொன் மயமாகி விட்டது.

“இது என்ன பட்டதெல்லாம் பொன்னுக்கும் ஸ்பர்ச வேதிகையோ?” என்கிருர் கம்பர். ஆ! இதன் அற்புதச் செயல் தான் என்ன?

இருந்துபசி யாலிடர் உழந்தவர்கள் எய்தும்
அருந்துமமு தாகியது அறத்தவரை அண்மும்
விருந்துமென லாகியது வியுமுயிர் மீளும்
மருந்துமென லாகியது வாழிமணி ஆழி

பசியால் துன்புற்றவருக்கு சாப்பிடத் தக்க சாப் பாடு கிடைத்தது போலிருந்தது. விருந்தாளிகளை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கும் தர்மிஷ்டர் களுக்கு விருந்தாளி கிடைத்தது போலிருந்தது. இறந் தவரைப் பிழைப்பிக்கும் சஞ்சீவி போலுமிருந்தது அந்த மணிகள் பதித்த கணையாழி.

இப்படி உணர்ச்சியின் வெள்ளத்தில் மிதந்த சீதா பிராட்டி கண்ணீர் மாலை மாலையாக மார்பில் புரள, சிறிது சிறிதாக பேசும் சக்தி பெற்ருள். தனக்கு இந்தப் பேரின்பத்தை அளித்த மாருதியை வாயார மனமார வாழ்த்துகிருள்.

மும்மையாம் உலகம் தந்த
முதல்வர்க்கும் முதல்வன் தூதாய்
செம்மையால் உயிர்தந் தாய்க்குச்
செயலென்னுல் எளிய துண்டே

அம்மையாய் அத்தனாய
அப்பனே! அருளின் வாழ்வே!
இம்மையே மறுமைதானும்
நல்கினை இசையோ டென்றாள்

மூன்றுலகம் படைத்தவர் பிர்மா. இவருக்கும் முதல்வர் பகவான். அந்தச் செந்தாமரைக் கண்ணனுக்கு தூதனாய் வந்து, சாகும் தருவாயிலிருந்த எனக்கு உயிர் தந்தீர். இத்தகைய பேருபகாரம் செய்த உமக்கு நான் என்ன பிரதியுபகாரம் செய்யப் போகிறேன்? நீரே எனக்கு தாயும் தந்தையும். தாய் தந்தையருக்கு நாம் என்ன கைம்மாறு செய்து விட முடியும்? பிறருக்கு உபகாரமே செய்யும் இரக்க குண முடைய, ஐயனே! எனக்கு இம்மையும் மறுமையும் கீர்த்தியும் அளித்தீர்.

பாழிய பணைத்தோள் வீர!
துணையிலேன் பரிவு தீர்த்த
வாழியர் வள்ளலே! யான்
மறுவிலா மனத்தேன் என்னின்
ஊழியோர் பகலா யோதும்
ஆண்டெலாம் உலகமேழும்
ஏழும்வீ வுற்ற ஞான்றும்
இன்றென இருத்தி என்றாள்

தோளாற்றலுடைய மாருதி! தவித்துத் தவித்த என் துன்பத்தைப் போக்கிய வள்ளலே! நான் குற்ற மற்ற மனத்தோடிருப்பது உண்மையானால், எனக்குச் சந்தோஷம் அளித்த நீர், உலகமே அழிந்தாலும் அழியாமல் இன்றைக்கிருப்பது போலவே என்றைக்கும் நித்ய சிரஞ்சீவியாக வாழ வேண்டும் என்று வாழ்த்தி வரமளித்தாள்.

40. அத்தியாயம்.

ஆளுக்கொரு கை அள்ளிக் குடித்தால்

இராமருடைய கணையாழியைக் கண்டதால் மாருதியிடம் பூரண நம்பிக்கை கொண்டாலும் சீதா பிராட்டியின் உள்ளத்தில் ஒரு சிறிய சந்தேகம் இருக்கிறது. ஆகையால்

ஐய! நீ அளப்பரும் அளக்கர் நீந்தினை
எய்திய தெப்பரி சியம்புவா யென்றாள்

மாருதி! சின்னஞ் சிறு உருவமாகக் காணப்படும் நீர், நூறு யோசனை விஸ்தீரணமுள்ள பயங்கரமான கருங்கடலை எப்படிக் கடந்து வந்தீர்? இந்த ஆச்சர்யமான காரியம் எப்படி சாத்யமாயிற்று? என்று கேட்டாள். மாருதி உடனே,

சுருங்கிடை யுன்னொரு
துணைவன் தூயதாள்
ஒருங்குடை உணர்வினோர்
ஓய்வின் மாயையின்
பெருங்கடல் கடந்தனர்
பெயரும் பெற்றிபோல்
கருங்கடல் கடந்தனன்
காலினால் என்றான்

தாயே! உம்முடைய ஒப்பற்ற நாதனுடைய பரிசுத்தமான பாதத்தில் மனத்தை பதித்த ஏகாக்ர சித்த முடையவர்கள் அறியாத மாயையின் கடல்களைக் கடந்து முக்திக் கரை சேர்ந்து விடுகிறார்களே!

இது என்ன பெரிய காரியம்? ஆகையால் நானும் இந்தக் கடலை அனாயாஸமாகவே காலால் கடந்து வந்தேன்" என்றார். பின்னும் தேவியின் சந்தேகம் தீரும் பொருட்டு விச்வரூபம் எடுத்து நின்றார்.

சுட்டினன் நின்றனன்
தொழுத கையினன்
விட்டுயர் தோளினன்
விசும்பின் மேக்குயர்
எட்டரு நெடுமுக
டெய்தி நீளுமேல்
முட்டுமென் றுருவொடு
வளைந்த மூர்த்தியான்

ஆகாயம் அளாவிய உருவம். தோள்கள் மேலே வளர்ந்து கொண்டே போகின்றன. இன்னும் மேலே போனால் வான முகட்டில் முட்டு மென்பது போல் உடல் வளைந்து நிற்கிறார். கை கூப்பிக் கொண்டிருக் கிறார். மேரு கிரியை மின் மினிகள் மொய்த்தது போல மாருதியின் உடலைச் சுற்றி நக்ஷத்திரக் கூட்டங் கள் மொய்த்துக் கொண்டிருக்கின்றன.

கண்டாள் சீதா தேவி. ஆனால் மாருதியின் பாதங் களையே முற்றிலும் பார்க்க முடிய வில்லை. சந்தேகம் தீர்ந்தது. இனி அரக்கர்கள் அழிந்தார்கள் என்று சந்தோஷங் கொண்டாள். "ஆனால் இந்த விச்வ ரூபத்தைக் காண பயமாயிருக்கிறது. இதை மாற்றி, பழைய உருவத்தைக் காட்டும்" என்று கேட்டுக் கொண்டாள். அப்படியே மாருதியும் பழைய வடிவானார்.

சீதா தேவி கண்ணில் ஆனந்த நீர் ததும்பப் புகழ்ந்து கூறுகிறாள்.

மாருதி! உம்முடைய உருவத்தின் பெருமையைக் கண்ட பிறகு, இந்தக் கடலைக் கடப்பது ஒன்றும் பெரியதாகத் தோன்றவில்லை. இந்த மண்ணையும் விண்ணையும் பெயர்த்தெடுப்பதும் உமக்குப் பெரிதல்ல.

உலகெல்லாம் தாங்கும் ஆதிசேஷனை ஒரு கையால் பறித்தெடுப்பதும் உமக்குப் பெரிதல்ல. கடலில் நீர் நடந்து வருவதும் பெரிதல்ல. கடந்து வருவதும் பெரிதல்ல.

ஆழி நெடுங்கை ஆண்டகை தன்
அருளும் புகழும் அழிவின்றி
ஊழி பலவும் நிலை நிறுத்தற்
கொருவன் நீயே உளையானாய்!
பாழி நெடுந்தோள் வீரா! நின்
பெருமைக் கேற்ப பகையிலங்கை
ஏழு கடற்கும் அப்புறத்த
தாகாதிருந்த திழிபன்றோ?

மாருதி! இராமருடைய அருளையும் புகழையும் நிலைநிறுத்த நீர் ஒருவரே போதும். இந்த இலங்கை ஏழு கடற்கும் அப்பாலிருந்திருந்தால் உம்முடைய பெருமை இன்னும் அதிகமாகவே வெளியாகியிருக்கும்.

என்னே! உமது அறிவு, ஆற்றல், அடக்கம், தெளிவு, தேற்றம், நெறி, நீதி, நினைவு, செயல், உருவம் இவற்றை ஆலோசித்தால் பிரம்மாதி தேவர்களும் உமக்கு நிகராவரோ?

இனி எனக்குக் கவலை இல்லை. இன்றே மரணம் வந்தாலும் பாதகம் இல்லை. கொடிய அரக்கர்கள் அழிந்தார்கள். நானும் சிறை மீண்டேன். நாதனை

யும் கண்டேன். புகழும் கொண்டேன். இனி என்ன குறை என்று மகிழ்வடைந்தாள். அப்பொழுது—

அண்ணற் பெரியோன் அடி வணங்கி
அறிய உரைப்பான், அருந்ததியே!
வண்ணக் கடலின் இடைக் கிடந்த
மணலில் பலரால் வானரத்தின்
எண்ணற் கரிய படைத் தலைவ
ரிராமர்க் கடியா ராஅவர் தம்
பண்ணைக் கொருவன் எனப் போந்தேன்
ஏவக்கடவ பணி செய்வேன்

மாருதி தேவியை வணங்கி விண்ணப்பிக்கிறார். தாயே! அருந்ததிக்கு நிகரான அம்மையே! சமுத்திரத்தின் மணலை எண்ணினாலும் எண்ணலாம். எங்கள் வானரத் தலைவர்களின் எண்ணிக்கையைக் கணக்கிட முடியாது. இத்தனைபேரும் இராமருக்கு ஏவல் செய்யத் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களில் நான் கடையேன். இட்ட வேலையைச் செய்பவன். இப்படி எழுபது வெள்ளம் சேனை இருக்கிறது. ஆளுக்கொரு கை ஜலம் அள்ளிக் குடித்தால் சமுத்திரத்தில் ஜலம் இருக்காது. நீர் இருக்குமிடம் இதுவரை தெரியாமலிருந்ததால் இலங்கை இன்னும் அழியாமலிருக்கிறது என்று வானரத் தலைவர்களின் பிரபாவத்தை விளக்கி தேவிக்கு சந்தோஷம் உண்டாக்கினார்.

41. அத்தியாயம்.

சொல்லினுல் சுடுவேன்.

ஸீதா தேவி ஆனந்த பரவசமாய் நிற்கிருள். மீண்டும் மாருதி கூறுகிருர். அம்மா!

த்ருஷ்ட்வா பலம் வா புஷ்பம் வா
யத்வான்யத் ஸுமனோஹரம்
பஹுசோ ஹா ப்ரியேத் யேவம்
ச்வஸந் த்வா மபிபாஷதே

"மனதுக்கினிய புஷ்பத்தையோ, பழத்தையோ, வேறு எந்தப் பொருளையோ இராமர் கண்டால், ஹா பிரியே! என்று பெருமூச்சு விட்டு பிரலாபித்து உம்முடனேயே பேசுகிருர். உமது பிரிவினுல் நாதன் அடைந்திருக்கும் நிலைத்தன்மையை வாயால் கூறிவிட முடியாது" என்ருர்.

ஹிருதயத்தைத் தொடும் இந்த வார்த்தைகள் தேவியைக் கலக்கி விட்டன. "மாருதி! உம்முடைய வார்த்தை அமிர்தம் போலிருக்கிறது. தாபக் கடலில் தத்தளிக்கும் என் அந்தராத்மாவை குளிரச் செய்கிறது. ஆனுலும் உம்முடைய வார்த்தை விஷம் கலந்த அமிர்தம் போலிருக்கிறது. இராமருக்கு என் நினைவிருக்கிறது; வேறு நினைவில்லை என்பது அமிர்தம் போலிருக்கிறது. ஆனல் அவர் ஓயாமல் துக்கப் படுகிருர் என்ற வேதனை விஷம் போல் என்னைத் துன் புறுத்துகிறது. கயிற்றைக் கட்டி இழுப்பது போல் விதியானது ஒரு சமயம் மனிதனை மகத்தான ஐசுவரியத்தால் மூடுகிறது. ஒரு சமயம் துன்பத்தில் தள்ளு கிறது. இந்த விதியை யாரும் கடக்க முடியாது

போலும். மாருதி! அறிவில் சிறந்த இராமரும், சிறந்த மேதாவியான லக்ஷ்மணரும், நானும் துக்க சோகத்தை அடைவதைப் பாரும். என்றுதான் இதற்கு முடிவோ? இந்த இலங்கையில் வந்து என்றுதான் அவர் என்னை சிறை மீட்பாரோ?

மிற்க, இராவணன் எனக்கு ஒரு வருஷ காலம் அவகாசம் கொடுத்தான். இதில் பத்து மாதம் கழிந்து போயிற்று. இராவணனுடைய தம்பி விபீஷ ணர், என்னைக் கொண்டு போய் இராமரிடம் விட்டு விடும்படி எவ்வளவோ சொல்லியும் இராவணனுக்கு இது ருசிக்க வில்லை. அந்த விபீஷணருடைய மூத்த மகள் அனலா என்பவள் என்னிடம் தாய் போன்ற அன்புடையவளாயிருக்கிருள். அவளால் இவற்றை உணர்ந்தேன். வானரோத்தமரே! சீக்கிரமே என் நாதன் என்னை அடைவாரென்பதில் சந்தேக மில்லை. எப்படி?

அந்த ராத்மா ஹி மே சுத்தி:
தஸ்மிம்ச் பஹுவோ குணா:!

என் உள்ளம் துல்லியமாக இருக்கிறது. அசைக்க முடியாத நம்பிக்கையும் தைரியமும் இருக் கிறது. இத்தனை தொல்லைகளும் என்னைக் கலக்கி விட வில்லை. இப்படி ஹிருதயம் நிம்மதியாக இருப் பதே நல்ல அறிகுறி. இதனல் நன்மையே ஏற்படும்.

பதினையிரம் அரக்கர்களை ஜனஸ்தானத்தில் தனியே நின்று அழித்தவரைக் கண்டு யார்தான் பயப்பட மாட்டார்கள்? அந்த இராமரை எந்தக் கவலையும் எந்தத் துன்பமும் அசைத்து விட முடியாது. அவருடன் நெருங்கிப் பழகின நான் அவருடைய பிர பாவத்தை அறிந்திருக்கிறேன். சூரியன் தனது கிரணங்களால் ஜலத்தை வற்றடிக்கிருர். இராம சூரியன் பாணங்களாகிற கிரணங்களால் ராக்ஷஸ

சமுக ஜலத்தை வற்றடிக்கப் போகிறார். இது நிச்சய மானாலும் அவர் இங்கு வருகிற வரை, இராவண சம்ஹாரம் ஆகிற வரை, இராவணனுடைய கொடிய வார்த்தைகளையும் இராக்ஷஸிகளுடைய கொடிய செய்கைகளையும் நான் சஹிக்கவேண்டுமே!" என்று தேவி பல பல வென்று கண்ணீர் உகுத்தாள்.

சந்தோஷ சமாசாரம் சொல்லப் போய், மாருதி சீதையின் உள்ளத்திலிருந்த துன்பக் கனலையும் எழுப்பி விட்டாரல்லவா? ஆகையால் சமாதானம் செய்கிறார்.

"தாயே! நான் இங்கிருந்து போய் சொல்ல வேண்டியது தான் தாமதம். இதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற இராமர், சேனைகளோடு உடனே இலங்கையில் வந்து குதிக்கப் போகிறார். சிறிது காலமே நீர் இங்கு இருக்க வேண்டி யிருக்கும். அல்லாமலும் எனக்கொரு யோசனை தோன்றுகிறது. இதனால் உடனே உமது துயர் நீங்கும்.

பொன்றினி பொலன் கொடியென்
மென்மயிர் பொருந்தி
துன்றிய புயத்தினி திருக்க
துயர் விட்டாய்
இன்றயில் விளக்க வோ
ரிமைப்பி னிறை வைகும்
குன்றிடை புனைக்கொடு
குறிப்பெனிடை கொள்ளேன்

"தாயே! மெல்லிய மயிர்கள் அடர்ந்து மிருதுவா யிருக்கும்-எனது தோளில் நீர் சிறிது நேரம் அமர்ந்து கொள்ளும். தாலாட்டுவது போல் உமக்கு இனிமையாகத் தூக்கம் வரும்படி சுகமாகவும் சுபமாகவும் ஒரே தாண்டில் இராமர் இருக்கும் மலையில்

உம்மைக் கொண்டு போய்ச் சேர்த்து விடுகிறேன். இடையே ஒரு நிமிஷமும் தங்க மாட்டான். அரக்கர்கள் அறிந்து தொடர்ந்தால் அவர்களை சொறுக்கி என் கோபத்தை முடித்துக் கொண்டு போகிறேன். தாயே! எனக்கு யாராலும், எதனாலும் அழியாத வரம் இருக்கிறது. உம்முடைய நிலைமையைக் கண்ணாரக் கண்டும் எப்படி நான் வெறுங் கையோடு போவேன்? அப்படியே இராமரிடம் போய் 'உமது தேவி துன்பக் கடலில் துடிக்கிறாள்' என்று சொல்வேனே யானால் இராமரிடம் நான் வைத்திருக்கும் அன்புக்கும், என்னுடைய பலத்துக்கும் என்ன பயன்?

அல்லது இலங்கையின் அரக்கர்களை யெல்லாம் அழித்து உம்மை எடுத்துக் கொண்டு போகச் சொன்னாலும் அப்படியே செய்கிறேன். எப்படியும் இராமர் உம்மைப் பிரிந்த துன்பத்தோடு இங்கு வந்து சண்டை செய்வதைக் காட்டிலும், உம்மை அடைந்து அந்த சந்தோஷ பலத்தினால் வந்து, இந்த இராவண சம்ஹாரம் பண்ணுவது எளிதென் றெண்ணுகிறேன்" என்று தாயிடம் குழந்தை பகர்வது போல் மாருதி வணங்கி வினயமாகக் கூறினார்.

இதைக் கேட்ட தேவிக்கு சந்தோஷம் உண்டாயிற்று. சலிப்பும் உண்டாயிற்று. கூறுகிறாள். அவ்வளவு தூரம் என்னை எப்படி எடுத்துக்கொண்டு போக நினைக்கிறீர்?

ததேவ கலு தே மன்யே
கபித்வம் ஹரி யூதப!

குட்டியை மடியில் கட்டிக் கொண்டு மரத்துக்கு மரம் தாண்டுவது குரங்குகளின் இயற்கை. நீரும்

அப்படியே நினைக்கிறீர் போலும்! இது எப்படி சாத்தியம்?

(இந்தச் சின்ன சரீரத்தினால் என்னை எப்படி கொண்டு போவீர் என்று தேவி கேட்க, மாருதி இங்கு விச்வரூபம் எடுத்துக் காட்டியதாக வால்மீகி பகவான் கூறுகிறார்.)

மாருதி! உம்முடைய பலத்தையும் வேகத்தையும் நான் அறிவேன். சாதாரண குரங்காயிருந்தால் இலங்கைக்கு எப்படி வரமுடியும்? லாப நஷ்டங்களைக் கவனிக்காமல், வெறும் சக்தியைக் கொண்டு மாத்திரம் ஒரு காரியத்தை நிச்சயித்து விடக் கூடாது. நீர் காற்றைப் போல வேகமாகப் போவீர். இதனால் எனக்கு மயக்கம் வந்து விடாதா? அந்த பயங்கரமான கருங் கடலில் தாண்டித் தாண்டிப் போவீர். அப்பொழுது பயத்தினால் நான் கீழே விழுந்து விட்டால் மீன்களுக்கு நல்ல ஆகாரமாய் விடுவேன்!

அல்லாமலும் நீர் என்னை எடுத்துப் போவதை அறிந்த இராக்ஷஸர்கள் தொடர்ந்தால், ஆயுத பாணிகளாக நிற்கும் அவர்களோடு நிராயுதபாணியாகிற நீர் சண்டை செய்வதில் கவனம் வைக்க முடியுமா? என்னைப் பாதுகாப்பதில் கவனம் வைக்க முடியுமா? இந்த யுத்த கோரத்தில் பயந்துகூட நான் விழுந்து விடக்கூடும். அப்பொழுது அவர்கள் என்னை யாருக்கும் தெரியாத இடத்தில் கொண்டுபோய் பத்திரப் படுத்தி விடலாம். அல்லது நீர் ஜெயித்தே கொண்டு போனாலும் இது எப்படி சரியான காரியமாகும்? இராமருக்குத்தான் இது எப்படி பெருமை அளிக்கும்?

நன்றி யென் பதம்
வஞ்சித்த நாய்களின்

நின்ற வஞ்சனை
நீயும் நினைத்தியோ!

இராவணன்தான் இராம லக்ஷ்மணரை மாயை யால் பிரித்து என்னை திருட்டுத்தனமாக தூக்கிக் கொண்டு வந்தான். நீரும் இப்படியே கொண்டு போக எப்படி நினைக்கிறீர்? பகிரங்கமான யுத்தத் தில் நியாயமான வெற்றி அடைவது தான் வீரர்களின் சரியான வீரம். இந்த வீரமுடைய இராமருக்குப் பெருமை உண்டாவதற்கே நான் பொறுத்துக் காத் திருக்கிறேன். இல்லாமல் போனால்,

அல்ல மாக்கள் இலங்கைய தாகுமோ
எல்லை நீத்த உலகங்கள் யாவு மென்
சொல்லி னல்சுடு வேன்அது தூயவன்
வில்லி னாற்றற்கு மாசென்று வீசினேன்

மிருக சுபாவமுடைய இந்த இலங்கை எம்மாத் திரம்? இந்த மூன்று உலகங்களையும் கூட ஒரு வார்த் தையினால் என் கற்புத் தழல் பொசுக்கி விடும். நான் ஏன் அப்படிச் செய்யவில்லை? இந்தக் கஷ்டங்களை ஏன் பொறுத்திருக்கிறே னென்றால் எனக்கு மகிமை உண்டாக்கிக் கொள்ள நான் விரும்பவில்லை. இராம ருடைய வில்லாற்றல் வெளிப்பட வேண்டும். அவருடைய மகிமை உயர வேண்டும் என்பதே என்னுடைய பிரார்த்தனை.

அல்லாமலும் நீர் என்னை எடுத்துக் கொண்டு போகக் கூடா தென்பதற்கு வேறொரு காரணமு மிருக்கிறது.

வேறு முண்டுரை
கேளது மெய்ம்மையோய்!

ஏறு சேவகன்
　　மேனியல் லாலிடை
ஆறு மைம் பொறி
　　நின்னையும் ஆனென
கூறு மிவ்வுரு
　　தீண்டுதல் கூடுமோ?

நான் ஏகபத்னி விரத முடையவள். அந்த நாதனை யன்றி என்னை வேறு யாரும் தீண்ட என் மனப் பூர்வமாக அனுமதிக்க முடியாது. நீர் பொறி புலன்களை வென்ற யோகி என்பது திண்ணம். என் குழந்தை போல் இருக்கிறீர் என்பதும் உண்மை. வயது வந்த பிள்ளைகளிடத்திலும் கூட உத்தமிகள் விலகியே இருக்க வேண்டும். நீர் ஒரு ஆண் உருவா யிருக்கும் வரை, என்னைத் தீண்ட எப்படி அனு மதிக்க முடியும்?

ஒரு வேளை "இராவணன் உம்மை தூக்கிக் கொண்டு வரவில்லையா" என்று கேட்கலாம். இராவ ணன் என்னை சாலையோடு தூக்கி வந்தான். இலக்ஷ் மணர் இயற்றிய அந்தச் சாலையை இதோ இப்பொழு தும் பாரும் என்று காட்டியதாக கம்பர் கூறுகிறார். (நான் அனாதையாய் அவசையா யிருந்த பொழுது இராவணன் பலாத்காரத்தினுல் என்னைக் கொண்டு வந்தானல்லது நான் இதை அனுமதித்த தில்லை என்று கூறியதாக வால்மீகி கூறுகிறார்.)

ஆகையால் இராமர் வந்து என்னைச் சிறை மீட் டுப் போவது தான் உசிதம் என்று தேவி வற்புறுத்தி ஞள். இதைக் கேட்ட மாருதி 'உம்மை யன்றி யார் இந்த நிலையில் இந்த உயர்ந்த கருத்துக்களை வெளியிட முடியும்? ஆனாலும் சில முக்கிய காரணங்களினுலே நான் உம்மை எடுத்துக் கொண்டு போவதாகக் கூறினேன். முதலாவது இராமரிடத்தில் நான்

வைத்த அன்பு. இரண்டாவதாக சேனையோடு இராமர் கடல் கடந்து வருவதில் உள்ள கஷ்டம். மூன்றாவது என் பலத்தில் நான் கொண்டுள்ள நம்பிக்கை. என்றாலும் இப்படிச் செய்வது உசிதமில்லை யென்று நீர் கூறுவதும் பொருத்தமாகவே இருக்கிறது. நான் இனி ஒரு நிமிஷமும் இங்கு தாமதிக்கக் கூடாது. இப்பொழுதே இராமரிடம் போக முயற்சிக்க வேண்டும். நான் உம்மைச் சந்தித்த விஷயத்தை அவர் உணர்ந்து இங்கு வருவதற்கு உம்மிடத்திலிருந்து ஏதாவது அடையாளம் கொடும் என்று பிரார்த்தித்தார்.

42. அத்தியாயம்.

கல்லும் புல்லால்

மாருதியின் பேச்சுக்கள் நியாயமானது. அவசியமானதும் கூட. இராமர் கூறிய அடையாளங்களையும் சொல்லி, அவரது கணையாழியையும் கொடுத்ததால் தான் பிராட்டி அநுமாரிடம் பரிபூரண நம்பிக்கைகொண்டு மனம்விட்டுப் பேச ஆரம்பித்தாள்.

இப்படியே மாருதி பிராட்டியைக் கண்டு மீண்டது உண்மை யென்று ஸ்ரீராமர் பூரணமாக நம்ப வேண்டுமானால் சீதா தேவியிடமிருந்து தக்க அடை

யாவும் வேண்டுமல்லவா? பிராட்டி இதை உணர்ந்தாள். ஆகையால் காட்டில் நடந்த ஒரு ரகசிய ஸம்பவத்தைக் கூறுகிறாள். லக்ஷ்மணருக்கும் கூட இது தெரியாதாம். ஆகையால் இதைக் கேட்டால் இராமர் நம்பிக்கை கொள்வாரல்லவா? இந்த சம்பவத்தை நினைக்கும் பொழுதே உணர்ச்சிகள் பொங்கி எழுகின்றன. தேவி கண்ணில் நீர் பெருகுகிறது. "என் அன்பருக்கு இந்த சிறந்த அடையாளத்தைச் சொல்லும்" என்று மெதுவாகப் பேச ஆரம்பித்தாள்.

நாக மொன்றிய நல்வரை
யின்றலை மேனாள்
ஆகம் வந்தெனை அள்ளுகிர்
வாளி னளைந்த
காகம் ஒன்றை முனிந்தயல்
கல்லெழு புல்லால்
வேக வெம்படை விட்டது
மெல்ல விரிப்பாய்

"மந்தாகினி நதிக்குச் சமீபத்தில், சித்திர கூட மலையின் வடகிழக்கு அடிவாரத்தில், காயும் கனியும் ஏராளமாக கிடைக்கும் அந்த ரமணீயமான பிரதேசத்தில், முனிவர்கள் மத்தியில், ஆசிரமம் அமைத்து வசித்திருந்தோம். கம்மென்று வாசனை வீசும் புஷ்பங்கள் நிறைந்த அந்த வனங்களில் உல்லாசமாக விளையாடிக் களைத்து உம்மை அடைந்தேன்.

அப்பொழுது ஒரு காக்கை என் மாமிஸத்தில் இச்சை கொண்டு துரத்திக் கொத்தியது. நான் கல்லெடுத்து ஓட்டினேன். அது போகாமல் அங்கேயே மறைந்திருந்து என்னைத் துன்புறுத்தியது. நான் கோபங் கொண்டேன். அந்தக் காக்கையை அடித்துத் துரத்த என் ஒட்டியாணத்தை இழுத்தேன். என்னுடைய வஸ்திரம் நழுவக் கண்டீர். உம்முடைய பரிகாசத்தால் நாணமடைந்தேன். காக்கை மீது

கோபம். அது கொத்துவதால் துன்பம். களைப் படைந்த நான் உட்கார்ந்திருந்த உம்மை அடைந்தேன். கோபத்தோடிருந்த என்னை சந்தோஷத்தோடு சமாதானப் படுத்தினீர். காக்கையால் கோப மூட்டப் பட்ட நான் நீர் ததும்பும் கண்களைப் பிசைந்து கொண்டு நிற்பதை நீர் பார்த்தீர். கனிவோடு சமாதானப் படுத்தினீர். களைப்பால் நெடு நேரம் உமது மடியில் படுத்துறங்கினேன். பிறகு நீரும் என் மடியில் படுத்துறங்கினீர். அப்பொழுது அந்தக் காக்கை மீண்டும் அங்கு வந்து விட்டது. என் மார்பிடையே கொத்திக் கிழித்தது. மீண்டும் மீண்டும் அது தாவி வந்து அதிகமாகக் கிழித்தது. மார்பிலிருந் தொழுகிய இரத்தம் உம்மை நனைத்தது. இப்படிக் காக்கையால் மிகவும் துன்பப்பட்டு சுகமாக உறங்கின உம்மை எழுப்பினேன்.

நீர் கண்விழித்து என் மார்பில் கிழித்திருப்பதைக் கண்டவுடன் ஸர்ப்பம் போல் சீறி, பெரு மூச்சோடு—

கேன தே நாகநா ஸோரு
விக்ஷதம் வை ஸ்தனாந்தரம்
க: க்ரீடதி ஸரோஷேண
பஞ்ச வக்த்ரேண போகிநா

உன் மார்பைக் கிழித்தது யார்? சீறி வரும் ஐந்தலை நாகத்தோடு விளையாடுபவன் யாவன்? என்று கேட்டு விட்டு சுற்றுமுற்றும் பார்த்தீர். இரத்தம் தோய்ந்த நகங்களோடு என்னையே நோக்கி நிற்கும் அந்தக் காக்கையை கண்டீர். அவன் இந்திரனுடைய பிள்ளை போலும். வெகு சீக்கிரமாக உடனே காற்றைப் போல் வேகமாக ஓடி பூமி இடுக்கில் மறைந்தான்.

கோபத்தால் உமது கண்கள் சுழன்றன. காக்கையிடம் கடுமை கொண்டீர். ஒரு தர்ப்பைப் புல்லை

எடுத்து பிரம்மாஸ்திர மந்திரத்தை உச்சரித்தீர். அது காலாக்னி போல காக்கையை நோக்கிக் கொழுந்து விட்டெரிந்தது. காக்கையை நோக்கி அதை விடுத்தீர். அந்த தர்ப்பமானது ஆகாய வீதியில் காக்கையைத் துரத்தியது. உயிரைக் காத்துக் கொள்ள காக்கை உலகெலாம் ஓடியது.

ஸ பித்ரா ச பரித்யக்த:
ஸர்வைஸ்ச ஸ மஹர்ஷிபி:
த்ரீன் லோகான் ஸம்பரிக்ரம்ய
தமேவ சரணம் கத:

காக்கைக்கு எங்கும் அடைக்கலம் கிடைக்க வில்லை. பெற்ற தகப்பனும் கை விட்டான். எல்லா மஹரிஷிகளும் கை விட்டார்கள். மூன்று லோகங்களிலும் நன்ருகச் சுற்றிச் சுற்றிப் பார்த்து விட்டு வேறு கதி யில்லாமல் உம்முடைய திருவடியையே அடைந்தது.

ஸ தம் நிபதிதம் பூமௌ
சரண்ய: சரணுகதம்
வதார்ஹ மபி காகுத்ஸ்த:
க்ருபயா பர்யபாலயத்

உமது காலடியில் தரையில் வந்து விழுந்த அந்தக் காக்கை கொலைக்குரியதா யிருந்தும் அடைந்தாரை ஆதரிக்கும் நீர் கருணையினுல் அதைக் காப்பாற்றினீர். ஆனுல் "பிரம்மாஸ்திரத்தை வீணுக்க முடியாதே, அதற்கு பதில் சொல்" என்று அந்த களைத்து மயங்கின காக்கையைக் கேட்டீர். "வலது கண்ணைக் கொண்டு போகட்டும்" என்றது காக்கை. அப்படியே அஸ்திரமும் காக்கையின் வலது கண்ணை அறுத்தது. கண்ணைக் கொடுத்து உயிரைக் காத்தது, காக்கை. பிறகு அது உம்மையும் உமது தந்தையையும் வணங்கி விடை பெற்றுப் போயிற்று.

எனக்காக ஒரு காக்கை மீது பிரம்மாஸ்திரத்தை உபயோகித்தீர். உம்மிடமிருந்து என்னை அபகரித்துக்கொண்டுவந்தவனிடம் ஏன் இன்னும் பொறுமை காட்டுகிறீர்? இரக்க மானது தர்மங்களில் சிறந்ததென்று உம்மிட மிருந்தே கேட்டேன். உம்மிடம் வீரம், பலம், உற்சாகம் எல்லாம் இருப்பதை உணர்கிறேன். எனக்காக அரக்கர்கள் மீது ஏன் உமது பாணத்தை உபயோகிக்க வில்லை" என்றாள். பின்னும்

"மாருதி! அவருக்கு எனக்காக சிறிதாவது பரபரப்பு ஏற்பட்டிருந்தால் ஏன் அவர் அரக்கர்களைக் கொல்ல வில்லை? அண்ணனிடம் விடை பெற்று லக்ஷ்மணராவது ஏன் என்னை வந்து காக்க வில்லை? காற்றும் நெருப்பும் கலந்தது போன்ற அந்த வீரர்களை எதிர்த்து நிற்க யாரிருக்கிறார்கள்? அவர்கள் ஏன் என்னை அநாதரவு செய்கிறார்கள்? என்னுடைய மஹத்தான பாபம் இன்னும் தொலைய வில்லை என்று தான் எண்ணுகிறேன்" என்று கண்ணீர் விட்டுக் கதறினாள்.

அப்பொழுது மாருதி, "தாயே! உமது பிரிவால் இராமர் தவிக்கிறார். இராமருடைய தாபத்தால் லக்ஷ்மணர் துடிக்கிறார். எப்படியோ உமது இருப்பிடத்தைக் கண்டு பிடித்து விட்டோம். இந்த நிமிஷமே உமது துன்பம் தொலைந்தது. இப்பொழுது நீர் வருந்துவது நியாய மல்ல. இராவணனைக் கொன்று அவர் உம்மை அயோத்திக்கு அழைத்துப் போவார். அந்த நாதனுக்கும் லக்ஷ்மணருக்கும் சுக்ரீவ மஹாராஜாவுக்கும் வானரர்களுக்கும் நான் என்ன தெரிவிக்க வேண்டும் என்று சொல்லும்" என்று பிரார்த்தித்தார்.

43. அத்தியாயம்.

வீரங்காத்தலை வேண்டுவாய்

ஆறுதலான மாருதியின் வார்த்தைகளால் சிறிது தேற்ற மடைந்து சீதாபிராட்டி கூறுகிறாள்.

கௌஸல்யா லோக பர்த்தாரம்
ஸு‍ஷு‍வே யம் மனஸ்வினி
தம் மமார்த்தே ஸு‍கம் ப்ருச்ச
சிரஸா சாபிவாதய

மாருதி! நல்ல மனமுள்ள கௌஸல்யா தேவி பெற்றெடுத்த லோக நாதனுகிற ராமருக்கு எனது வணக்கத்தைச் சொல்லி க்ஷேமம் விசாரியும்.

போக போக்கிய முள்ள ராஜ்யத்தையும் தாய் தந்தையையும் விட்டு லக்ஷ்மணர் காட்டிற்கு இராம ரைத் தொடர்ந்து வந்தார். தன் சுகத்தை எல்லாம் விட்டு இராமருக்கு அநுகூலமாக இருக்கிறார். சிங் கம் போன்ற கழுத்தும் பெருந்தோளும் நல்ல மனமு முடைய லக்ஷ்மணர் பார்ப்பதற்கு இனிமையானவர். இராமரைத் தந்தையாகவும் என்னைத் தாயாகவும் பாவித்து நடந்து வருகிறார். என்னை இராவணன் எடுத்து வந்தது அவருக்குத் தெரியாது. பெரியோ ருக்கு சிசுருஷை செய்பவர். லக்ஷ்மிகளையுடையவர். சக்தி படைத்தவர். ஆனால் அதிகம் பேசுகிறவரல்ல. மிக்க மேன்மை யுள்ள, இனிமையான அந்த ராஜபுத் ரர் என் மாமனாரைப் போன்றவர். இராமருக்கு என்னைக் காட்டிலும் லக்ஷ்மணர் தான் பிரியமானவர். இராமருடைய காரியங்களில் அவர் தான் முன்னிற்ப

வர். 'இந்த லக்ஷ்மணரைப் பார்த்துக் கொண்டிருப்பதால் இராமர் தன் தந்தையைக் கூட நினைப்பதில்லை. மிருதுவானவர்; பரிசுத்தமானவர்; ஸாமர்த்தியம் உள்ளவர்; இராமருக்குப் பிரியமானவர்; அந்த லக்ஷ்மணருக்கு க்ஷேமம் சொல்லும்''

என்று பிராட்டி இராமரைக் காட்டிலும் லக்ஷ்மணரைப் பற்றி அதிகம் கூறுகிறாள். தான் அவருக்கிழைத்த குற்றத்திற்குப் பரிகாரம் போலும்! பின்னும் சொல்லுகிறாள்.

''உமக்குச் சொல்லுகிறேன் மாருதி!

இன்னும் ஈண்டொரு திங்கள் இருப்பல் யான்
நின்னை நோக்கிப் பகர்ந்தது நீதியோய்
பின்னை ஆவி பிடிக்கின்றிலேனந்த
மன்னன் ஆணை இதனை மனக்கொள் நீ

இன்னும் ஒரே மாதம் உயிர் தாங்கி இருப்பேன். பின்னர் வாழ மாட்டேன். இராம பாத சாக்ஷியாகச் சொல்லுகிறேன். இதை முதலில் உமது மனதில் பதித்துக் கொள்ளும்.

ஆரந் தாழ்திரு மார்பற் கமைந்ததோர்
தாரந் தானல ளேனும் தயாவெனும்
ஈரந் தானகத் தில்லலென் றாலும்தன்
வீரம் காத்தலை வேண்டென்று வேண்டுவாய்

நான் அந்த உத்தமரான இராமருக்குத் தக்க பத்தினி யல்ல. இல்லையானால் அந்த அற்பமான மானின் பின்னே அவரை அனுப்பி இழந்திருப்பேனா?

என்னிடத்தில் ஈவு இரக்கம் என்பது சிறிதுமில்லை. இருந்திருந்தால் என் குழந்தை போன்ற லக்ஷ்மணரை ஏசிப் பேசி அனுப்பி இருப்பேனா?

ஆகையால் எனக்காக அவர்கள் இங்கு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்ள எனக்கு உரிமை யில்லை.

ஆனாலும் அந்த வில்லாளியான இராமருடைய மனைவியை ஒருவன் அபகரித்துக் கொண்டு போய் விட்டான் என்பது அவருடைய வீரத்துக்குப் பழுதாகிறது. தன்னுடைய வீரத்தைக் காத்துக் கொள்ளும் பொருட்டாவது இராவண ஸம்ஹாரம் செய்யும்படி இராமரை நான் வேண்டிக் கொண்டதாக பிரார்த்தியும்.

ஏத்தும் வென்றி இளையவற் கீதொரு
வார்த்தை கூறுதி மன்னரு ளாலெனைக்
காத்திருந்தவர்க் கேகடன் என்றிடை
கோத்தவெஞ் சினமற விடென்று கூறுவாய்.

யாராலும் போற்றத் தக்க வெற்றி யுடையவரும், மேதாவியுமான லக்ஷ்மணருக்கு ஒரு வார்த்தை சொல்லும். இராமருடைய அநுக்ரகத்தால் பல வருஷ காலம் இரவும் பகலும் காட்டில் என்னை இடைவிடாமல் பாதுகாத்திருந்த அந்த லக்ஷ்மணருக்கு இன்னும் என்னைக் காக்கும் கடமை இருக்கிறதென்று ஞாபகப் படுத்தும். ஆனால் அவரை நான் ஏசிப் பேசி அனுப்பிய கோபம் இருக்கலாம். அதை மன்னித்து மறந்து விடும்படி எனக்காகக் கேட்டுக் கொள்ளும். இப்படி இருவருக்கும் என் விண்ணப்பத்தை அறிவித்த பிறகும் அவர்கள் இங்கு வர மனங் கொள்ள வில்லையானால்—

திங்க ளொன்றிலென் செய்தவம் தீர்ந்தரல்
இங்கு வந்திலன் எனில் யாணர்நீர்க்
கங்கை யாற்றின் கரையடி யேற்குந்தன்
செங்கை யாற்கடன் செய்கென்று செப்புவாய்

மாருதி! நான் ஏற்கனவே கூறியபடி இன்னும் ஒரு மாதத்திற்கு மேல் உயிர் வாழ மாட்டேன்.

இதற்குள் இங்கு வந்து சிறை மீட்காமல் எந்தக் காரணத்தினுலாவது அவர்கள் அயோத்திக்குத் திரும் பினுல் அந்தப் புனிதமான கங்கைக் கரையில் தனது செங்கையால் எனக்கு எள்ளும் தண்ணீரும் இறைக் கும்படி வேண்டிக் கொண்டதாக இராமருக்குச் சொல்லும்.

அப்படி அவர்கள் அயோத்திக்குத் திரும்பினுல் நீரும் அவர்களைத் தொடர்ந்து போவீர் அல்லவா? அங்கு

சிறக்கு மாமியர் மூவர்க்கும் சீதையாண்
டிறக்கின் ருள்தொழு தாளெனும் இன்னசொல்
அறத்தின் நாயகன் பாலருள் இன்மையால்
மறக்கு மாயினும் நீமற வேலையா!

மஹா உத்தமரான புதல்வரைப் பெற்றதால் சிறப்படைந்த என் மாமிமார் மூவர் இருக்கிருர்கள். "இலங்கையில் சிறைப்பட்ட சீதை அநாதையாக இறக்கும் பொழுது உங்கள் மூவரையும் வணங்கி ளுள்" என்ற வார்த்தையை அவர்களுக்குத் தெரிவிக் கும்படி பிரார்த்திக்கிறேன். என் மேல் அன்பில்லா மல் இராமர் இதைச் சொல்ல மறந்து போகலாம். அன்பிருந்தால் இங்கு வந்து என்னைக் காக்க மாட் டாரா, மாருதி? ஆகையால் அவர் மறந்து போனு லும் அவரைத் தொடர்ந்து போகக் கூடிய நீர் மறவா மல் என் மரண வணக்கத்தை என் மாமிமாருக்குச் சொல்லும். நீரும் மறந்துபோக வேண்டாம், ஐயா!

இராமர் அயோத்திக்குத் திரும்பினுல் நாட் டாரும் நகரத்தாரும், தம்பியரும் சுற்றத்தாரும் பட்டாபிஷேகம் செய்து கொள்ளும்படி வேண்டு வார்கள். ஆனுல் பட்டாபிஷேகம் கொள்ள பட்ட மகிஷி வேண்டுமல்லவா? குடிகளுக்கு அரசி வேண்டு மல்லவா? அதற்காக மறு மணம் செய்து கொள்ளும்

படி இராமரை வற்புறுத்தலாம். குடிகளிடம் அன்புடைய இராமர் அவர்கள் வேண்டுகோளை மறுப்பது கஷ்டம். ஒரு வேளை அவர்கள் வற்புறுத்தலுக்காக மறுமணம் கொள்ள இணங்கினுல் இராமர் சொன்ன சொல் தவறிவிடும். எப்படி?

வந்தெனைக் கரம் பற்றிய வைகல் வாய்
இந்த இப்பிற விக்கிரு மாதரைச்
சிந்தை யாலும் தொடேனென்ற செவ்வரம்
தந்த வார்த்தை திருச்செவி சாற்றுவாய்

மிதிலையில் என்னை வந்து கைபிடித்த அந்த நாளிலே 'இந்த ஜென்மத்தில் உன்னை யன்றி மற்ெருரு ஸ்திரீயை மனத்தாலும் தொடுவதில்லை' என்று வரங் கொடுத்திருக்கிருர். ஒரு வேளை வெகு காலத்திற்கு முன் நடந்த இதை மறந்து மறு மணம் கொண்டால் இராமருடைய ஸத்தியம் தவறிப் போகிறது. அவர் மறந்தும் ஸத்தியம் தவறுவதை நான் சகிக்க மாட்டேன். ஆகையால் இதை அவரிடம் மட்டும் காதோடு சொல்லும்.

சரி, இவ்வளவு தான். ஆனுல் என்னுடைய கடைசி வேண்டுகோளை தயவு செய்து நாதனிடம் சொல்லும்.

ஈண்டு நானிருந் தின்னுயிர் மாயினும்
மீண்டு வந்து பிறந்துதன் மேனியைத்
தீண்ட லாவதோர் தீவினை தீர்வரம்
வேண்டி னுள்தொழு தென்று விளம்புவாய்

மாருதி! நான் எத்தனையோ ஜென்மத்தில் செய்த புண்ணியத்தால் அந்த இராமரை நாதனுகப் பெற்றேன். ஆனுல் எனது குற்றத்தாலேயே அவரைப் பிரிந்து, அளவற்ற பாவத்தால் அளவற்ற துன்பத்தை

அநுபவிக்கிறேன். மீண்டும் அவரைக் காணமுடியும் என்ற நம்பிக்கையால் இதுவரை உயிர் வாழ்கிறேன். ஆனால் எனது பாவத்தால் இந்தச் சந்திப்பு நேராத படி நான் இங்கேயே தனித்துத் தவித்துத் துடித்து மாளும்படி நேரிடலாம்.

எந்தப் பாவம் என்னைப் பிரித்ததோ, அது தீர்ந்து, அடுத்த ஜென்மத்திலாவது அவரது திவ்ய மங்கள விக்ரகத்தை தீண்டும்படியான பாக்கியம் அருளும்படி நான் வணங்கிக் கேட்டுக் கொண்டதாக எனது கடைசி கோரிக்கையைத் தெரிவியும் என்று தேவி உருக்கமாகக் கூறினாள். இந்த உயர்ந்த உணர்ச்சி கொண்ட மொழிகளைக் கேட்ட மாருதி உணர்ச்சியோடு பேசுகிறார்

வீவாய் நீயிவண் மெய்யஃ தே
ஓய்வான் இன்னுயிர் உய்வா னும்
போய்வா னந்நகர் புக்கன் றே
வேய்வான் மௌலியும் மெய்யன் றே ?

அம்மா! நீர் இங்கே இராமரை நோக்கித் துடித்து இறப்பதா? ஏற்கனவே உமது பிரிவால் தவித்திருக்கும் இராமர் நீர் இறந்த பிறகும் உயிர் வாழ்வாரா? திரும்பி அயோத்திக்கு வேறு போவாரா? பட்டமும் கட்டிக்கொள்ள மறு மணம் செய்வாரா? ஒரு நாளுமில்லை தாயே! ஏன் நீர் நடவாத காரி யத்தை நினைந்து வருந்துகிறீர்?

முன்னே கொல்வான் மூவுலகும்
பொன்னே ஓங்கிய போர் வில்லால்
என்னே நின்னிலை ஈதென் றால்
பின்னே செம்மை பிடிப்பானே ?

ஏற்கனவே இராமருக்கு இருக்கும் கோபத்தால் மூவுலகத்தையும் நாசமாக்கி விடுவார். அவரை நோக்கி தவங்கிடக்கும் உமது நிலையை எனது வாயால் கேட்ட பிறகும் சும்மா இருப்பாரா? நெருப்பைக் கக்கும் இராம பாணங்களால் தங்க மயமான இலங்கை உருகுவதை நீர் சீக்கிரமே காணப் போகிறீர். நான் போய்ச் சொல்ல வேண்டியதுதான் தாமதம். உடனே சேனையோடு இங்கு வந்து குதித்து விடுவார். இதற்கு நீர் அளித்த ஒரு மாத அவகாசமே அதிகமானது.

குராவரும் குழலியிக்
குறித்த நாளினே
வீராவரு நெடுஞ்சிறை
மீட்கிலான் எனில்
பராவரும் பழியொடும்
பாவம் பற்றுதற்(கு)
இராவணன் அவனிவன்
ராமன் என்றனன்

இந்த ஒரு மாதத்திற்குள் வந்து சிறைமீட்காமல் போனால், இராமரை இராவணன் என்றும், இராவணனை இராமன் என்றுமே அழைப்பேன். உரிமையும் அன்புமில்லாத உம்மை இராவணன் பிரார்த்திப்பது பாவம். ஆனால் உரிமையும் அன்புமுள்ள உம்மை, காலாநுகூலமும் சக்தியுமிருந்தும் இராமர் கைவிடுவது அதைவிடக் கொடிய பாவமல்லவா? ஆனால் அவர் அப்படி செய்ய மாட்டார் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும். உமக்கும் தெரியும் நீர் வீணாகக் கவலைப்பட வேண்டாம் என்று தேற்றினார்.

44. அத்தியாயம்.

சூடாமணி

ஹ்ருதயத்திலிருந்து எழுந்த மாருதியின் உறுதியான மொழிகளால் சீதா பிராட்டி மனங் குளிர்ந்தாள். இராமர் மனங் குளிரும்படி இன்னும் என்ன நம்பிக்கையான அடையாளம் சொல்லி அனுப்பலாமென்று சிந்தித்தாள். ஆ! நினைவுக்கு வந்தது. அந்தப்புரத்தில் நடந்த அருமையான ரகஸியம். இப்பொழுது அதை யாரும் நம்புவது கூட கடினம். என்ன அது? கூறுகிறாள்.

என்னொ ரின்னுயிர் மென்கிளிக்
கியார் பெயர் ஈகேன்
மன்ன என்றலும் மாசறு
கைகயன் மாதென்
அன்னை தன்பெயர் ஆகென
அன்பினொ டன்னுள்
சொன்ன மெய்ம்மொழி சொல்லுதி
மெய்ம்மை தொடர்ந்தோய் !

"மாருதி! நாதனும் நானும் அந்தப் புரத்தில் தனித்திருந்தோம். நான் அருமையாக வளர்த்து வந்த பஞ்ச வர்ணக் கிளிக்கு என்ன பெயர் வைக்கலாமென்று அவரைக் கேட்டேன். கொஞ்சங் கூட யோசனை செய்யாமல் உடனே அவர் என்ன சொன்னார் தெரியுமா?

'எங்கம்மா கைகேயியின் பெயரை இடு சீதா!' என்றார். கோசலா தேவி எனது அரும் பெரும் நாதனைப் பெற்று விட்டாரே அல்லாமல் வளர்த்த தெல்லாம் கைகேயிதான். அம்மா என்றால் உடனே கைகேயி ஞாபகம் வருமே அல்லாமல் இராமருக்குக் கோஸலை ஞாபகம் வராது.

தசரதர் பதறப் பதற, நாடும் நகரும் கதறக்கதற, கைகேயி வரங்களை வற்புறுத்தி, பரதனுக்கு நாட்டை யும், இராமருக்குக் காட்டையும் ஏற்படுத்திய பிறகு,

காட்டிலிருந்து இராவணன் என்னை அபகரித்து வந்து சிறைவைக்க, நான் நொந்தழவும் இராமர் அலைந்தழவும் நேர்ந்த பிறகு,

அம்மா கைகேயியிக்கும் பிள்ளை இராமருக்கும் இந்த உயர்ந்த அன்பிருந்த தென்று யார் நம்புவார் கள்? ஆனாலும் இது உண்மை, மாருதி! இந்த அடையாளத்தைச் சொன்னால் கட்டாயம் இராமர் உம்மை நம்புவார்" என்றாள்.

(இந்த அடையாளத்தைக் கம்பர்தான் வெளிப் படுத்துகிறார். வான்மீகத்தில் இது இல்லை)

பின்னும் கூறுகிறாள்.

இதம் ப்ரூயாஸ்ச மே நாதம்
சூரம் ராமம் புன: புன:

மாருதி! சூராதி சூரனை எனது நாதனுக்கு இந்த ஒரு வார்த்தையைத் திரும்பத் திரும்பச் சொல் லும். எதை?

ஊர்த்வம் மாஸாந் ந ஜீவேயம்
ஸத்யே நாஹம் ப்ரவீமி தே

"ஸத்தியமாகச் சொல்லுகிறேன். ஒரு மாஸத்துக்கு மேல் நான் இங்கு உயிர் வாழ முடியாது. இதற்குள் நீர் வந்து காப்பாற்றும்"

இதைத்தான் திரும்பத் திரும்ப அவர் மனதில் பதியும்படி சொல்ல வேண்டும், மாருதி! என்று வற்புறுத்தினுள்.

ஆனால், இத்தனை அடையாளங்கள் கூறியும் சீதா தேவிக்கு திருப்தி எற்பட வில்லை. குறைவாகவே இருந்தது. உடனே நிச்சயம் நம்பக்கூடிய பேரடையாளம் ஒன்று அனுப்ப எண்ணினுள். இராமர் பேரடையாளமாகக் கணையாழி அனுப்பவில்லையா? இப்படியே தானும் ஒன்றை அனுப்ப எண்ணினுள் எதை?

சூடையின் மணி கண்மணி
ஒப்பன, தொன்னுள்
ஆடையின்கண் இருந்தது
பேரடை யாளம்
நாடிவந்தென தின்னுயிர்
நல்கிய நம்பா!
கோடியென்று கொடுத்தனள்
மெய்ப்புகழ் கொண்டாள்

சூடாமணி என்று தலையில் அணியக்கூடிய ஆபரணம். கண்மணி போன்றது. துணியில் முடிந்து இதை உயிர்போல் காப்பாற்றி வருகிருள். அவிழ்த்து எடுத்தாள். சூரியன் போல் பிரகாசிக்கிறது அந்த ஆபரணம்.

" ஆபத்தான இடத்தில் தேடிவந்து, ஆபத்தான சமயத்தில் சந்தித்துக் கணையாழி கொடுத்து என் உயிரைக்காத்த உத்தம உபகாரியான மாருதி! இந்தச்

சூடாமணியை இராமருக்குக் கொடுத்து அவருக்கும் சந்தோஷம் கொடும்'' என்று கொடுத்தாள்.

இந்த மணியை மாருதி வணங்கி வாங்கிக் கொண்டார். பத்திரப் படுத்தினர். சுற்றி வந்து தேவியை நமஸ்காரம் செய்தார். புறப்பட யத்தனிக்கிருர்.

கண்டாள் சீதா தேவி. கண்ணில் நீர் ததும்புகிறது. தழுதழுத்த குரலில் கூறுகிருள்.

மாருதி ! இராம லக்ஷ்மணருக்கு க்ஷேமம் சொல்லும். சுக்ரீவ மஹாராஜாவுக்கும் அவரது மந்திரிகளுக்கும் பெரியார்களுக்கும் க்ஷேமம் சொல்லும். எப்படிச் சொன்னல் இராமர் என்னை இந்த துக்க சமுத்திரத்திலிருந்து விடுவிப்பாரோ அப்படி அவருக்குச் சொல்லும்.

ஜீவந்தீம் மாம் யதா ராம :
ஸம்பாவயதி கீர்த்திமான்
தத் ததா ஹநுமன் வாச்யம்
வாசா தர்மம் அவாப்னுஹி

கீர்த்தி யுள்ள அந்த இராமர் நான் உயிரோடிருக்கும் போதே என்னை சிறப்பிக்கும் வழி எதுவோ அந்த வழியில் அவரோடு பேசும். இந்த வார்த்தை சொல்லுவதாலேயே உமக்குப் புண்ணியம் உண்டு' என்று பன்னிப் பன்னிக் கூறினுள்.

சீக்கிரமே இராமர் வந்து இராவணனை வென்று சிறை மீட்டுப் போவாரென்று மாருதி திரும்பத் திரும்ப உறுதி கூறினர். புறப்பட யத்தனிக்கிருர்.

சீதா தேவியோ நாதனிடத்தில் வைத்த அன்பினுல், மாருதியைக் கௌரவித்துக் கூறுகிருள்.

"மாருதி! உமக்கு உசிதம் என்று தோன்றினால் இங்கு ஏதாவதொரு இடத்தில் மறைந்திருந்து, ஒரு நாள் இளைப்பாறி பிறகு புறப்படும். துக்க மத்தியில் இருக்கும் எனக்கும் உம்மைக் காண்பதால் ஆறுதலா யிருக்கும். உம்மை கண்டதால் எனது துக்கம் விலகி யிருக்கிறது. திரும்பி வரும் எண்ணத் தோடேயே நீர் போகிறீர். ஆனால் நீர் புறப்பட்டவுடன் மீண்டும் அந்த துக்கம் வந்து என்னைக் கௌவிக் கொள்ளும். நீர் திரும்பி வரும் வரை நான் உயிரோடிருப்பதும் சந்தேகமே. அதிருக்கட்டும் மாருதி! எனக்கு ஒரு பெரிய சந்தேகம் இருக்கிறது வானரச் சேனைகளும் இராம லக்ஷ்மணரும் இந்தக் கடலை எப்படிக் கடந்து வருவார்கள்? இதற்கு என்ன வழி உமக்குத்தோன்று கிறது? நீர் ஒருவரே அரக்கர்களைக் கொல்லக் கூடுமா னாலும், இராமருக்கும் எனக்கும் இது பெருமையைத் தராது. அவர் இங்கு வந்து என்னைச் சிறை மீட்டு அழைத்துப் போவதுதான் உசிதமென்று எண்ணு கிறேன். ஆனால் நீரும், கருட பகவானும், வாயு பக வானும்தான் இந்தக் கடலைக் கடந்து வர முடியு மென்றும் எண்ணுகிறேன். மற்றவர்கள் எப்படி வருவார்கள்? காரியம் எப்படி நிறைவேறும்? என்று சந்தேகித்துக் கேட்டாள். மாருதி கூறுகிறார்.

மத் விசிஷ்டாஸ்ச துல்யாஸ்ச
ஸந்தி தத்ர வனௌகஸ:
மத்த: ப்ரத்யவர: கஸ்சித்
நாஸ்தி ஸுக்ரீவ ஸந்நிதௌ

தாயே! சுக்ரீவர் சேனையில் எனக்கு மேல்பட்ட வரும் எனக்கு சமமானவருமே இருக்கிறார்கள். எனக்குக் கீழ்ப் பட்டவர்கள் அங்கு யாருமே இல்லை. பெரியவர்களை எல்லாம் வெளியே அனுப்புவார்களா? சாதாரணமான நானே இங்கு வந்து விட்டேனே!

மற்ற பலசாலிகளைப்பற்றி சந்தேகப் படுவானேன்? இராம லக்ஷ்மணரும் எனது தோளில் ஏறி சந்திர சூரியர் போல் இங்கு வந்து சேருவார்கள். சீக்கிரமே இராவண ஸம்ஹாரம் நடக்கும். உடனே நீர் சிறை மீட்கப் படுவீர். நீர் துக்கப் படாதிரும், தாயே! இராம லக்ஷ்மணருக்கு சமம் யாரிருக்கிறார்கள்? அவர்கள் வில்லேந்தி நிற்கும்போது உமக்கு என்ன குறை? என்று தேற்றினார்.

கடைசியாக சீதா பிராட்டி இராமரோடு நேரே பேசுவதுபோல் கூறுகிறாள்.

"எனது திலகம் அழிந்த போது மனோ சிலையால் திலகம் வைத்தீர். அதை ஞாபகப் படுத்திக் கொள்ளும். இந்தச் சூடாமணியைப் பார்த்து உம்மைப் பார்ப்பது போல் உயிர் தாங்கி யிருந்தேன். இதையும் அனுப்பி விட்டேன். எனக்கு இனி தாரகம் ஏது? அரக்கனுடைய கொடுமைகள் மத்தியில் உமக்காக உயிர் வாழ்கிறேன். உம்முடைய சோகத்தைக் கேட்டு இன்னும் நான் உருகிப் போகிறேன்" என்று வருந்தினாள். இப்பொழுது துக்கிக்கத் தகாது என்று மீண்டும் மாருதி தேற்றினார்.

"அரக்கர்கள் படுத்தும் துன்பத்தையும் எனது சோகத்தின் வேகத்தையும் இராமரிடம் போய்ச் சொல்லும். வழியில் உமக்கு எந்த இடையூறுமில்லாமல் மங்களம் உண்டாகட்டும்" என்று வாழ்த்தி விடை கொடுத்தாள், சீதா பிராட்டி.

இப்படித் தன் காரியத்தில் வெற்றி பெற்று மகிழ்வடைந்த மாருதி இலங்கையில் இன்னும் சிறிது வேலை இருப்பதை உணர்ந்தார். ஆகையால் உடனே இராமரிடம் போக முடிய வில்லை. ஆனால் மனம் மட்டும் ஸ்ரீ இராமரிடம் ஓடி விட்டது.

45. அத்தியாயம்

பலத்தைக் காட்டுவதுதான் ஒரே வழி

சீதா பிராட்டியிடம் விடை பெற்றுத் தனியே வந்து விட்டார் மாருதி. சிறிது நின்று யோசிக்கிறார். "இனி என்ன செய்யத் தகும்?" என்று.

மாருதி வந்த முக்கிய நோக்கம் தேவியைக் காண. தேவியைக் காணுமுன் வேறு எந்த வேலையிலும் இறங்குவது உசிதமல்ல. இப்பொழுதோ வந்த காரியம் வெற்றிகரமாக முடிந்து விட்டது. பிராட்டியைக் கண்டு கணையாழி கொடுத்து சூடாமணியும் பெற்றாயிற்று. இனி உடனே இவர் இராமரிடம் திரும்பலாம். ஆனால் இது ஒன்றும் பெருமையல்ல. இராமருக்கு அநுகூலமாக இன்னும் செய்யக் கூடியதை செய்து போக வேண்டும். அறிவும் ஆற்றலும் உடையவருக்கு இதுதான் அழகு.

கார்யே கர்மணி நிர்திஷ்டே
யோ பஹூன்யபி ஸாதயேத்
பூர்வ கார்யாவி ரோதேன
ஸ கார்யம் கர்த்து மர்ஹதி

வந்த காரியத்திற்கு இடையூறின்றி அதை முடித்துக் கொள்ள வேண்டும். இத்தோடு இன்னும் பல காரியங்களையும் சாதிக்க வேண்டும். இவன் தான் சரியான தூதன்.

மாருதி சரியான தூதரல்லவா? ஆகையால் இன்னும் என்ன செய்யலா மென்று ஆலோசித்தார்.

இராமரிடம் திரும்பிப் போய் சூடாமணி கொடுத்து தேவியின் செய்தியை அறிவிக்கிறோம். பிறகு இராவணனுடைய மனோபாவம் எப்படியிருக்கிறது? பலம் எப்படியிருக்கிறது? என்று இராமர் கேட்டால், நான் இராவணனைச் சந்திக்கவில்லை; அவன் பலத்தைப் பரீக்ஷிக்கவில்லை என்று சொல்வது? இப்படிச் சொன்னால் என்னை என்ன மதிப்பார்கள்? ஆகையால் இராவணனைச் சந்திக்க வேண்டும். அவன் என்ன மனோ நிலையில் இருக்கிறான் என்று உணர வேண்டும். அல்லாமலும் அவன் பலம் எப்படி இருக்கிறதென்றும் தெரிய வேண்டும். இதற்கு என்ன செய்யலாம் என்று சிந்தித்தார்.

> ந ஸாம ரக்ஷஸ்ஸு குணாய கல்பதே
> ந தான மர்த்தோப சிதேஷு யுஜ்யதே
> ந பேத ஸாத்யா பலதர்ப்பிதா ஜனா:
> பராக்ர மஸ்த்வேவ மமேஹ ரோசதே

ஒரு காரியத்தை ஸாதித்துக் கொள்ள, ஸாம, தான, பேத, தண்டம் என நான்கு உபாயங்கள் இருக்கின்றன. சமாதான முறையில் முயற்சிக்க வேண்டும். எதிரிக்கு ஏதாவது ருசி காட்டி சரிக்கட்டிக் கொள்ளவேண்டும். எதிரியைப் பிரித்துவிட்டு வெற்றி பெற வேண்டும். அல்லது நமது பலத்தைக் காட்டி எதிரியை முறியடிக்க வேண்டும். இது தான் வழி.

ஆனால் ராக்ஷஸர்களிடத்தில், அதாவது பெரும் பலம் கொண்டு, மமதை கொண்டு, நியாய அநியாயத்தை உணராதவரிடம் நியாய வாதம் செய்து கொண்டிருப்பதில் பயனில்லை. இது வீண் வேலை. பணக் கொழுப்பு எடுத்த இவர்களிடம் தானத்தால் ருசி காட்டுவதும் பயனில்லை. பலத்தினால் மதம் கொண்ட இவர்களைப் பிரித்து விடுவதும் சாத்தியமல்ல. நமது பலத்தைக் காட்டுவதுதான் சரியான

வழி. அப்பொழுதுதான் நம்மை மதிப்பார்கள், இப்பொழுது இதுதான் எனக்குப் பிடித்திருக்கிறது. இதைத் தவிர வேறு வழியுமில்லை. சரி, நமது பலத்தை எப்படி வெளியிடுவது?

இப் பொழி லினைக்கடி
திறக்குவன், இறக்தால்
அப்பெரிய பூசல் செவி
ஆர்தலும் அரக்கர்
வெப்புறு சினத்த ரெதிர்
மேல்வருவர் வந்தால்
துப்புற முருக்கி யுயிர்
உண்பலிது சூதால்

இதோ இந்த நந்த வனம் கண்ணுக்கும் மனதிற்கும் இனிமை யானது. இலங்கையிலேயே நான் கண்டவரை இது தான் சிறந்தது. இராவணன் இதை மிகவும் கவனமாகக் காத்து வருகிறான். இதனால் தான் சீதா தேவியையும் இங்கு சிறை வைத்திருக்கிறான். ஏராளமான காவலும் இருக்கிறது. நான் முதலில் இந்த அசோக வனத்தை அழிக்கிறேன். இதனால் அரக்கர்கள் எதிர்த்து வருவார்கள். வர வரக் கொன்று கொண்டே இருந்தால் இராவணனையே சந்திக்க அவகாசம் கிடைக்கும். அப்பொழுது அவன் பலத்தையும் மனத்தையும் அறியலாம். இது தான் சரியான வழி என்று தீர்மானித்தார்.

உடனே விச்வரூபம் எடுத்தார். நாலு பக்கமும் திரும்பினார். காலால் துவைத்தார். அப்பொழுது அந்த வனம் என்ன ஆயிற்று?

முடிந்தன பிளந்தன
முறிந்தன நெறிந்த

மடிந்தன பொடிந்தன
மறிந்தன முறிந்த
இடிந்தன தகர்ந்தன
எரிந்தன கரிந்த
ஒடிந்தன ஓசிந்தன
உதிர்ந்தன பிதிர்ந்த

மரங்கள் வேரோடு விழுந்தன. பிளந்தன. முறிந்து விழுந்தன. இடிந்து, தகர்ந்து, பொடியாயின. தீப்பற்றி எரிந்தன. கரிந்து போயின. தூள் தூளாய் உதிர்ந்தன. நாலா பக்கமும் சிதறின. பறவைகளும் மிருகங்களும் எக்கதி யடைந்தன ?

கதறின வெருளி யுள்ளம்
கலங்கின விலங்கு, கண்கள்
குதறின பறவை வேலை
குளித்தன, குளித்தி லாத
பதறின, பதைத்த, வானில்
பறந்தன, பறந்து பார்விழ்ந்
துதறின சிறையை, மீள
ஒடுக்கின உலந்து போன

மிருகங்கள் பயந்து கலங்கிக் கதறின. பறவைகளோ பயத்தால் கண்கள் குதறி சமுத்திரத்தில் விழுந்து மூழ்கின. மற்றும் சில பதறி உயிர் தப்பும் பொருட்டு வானில் பறந்தன. ஆனால் உடனே கீழே விழுந்து இறக்கையை உதறி ஒடுங்கி மடிந்து போயின.

இதற்கிடையே அரக்கிகள் விழித்துக் கொண்டார்கள். சீதா தேவியிடம் ஓடினார்கள். "இவன் யார் ? எங்கே வந்தான் ? உன்னோடு என்ன பேசினான் ?" என்று கேட்டார்கள். தேவி உண்மையைச்

சொல்லவும், இதனால் மாருதிக்கு ஆபத்து உண்டாக்கவும் விரும்பவில்லை போலும். ஆகையால்—

அஹிரேவ ஹ்யஹேஃ: பாதாந்
விஜாநாதி ந ஸம்சய:

பாம்பறியும் பாம்பின்கால் எனமொழியும்
பழமொழியும் பார்த்திலீரோ ?

"பாம்புக்குத் தெரியும் பாம்பின் கால். இவனுடைய சமாசாரம் உங்களுக்குத் தான் நன்றாகத் தெரியும். நான் கண்டபடி?" என்று கூறிவிட்டாள்.

தேவி உண்மை கூறவில்லை. மறைத்துத் தான் சொல்லுகிறாள்.

'பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்'

பொய் கூறுவதால் தீங்கற்ற நன்மை உண்டானால் அந்தப் பொய்யும் சத்தியம் போலவே பாவிக்கப்படும் என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

தனக்கு உயிர் தந்து நன்மை செய்த மாருதிக்கு அரக்கர்களால் தீங்கணுகாமல் காக்கும் பொருட்டு தேவி உண்மையை மறைக்கிறாள். மாருதியைக் காட்டிக் கொடுக்க மறுக்கிறாள்.

அரக்கிகளில் சிலர் இதைக் கேட்டும், மாருதியின் கோர கிருத்தியங்களால் பயந்தும் திகைத்து நின்றனர். சிலரோ விஷயத்தை இராவணனிடம் அறிவிக்க ஓடினர்.

46. அத்தியாயம்.

ஜே! ஜே! ராம்!

உலக மெல்லாம் வென்று ஆளும் கம்பீரத்தின் மமதை இராவணேச்வரன் முகங்களில் எழுதப்பட்டிருக்கிறது.

ஆனால் ஒரு மனிதப் பெண், சீதையை வெல்ல முடியாத, வணக்க முடியாத, வசப்படுத்த முடியாத கவலை அவன் உள்ளத்தைத் துளைப்பதல்லாமல் முகங்களிலும் கரி தீட்டி யிருக்கிறது.

சீதை! சீதை! சீதை! இந்த ஒரே எண்ணந் தான். திரும்பின பக்கமெல்லாம் அந்த ஒரே காட்சி தான். கடக்க முடியாத அவள் கற்பை உரிஞ்சுவ தெப்படி? என்ற ஒரே ஆலோசனை தான்.

அன்றியும் விடியற்காலையில் சீதையைச் சந்தித்த போது தனது வெற்றி, செல்வம், சாமர்த்தியம், பலம் எல்லாம் ஒன்றுக்கும் உதவாமல் போனதும், அவள் உள்ளத்தில் நின்ற உறுதியே வெற்றி பெற்றதும் இராவணனை மிகவும் நாணித் தலை குனியச் செய் திருந்தது.

இந்த நிலையில் ஆஸனத்தில் உட்கார்ந்திருக்கும் இராவணன் முன் குடல் தெறிக்க ஓடிவந்த அரக்கி கள் நடுக்கத்தோடு கூறுகின்றனர்.

"அண்டமெல்லாம் ஆளும் இராவணேச்வரா! ஜெய விஜயீ பவ! ஆனால் இன்று என்ன சொல்வோம், இலங்கேசா! பைத்யக்காரன் துணியை கிழிப்பது போல் திருட்டு முரட்டுக் குரங்கொன்று ஆ! அசோக வனத்தைத் தவிடு பொடியாக்கி விட்டது. உமது வல்லமையை அறியாத அந்த அகம் பாவம் பிடித்த குரங்கைக் கட்டிப் பிடித்து, வாலை ஒட்ட அறுத்து, முச் சந்தியில் அதன் தோலை உரித்து, ரத்தத்தையும் அதன் பித்தத்தையும் கக்கச் செய்ய வேண்டும்.

ஆ! என்ன துணிவு? உமது மனைவைக் கவர்ந்த அந்த சீதையோடு பேசத் துணிந்தவர் இந்த மூன்றுலகத்திலும் யாரிருக்கிறார்கள்? ஆனால் அந்தத் துஷ்டக் குரங்கு சீதையோடும் பேசியிருக்கிறதென்றால் இந்த மன்னிக்க முடியாத குற்றத்திற்கு உரிய தண்டனையை உடனே உத்தரவிடும்" என்று முறையிட்டனர்.

இதைக் கேட்டதும் இராவணேச்வரன் இடி இடியென்று சிரித்தான். "ஆ! ஆ! ஆ! ஒரு குரங்கு அசோக வனத்தை அழித்தது! இதை யார் நம்புவார்கள்?

மூடரும் மொழியார் என்ன
மன்னனும் முறுவல் செய்தான்

"எந்த முட்டாளும் இப்படி அஸம்பாவிதமான பேச்சை வெளியிடத் துணியமாட்டான்" என்று முறுவல் செய்தான்.

இந்த முட்டாள்தனத்தை அவர்களும்தான் உணர்ந்தார்கள். ஆனால் இது உண்மை என்பதை அவர்கள் கண்ணால் கண்டிருக்கிறார்களே! ஆகையால்

அது சாதாரண குரங்கல்லவென்று அதன் பிரபாவத்தைச் சொல்லி இராவணனுக்கு நம்பிக்கை உண்டாக்க முயற்சித்தனர். ஆனால் இது பலிக்கவில்லையே. இராவணேச்வரன் எப்படி இதை நம்புவான்? அரக்கியர் ஓய்ந்து திகைத்துப் போயினர். எப்படித் தங்கள் வார்த்தையை நிரூபிப்பது என்று கவலையுற்றனர். ஆனால் இந்தக் கவலை உடனே நீங்கிப் போயிற்று. எப்படி? அண்டம் வெடித்தது போன்ற ஒரு பயங்கரச் சத்தம் கேட்டது. என்ன சத்தம்?

மண்டலம் கிழிந்த வாயின்
மறிகடல் மோழை மண்ட
எண்டிசை சுமந்த மாவும்
தேவரும் இரியல் போக
தொண்டை வாய் அரக்கி மார்கள்
சூல்வயி றுடைந்து சோர
அண்டமும் பிளந்து விண்ட
தாமென அனுமன் ஆர்த்தான்

ஒரு நாளும் கேட்டறியாத இந்தப் பேரிடிச் சத்தத்தால் இலங்கைத் தீவின் பூ பாகங்கள் வெடித்தன. பூமி பிளந்து வாய்திறந்தது. இந்தப் பள்ளங்களில் சுற்றியுள்ள சமுத்திர ஜலம் வந்து மண்டியது.

உலகத்தைச் சுமக்கும் திசை யானைகளும், உலகத்தைப் பாதுகாக்கும் தேவர்களும், தலை நடுங்கி, குடல் நடுங்கி, ஆட்டங் கண்டு ஓட்டம் கொண்டனர்.

இலங்கையில் ஆதிக்கம் கொண்ட அரக்கர்களின் உயிரினும் இனிய அரிய காதலிகள், அரக்கியர்கள் எத்தனை பேர் கருப்பம் தரித்திருப்பார்கள்! இவர்கள் நாவுக்கினிய, மனதுக்கினிய உணவுகொண்டு வருவதைத் தவிர அரக்கர்களுக்கு என்னதான் வேலை?

உலகத்தின் நாலா பாகத்திலுமுள்ள எத்தனை ஜீவர்களை வதைத்து, ஹிம்ஸித்து அவர்கள் உழைப்பின் பயனையும், உயிரையும் கவர்ந்து வந்து தங்கள் காதலிகளின் பெரு வயிற்றை நிரப்பி யிருப்பார்கள். இதனால் தங்கள் கருவையும் தங்களையும் கொழுக்க வளர்த்திருந்த அரக்கியர்கள் திடீரென்று உண்டான பயங்கரச் சத்தத்தால் தங்கள் சூல் வயிறு உடைந்து, கருப்பம் சிதைந்து, இருதயம் வெடித்து, விலுக் விலுக்கென்று காலை உதைத்துக் கொண்டு மாண்டு விழுந்தனர்.

இத்தனை காரியங்கள் நிகழ, அண்டம் வெடித்துப் பிளந்ததென்று எண்ணும்படியாக ஒரு ஆரவாரச் சத்தம் செய்தார். யார்? வீர அநுமான்!

இந்த ஓசை இராவணன் காதில் விழாமலிருக்குமா? எப்படி விழுந்தது?

அருவரை முழையின் முட்டும்
அசனியின் இடிப்பும், ஆழி
வெருவரு முழக்கும், ஈசன்
வில்லிறும் ஒலியும் என்னக்
குருமணி மகுட கோடி
முடித்தலை குலுங்கும் வண்ணம்
இருபது செவியி னூடு
நுழைந்ததவ் வெழுந்த ஓசை

மலையில் விழுகின்ற பயங்கரமான இடிச் சத்தம் இருண்ட குகைகளில் துருவி நுழைவது போல,

ஆழமான கருங்கடலின் பேரலைகள் கொந்தளித்துக் கரையில் தாக்கும் பெரு முழக்கம் போல,

சனக ராஜன் சபையிலிருந்த சிவ தனுவை எடுத்து இராமர் நாணேற்றும்போது, இவருடைய பலத்தைத் தாங்க மாட்டாமல் அந்த வில் ஒடிந்து விழுந்த படங்கரமான ஓசையைப் போல,

ரத்ன கசிதமான கிரீடங்கள் அணிந்த இராவண னுடைய பத்துத் தலைகளும் குலுங்கக் குலுங்க, அவனது இருபது செவிகளிலும் பழுக்கக் காய்ச்சிய இரும்புபோல் புகுந்தது மாருதியின் ஆரவாரச் சத்தம்.

மயங்கியிருந்த அரக்கிகளுக்கும் இது ஒரு வழி காட்டியது. "இது தான் அந்தக் குரங்கின் சத்தம் இலங்கேசா!" என்று தங்கள் வார்த்தையை இந்தச் சத்தத்தால் நிரூபித்தார்கள்.

இப்படிச் சத்தம் செய்யும் ஒரு குரங்கு இருக்கிற தென்று உணர்ந்ததால் இராவணனுக்குப் பொறுமை உண்டாயிற்று. தனது ஆத்திரத்தை உள்ளடக்கிப் புன்சிரிப்புக் காட்டித் தலையை ஆட்டினன். தனது ஏவலுக்கு காத்திருந்த மகா வீரர்களான கிங்கரரை நோக்கினன்.

வல்லையின் அகலா வண்ணம்
வானையும் வழியை மாற்றி
கொல்லலிர் குரங்கை நொய்தில்
பற்றுதிர் கொணர்திர் என்ருன்

அந்தக் குரங்கு ஓடி விடப் போகிறது. ஆகாயத் திலும் தாவியோட விடவேண்டாம். ஆனல் கொன்று போடாதீர்கள். உயிரோடு பிடித்து இங்கே கொண்டு வாருங்கள்" என்று கட்டளை யிட்டான்.

கடல் மடை திறந்தது போலக் கதித் தெழுந்து புறப்பட்டனர் அரக்கர்கள். ஏன்? மனதுக்கினிய

காரியமல்லவா கிடைத்திருக்கிறது. மனதுக்கினியது எது ?

நானிலம் அதனின் உண்டு
போரென நவிலின் அச்சொல்
தேனினும் களிப்புச் செய்யும்
சிந்தையர், தெரித்தும் என்னின்
கானினும் பெரியர், ஓசை
கடலினும் பெரியர், கீர்த்தி
வானினும் பெரியர், மேனி,
மலையினும் பெரியர் மாதோ ?

சண்டை கிடைக்கிற தென்றால் இனிய தேன், அவர்களுக்கினிய கள் கிடைத்தது போல் தான் வெறி கொள்வார்கள். எப்பேர்ப்பட்டவர்கள் அந்தக் கிங்கரர்? மலைபோல் பெருத்த மேனி. வான் போல் பரந்த கீர்த்தி. கடல் போல் கிளர்ந்த முழக்கம்.

ஆவேசத்தோடு புறப்பட்ட இவர்கள் வேகத் தோடு ஒருவரை ஒருவர் முடுக்குகிறார்கள். எப்படி ?

முன்னின்றார் முதுகு தீயப்
பின்னின்றார் முடுகு கின்றார்

முன்னே போகின்றவர் முதுகு தீய்ந்து போகும் படி பின்னே செல்பவர் கண்களிலும் மூக்கிலும் வாயி லும் தீயையும் புகையையும் கக்கி "போங்கள்; உடனே போங்கள். ஏண்டா தாமதம்? வழி விடுங் களடா பேடிகளா" என்று முடுக்குகிறார்கள். பின்னும்—

வாளுறை விதிர்க்கின் றாரும்
வாயினை மடிக்கின்றாரும்
தோளுறத் தட்டிக் கல்லைத்
துகள்படத் துகைக்கின்றாரும்

தாள்பெயர்த் திடம் பெருது
தருக்கினர் நெருக்கு வாரும்
கோள்வளை எயிறு தின்று
தீயெனக் கொதிக்கின் ருரும்

வீராவேசங் கொண்ட அந்த அரக்கர்கள் வாள்களின் உறையை ஆட்டுகிருர்கள். வாயிதழை மடித்துக் கடிக்கின்ருர்கள். தோளோடு தோள் தட்டுகிருர்கள். கல்லெல்லாம் பொடியாக காலால் பூமியில் உதைத்துத் துகைக்கின்ருர்கள். முன்னே போகக் காலைப் பெயர்த்து எடுத்து விட்டார்கள். ஆனல் காலை முன்னே வைக்க இடமில்லை. மமதை கொண்டு நெருக்குகிருர்கள். வளைந்த பற்களை நெற நெற வென்று கடித்துத் தீ போல் கொதிக்கின்ருர்கள். அரக்கர்கள் வீரம் அளவிட முடியாதது தான். ஆனல் அதை உபயோகிக்கும் வழி தான் தீமையானது.

இவர்கள் மாருதியைச் சூழ்ந்து கொண்டு ஆரவாரம் செய்து ஆயுதங்களை வீசுகிருர்கள். எழுந்தார் மாருதி. வாலை பூமியில் அடித்துக் கிளம்பி ஆரவாரம் செய்தார். ரணரங்க ஜெய கோஷம் செய்து வாழ்த்தினுர். யாரை ? எப்படி ?

ஜயத் யதிபலோ ராமோ
லக்ஷ்மணஸ்ச மஹாபல :
ராஜா ஜயதி ஸுக்ரீவோ
ராக வேணுபி பாலித :

" அதிபலசாலியான ராமர் ஜெயிக்கிருர். மஹா பலசாலியான லக்ஷ்மணர் ஜெயிக்கிருர். இராம லக்ஷ்மணரால் பாது காக்கப்பட்ட எங்கள் ராஜா சுக்ரீவர் ஜெயிக்கிருர்" என்று ஜெய கோஷமிட்டார்.

தாஸோஹம் கோஸலேந்த்ரஸ்ய
ராமஸ்யாக் லிஷ்ட கர்மண :
ஹநுமான் சத்ரு ஸைன்யானும்
நிஹந்தா மாருதாத்மஜ :

கஷ்ட மின்றிக் காரியம் செய்யும் அந்தக் கோஸலா புத்ரன் ராமருக்கு தாஸன், வாயு பகவானுக்குப் பிள்ளை, எதிரிப் படைகளை நொறுக்கும் ஹநுமான் நான்.

ஆயிரம் இராவணர்கள் வந்தாலும் என் முன் நிற்க முடியாது. மலைகளையும் மரங்களையும் பிடுங்கி நொறுக்கி விடுவேன். அரக்கர்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே இலங்கையைக் கலக்கி, எங்கள் சீதா தேவியை வணங்கி, என் வேலையை முடித்துக் கொண்டு போகிறேன் என்று கர்ச்சித்தார். அங்கிருந்த தோரணக் கம்பத்தைப் பிடுங்கி அரக்கர்களை அடித்து நொறுக்கினர். இன்னும்,

பற்றித் தாளொடு தோள்பறித்
தெறிந்தனன், பாரின்
இற்ற வெஞ்சிறை வெற்பினம்
ஆமெனக் கிடந்தார்
கொற்ற வாலிடைக் கொடுந்தொழில்
அரக்கரை அடங்கச்
சுற்றி வீசலில் பம்பரம்
ஆமெனச் சுழன்ருர்

அரக்கர்கள் காலை வாரிக் 'கோட்' அடிப்பது போல் அடித்தார். கைகளைப் பற்றிக் கரகர வெனச் சுழற்றி அடித்தார். சிறகிழந்த மலைபோல் அரக்கர்கள் மாண்டு வீழ்ந்தனர். சிலரை வாலில் சுற்றி வானில் வீசினர். ஆட்டிவிட்ட பம்பரம் போல் அரக்கர்கள் சுழன்று விழுந்தனர்.

ஓடிக் கொன்றனன் சிலவரை
உடலுடல் தோறும்
கூடிக் கொன்றனன் சிலவரைக்
கொடிநெடு மரத்தால்
சாடிக் கொன்றனன் சிலவரை
பிணந்தொறும் தடவித்
தேடிக் கொன்றனன் சிலவரைக்
கறங்கெனத் திரிவான்

மாருதி ஓட்டமாய் ஓடும்போதே பலர் மாய்ந்தனர். சிலரைக் கிட்ட நெருங்கிக் கொன்றார். தோரண மரத்தால் சிலரை அடித்து வீழ்த்தினார். பயத்தால் சிலர் பிணங்கள் மத்தியில் மறைந்து கொண்டனர். அவர்களை எல்லாம் தேடித் தேடிக் கண்டு பிடித்துக் கொன்றார். அந்த பயங்கரமான ரண களத்தில் காற்றுடிபோல் சுழன்று வரும் மாருதி சீக்கிரமே எதிர்த்தவர் யாரையும் எமனுலகுக்கு அனுப்பி விட்டார்.

இதைக் கண்டு அஞ்சி மிஞ்சிய தூதரில் சிலர் இராவணனிடம் அறிவிக்க ஓடினர்.

47. அத்தியாயம்

வீரருள் வீரன்

கிங்கரர்கள் அழிந்ததைக் கேட்டான் இராவணன். இரத்தம் போல் சிவந்த அவன் கண்கள் நெருப்பைக் கக்கின. அந்த இருபது கண்களும் பக்கத்தில் கை கூப்பி நின்ற ஜம்புமாலி மேல் விழுந்தன.

வாம்பரித் தானையோடும்
வளைத்ததன் மறனை மாற்றி
தாம்பினில் பறித்துத் தந்தென்
மனச்சினம் தணித்தி என்றான்

"ஹே ஜம்புமாலி! நீ சேனையோடு சென்று அந்தக் குரங்கின் கொட்டத்தை அடக்கி, அதைக் கயிற்றால் கட்டி, என் முன் கொண்டு வா" என்று கட்டளை இட்டான்.

ஜம்புமாலிக்கு மகத்தான சந்தோஷம். 'இத்தனை பேர் இருக்கும்போது இராவணேச்வரன் நம்மைப் பார்த்துக் கட்டளையிட்டாரல்லவா' என்று பூரித்தான். மகிழ்ச்சியோடு வணங்கினான். பெருமிதத்தோடு படைகள் சூழப் புறப்பட்டான். சேனையை அணி வகுத்து மாருதியை எதிர்த்தான். அத்தனை வீரரும் மாருதியை வளைத்து ஆயுதங்களை எறிந்தனர். எழுந்தார் மாருதி. அந்தச் சேனையில் புகுந்தார்.

கரிகொடு கரிகளைக்
களப்படப் புடைத்தான்
பரிகொடு பரிகளைத்
தலத்திடைப் படுத்தான்
வரிசிலை வயவரை
வயவரின் மடித்தான்
நிரைமணித் தேர்களை
தேர்களின் நிரைத்தான்

யானைகளை எடுத்து யானைகளை அடித்தார். குதிரைகளால் குதிரைகளையும், ஆள்களால் ஆள்களையும் அழித்தார். தேர்களால் தேர்களைச் சிதைத்தார். இப்படிப் படைகள் அழிந்தன. ஜம்புமாலி தனித்துப் போனான். ஆனாலும் அவன் ஆயுதங்களை ஏவிக் கடும்போர் புரிந்தான். இவனுடைய ஆயுதங்களை எல்லாம் மாருதி ஒரு இரும்புத் தடியால் தடுத்துக் கொண்டிருந்தார். ஜம்புமாலி இதை அம்பால் அறுத்தான். வந்தது கோபம் மாருதிக்கு.

சலித்தான் ஐயன் கையால் எய்யும்
சரத்தை உகச்சாடி
ஒலித்தா ரமரர் கண்டார் ஆர்ப்பத்
தேரி னுட்புக்குக்
கலித்தான சிலையைக் கையால் வாங்கி
கழுத்தி னிடையிட்டு
வலித்தான் பகுவாய் மடித்த மலைபோல்
தலைமண் ணிடை விழ.

ஜம்புமாலியின் அம்புகளை எல்லாம் கையாலேயே தடுத்தார். வேகமாக அவன் தேரை நோக்கி நடந்தார். கண்ட தேவர்கள் எல்லாம் கைகொட்டி ஆரவாரம் செய்ய அந்தத் தேரில் புகுந்தார். மகத்தான கோபத்தோடு, ஜம்புமாலி தொடுக்கின்ற அம்புகளை லக்ஷியம் செய்யாமல், அவன் கையிலிருந்த வில்லை

வெடுக்கென்று பிடுங்கினர். அவன் கழுத்தில் மாட்டி இழுத்தார். அவன் தலை மண்ணில் உருண்டது. ஜம்புமாலி ஒழிந்தான்.

இதைக் கேட்ட இராவணன் பல்லை நெற நெற வென்று கடித்து மந்திரி பிள்ளைகள் ஏழு பேரை அனுப்பினன். தீக் கொழுந்து போன்ற இந்த எழுவரும் சேனையோடு எழுந்தனர். மலையில் பொழியும் மழை போல அம்புகளால் மாருதியை மூடினர்.

மாருதி வானில் கிளம்பி மேகங்களைக் கலைக்கும் காற்றைப் போலத் திரிந்து அரக்கர்களை அழித்தார். சிலரைக் கையாலும் சிலரைக் காலாலும் தீர்த்தார். சிலரைக் குத்தி ஒழித்தார். சிலரை நகங்களால் கிழித்தார். அவருடைய வீர கர்ச்சனையாலேயே சிலர் விழுந்து மாண்டனர். சிறிது நேரத்திலேயே மந்திரி பிள்ளைகள் எழுவரும் மாய்ந் தொழிந்தனர்.

வீராதி வீரனை ஜம்புமாலியும், மந்திரி புத்திரர் களும் அழிந்தார்கள் என்றால் இராவணனுக்கு எப் படி யிருக்கும்?

உன்ன உன்ன உதிரக் குமிழி
விழியு டுமிழ்கின் றன்
சொன்ன குரங்கை யானே பிடிப்பன்
கடிது தொடர்ந்தென் று

நினைக்க நினைக்க அடக்க முடியாத ஆத்திரத் தால் கண்ணில் ரத்தம் கக்குகின்றான். 'அது சாதா ரணக் குரங்காகக் காணப்பட வில்லை. நானே அதைப் பிடிக்கிறேன்' என்றெழுந்தான். விடுவார் களா சுற்றி யிருப்பவர்?

"இலங்கேசா! ஒரு குரங்கின்மேல் இராவணேச் வரன் போவதென்றால் ஒரு கொசுவின் மீது கருடன்

படை யெடுத்தது போலல்லவா இருக்கும். இதைக் கேட்டால் உமது மார்பில் கொம் பொடித்துக் கொண்டு தலை கவிழ்ந்த திக்கு கஜங்கள் எல்லாம் மதர்த்துப் போகாவா? உமது தோளால் குலுங்கிய வெள்ளிமலை தலை நிமிர்ந்து விடாதா? தேவர்களும் மூவர்களும் முகத்தில் புன்முறுவல் பூக்க மாட்டார்களா?

அன்றியும் உமக்கு வேறு ஆளில்லை யென்றல்லவோ தோன்றும். இதுவரை பலஹீனரையே அனுப்பினீர்கள். எங்களை அனுப்பி வெற்றி கொள்ளும் என்று பிரார்த்தித்தனர், ஐந்து சேனுபதிகள். இராவணனும் இணங்கினன்.

விருபாக்ஷன், யூபாக்ஷன், துர்தரன், பிரகஸ்வன், பாஸகர்ணன் என்ற ஐந்து சேனுபதிகளும் புறப்பட்டனர். இவர்கள் எப்போர்ப்பட்டவர்கள்? குபேரனுடைய அளகாபுரியைக் கொள்ளையிட்டணிந்த ஆபரணத்தினர். இன்னும்,

இந்திரன் இசையிழந்
தேகுவா லிகல்
தந்திமுன் கடாவினன்
முடுகத் தாமதன்
மந்தர வாலடி
பிடித்து வல்லையேல்
உந்துதி யென
வலிந்த ஊற்றத்தார்

அமராவதி மீது படையெடுத்தபோது, இந்திரன் தோற்றுத் தனது பெருமையை எல்லாம் இழந்து ஓடுகிறான். வேகமாகப் போகும்படி நான்கு கொம்புகளுடைய தனது ஐராவதத்தை முடுக்கினன். விட்டார்களா இவர்கள்? அந்த யானையின் வாலைப் பிடித்து இழுத்து நிறுத்தினர்கள். சக்தி யிருந்தால்

யானையை நடத்து பார்க்கலா மென்று இந்திரனுக்கு சவால் விடுத்தார்கள். அசைய முடியுமா இந்திரன்? இத்தகைய பலசாலிகளான ஸேனுபதிகள். இன்னும்,

நீனிறத் திராவணன் முனிவு நீக்குவான்
காலனைக் காலினிற் கையிற் கட்டினர்

பிரம்மா ஜீவர்களுக்கு வயதை விதித்தார். அந்த விதிப்படி எமன் உயிர்களைக் கவர்ந்து பிரம்மாவின் கட்டளையை நிறைவேற்றினன். ஏகாதிபத்யம் கொண்ட இராவணனுக்கு இது பொறுக்குமா? வந்தது கோபம். இராவணன் கோபம் தணியும் பொருட்டு இந்த ஸேனுபதிகள் காலனைக் காலிலும் கையிலும் கட்டிக்கொண்டு வந்தார்களாம். அனைவர் உயிரையும் கட்டிப் போகும் காலனையும் கட்டி வரும் சேனுபதிகள் இப்பொழுது மாருதியைக் கட்டி வரப் புறப்பட்டார்கள். இவர்களுக்குத் தக்க சேனைகளும் புறப்பட்டன. மாருதியைச் சூழ்ந்து ஆயுதங்களை வீசினர்.

எழுந்தார் மாருதி. விச்வ ரூபம் கொண்டார். இரும்புத் தடியொன்றால் அந்தச் சேனையை நொறுக்கினர்.

உலந்தது தானை உவந்தனர் உம்பர்
அலைந்தலை யுற்றதவ் வாழி யிலங்கை
கலந்த தழுங்குர லின் கட லோதை
வலந்தரு தோளவர் ஐவரும் வந்தார்

சேனை அழிந்தது. தேவர்கள் உவந்தனர். புயலில் அகப்பட்ட கப்பல் போல் இலங்கை அலைந்து தடுமாறியது. எங்கும் ஒரே அழுகைக் குரல். இந்த நிலையில் ஸேனுபதிகள் ஐவரும் மாருதி மேல் திரும்பினர்.

ஒருவனுடைய தேரை உடைத்தார் மாருதி. வானில் எழுந்தான் அந்த வேஞுபதி. மாருதியும் வானில் தொடர்ந்து இருப்புத் தடியால் அடித்தார். இதை வில்லால் தடுத்தான் வேஞுபதி. வில் முறிந்தது. முறிந்த வில்லால் மாருதியை அடித்துப் பின்னும் பாய்ந்து ஒரு மலையைப் பெயர்த்தான் அரக்கன். ஆனுல் மாருதியோ அந்தத் தடியாலேயே அடித்து அவனை ஒழித்தார்.

பாக்கி நாலுபேர். இதில் ஒருவனுடைய தேரை எடுத்து ஆகாயத்தில் வீசினுர் மாருதி. அந்த அரக்கனே பூமியில் பாய்ந்தான். மாருதியோ,

குதித்தனன் மால்வரை
மேனி குழம்ப
மிதித்தனன் வெஞ்சின
வீரருள் வீரன்

பூமியில் பாய்ந்த அவன் மீது பாய்ந்தார். வீரருள் வீரரான மாருதி அவனை மிதித்துக் கொன்ருர்.

பாக்கியுள்ளவர் மூவர். இருவருடைய தேர்களை இரு கையாலெடுத்து எழுந்தார். அவர்கள் இருவரும் வானில் நின்று மல் யுத்தம் செய்தனர். இருவரையும் வாலால் பிணைத்து தோள்களை ஒடித்துக் கொன்ருர்.

பாக்கி ஒருவன் தேரோடு நிற்கக் கண்டார்.

மின்றிரி வன்தலை மீது குதித்தான்
பொன்றி யவன்புவி தேரோடு புக்கான்

தேரின் மேல் குதித்தார். மாண்டு மடிந்த அந்த வேஞுபதி தேரோடு மண்ணில் புதைந்து

போனான். இப்படி ஐவரையும் கொன்று மாருதி நிற்கிறார். இதற்கு ஒரு உபமானம் கூறுகிறார், கம்பர்.

வஞ்சமும் களவும் வெஃகி
வழியலா வழிமே லோடி
நஞ்சினும் கொடிய ராகி
நவை செயற் குரிய நீரார்
வெஞ்சின அரக்கர் ஐவர்
ஒருவனே வெல்லப்பட்ட
அஞ்செனும் புலன்கள் ஒத்தார்
அவனும்நல் லறிவை ஒத்தான்

சேனாபதி ஐவருடைய மனமும் செயலும் எப்படி? திருட்டிலும் வஞ்சகத்திலும் தான் ஆசை. தவறான வழிகளில்தான் பழக்கம். விஷத்தைக் காட்டிலும் தீங்கு செய்பவர்.

இவர்களைப் பஞ்ச இந்திரியங்களுக்கும் ஒப்பிடுகிறார். சாதாரணமானவர் இந்திரியங்களுக்கும் திருட்டிலும் வஞ்சகத்திலும் ஆசை. தவறான வழியில் ஓட்டம். விஷத்தைக் காட்டிலும் தீமை செய்வது தொழில்.

இந்தத் தீய பழக்க முடைய இந்திரியங்களை வெல்லக் கூடியது அறிவு ஒன்றுதான். பஞ்ச இந்திரியங்களைப் போன்ற பஞ்ச சேனாபதிகளை வென்ற மாருதி அழியாத அறிவுபோல் அசையாமல் நின்றார் என்கிறார் கம்பர்.

சேனாபதிகளும் சேனைகளும் அழிந்ததைக் கண்ட தூதர் ஓடினர். இராவணன் செவித் தொளை தீயச் சொல்லுகின்றனர்.

தானேயும் உலந்த தைவர்
 தலைவரும் சமைந்தார் தாக்கப்
போனபின் மீள்வேம் யாமே
 அதுவும் போர் புரிகி லாமை
வானேயும் வென்றுளோரை
 வல்லேயின் மடிய நூறி
ஏனைய ரின்மை சோம்பி
 இருந்ததக் குரங்கும் என்றுர்

இலங்கேசா! இங்கிருந்து போன சேனைகள் அழிந்தன. சேனுபதிகள் அழிந்தனர். நாங்கள் தான் மிச்சம். அதுவும் நாங்கள் சண்டை செய்திருந்தால் திரும்பி வர மாட்டோம். சண்டை செய்யாமல் சும்மா பார்த்துக் கொண்டிருந்ததால் எங்களைக் கொல்லாமல் விட்டது அக் குரங்கு. அது மிகப் பொல்லாததாக இருக்கிறது. தேவர்களை வென்ற வீரர்களை யெல்லாம் நிமிஷத்தில் கொன்று போடுகிறது. கொஞ்சங்கூட அதற்குச் சிரமம் உண்டாக வில்லை. இன்னும் சண்டைக்கு யாரும் வரவில்லையே என்று சோம்பி உட்கார்ந்திருக்கிறது என்று வணங்கிக் கூறினர், தூதர்.

48. அத்தியாயம்

புகழ் தேயாதான்

சேனைபதிகள் அழிந்து பட்டனர் என்று கேட்ட இராவணன் பெரு மூச்சு விட்டான். இந்தத் தீக் காற்றால் அவன் மார்பிலிருந்த மாலைகளும். இவற்றை மொய்த்திருந்த வண்டுகளும் கரிந்தன. இராவணன் கண்கள் அரக்குப் போல் சிவந்தன. யுத்தம் செய்ய நாட்டங் கொண்டான்.

அப்பொழுது அவன் பக்கத்திலிருந்த மகன் அக்ஷ குமாரன் வணங்கிக் கூறுகிறான்.

"எந்தையே! முன்னம் இந்திரனைப் பற்றித் தரும்படி எனது அண்ணன் மேக நாதனை ஏவினீர். அந்த சந்தர்ப்பம் அவருக்குக் கிடைத்ததால் இந்திர ஜித் (இந்திரனை ஜெயித்தவன்) என்ற பெருமையான பட்டம் அவருக்குக் கிடைத்தது. எனக்கு அந்த சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை என்று நான் வருந்தி இருக்கிறேன். ஒரு அற்பமான குரங்கின் மேலாவது என்னை ஏவக் கூடாதா? அந்தக் குரங்கு என் கை தப்பிப் போய் விடுமானால் என்னை உம்மிஷ்டப்படி தண்டியும்" என்று விரத்தோடு பேசினான்.

இராவணனும் சம்மதித்து விடை கொடுத்தான். அக்ஷ குமாரன் தன்னை ஒத்த இளைஞர் சூழப் புறப் பட்டான். எத்தகைய இளைஞர்?

ஆறிரண் டடுத்த எண்ணின்
ஆயிரம் குமரர், ஆவி
வேறிலாத் தோழர், வென்றி
அரக்கர்தம் வேந்தர் மைந்தர்
ஏறிய தேரர் சூழ்ந்தார்
இறுதியின் யாவும் உண்பான்
சீறிய காலத் தீயின்
செறிசுடர்ச் சிகைகள் அன்னர்

12 ஆயிரம் பேர். ராக்ஷஸ ராஜாக்களுடைய பிள்ளைகள். அக்ஷனுடைய உயிர்த் தோழர். அத்தனை பேரும் மஹாரதர்கள். கொழுந்து விட்டெரியும் காலாக்னியின் சிகைகள் போன்றவர். தேர் ஏறி அக்ஷனைச் சூழ்ந்து சென்றனர்.

இதல்லாமல் பல படைகள் சூழப் புறப்பட்ட அக்ஷன் மாருதியை அடைந்தான். கண்டார் மாருதி. இவன்து சுப்பிரத் தோற்றத்தையும் அள விலா ஆற்றலையும் எண்ணி மாருதி சிந்தித்தார். இதற்குள் அக்ஷனும், நண்பரும், படைஞரும் மாருதியை அஸ்திர சஸ்திரங்களால் பிளந்தனர். அக்ஷனுடைய போர்த் திறமையை உணர்ந்தார் மாருதி. வியக்கின்றார்.

அபாலவத் பால திவாகர ப்ரப:
கரோத்யயம் கர்ம மஹன்மஹாபல:
ந சாஸ்ய ஸர்வாஹவ கர்மசோபின:
ப்ரமாபணே மே மதிரத்ர ஜாயதே

இவனொரு இளைஞன். ஆனால் இளைஞனைப் போலில்லை இளஞ் சூரியனைப் போல் பிரகாசிக்கும் இவன் போர் முறைகளில் தெளிந்து சிறந்தவனாகக் காணப்படுகிறான். ரண பண்டிதனான இந்த இளை ஞனைக் கொல்ல எனக்கு மனம் வரவில்லை என்று

மாருதி சிந்தித்தார். வீரம் முதலிய நற்குணங்கள் எதிரியிடம் இருந்தாலும் போற்றப் படுகிறது. வீரர்கள் வீரர்களை மெச்சுகிறார்கள். பல சமயங்களில் எதிரியின் வீரத்தைக் கண்டு நட்புக்கொள்ளுகிறார்கள்.

இப்படி மாருதி சிந்தித்துக் கொண்டிருக்கும் போதே அக்ஷன் அதியற்புதமான யுத்த முறைகளைக் கையாண்டு மாருதியை அடித்துப் பிடித்துப் போக முயற்சிக்கிறான். மாருதி வேகங் கொள்கிறார். வீரனைக் கொல்வது விரும்பத் தக்க தல்ல. ஆனால் அவன் தன்னை அடிமைப் படுத்தவும் அநுமதிக்க முடியாதல்லவா?

ந கல்வயம் நாபி பவேதுபேக்ஷித:
பராக்ரமோ ஹ்யஸ்ய ரணே விவர்த்ததே
ப்ரமாபணம் த்வேவ மமாஸ்ய ரோசதே
ந வர்த்த மானோக்னி ருபேக்ஷிதும் க்ஷம:

"இவனது பலமும் உத்ஸாஹமும் மேலும் மேலும் வளருகிறது. அசட்டையா யிருக்கக்கூடாது. வளர்ந்து படர்ந்து வரும் நெருப்பை அலக்ஷியம் செய்யலாமா? வேறு வழியில்லை. இவனைக் கொல்வதே சரி" என்று மாருதி தீர்மானித்தார்.

யானைகள், குதிரைகள், தேர்கள் காலாட்கள் என்ற அக்ஷனுடைய சதுரங்கப் படைகளையும் அழித்தார். இவனைச் சூழ்ந்து நின்ற இளைஞர்களையும் அழித்தார்.

நின்றார் நின்றிலர், தனிநின் றானொரு
நேமித் தேரொடும் அவனேரே
சென்றான், வன்றிறல் அயில்வா யம்புகள்
தெரிகின்றான், விழி எரிகின்றான்

சுற்றி நின்றவர் யாரும் பாக்கியில்லை. அக்ஷன் தனித்தான். ஆனால் இதற்காகக் கவலைப்பட வில்லை. மாருதி எதிர் தேரைச் செலுத்தினன். கண்ணி லிருந்து தீப்பறக்க அக்ஷன் வில்லிலிருந்து அம்புகள் பறந்தன.

அக்ஷனுடைய அம்புகளை மாருதி இரும்புத் தடி யால் தடுத்தார். அக்ஷனே அந்த இரும்புத் தடியை யும் ஒடித்தான். இவருக்கு வேறு ஆயுதம் ஒன்று மில்லை.

கை தானே பொரு படையாகத் தொடர்
காலார் தேரதன் மேலானன்

கையே ஆயுதமாக, காலே தேராகச் சென்று மாருதி அக்ஷனுடைய சாரதியை அழித்தார். அக்ஷன் சும்மா யிருப்பானா? எண்ணிறந்த அம்புகளை மாருதி மீது பொழிந்தான்.

மார்பிற் சென்றன சில, பொற்றோளிடை
மறைவுற்றன சில, மறவோனும்
தேரில் சென்றவன் வயிரக் குனிசிலை
பற்றிக் கொண்டெதி ருற நின்றான்

சில அம்புகள் மாருதியின் மார்பில் நுழைந்தன. தோளில் மறைந்தன சில. இவை துன்பத்தை உண் டாக்குமல்லவா? ஆனால் இதற்கு அஞ்சினரா மாருதி? நேரே சென்றார். அம்பை எய்வதற்கு ஆதாரமா யிருந்த அக்ஷனுடைய வில்லைப் போய் பற்றிக் கொண்டு அவனெதிரே நின்றார்.

(இப்படி ஆயுதம் தாங்கிய பலாத்கார யுத்தத்தில் எதிரியின் அம்புகளுக்கிடையே அல்லது குண்டுகளுக் கிடையே சென்று அவனது வில்லை அல்லது துப்பாக்கி

யைக் கைப்பற்றுவது சகஜமாகவே நடக்கிறது. ஆனால் எதிரியின் ஆயுதத்தைக் கைப்பற்றி அவனை அடித்துக் கொல்கிறார்கள்.

ஆனால் அஹிம்ஸா யுத்தத்தில் எதிரியை அடித்துக் கொல்லக்கூடாது. அவன் ஆயுதத்தைப் பிடுங்கி அவன் தீமை செய்வதைத் தடுப்பது அவசியமாகும்.

அஞ்சாத நெஞ்சு படைத்த மாருதி தனது வில்லைப் பற்றிக் கொண்டதைக்கண்ட அக்ஷன், அதை விடுவித்துக் கொள்ள தனது பலம் கொண்ட மட்டும் இழுத்தான். விடுவாரா மாருதி? இருவருக்கும் இடையே வில் முறிந்தது. அக்ஷன் உடனே உடை வாளை உருவிக் குத்தினான். அந்த வாளை மாருதி தன் கையால் தடுத்துப் பொடித்தார். இனி அக்ஷன் மல் யுத்தம் செய்கிறான். என்ன நடந்தது?

வாளாலே பொர லுற்று னிற்றது
　　மண்சேரா முனம் வயிரத்திண்
தோளாலே பொர முடுகிப் புக்கிடை
　　தழுவிக் கோடலும் உடல் முற்றும்
நீளா ரயிலென மயிர்தைத் திடமணி
　　நெடுவால் அவனுடல் நிமிர்வுற்று
மீளா வகையுடை சுற்றிக் கொண்டது
　　பற்றிக் கொண்டனன் மேலானேன்

அக்ஷன் வாள் முறிந்து, மல் யுத்தம் செய்ய விரைந்த போது மாருதி அப்படியே அவனைக் கட்டிக் கொண்டார். அவருடம்பு மயிர் முழுவதும் அத்தனை சூலங்கள் போல அக்ஷன் உடம்பில் பாய்ந்தன. இதற்கிடையே மாருதியின் வால் புரிமனை சுற்றுவதுபோல் அக்ஷன் உடல் முழுவதும் சுற்றிக் கொண்டது.

அக்ஷன் இப்படி அப்படி அசைய முடிய வில்லை. மாருதி அவனைப் பிடித்துக் கொண்டார்.

பற்றிக் கொண்டவன் வடிவா ளெனவொளிர்
பல்லிற் றுக நிமிர் படர் கையால்
எற்றிக் கொண்டலின் இடை நின் றுமிழ்சுடர்
இனமின் னினம் விழு வனவென்ன
முற்றிக் குண்டல முதலா மணியுக
முறைநாலா இவர் குடர் நாலக்
கொற்றத் திண்சுவல் வயிரக் கைகொடு
குத்திப் புடையொரு குதிகொண்டான்

பற்றிக் கொண்டு மாருதி அக்ஷனுடைய வாள் போன்ற பற்கள் உதிர எற்றினர். தனது வயிரம் பொருந்திய கையால் அவன் தலையில் ஒரு குத்துக் கொடுத்து அந்த வேகம் தணியும்படி ஒரு குதியும் குதித்தார். அக்ஷனுடைய குண்டலங்கள் முதலான ஆபரணங்கள் ஆகாயத்திலிருந்து மின்னல் கொடிகள் விழுவது போல் பூமியில் விழுந்தன. குடலும் வெளியே வந்து விட்டது. ஆனல் இன்னம் உயிர் போக வில்லை. உடனே மாருதி,

மீத்தா நிமிர்சுடர் வயிரக் கைகொடு
பிடியா விண்ணொடு மண் காணத்
தேய்த்தா னூழியின் உலகேழ் தேயினும்
ஒருதன் புகழிறை தேயாதான்

அக்ஷனைத் தனது கையால் பிடித்துப் பூமியில் தேய்த்துக் கொன்ருர். மண்ணவரும் விண்ணவரும் வியந்து புகழ்ந்தனர். தனி வந்த மாருதி வெற்றி கொண்டு நின்ருர். எஞ்சி நின்ற அரக்கர்கள் பட்ட பாட்டை கம்பர் வருணிக்கிருர். படியுங்கள்,

புண்டாழ் குருதியின் வெள்ளத் துயிர் கொடு
புக்கார் சிலர், சிலர் பொதிபேயின்
பண்டா ரத்திடை இட்டார் தம்முடல்
பட்டார் சிலர் சிலர் பயமுந்தத்
திண்டாடித் திசை அறியா மறுகினர்
செற்றார் சிலர், சிலர் செலவற்றார்,
கண்டார் கண்டதோர் திசையே விசை கொடு
கால் விட்டார், படை கை விட்டார்

அரக்கரில் சிலர் ரத்த ஆற்றில் புகுந்து உயிர்தப்ப நினைத்தார்கள். சிலரோ பேய்க்கூட்டம் பிணக்கூட்டங்களுக் கிடையே தம்மை மறைத்துக் கொண்டனர். சிலர் பயத்தால் மாண்டனர். சிலர் வழி தெரியாமல் திகைத்தனர். சிலர் அப்படியப்படியே ஆயுதங்களைப் போட்டு விட்டு கண்ட கண்ட திசைகளில் ஓட்டம் பிடித்தனர்.

மீனாய் வேலையை உற்றார் சிலர், சிலர்
பசுவாய் வழிதொறும் மேய்வுற்றார்
ஊனார் பறவையின் வடிவுற்றார் சிலர்
சிலர் நான் மறையவர் உருவானார்
மானார் கண்ணிள மடவா ராயினர்
முன்னே தங்குழல் வகிர்வுற்றார்
ஆனார் சிலர், சிலர் ஐயா நின்சரண்
என்றார், நின்றவர் அரியென்றார்

மாருதியிடமிருந்து தப்பியோட முயலும் அரக்கர் பற்பலரும் பற்பல உபாயங்களைக் கையாண்டார்களாம். சிலர் மீன் வடிவோடு சமுத்திரத்தில் புகுந்தனர். சிலர் பசு வேடங் கொண்டு மேய்ந்து கொண்டிருந்தார்கள். சிலர் கழுகு போன்ற பறவைகளின் வடிவங் கொண்டு பிணங்களைக் கொத்திக் கொண்டிருந்தனர். சிலர் சண்டையில் ஈடுபடாத அந்தணர் வேடங் கொண்டு வேதம் பாட ஆரம்பித்

தனர். இன்னும் சிலரோ வகிர்ந்த கூந்தலோடு பெண் வேஷம் கொண்டனர். சிலரோ மாருதியின் காலில் விழுந்து 'அபயம், அபயம்' என்று கதறினர். இன்னும் சிலர் எப்படியோ இவர் ஹரிபக்தன் என்று தெரிந்துகொண்டு ஹரி ஹரி என்று பஜனை செய்தன ராம். மற்றும்

தந்தா ரமுமுறு கிளையும் தமையெதிர்
    தழுவுந் தொறுநும தமரல்லேம்
வந்தேம் வானவர் என்றே கினர் சிலர்
    சிலர் மானுய ரென வாய் விட்டார்
மந்தா ரங் கிளர் பொழில்வாய் வண்டுகள்
    ஆனுர் சிலர் சிலர் மருள் கொண்டார்
இந்தா ரெயிறுகள் இறுவித்தார் சிலர்
    எரிபோற் குஞ்சியை இருள் வித்தார்

தலை தெறிக்க ஓடுகிற அரக்கர்களில் சிலர் இலங்கையில் புகுந்தனர். இவர்கள் தங்கள் வீடு வாசல்களை மறந்து ஓட்டத்திலேயே ஞாபகமாக இருக்கிறுர்கள். இப்படி வெறிகொண்டது போல் இவர்கள் ஓடுவதைக் கண்டு மனைவி மக்கள், உற்றுர் உறவினர் தடுத்தால் 'நாங்கள் அரக்கர் அல்லவே. உங்களுக்கும் எங்களுக்கும் என்ன சம்பந்தம்? நாங்கள் தேவர்கள் அல்லவா? நாங்கள் மனிதரல்லவா? என்று திமிறிக் கொண்டு ஓடுகிறுர்கள். ஏன்? அரக்கர் என்றுல் அந்தக் குரங்கு அடிக்குமே என்ற பயம். தேவர் என்றும் மனிதர் என்றும் தப்பித்துக்கொள்ள அவர்கள் கொண்ட உறுதி, உறவினரையே மறந்து புறக்கணிக்கிறது. சிலர் சோலைகளில் வண்டுகள் ஆனுர்கள். சிலர் மருள் கொண்டார்கள். இன்னும் சிலர் என்ன செய்கிறுர்கள் பாருங்கள். இவர்களை அரக்கராகப் பிரித்துக்காட்டுவது எது? செம்மட்டை மயிரும் கோரைப் பல்லும் அல்லவா? ஆகவே சிலர் பிறைச் சந்திரன் போன்ற கோரைப்பற்களை ஒடித்து

மறைத்தனர். சிலரோ அந்தி வானம் போன்ற தங்கள் செம்மட்டை மயிரைக் கருப்பாக்கிக் கொண்டார்கள். இப்படி அரக்கர்கள் மாருதியிடம் உண்டான பயத்தால் கதிகலங்கி நிலை யிழந்தார்கள் என்று கம்பர் நகைச் சுவை ததும்பக் கூறுகிறார். வால்மீகத்தில் இவ்வளவு விரிவாக இல்லை.

49: அத்தியாயம்

அறத்தின் கண்ணீரோடும் சாய்ந்தான்

தன் மகன் அக்ஷன் மாருதியால் மடிந்ததைக் கேட்டான் இராவணன். தனது மூத்த பிள்ளை இந்திரஜித்தை அழைத்தான்.

பிரசித்தி பெற்ற அந்த இந்திரஜித்தன் தனது தம்பி மாண்டதைக் கேட்டு வருத்தமும், ஆத்திரமும் அடைந்தான். மானத்தால் புழுங்குகின்றான். எப்படி ?

தம்பியை உன்னுந் தோறும்
தாரைநீர் ததும்பும் கண்ணன்
வம்பியல் சிலையை நோக்கி
வாய்மடித் துருத்து நக்கான்
கொம்பியல் மாய வாழ்க்கைக்
குரங்கினல் குரங்கா ஆற்றல்
எம்பியோ தேய்ந்தான் எந்தை
புகழன்றோ தேய்ந்த தென்றான்

எல்லையில்லா ஆற்றல் கொண்ட இளைஞர்களின் தலைவனாய், இலங்கையின் எதிர்கால நம்பிக்கையா யிருந்த தன் தம்பி அக்ஷன் இறந்ததை நினைந்து நினைந்து கண்ணிலிருந்து தாரை தாரையாக நீரைப் பெருக்குகிறான். தன் கையிலுள்ள வீர வில்லை நோக்குகிறான். 'என் தம்பியும் போரில் மடிய, நான் இந்த வில்லை வீணே சுமந்திருக்கிறேனல்லவா?' என்று பல்லைக் கடித்துக் கோபத்தால் சிரித்தான்.

ஆனால் இத்தனையும் ஒரு மாயக் குரங்கால் நடந்து விட்டதென்றெண்ணும் போது அவமானத் தால் திகைத்தான்.

அன்றியும் கட்டுக் காவலுடைய இலங்கையில் ஒரு குரங்கு வந்து அசோக வனத்தை அழித்து, அரக்கர்களை வதைத்து, அக்ஷனையும் தேய்த்த தென் றால் இந்தக் குறைவு யாருக்கு? பிரதாப இலங்கேச னுகிற, எந்தையின் கீர்த்தி யல்லவா அழிந்ததென்று பதைத்தான். தேரேறி தந்தையிடம் வந்தான். கூறு கிறான்.

'ஐயா! குரங்குகளின் பலத்தை ஏற்கெனவே நன்கு அறிந்திருக்கும் நீர், அதனிடம் அதிக பல மில் லாதவரை அனுப்பினீரே! அரக்கர்களையும் என் தம்பியையும் அந்தக் குரங்கு கொல்ல வில்லை. அத னிடம் அனுப்பி நீரல்லவா அவர்களைக் கொன்று விட்டீர் என்று நினைக்கிறேன். இருந்தாலும் நானே போய் அந்தக் குரங்கைக் கட்டிக் கொண்டு வந்து என் தம்பியைக் கொன்ற வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்கிறேன்' என்று வணங்கினான்.

அப்பொழுது இராவணன் கூறுகிறான்.

த்வ மஸ்த்ரவித் சஸ்த்ர விதாம் வரிஷ்ட:
ஸுராஸுராணு மபிசோக தாதா
ஸுரேஷு ஸேந்த்ரேஷு ச த்ருஷ்டகர்மா
பிதா மஹாரா தன ஸஞ்சி தாஸ்த்ர:

மகனே! நீயே அஸ்திர சஸ்திரங்களில் வல்லவன். தேவர்களையும் அஸுரர்களையும் கலக்க வல்லவன். இந்திரன் முதலானோர் உன் பெருமையைப் பார்த்திருக்கிறார்கள். அன்றியும் சாக்ஷாத் பிரம்மாவை உபாஸித்து ஆயுதக் கூட்டங்களைப் பெற்றவன். எனக்கு உன்னிட மிருக்கும் நம்பிக்கை பிறரிடம் இல்லை. ஆனாலும் இந்தக் குரங்கும் சாதாரணமான தாகக் காணப்பட வில்லை. அதைக் கொல்வது அவ்வளவு சுலபமானதாக இல்லை. உன்னை அனுப்பு வதும் அவ்வளவு உசிதமாகப் பட வில்லை. ஆனால் யுத்த தர்மம் அப்படியிருக்கிறது. மற்றவர் இருக்கை யில் அரசன் தானே முன்னே போகக் கூடாது. ஆகையால் உன்னை அனுப்புகிறேன். எல்லா அஸ்திர சஸ்திரங்களையும் ஆராய்ந்து கொள். வெற்றியில் ஞாபகம் இருக்கட்டும் என்று விடை கொடுத்தான். இந்திரஜித்தும் தந்தையைப் பிரதக்ஷிணம் செய்து வணங்கிப் புறப்பட்டான்.

இவன் புறப்பட்டபோது திசைகள் இருண்டன. மிருகங்கள் ஊளையிட்டன. பிணந்தின்னும் பக்ஷிகள் வானில் கூடி சந்தோஷமாகக் கூச்சலிட்டன. பரந்த சேனையோடு இவன் ரணகளத்தை அடைந்தான். அங்கு மாண்டு கிடந்த வீரர்கள் குவியலைக் கண்டான். புண்ணில் கோலிட்டது போல் துன்புற்றான். ஆதி முதல் நடந்ததை எல்லாம் எண்ணினான். எதை யெல்லாம்?

கானிடை அத்தைக் குற்ற குற்றமும்
 கரனுர் பாடும்
யானுடை எம்பி வீந்த இடுக்கணும்
 பிறவும் எல்லாம்
மானுடர் இருவராலும் வானரம்
 ஒன்றினுலும்
ஆனிடத் துளவென் வீரம்
 அழகிற்றே அம்ம என்ருன்

என து அத்தை சூர்ப்பனகை காட்டிலே மூக்கறுக்கப் பட்டாள். இவளுக்காகப் பரிந்து போன கரதூஷணுதியர் மாண்டுபோயினர். அன்றியும் இந்த ராஜதானியிலேயே எனது தம்பி தேய்த்துக் கொல்லப் பட்டான். இத்தனையும் மனிதர் இருவரும் குரங்கு ஒன்றும் செய்த வேலை! ஆ இதைப் பார்த்துக் கொண்டிருக்கும் எனது வீரம் அழகானது அல்லவா? என்று விம்மினுன்.

இதற்குள் அரக்கர் சேனை மாருதியை வளைத்து அஸ்திர சஸ்திரங்களை எறிந்தது. ஆனுல் பழுக்கக் காய்ச்சிய இரும்பா யிருந்தாலும் அடைகல்லைச் சுட முடியுமா? இப்படியே மாருதி மேல் விழுந்த ஆயுதங்கள் பொடிப் பொடியாகப் பொறிந்து உதிர்ந்தன. மாருதியோ ஆட்டு மந்தையில் புகுந்த புலிபோல் அரக்கர்களை நொறுக்குகிருர். கண்டான் இந்திரஜித், தனது பிரம்மாஸ்டமான வில்லை வளைத்து மாருதியை நோக்கி,

வல்லை வல்லையின் ருகுநீ
 படைத்துள வாழ்நாட்
கெல்லை எல்லை என் றிந்திர
 சித்துவும் இசைத்தான்

அடே குரங்கே! நீ கெட்டிக்காரன் தான். ஆனால் உன் மண்டைப் புழு இன்றோடு மாண்டு போயிற்றென்று சர்ச்சித்தான். கேட்டார் மாருதி. சும்மா இருப்பாரா? பதில் சொல்லுகிறார்.

நாளுக் கெல்லையும், நிருதராய்
உலகத்தை நலியும்
கோளுக் கெல்லையும், கொடுந்தொழிற்
கெல்லையும், கொடியிர்
வாளுக் கெல்லையும் வந்தன
வகை கொண்டு வந்தேன்,
தோளுக் கெல்லை யொன் றில்லையென்
றநுமனும் சொன்னான்

"எனது மண்டைப் புழு ஒருக்காலும் மாளப் போவதில்லை. அரக்கரென்று உலகத்தைத் துன்புறுத்தும் உங்களுக்கும், உங்கள் அதிபாதக கொடுமைக்கும், நாசகர ஆயுதங்களுக்கும் தான் முடிவு கொண்டு வந்திருக்கிறேன். எனது தோளாற்றலுக்கு ஒன்றும் குறைவில்லை" என்று கூறினார்.

சகிப்பானா இந்திரஜித்? 'இந்தக் கொழுப்பை அடக்குகிறேன்' என்று மாருதி மார்பில் பாணங்களை அழுத்தினான். இவரும் தனது உருவத்தை வளர்த்தினார். இந்திரஜித்தன் விடும் ஆயுதங்களை எல்லாம் கையால் பற்றி ஒடித்து எறிந்தார். இந்திரஜித் திகைத்தான். மாருதி அவன் தேரையும் சாரதியையும் அடித்து அழித்தார். வேறு தேரேறி இந்திரஜித் மாருதி உடல் முழுவதும் அம்புகளால் மறைத்தான். மாருதியோ அவன் தேரில் குதித்து பலகாலும் உலகெல்லாம் வென்ற அவன் வில்லைப் பிடுங்கி ஒடித்தெறிந்தார்.

இந்திரஜித் தான் இந்திரனிடம் பறித்த வில்லை எடுத்து மாருதி உடல் முழுவதும் அம்புகளால் மறைத்தான். சிறிது நேரம் அவர் கண்மூடி இருந்தார். இப்படி ஒருவருக்கொருவர் வெற்றி தோல்வியின்றி நெடுநேரம் போரிட்டனர். தேவர்களும் கண் கூளிக்கினர்.

உடனே வேகங்கொண்ட மாருதி இந்திரஜித்தை தேரோடு எடுத்து ஆகாயத்தில் வீசினார். அந்தத் தேர் கீழே வருமுன்னம் இந்திரஜித் வானில் பாய்ந்தான். இதற்குள் மாருதி பாக்கியிருந்த அவன் சேமத்தேர்களை உதைத் துருட்டி அழித்தார். பார்த்தான் இந்திரஜித்

ஏறு தேரிலன் எதிர் நிற்கும்
முரணிலன் எரியின்
சீறு வெஞ்சினம் திருகுகின்
ருன் திரிவானும்
வேறு செய்வதோர் வினை பிறி
தின்மையின் விரிஞ்சன்
மாறிலாப் பெரும் படைக்கலம்
தொடுப்பதாய் மதித்தான்

இந்திரஜித்தனுக்கு ஏறத் தேரில்லை. எதிர் நின்று சண்டை செய்ய பலமில்லை. கோபாவேசம் தீப்போல் பொங்குகிறது. வேறு என்ன செய்வதென்று தெரியவில்லை. சலித்து ஆகாயத்தில் சஞ்சரிக்கிறான். 'வேறு அஸ்திரங்களால் இவனைக் கட்ட முடியாது. ஆகையால் தவருத பிரம்மாஸ்திரத்தால் கட்டுவோம்' என்று தீர்மானித்தான். அந்த அஸ்திரத்தை

மண்டுளங்கிட, மாதிரம் துளங்கிட,
மதி தோய்
விண்டுளங்கிட, மேருவும்
துளங்கிட விட்டான்

மண்ணும் விண்ணும் நடுங்க பிரம்மாஸ்திரத்தை மாருதி தோளுக்கு இலக்கு வைத்து விட்டான். அது மாருதியின் தோளைப் பிணைத்தது. எப்படி?

திண்ணென் யாக்கையைத்
திசைமுகன் படைசென்று திருக
அண்ணல் மாருதி அன்றுதன்
பின்சென்ற அறத்தின்
கண்ணினீரொடும் கனகதோ
ரணத்தொடும் கடைநாள்
தண்ணென் மாமதி கோளொடும்
சாய்ந்தெனச் சாய்ந்தான்

பிரம்மாஸ்திரம் மாருதியின் வஜ்ர காயத்தை பற்றித் திருகியது. தோரண கம்பத்தோடும் சாய்ந்தார். எப்படி? கடை நாளில் கிரஹங்களோடு சந்திரன் விழுந்தது போல். இலங்கையில் இது வரை நுழையாதிருந்த தரும தேவதை இன்று இவரைப் பின்பற்றி வந்ததல்லவா? அந்தத் தரும தேவதையும் மாருதி விழுந்ததைக் கண்டு கண்ணீர் விட்டுக் கதறியதாம்.

மாருதி இப்படி விழுந்தாரோ இல்லையோ, பயந்து நாலா பக்கத்திலும் நின்ற அரக்கர்களும் அரக்கிகளும் வந்து சூழ்ந்து கொண்டனர். தங்கள் ஆத்திரம் தீர மாருதியை திட்டுகின்றனர். புடைக்கின்றனர். சிலர் சணல் கொண்டு வந்து மாருதி தப்பித்துப் போகாமல் பலமாகக் கட்டினர். இப்படி வேறு கட்டுப்போட பிரம்மாஸ்திரம் சகிக்காது. அது விலகிக் கொண்டது.

கண்டான் இந்திரஜித். 'ஆகா, அரக்கர்கள் காரியத்தைக் கெடுத்து விட்டார்களே! எவ்வளவு கஷ்டப்பட்டுக் கட்டினேம். கயிற்ருல் கட்டி அஸ்திரத்தை விடுவித்து விட்டார்களே. மந்திர சாஸ்திரத்தின் தத்துவம் தெரியாமல் மதியீனமாய் நடந்து கொண்டார்களே' என்று துக்கித்தான்.

நிற்க அரக்கர்கள் கயிற்ருல் கட்டிய மாருதியை இழுத்துக் கொண்டு போகிருர்கள். கையாலும் கட்டையாலும் இடிக்கிருர்கள். யாரடா இவன்? வெட்டுங்கள். சுட்டுக் கொல்லுங்கள். கண்ட துண்டமாக்கிக் கடித்துத் தின்னுங்கள்' என்று கர்ச்சிக்கின்றனர் அரக்கர்கள். 'என் அன்பனைக் கொன்ற இவன் கழுத்தின்மீது உட்கார்ந்து கொண்டு தான் தாலி வாங்குவேன் என்று கோஷிக்கின்றனர் அரக்கிகள்.

இப்படி மாருதியை இராவணனிடம் இழுத்துப் போகிருர்கள். இராவணனைச் சந்திக்க இது நல்ல சந்தர்ப்பம்தான் என்று மாருதி மன மகிழ்ச்சியோடு போகிருர். இப்படி இந்திரஜித் மாருதியை இராவணனிடம் கொண்டு வந்து விட்டு அவனிடம் விடை பெற்றுப் போனன். இராவணன் சந்தோஷங் கொண்டு மாருதியை உற்று நோக்கினன். மாருதியும் இராவணனைக் கண்டார்.

50. அத்தியாயம்

நிதான புத்தி

இராவணன் சிங்காதனத்தில் இருக்கிறான். வைரம் முதலான ரத்தினங்களும், ஸ்படிகமும் எங்கு பார்த்தாலும் ஒரே பிரகாசமா யிருக்கிறது. இராவணனுடைய பத்துத் தலைகளிலும் முத்து மாலைகள் குலுங்குகின்ற முடிகள் துலங்குகின்றன. நீல மலை போன்ற அவன் மார்பில் பலவித ஹாரங்கள் விளங்குகின்றன. எங்கும் ஸ்படிக மயம். இடையிடையே ரத்தினங்கள் பதித்து நல்ல விரிப்பு விரித்த ஆஸனத்தில் உட்கார்ந்திருக்கிறான் இராவணன்.

புத்தியில் சிறந்த மந்திரிகள் அவனைச் சூழ்ந்திருக்கிறார்கள். அழகும் இளமையும் நிறைந்து, நல்ல ஆடை ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட மங்கையர் பலர் விசிறியையும் சாமரையையும் வீசிக் கொண்டிருக்கின்றனர். இனிய கான அலைகள் மிதந்து கொண்டிருக்கின்றன. ஆடலும் பாடலும் நடந்து கொண்டிருக்கிறது. இடையில் என்ன செய்து கொண்டிருக்கிறான் இராவணன்?

ஊடினார் முகத் துறு நறை
ஒருமுகம் உண்ணக்
கூடினார் முகக் களி நறை
ஒருமுகம் குடிப்ப

பாடினர் முகத் தாரமு
தொருமுகம் பருக
ஆடினர் முகத் தனியமு
தொருமுகம் அருந்த

அன்பால் சண்டை போட்ட பெண்கள் முகத்தில் வழியும் கோபத் தேனை ஒரு முகத்தால் அனுபவித்துக் கொண்டிருக்கிறான். கல்வியில் களித்த மடமங்கையர் இன்பத்தை மற்றொரு முகத்தால் குடித்துக் கொண்டிருக்கிறான். ஒரு முகத்தால் பாடல்களின் இனிமையைப் பருகிக் கொண்டிருக்கிறான். ஆடல்களின் அமிர்தத்தை மற்றொரு முகம் அருந்திக்கொண்டிருக்கிறது.

தேவ ரோ டிருந் தரசியல்
ஒரு முகம் செலுத்த
மூவரோடு மா மந்திரம்
ஒரு முகம் முயலப்
பாவகாரிதன் பாவகம்
ஒரு முகம் பயில
பூவை சானகி உருவொடு
ஒரு முகம் பொருந்த

ராஜ்ய பரிபாலன விஷயத்தை ஒரு முகம் தேவரோடு ஆலோசித்துத் கொண்டிருக்கிறது. இராவணன் மற்றொரு முகத்தால் மும்மூர்த்திகளோடு மந்திராலோசனை செய்து கொண்டிருக்கிறான். அக்ரமத்தில் ருசிக்கும் இராவணன் ஒரு முகத்தால் அதைச் சிந்தித்துக் கொண்டிருக்கிறான். மற்றொரு முகமோ சீதா தேவியின் உருவத்தையே உன்னிக் கொண்டிருக்கிறது.

இன்னும் தேவியின் கற்பை உறிஞ்சுவது எப்படி என்று ஒரு முகம் கவன்று கொண்டிருக்கிறது.

இல்லையொரு முகமோ அங்கு பெண்கள் ஏந்தும் கண்ணாடியில் தன் அழகைப் பார்த்து நம்பிக்கையும் களிப்பும் கொள்கிறது. இப்படி இராவணனுடைய பத்து முகங்களும் தனித் தனியே வேலை செய்வதைக் கம்பர் வருணிக்கிறார்.

மேரு மலை மீது மின்னல் கூட்டத்தோடு விளங்கும் மேகத்தைப் போல் இப்படிக் கம்பீரமாக சிங்காதனத்தில் வீற்றிருக்கும் இராவணனை மாருதி வியப்போடு கண்டு சிந்திக்கிறார்.

அஹோ ரூபம் அஹோ தைர்யம்
அஹோ ஸத்வம் அஹோ த்யுதி:
அஹோ ராக்ஷஸ ராஜஸ்ய
ஸர்வ லக்ஷண யுக்ததா

ஆ! என்ன வடிவம்! என்ன தீரம்! என்ன பராக்ரமம்! என்ன மேதை! ஆ! இராவணனுக்கு ஸர்வ லக்ஷணங்களும் பொருந்தி யிருக்கிறதே! அந்தோ! இவன் அக்ரமத்தில் மட்டும் பிரவேசிக்காதிருந்தால் இந்திரனையும் பரிபாலிக்கலாமே! இவனது கொடுமையினாலல்லவா நடுங்கி உலகம் இவனை வெறுக்கிறது. ஆ! தேவியைத் திருடிச் சிறை வைத்த பாவி! இவன் வாழ்வெல்லாம் பாழே. நல்லது, முன்னம் சந்தித்தபோது இவன் உறங்கிக் கொண்டிருந்தான். ஆகையால் போராடுவது வீரமல்ல என்று ஆறினேன். இப்பொழுதோ விழித்திருக்கிறான். தடையொன்று மில்லை. இந்தப்

பாவகாரிதன் முடித்தலை
பறித்திலேன் என்றால்
ஏவ தியானினி மேற்செயும்
ஆள் வினை என்றான்

மஹா பாதகனை இராவணனுடைய முடித்தலையைப் பறிக்காமல் போனால் நான் இந்த உலகத்தில் வேறு என்னதான் சாதிக்கப் போகிறேன் என்று தன்னைப் பிணித்திருக்கும கயிறுகளை உதறி இராவணன் மீது பாய எண்ணினார். ஆனால் இதற்குள் சற்று நிதானித்தார்.

என்னையும் வெலற்கரி திவனுக் கீண்டிவன்
தன்னையும் வெலற்கரி(து) எனக்கும் தாக்கினல்
அன்னவே காலங்கள் கழியும் ஆதலால்
துன்னருஞ் செருத்தொழில் தொடங்கல் தூயதோ

இராவணன் எவ்வளவு பலசாலியாயிருந்தாலும் என்னை வெல்வதென்பது முடியாத காரியம். ஆனால் நான் இப்பொழுது யுத்தத்தை ஆரம்பித்தால் இவனை வென்றுவிட முடியுமா? இதுவும் முடியாது என்றே எண்ணுகிறேன். அந்த தரும மூர்த்தியாகிற இராமருடைய பாணந்தான் இவனைப் பிளக்க வல்லது. நல்லது, வெற்றி தோல்வி யின்றி போர் பல காலம் நடக்கலாம். சீதா பிராட்டியோ இன்னம் 1 மாதம் தான் தவணை அளித்திருக்கிறாள். இதற்குள் இராமர் இங்கு வந்து சேரவேண்டும். இடையில் பல இடையூறுகள் இருப்பது பிரஸித்தம். ஆகையால் இப்பொழுது யுத்தத்தை ஆரம்பித்துக் காலங் கடக்க விடுவது புத்திசாலித்தன மாகாது. ஆகையால் தூதன் என்ற முறையில் நடந்து கொள்வதே உசிதமாகும் என்று தீர்மானித்தார்.

இதில் ஒரு விசேஷம் இருக்கிறது. 'அவன் என்னை வெல்லமாட்டான்' என்று பலமுள்ள மாருதி எண்ணினார். ஆனால் பல மற்றவரும் இப்படி எதிரி தன்னை வெல்ல முடியாதென்று எண்ணுவது சகஜம். ஆனால் 'நானும் அவனை வெல்ல முடியாது' என்று மாருதி தனது பலத்தை அளந்து அறிந்து ஒடுங்கினார்.

எதிர் காலத்தில் நடக்க வேண்டியதைச் சிந்தித்து காலத்தை வீணே கடத்தாமல் தக்க முடிவு செய்தார். இது இவரது நிதான புத்தியை நிரூபிக்கிறது. இந்த நிதான புத்தி மிக அபூர்வமானது. யாவரும் பின் பற்ற வேண்டியது.

நிற்க இராவணன் என்றாலே மூவுலகமும் நடுங்கும். நேரே கண்டு விட்டாலோ சொல்ல வேண்டிய தில்லை.

தன் முன்னே கை கட்டி வாய் புதைத்து நடு நடுங்கி வாய் குளறி தடுமாறுதவனை இராவணன் அதிகம் பார்த்த தில்லை. இந்த கம்பீரத்தில் வெகு காலம் வாழ்ந்து விட்டவன்.

அச்சமோ, சலனமோ சிறிதுமின்றி உருவத்தா லும், தோற்றத்தாலும் மலை போல் தன் முன்னே நிற்கும் மாருதியை இராவணன் இருபது கண்களா லும் பார்த்தான். இப்பொழுதும் மாருதியிடம் சிறிதும் தளர்ச்சி இல்லை. இராவணனுக்கு சந்தேகம் வந்தது.

கிமேஷ பகவான் நந்தீ
பவேத் ஸாக்ஷாத் இஹாகத:
யேன சப்தாஸ்மி கைலாஸே
மயா ஸஞ்சாலிதே புரா

நான் முன்னம் கைலையை அசைத்த போது 'குரங்காலேயே உன் வாழ்வு அழியும்' என்று நந்தி கேச்வரர் சாபம் கொடுத்தாரே! அந்த நந்தி தானோ இவன்? என்ன தீர தேஜஸ்! என்று சந்தேகமும் ஆச்சரியமும் கொண்டான்.

ஆனால் இதற்குள் அவனது ஏகாதிபத்திய உணர்ச்சி வந்து பகுத்தறிவை மூடி விட்டது.

மஹாத்தான கோபம் கொண்டான். தனது மந்திரி பிரஹஸ்தனைப் பார்த்து "இவன் யார்? எங்கே வந்தான்? வனத்தை முறித்து அரக்கிகளைப் பய முறுத்துவதில் இவன் நோக்கமென்ன? என்று இந்த துன்மதியைக் கேள்" என்று கட்டளை இட்டான்! ராஜாவாக இருப்பவன் நேரே கேவலம் ஒரு குரங் கோடு பேசலாமா?

51. அத்தியாயம்

மறை பிழையாதவன் சரம் பிழையாது

பிரஹஸ்தன் அரசனுக்குத் தக்க மந்திரி. இராவ ணன் உத்திரவுப்படி உடனே மாருதியை நோக்கிக் கேட்கிறான்—

"குரங்கே! ஆச்வாஸப் படுத்திக் கொள். பயப் பட வேண்டாம். உன்னை இந்திரன் அனுப்பினனா? நீ யாரென்று உண்மையைச் சொல். விடுதலை பெறுவாய்.

நேமியோ குலிசியோ நெடுங் கணிச்சியோ
தாமரைக் கிழவனோ தறுகட் பல்லரே
பூமிதாங் கொருவனோ பொருது முற்றுற
நாமமும் உருவமும் கரந்து நண்ணினய்!

"நீ யார்? சக்ரபாணியா? வஜ்ர பாணியா? சூல பாணியா? அல்லது பூமியைப் படைத்த பிரம்மா வா? பூமியைத் தாங்கும் ஆதி சேஷனா?

அல்லது வருணன், குபேரன், யமன், விஷ்ணு இவர்களில் யாராவது உன்னை அனுப்பினார்களா?

குரங்குருவம் எடுத்துக் கொண்டு வந்தாயா? ஆனால் உருவம்தான் குரங்கு. உனது தேஜஸைப் பார்த்தால் நீ குரங்கல்ல என்று தெரியவில்லையா? உண்மையைச் சொல்லி விடு. தப்பிப் போகலாம். இந்த இராவணேச்வரன் ஸந்நிதானத்தில் பொய் சொன்னாயோ நீ யாரா யிருந்தாலும் உயிர் தப்பிப் போக முடியாது" என்று நயத்தாலும் பயத்தாலும் உண்மையைக் கக்க வைக்கும் தந்திரம் செய்தான்.

ஆனாலும் ஸத்ய வாதியான மாருதியிடம் இந்த ராஜ தந்திரம் எதற்கு? அவர் தான் உண்மையையே சொல்லுகிறாரே. எப்படி?

சொல்லிய அனைவரும் அல்லன்
சொன்ன அப்
புல்லிய வலியினோர்
ஏவல் பூண்டிலென்
அல்லியங் கமலமே
அனைய செங்கணோர்
வில்லிதன் தூதன் யான்
இலங்கை மேயினேன்

நீங்கள் சொன்ன பேர்வழிகளைச் சேர்ந்தவனல்ல நான். அவர்களில் யாருக்கும் தூதனாகவும் இங்கு வரவில்லை. நான் ஒரு வில்லாளியின் தூதனாக இலங்கை வந்தேன். அந்த வில்லாளி யாரென்று கேட்கிறீர்களா?

தேவரும் பிறருமல்லன்,
திசைக்களி றல்லன், திக்கின்
காவலர் அல்லன், ஈசன்
கைலையுங் கிரியு மல்லன்,
மூவரும் அல்லன், மற்றை
முனிவரும் அல்லன் எல்லைப்
பூவலயத்தை ஆண்ட
புரவலன் புதல்வன் போலாம்

(புறமுதுகிட்டோடும்) தேவர்களைச் சேர்ந்தவனல்ல. (கொம்பொடிந்த) திக்கு கஜத்தைச் சேர்ந்தவனல்ல. (தோற்றோடின) திக்கு பாலகரைச் சேர்ந்தவனல்ல. (கலக்கிப் பெயர்த்ததாகப் பெருமை கொள்ளும்) கைலையங் கிரியுமல்ல.

(வென்றதாக மனப்பால் குடிக்கும்) மும்மூர்த்திகளில் ஒருவரல்ல. (கொன்று வேடிக்கை கொள்ளும்) முனிவரல்ல. பின்னை யார்? உலகாண்ட சக்ரவர்த்தித் திருமகன், அந்த ராகவருடைய தூதன் நான். சுக்ரீவருடைய கட்டளையால் இங்கு வந்தேன்.

ராக்ஷஸேந்த்ர ஹரீசஸ்த்வாம்
ப்ராதா குசல மப்ரவீத்

இராக்ஷஸேந்திரா! வானர ராஜனுகிற உம்முடைய சகோதரர் சுக்ரீவர், உமக்கு க்ஷேமம் சொன்னார். அன்றியும்

தர்மார்த் தோபஹிதம் வாக்யம்
இஹ சாமுத்ர ச க்ஷமம்

இகத்திற்கும் பரத்திற்கும் சாதகமான தர்ம வார்த்தைகளை உமக்குச் சொன்னார்.

தருமமூர்த்தியாகிற தசரத புத்திரர், ஸ்ரீ ராமர் தந்தையின் கட்டளையின்படி தம்பியோடும் தையலோடும் தண்டகாரண்யத்தில் வசித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது அவரது மனைவி மஹா பதிவிரதையான சீதா தேவி காணாமல் போய் விட்டாள். அந்த சீதையைத் தேடிக் கொண்டு வந்த இராமலக்ஷ்மணர் எங்கள் சுக்ரீவரோடு நட்புக் கொண்டனர். சுக்ரீவர் சீதையைத் தேடித் தருவதென்றும், இராமர் இவருக்காக வானர ராஜ்யத்தை மீட்டுத் தருவதென்றும் ஒரு உடன்படிக்கை ஏற்பட்டது. இதன்படி கடல் கடந்து நான் இலங்கையில் தேடிக்கொண்டு வந்தேன்.

ப்ரமதா ச மயா த்ருஷ்டா
க்ருஹே தே ஜனகாத்மஜா

இங்கு சுற்றித் திரிகையில் தங்களுடைய கிரகத்தில் அதாவது அசோக வனத்தில் ஜனக நந்தினியைக் கண்டேன்.

தத் பவான் த்ருஷ்ட தர்மார்த்த:
தப: க்ருத பரிக்ரஹ:
பர தாராந் மஹா ப்ராக்ஞ
நோப ரோத்தும் த்வமர்ஹஸி

தாங்கள் தர்மார்த்த விஷயங்களைத் தெரிந்தவர்கள். மகத்தான தவத்தில் முயற்சித்தவர்கள். மஹா மேதாவியான தாங்கள் மற்றொருவருக்குச் சொந்தமான மனைவியை சிறை வைத்திருப்பது உசிதமல்ல. அந்த இராமரிடத்தில் சீதா தேவியை சேர்ப்பித்து விடுங்கள். விஷத்தோடு கூடிய அன்னத்தை எப்படி ஜீரணித்துக் கொள்ள முடியாதோ அப்படி சீதையை ஜெரித்துக் கொள்ள முடியாது. தங்கள் தவத்தின் பலத்தை யெல்லாம் இப்படி நாசஞ் செய்ய வேண்

டாம். தாங்கள் தபோ பலத்தினுல் தேவர்கள் அசுரர்கள் முதலானவர்களால் மரண மில்லாத வரம் பெற்றிருக்கலாம். தேவர், அசுரர், அரக்கர், கந்தர்வர், யக்ஷ பன்னகரைச் சேர்ந்தவரல்ல சுக்ரீவர். நீங்கள் எப்படி உயிரைக் காப்பாற்றிக் கொள்ளப் போகிறீர்கள்?

இராமரோ சாதாரணமானவரல்ல.

"மூலமும் நடுவும் ஈறும்
இல்லதோர் மும்மைத் தாய
காலமும் கணக்கும் நீத்த
காரணன் கைவி லேந்தி
சூலமும் திகிரி சங்கும்
கரகமும் துறந்து தொல்லை
ஆலமும் மலரும் வெள்ளிப்
பொருப்பும் விட் டயோத்தி வந்தான்"

ஆதிமத்யாந்த ரகிதராய், இறந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் என்ற முக்காலமும் கணக்கும் கடந்தவராய், தனக்கொரு காரண மின்றி தனிப் பெருங் காரணமாய் நிற்கும் பகவான், பிரம்மா, விஷ்ணு, ஈசுவரன் என்ற மும் மூர்த்திகளாய் தாமரை மலர், ஆலிலை, கைலையங் கிரி என்ற இடங்களில் காணப்படுகிருர்.

அந்த மும் மூர்த்திகளும் கமண்டலம், சங்கு சக்கரம், சூலம் என்ற ஆயுதங்களை விட்டு, தங்கள் இருப்பிடங்களை விட்டு, இராமனுகி அயோத்தி வந்து கையில் வில்லேந்தி நிற்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். அவர் எதற்காக வந்திருக்கிருர் என்ருல்,

அறந்தலை நிறுத்தி வேதம்
அருள் சுரந் தறைந்த நீதித்
திறந்தெரிந் துலகம் பூணச்
செந்நெறி செலுத்தி, தீயோர்
இறந்துக நூறி தக்கோர்
இடர்துடைத் தேக ஈண்டு
பிறந்தனன் தன்பொற் பாதம்
ஏத்துவார் பிறப் பறுப்பான்

அழியாத தர்மத்தை உலகத்தில் நிலை நிறுத்தி கருணையினால் வேதங் காட்டிய நன்னெறியை மக்கள் பின் பற்றத் தானே நடத்திக் காட்டி, தீயவர்களை யெல்லாம் அடக்கி, நல்லோருடைய துன்பத்தைத் தீர்ப்பதற்காகவே அவர் பிறந்தார். பிறப்பும் இறப் பும் அற்றவரும், தன்னைப் பற்றுவார் பிறப்பை அறுப் பவருமான பகவான் இப்படி தனக்கொரு பிறப்பை எடுத்துக் கொண்டார். அவரை எதிர்த்து நிற்பவர் யாருமில்லை.

ப்ரம்மா ஸ்வயம்பூ சதுரானனோ வா
ருத்ரஸ் த்ரிநேத்ரஸ் த்ரிபுராந்த கோவா
இந்த்ரோ மஹேந்த்ர: ஸுரநாய கோவா
த்ராதும் ந சக்தா யுதி ராம வத்யம்

ஸ்வயம்புவாய் நான்கு முகங்களுடைய பிரம்மா வும், திரிபுராந்தகராய் திரிநேத்திர தாரியாகிய ஈச்வர னும், தேவர் தலைவனாகிய இந்திரனும், வேறு யாரும், யுத்தத்தில் இராமர் யாரைக் கொல்ல நினைக்கிறாரோ அவரைக் காக்க வர மாட்டார்கள். ஏன்? இராமர் தர்ம மூர்த்தி. அவர் பாணம் தர்மத்தைக் காக்கவே புறப்படும். இதற்கு எதிர் நிற்கும் மனமும் சக்தியும் யாருக்குத்தான் இருக்கிறது? சத்தியமான இந்த வார்த்தையைக் கேளும். அவரிடத்தில் சீதையை விட்டு விடும். நானோ—

அன்னவர்க் கடிமை செய்வேன்
நாமமும் அனும னென்பேன்
நன்னுதல் தன்னைத் தேடி
நாற் பெரும் திசையும் போந்த
மன்னரில், தென்பால் வந்த
தானைக்கு மன்னன் வாலி
தன்மகன் அவன்றன் தூதன்
வந்தனன் தனியே னென்றான்

நான் இராம தாஸன். என் பெயர் அநுமான். சீதா தேவியைத் தேடி நான்கு திசைகளிலும் வானரத் தலைவர்கள் போயிருக்கிறார்கள். தென் திசையில் வந்த சேனைக்கு வாலி மகன் அங்கதனே தலைவன். நான் அவனுக்குத் தூதனாக இங்கு தனியே வந்தேன் என்றார்.

இதனால் தன்னைப்போல் எல்லையற்ற ஆற்றலுடைய எண்ணற்ற வானரர் இருக்கிறார்கள் என்று குறிக்கிறார். அல்லாமலும் அங்கதன் பெயரைச் சொல்லி இதனால் இராவணனுக்கு வாலி ஞாபகத்தையும் கொண்டு வருகிறார். இதைக் கேட்டவுடன் இராவணன், "அந்த வாலி சௌக்கியமா?" என்று வினவினான். மாருதி சொல்லுகிறார்.

அஞ்சலை யரக்க பார்விட்
டந்தரம் அடைந்தானன்றே
வெஞ்சின வாலி மீளான்
வாலும் போய் விளிந்த தன்றே
அஞ்சன மேனியான் றன்
அடுகணை யொன்றான் மாழ்கி
துஞ்சினன், எங்கள் வேந்தன்
சூரியன் தோன்றல் என்றான்

"இராவணேச்வரா! அஞ்சவேண்டாம். வாலி மடிந்தான். அவன் வாலும் மடிந்தது. (இராவணன் வாலியின் வாலில் கட்டுண்டது இங்கு குறிப்பாக உணர்த்தப்படுகிறது) இராமருடைய ஒரே பாணத்தி ஞல் வீழ்ந்தான். இப்பொழுது சுக்ரீவர்தான் எங்க ளுக்கு ராஜா."

இதைக் கேட்ட இராவணன் "நல்லது, அண்ணனைக் கொல்வித்த அறிவாளி எனக்கு என்ன சொல்லி யனுப்பினன்?" என்று கேட்டான். மாருதி சொல்லுகிருர்.

"இச்சைத் தன்மையினில் பிறர் இல்லினை
நச்சி நாளும் நவையுற நாணிலன்
பச்சை மேனி புலர்ந்து பழி படுஉம்
கொச்சை யாண்மையும் சீர்மையில் கூடுமோ?

ஆசையால் கண்ணிழந்து, பிறர் பத்தினிகளை நாடுபவனுடைய அழகான மேனி மெலிந்தழிந்து அபகீர்த்தியும் சேரும். வாழ்வெல்லாம் அழியும். ஆயுளும் குறையும். அல்லியும் வரத்தினுல் நீங்கள் செருக்கி யிருக்க வேண்டாம்.

புரம் பிழைப்படும் தீப்புகப் பொங்கியோன்
நரம் பிழைத்தன பாடலின் நல்கிய
வரம் பிழைக்கும், மறை பிழை யாதவன்
சரம் பிழைக்கு மென் றெண்ணுதல் சாலுமோ?

பக்த பராதீனனுன ஈச்வரன் உங்களுடைய சாம கானத்தைக் கேட்டு இரங்கி அளித்த வரமெல்லாம் அழியும். ஆனல் தர்மம் தவருத இராம பாணம் ஒரு நாளும் தன் லக்ஷ்யத்தை விடாது. ஆகையால்

வாழ்க்கையில் இன்னும் பிரிய மிருக்கு மானால், சீதையை விட்டு விடுமென்று சூரிய புத்திரனை சுக்ரீவர் உங்களுக்குச் சொல்லி யனுப்பினார்," என்றார்.

இதைக் கேட்ட இராவணனுக்குக் கோபம் வந்தது. உள்ளதைச் சொன்னால் கோபம் வருவது சஹஜந்தானே. ஆகையால் இராவணன் மாருதி மீது வேறொரு குற்றச் சாட்டைக் கிளப்பினான். "நல்லது, தூது வந்த நீ அசோக வனத்தை அழித்து அரக்கர்களைக் கொல்வானேன்?" என்று கேட்டான்.

"உம்மைக் காணும் வழி சுலபமாக இல்லை. அசோக வனத்தை அழித்தேன்; உம்மைச் சந்திக்க ஹேதுவாகுமென்று. ஆனால் வந்தவர்கள் என்னைக் கொல்ல முயற்சித்தார்கள். தற்காப்புக்காக வந்தவர்களைக் கொன்று கொண்டிருந்தேன். இன்னும் கொன்று கொண்டே யிருப்பேன். ஆனால் நாம் வந்தது தூத காரியம் என்பதை உணர்ந்து கட்டுப்பட்டு இங்கு வந்தேன்" என்று பதில் அளித்தார்.

இராவணனுக்குப் பொருந்துமா இது? "கொல்லுங்கள் இந்த துஷ்டனை" என்று கட்டளையிட்டான். ஆத்திரங் கொண்ட அரக்கர்கள் வந்து மாருதியைச் சூழ்ந்து பற்றிக் கொண்டார்கள்.

52. அத்தியாயம்

நீதியாளர் வாதம்

மாருதியைக் கொல்லும்படி இராவணன் இட்ட கட்டளையைக் கேட்டவுடன் அந்த சபையிலிருந்த அரக்கர்களும் அரக்கிகளும் சந்தோஷத்தால் ஆரவாரம் செய்தார்கள். வஞ்சம் கொண்ட அவர்கள் நெஞ்சம் குதூகலம் அடைந்தது. ஏன்? விசனம் தலைக்காட்டாத இலங்கை எங்கும் அழுகைக் குரல் எழும்படி செய்து விட்டதல்லவா இந்தக் குரங்கு! இராவணன் முதல் அந்த சபையிலிருந்த அரக்கர்கள் யாவரும் யுத்தத்தில் மாருதியால் யாராவதொரு பந்துவை இழந்திருந்தார்கள். இதனால் ஆத்திரம் அடைந்திருந்தார்கள். மாருதிக்கு மரணம் என்பதைக் கேட்டவுடன் அந்த துக்கம் மாறிச் சந்தோஷம் அடைகிறார்கள். தனக்குத் தீங்கு செய்தவனுக்குத் தீங்கு நேர்வதைக் கண்டு களிப்பது இயற்கைதானே!

ஆனால் தங்களுக்குத் தீங்கு நேர்ந்ததற்கான மூல காரணத்தை ஆலோசிப்பதற்கான பொறுமையும் அவகாசமும் இவர்களுக்கில்லை. சீதையைச் சிறை வைத்ததால் தான் இந்தத் தீங்கு நேர்ந்ததென்று உணரும் சக்தி இவர்களுக்கில்லை.

ஆனால் இந்த அறிவும் ஆலோசனையும் உடைய ஒருவர் கூட அங்கு இல்லையா? இருந்தார். அவர் தான் விபீஷணர். இராவணனுடைய தம்பி. இயற்கையாகவே நல்ல குண முடையவர். தவறுகளைக்

கண்டு சகியாதவர். தனது அண்ணன் சீதா பிராட்டியைச் சிறை வைத்தது முதல் மனம் இடிந்து துக்கத்தில் இருக்கிறார். இதன் தவறைப் பலதரம் எடுத்துக் காட்டியும் இருக்கிறார். தனித்துத் தவித்திருந்த அந்த உத்தமிக்கு ஆறுதல் கூற வந்த தூதனைக் கொல்வது இவருக்கு சங்கடமாயிருக்குமல்லவா? தர்மமுள்ள இவர் மனம் இதை எதிர்த்து வெறுத்தது. அன்றியும் தூதரைக் கொல்வது தவறென்று இவர் மனப் பூர்வமாக நம்பினார். ஆனால் இராவணனோ கோபிஷ்டன். மாருதியால் பல அரக்கரும் மாண்டிருக்கின்றனர். ஆகையால் அவன் இட்ட கட்டளையை மாற்றுவது சுலபமல்ல. ஆனால் தூது வந்த மாருதியைக் கொல்ல விட்டுப் பார்த்திருப்பதும் நல்லதல்ல. இந்த சங்கடமான நிலையில் என்ன செய்வதென்று சிந்தித்தார். அமைதியான அவர் மனம் விஷயத்தைத் தெளிவாகக் கண்டது. என்ன செய்ய வேண்டுமென்று முடிவு செய்து கொண்டார். இராவணேச்வரனைப் பார்த்து வினயத்தோடு வணங்கிக் கூறுகிறார்.

க்ஷமஸ்வ ரோஷம் த்யஜ ராக்ஷஸேந்த்ர
ப்ரஸீத மத் வாக்யம் இதம் ச்ருணுஷ்வ

"இராக்ஷஸேந்திரரே! என்னை மன்னிக்க வேண்டும். தாங்கள் ரோஷத்தை விட்டு விடுங்கள். விஷயத்தைத் தெளிவாகக் கவனியுங்கள். தயவு செய்து என் வார்த்தைகளைக் கேளுங்கள். சற்று சிந்தியுங்கள்.

"பூதலப் பரப்பின் அண்டப்
பொருட்டினுள் புறத்துள் பொய்தீர்
வேதமுற் றியங்கு வைப்பின்
வேறு வேறிடத்து வேந்தர்

மாதரைக் கொலை செய்தார்கள்
உளரென வரினும் வந்த
தூதரைக் கொன்று ளார்கள்
யாவரே தொல்லை நல்லோர்''

பிரபோ! இந்த பூமியிலும் சரி. இந்த அண்டத்தில் வேறெங்கும் சரி. தர்மத்தை உணர்ந்து நடக்கும் அரசர்களில் யாராவது தூதரைக் கொன்றாரென்று இதுவரை கேட்டிருக்கிறோமா? மாதர் கொலை மகா பாதகமானது. ஆனால் இதைச் செய்தவர் உண்டென்றும் கேட்டிருக்கிறோம். தூதர் கொலை உண்டென்று இதுவரை கேட்டதில்லை. ஏனென்றால் தூதர்களுடைய காரியம் அவ்வளவு கஷ்டமானது.

"பகைப் புலன் அணுகி யுய்த்தார்
பகர்ந்தது பகர்ந்து, பற்றார்
மிகைப்புலன் அடக்கி, மெய்மை
விளம்புதல் விரதம் பூண்ட
தகைப்புலக் கருமத் தோரைக்
கோறலில் தக்கார் யார்க்கும்
நகைப்புலன் பிறி துண்டாமே
நங்குலம் நவையுண் டாமே''

தூதர்கள் பலம் பொருந்திய எதிரிகள் மத்தியில் போய் தங்களை அனுப்பினவர்கள் கருத்தை யெல்லாம் வெளிப்படுத்த வேண்டியிருக்கிறது. பலம் பொருந்திய கோட்டையின் பாது காப்பிலுள்ள ஒரு அரசன் சொல்லி யனுப்புகிற விஷயத்தை, பலம் பொருந்திய எதிரிகள் மத்தியில் தன்னந் தனியே இருந்து சொல்ல வேண்டி யிருக்கிறது. அந்த எதிரியின் தவறுகளை தீரத்தோடு எடுத்துக்காட்டி உண்மையை வற்புறுத்துவது அவர்கள் கடமையாகிறது. இப்படி உண்மை

யைக் கூறுவதால் கேட்போருக்குக் கோபம் உண்டாக லாம். இதனால் தனியே வந்த தூதனுக்கு ஆபத்து உண்டாகலாம். ஆகையால் தூதருடைய வேலை மிகக் கஷ்டமானது. ஆனால் அரசாங்கத்திற்கு இந்த தூதர்கள் மிக்க அவசியம். உண்மை தெரியாமலேயே பல சண்டைகள் மூளுகின்றன. ஒவ்வொரு விஷயத்திலும் அரசர்கள் தாமே சந்தித்துப் பேசுவது முடியாத காரியம். ஆகவே இந்த தூதர்கள் அரசரின் பிரதிநிதியாக, அவர் சொற்கொண்டு வருகின்றனர். ஆனால் அரசரின் பலமின்றி, படை பலமின்றி தனியே வருகிறார்கள். தனியே வரும் இவர்களைக் கொல்வது சுலபமானது. ஆனால் இது சரியல்ல. நமது தூதர்களும் இதே கதியைத்தான் அடைவார்கள்: இதனால் ராஜ காரியம் கெட்டுப் போகும். ஆகையால் தூதர்களைக் கொல்வது தகாதென்றும், அவமான மானதென்றும் சர்வதேச அரசர்களும் ஒத்துக்கொண்டு இதன்படி வழுவாமல் நடந்து வருகிறார்கள். ஆகையால் இவனைக் கொல்வதால் நமது குலத்திற்கே இழுக்குண்டாகும். தாங்கள் எல்லா சாஸ்திரங்களையும் தெரிந்தவர்கள். ஆகையால் ரோஷப்படக் கூடாது.

க்ரஷ்யந்தே யதி ரோஷேண
த்வாத்ருசோபி விபச்சித:
தத: சாஸ்த்ர விபச்சித்வம்
ச்ரம ஏவ ஹி கேவலம்

சாஸ்திரத்தின் தெளிவை நன்றாக உணர்ந்த தங்களைப் போன்றவர்களே ரோஷத்தில் மூழ்கி விட்டால் சாஸ்திரம் படிப்பதெல்லாம் வீணாகவன்றோ முடியும்? ஆகையால் தாங்கள் தங்கள் கோபத்தை ஆற்றிக் கொள்ளுங்கள். யுக்தா யுக்தம் அறிந்து தண்டனை விதியுங்கள் என்று கேட்டுக் கொண்டார்.

இராவணன் இதன் உண்மையை உணராமல் இல்லை. ஆகையால் விபீஷணர் வாதத்தை மறுக்க வில்லை. ஆனால் தனக்குள்ள ஆதாரத்தை எடுத்துக் காட்டுகிறான்.

ந பாபானாம் வதே பாபம்
வித்யதே சத்ரு ஸூதன

சத்ரு சங்காரம் செய்யும் தம்பியே! பாபிகளைக் கொல்வது பாபமல்ல. குற்றவாளிகளைத் தண்டிப்பது குற்றமல்ல.

தூதனைக் கொல்வது என் நோக்கமல்ல. இவன் தூதனாக மட்டும் இல்லை. அசோக வனம் அழித்தது முதல் அக்ஷனைக் கொன்றது வரை இவன் பல கொடுங் குற்றங்களைச் செய்திருக்கிறான். ஆகையால் இந்தப் பாபியை நான் கொல்லுகிறேன் என்று சமாதானம் சொன்னான்.

ஆனால் விபீஷணர் இதனால் பின்னடைந்து விட வில்லை. தனது கட்சியை இன்னும் தெளிவாகவும் பலமாகவும் எடுத்து வற்புறுத்துகிறார். "இலங்கேசா! கொஞ்சம் பொறுங்கள். தருமத்தோடும் பொருளோடும் கூடிய எனது வார்த்தையைக் கேளுங்கள்.

தூதா னவத்யான் ஸமயேஷு ராஜன்
ஸர்வேஷு ஸர்வத்ர வதந்தி ஸந்த:

எந்த சமயத்திலும் எந்த இடத்திலும், எந்த நிலையிலும் தூதர்களைக் கொல்லக் கூடாதென்று சாதுக்கள் கூறுகிறார்கள். ஆனால் குற்றம் செய்த தூதர்களுக்கு வேறு பல தண்டனைகளை விதித்திருக்கிறார்கள். அங்க பங்கப் படுத்துதல், கசையடி கொடுத்தல், மொட்டையடித்தல், முதலான தண்டனைகள்

விதிக்கப் பட்டிருக்கின்றன. ஆகையால் யுக்த மறிந்து தண்டனை விதியுங்கள். நான் தண்டனை விதிக்கக் கூடாதென்று சொல்லவில்லை. கொல்லக் கூடாதென்றுதான் சொல்லுகிறேன். இது உங்களுக்குத் தெரியாததல்ல.

ந தர்ம வாதே ந ச லோக வ்ருத்தே
ந சாஸ்த்ர புத்தி க்ரஹணேஷு சாபி
வித்யேத கச்சித் தவ வீர துல்ய:
த்வம் ஹ்யுத்தம: ஸர்வ ஸுரா ஸுராணும்

தர்ம வாதம் செய்வதிலும், உலகானுபவத்திலும், சாஸ்திரத் தெளிவிலும், சாஸ்திர நுட்பங்களை ஏற்கும் மேதையிலும், மஹா வீரனாகிற உமக்குச் சமமானவர் யாரிருக்கின்றனர்? இவற்றிலெல்லாம் தேவர்கள் அசுரர்கள் முதலான அனைவர் மத்தியி லும் நீரே தலைமை ஸ்தானத்தில் இருக்கிறீர். ஆகை யால் உம்முடைய கோபத்தை அதற்குத் தக்க இடத் தில் காட்டவேண்டும். இவனை அனுப்பியவர்களையே தண்டிக்க வேண்டும். இவன் நமக்குப் பொருட்டல்ல.

ஸாதுர்வா யதிவா ஸாது:
பரைரேஷ ஸமர்பித:
ப்ருவன் பரார்த்தம் பரவான்
ந தூதோ வதமர்ஹதி

தூதன் சாதுவாயிருந்தாலும் சரி, துஷ்டனு யிருந்தாலும் சரி, இவன் சுதந்தர முடையவனல்ல. மற்றொருவரால் அனுப்பப்பட்டவன். அவர் சொல் வதைச் சொல்பவன். ஆகையால் தூதனுடைய குற் றம் அவனை அனுப்பினவரையே சாரும். ஆகையால் தூதன் கொலைக்குரியவனல்ல. ஆகையால் நீர் இவ னைக் கொல்வது தகுதியல்ல. இது தவருகும்.

அல்லாமலும் இவனைக் கொல்வதால் நமக்கு நன்மை ஒன்றுமில்லை. இவன் இங்கு இறந்து போனால் எதிரி நமது பலத்தை உணர முடியாமல் போகிறது. அந்த வானரக் கூட்டத்தில் வேறு யாரும் இலங்கைக்கு வரக் கூடுமென்று எனக்குத் தோன்றவில்லை.

அல்லாமலும் மற்றொரு விஷயமும் சிந்திக்க வேண்டும். எதிரிகள் நம்மிடத்தில் நடந்து கொண்டது போல் நாமும் அவர்களிடத்தில் நடந்து கொள்ள வேண்டும். உமது தங்கையாகிற சூர்ப்பனகை இராம லக்ஷ்மணருக்குத் தீங்கு செய்ததாக அவர்கள் எண்ணினார்கள். அவர்கள் இவளைக் கொன்றிருக்கக் கூடும். ஆனால் அப்படிச் செய்யவில்லை.

"இளையவள் தன்னைக் கொல்லா(து)
இருசெவி மூக்கோ டீர்ந்து
விளைவுரை யென்று விட்டார்
வீரராய் மெய்ம்மை யோர்வார்

சூர்ப்பநகையின் காதையும் மூக்கையும் மட்டும் அறுத்து 'இதைப் போய் சொல்' என்று அனுப்பி விட்டார்கள். ஆகையால் அவர்கள் சாஸ்திரத்தை உணர்ந்தவர்களாகக் காணப்படுகிறார்கள். வெறும் வீரர்கள் மட்டும் அல்ல. தவிரவும்,

" களைதியேல் ஆவி நம்பால்
இவன் வந்து கண்ணிற் கண்ட
உளவுரை யாமற் செய்தி
யாதியென் றமையச் சொன்னான் "

அவர்களுடைய தூதனாகிற இவன் இங்கு வந்து கண்ட நமது பலத்தை அவர்களுக்கு உணர்த்தினால் இவன் வார்த்தையை அவர்கள் நம்புவார்கள்.

வேறு யார் எவ்வளவு சொன்னாலும் நம்பமாட்டார்கள். ஒருவேளை நமது பலத்தை இவனால் உணர்ந்து அவர்கள் நம்மோடு போராடாமல் திரும்பினாலும் திரும்பலாம். அரசர் இதையும் கவனிக்க வேண்டும்.

அல்லாமலும் மற்றொரு விஷயம் இருக்கிறது. நமது இராக்ஷஸப் படைகள் மிகுந்த உற்சாகத்தோடு இருக்கிறார்கள். நீண்ட காலமாக இவர்களுக்குப் போர் கிடைக்கவில்லை. போர் ஊக்கம் கொண்ட அவர்களுக்கு இப்பொழுது ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும் போலிருக்கிறது. இவனைக் கொன்று விட்டால் எதிரிகளைப் போருக்கு அழைத்து வர யார் இருக்கிறார்கள்? ஆகையால் நீர் நமது வீரர்களுக்கு ஏற்படும் போராட்ட சந்தர்ப்பத்தைக் கெடுத்து விட வேண்டாம் எந்த வகையில் பார்த்தாலும் இவனைக் கொல்வது உசிதமாகத் தோன்றவில்லை என்று வாதித்தார்.

இவர் வாதம் இராவணேச்வரன் மனதில் பதிந்தது. இதை ஏற்றுக்கொண்டு சொல்லுகிறான்.

"நல்ல துரைத்தாய் நம்பி யிவன்
நவை செய்தானே யானாலும்
கொல்லல் பழுதே, போயிடை நீ
கூறிக் கொணர்தி கடிதென்று
தொல்லை வாலை மூலமறச்
சுட்டு நகரைச் சூழ்போக்கி
எல்லை கடக்க விடுமின்கள்
என்றான் நின்றார் இரைத்தெழுந்தார்"

நம்பியான தம்பியே! நீ சொல்வது சரி. இவன் கொடுங் குற்றம் செய்தது உண்மையானாலும் தூதனாகிற இவனைக் கொல்லக் கூடாதென்பதும் சரியே. ஆகையால் அவனை அரக்கர்கள் கொல்லாமல் தடை

செய். ஆனால் இவனைச் சும்மா விடக்கூடாது. உன் ஆலோசனைப்படியே அங்கபங்கப் படுத்துவோம். குரங்குகளுக்கு வால்தான் முக்கியமானது. இவன் வாலைத் தீ யிட்டுக் கொளுத்தட்டும். அந்தத் தீயோடு இவனை ஊர் சுற்றி இழுத்துப் போகட்டும். இவனைப் போன்றவர் அடையும் கதியை பிறரும் அறியட்டும். கடைசியாக இவனை நமது நகர எல்லைக்கு அப்பால் கொண்டு போய் விட்டு விடுங்கள். துஷ்டனாகிற இவனை நகருக்குள் விட்டால் மீண்டும் சேஷ்டை செய்வான் என்று இராவணன் தான் இட்ட கட்டளையை மாற்றி மீண்டும் மறு தீர்ப்பு எழுதினான். தொட்ட காரியத்தில் வெற்றியடைந்த விபீஷணர் திருப்தி யடைந்தார். கொல்லாமல் போனாலும், தீக்கொளுத்தி ஊரைச் சுற்றியடிக்கலா மென்ற சந்தோஷத்தால் அரக்கர்கள் ஆரவாரித் தெழுந் தார்கள்.

53. அத்தியாயம்

யோகி போனான் போகினான்

பிரம்மாஸ்திரம் பற்றி இருக்கும் பொழுது நெருப் பிடலாகாது. ஆகையால் பல முள்ள கயிறு களால் இவனைக் கட்டி பிரம்மாஸ்திரத்தை விடுவித்து விட்டு வாலில் நெருப்பு வையுங்கள் என்று கட்டளை இட்டான் இராவணன்.

இப்படியே அரக்கர்களும் கயிறு கொண்டு வந்து கட்டுகிறுர்கள். எந்தக் கயிற்றை எல்லாம்? கம்பர் வேடிக்கையாகச் சொல்லுகிறுர். படியுங்கள்.

அரண்மனையிலுள்ள கயிறுகள், கடைகளிலிருந்த கயிறுகள் எல்லாம் கொண்டு வந்து கட்டினுர்கள். ஆனுலும் அவர்களுக்குத் திருப்தி ஏற்படவில்லை. 'இந்த பலமுள்ள குரங்கு இதை அறுத்து விடுமோ' என்ற பயம். வீட்டிலிருந்த தூளிக் கயிறு, மாடு கட்டும் கழுத்துக் கயிறு, குதிரை கட்டும் கால் கயிறு எல்லாம் வந்து விட்டதாம். வந்த கயிற்றின் ஜாபி தாவை அடுக்கிக் கொண்டு போவதைக் காட்டிலும் வராத கயிற்றைச் சொல்லி விடுகிறுர் கம்பர். படியுங்களேன்!

பெண்ணிற் கிசையும் மங்கலத்தில்
பிணித்த கயிறே இடைபிழைத்த
கண்ணிற் கண்ட வன் பாசம்
எல்லாம் இட்டுக் கட்டினுர்

பெண்கள் தாலிக் கயிறு தான் தப்பியதாம். பாக்கி கண்ணுல் கண்டதை எல்லாம் கொண்டு வந்து கட்டி விட்டார்கள் என்று ஹாஸ்யமாகக் கம்பர் கூறும் போது மாருதி யிடம் அவர்களுக்குள்ள பயத்தை வெளிப் படுத்துகிறுர்.

சரி. மாருதியைக் கயிற்றுல் கட்டி பிரம்மாஸ் திரத்தை விடுவித்தாயிற்று. தீக் கொளுத்த வேண்டுமே. பழந்துணிகளையும் புதுத் துணிகளையும் கொண்டுவந்து வாலில் சுற்றி எண்ணெய் இட்டு நெருப்பை வைத்தார்கள். இந்த மகத்தான காரியத் தைச் சாதித்துவிட்ட சந்தோஷத்தினுல் ஆண்கள், பெண்கள், குழந்தைகள், கிழவர்கள் முதலிய அரக் கர்கள் எல்லாம் கைகொட்டிச் சிரித்து ஆரவாரம்

செய்தார்கள். இந்திரஜித்துக்கு ஜே! வானர ஜித்துக்கு ஜே! என்று கூச்சல் போட்டார்கள். இருபக்கங்களிலும் மாருதியைக் கட்டியிருந்த கயிறுகளை வீரர் கூட்டம் பற்றி யிருக்கிறது--அவர் தப்பித்துக் கொண்டு ஓடி விடாதபடி! தெருத் தெருவாக ஆரவாரத்தோடு இழுத்துக் கொண்டு போகிறார்கள். மாருதி என்ன செய்கிறார்?

பிரம்மாஸ்திரத்தை தானே மீறும் நிர்பந்தம் நேராதபடி அவர்களே விடுவித்ததைப் பற்றி சந்தோஷப் படுகிறார்.

சீதா தேவியைத் தேடும் சமயத்தில் இலங்கை முற்றிலும் பார்த்திருந்தாலும் அந்த பலம் பொருந்திய நகரத்தின் தற்காப்பு அமைப்புகளை இரவில் நன்றாகக் கவனித்திருக்க முடியாதல்லவா? இவற்றை எல்லாம் பகல் நேரத்தில் கூர்ந்து கவனிக்கும் சந்தர்ப்பம் கொடுத்ததைப் பற்றியும் சந்தோஷப்படுகிறார்.

தன் வாலில் தீ வைத்து அந்த ஊரில் தீ வைக்க வசதி செய்து கொடுத்ததைப் பற்றி உள்ளூரச் சிரித்துக் கொண்டே அடங்கி ஒடுங்கி மிகவும் பயந்தவர் போல் அவர்கள் பின்னே போகிறார். யாரைப் போல்? கம்பர் இங்கு மிக அருமையான உதாரணம் கொடுக்கிறார். படியுங்கள்.

நொய்ய பாசம் புறம்பிணிப்ப
நோன்மை யிலன்போல் உடல் நுணுங்கி
வெய்ய அரக்கர் புறத்தலைப்ப
விடுமுணர்ந்தே விரைவில்லா
அய்யன் விஞ்சை தனையறிந்தும்
அறியா தான்போல் அவிஞ்சை யெனும்
பொய்யை மெய்போல் நடிக்கின்ற
யோகி போன்றான் போகின்றான்,

மாருதியை பலமான கயிறு கொண்டுதான் கட்டியிருக்கிறுர்கள். ஆனுல் மாருதி சம்பந்தப் பட்டவரை இந்தக் கட்டெல்லாம் அற்பமானதே. அரக்கர்கள் இந்தக் கட்டைப் பலமாக நினைத்துக் கொண்டு மாருதியை இழுத்தடிக்கிறுர்கள். ஆனுல் மாருதி எந்த நிமிஷத்திலும் கட்டுகளை நொறுக்கி அரக்கர்களையும் நொறுக்க முடியும். என்றுலும் கயிற்றுக்கும் அரக்கர்களுக்கும் அடங்கினவர் போல் மாருதி போய்க் கொண்டிருக்கிறுர். எதைப் போல?

ஸந்யாஸி என்பவர் மனப் பாசங்களை அறுத்து, இதைப் போலக் குடும்ப சம்பந்தங்களையும் விடுத்து வெளியேறியவர்.

யோகி, கரும யோகி அல்லது தியாகி என்பவர் மனப்பாசங்களை அறுத்தவர் தான், ஆனுல் குடும்ப சம்பந்தங்களை விடாதவர். இவர் எந்த நிமிஷத்திலும் குடும்பத்தை விட்டு வெளியேற முடியும். ஆனுல் அதில் கட்டுப்பட்டவர் போல் தெய்வக் கட்டளையின் படி உலக உபகாரமாக நடந்து வருபவர்.

பாசபந்த மற்றவராய், ஆத்ம ஞானத் தெளி வுற்றவராய், குடும்பத்தை விட்டு வெளியேறச் சக்தி பெற்றவராய் இருந்தும் எப்படி தியாகியானவர் இதில் ஈடு பட்டவர் போல தெய்வக் கட்டளைக் கிணங்க, உலக உபகாரமாகக் கட்டுப்பட்டு நடந்து வருகிறுரோ,

இதைப் போல மாருதியானவர் எந்த நிமிஷத் திலும் அரக்கர் கட்டிலிருந்து வெளியேறச் சக்தி பெற்றிருந்தும், இலங்கையின் நுட்பங்களை அறியும் இராம காரியத்திற்காக, உலக உபகாரமான இந்தத் தரும காரியத்திற்காக, அந்தக் கட்டில் அடங்கியவர்

போல் அரக்கர்கள் தொல்லைகளைச் சகித்துக் கொண்டு போகிறார் என்று கூறுகிறார் கம்பர்.

பகவத் கீதையின் சாரமான இந்த உயர்ந்த கருத்தை கம்பர் அயோத்தியா கண்டத்திலும் வெளி யிட்டிருக்கிறார். இந்தக் கருத்து இன்றைய உலகின் அறிவாளிகளால் நன்கு உணரப் பட்டிருக்கிறது. ஆனால் பல நூற்றாண்டுகளுக்கு முன் இதை வெளி யிட்ட கம்பரின் தெளிவு ஆச்சர்யமாக இருக்கிறது.

நிற்க, மாருதியின் உள்ளத்தை அறியாத அரக்கர் கள் அவரைத் தெருத் தெருவாக இழுத்துக் கொண்டு போய் ஒவ்வொரு வீட்டு வாயிலிலும் நின்று வாய்ப் பறை அடிக்கிறார்கள். எப்படி?

அந்த நகரும் கடிகாவும்
அழிவித் தக்கன் முதலாயோர்
சிந்த நூறிச் சீதையொடும்
பேசி மனிதர் திறம்செப்ப
வந்த குரங்கிற் குற்றதனை
வம்மின் காண வம்மினென
தந்தந் தெருவும் வாயில் தொறும்
யாரும் அறியச் சாற்றினார்

வாருங்கள்! வாருங்கள்! இந்தக் குரங்குக்கு வந்த கேட்டைப் பாருங்கள், வாருங்கள்!

அசோக வனத்தையும் நகரத்தையும் அழித்த தடிக் குரங்கு!

அக்ஷ குமாரனோடு எண்ணற்ற வீரர்களையும் படைகளையும் கொன்ற எமக் குரங்கு!

சீதையிடம் ரகசியம் பேச வந்த திருட்டுக் குரங்கு!

இந்திரஜித்திடம் உதை தின்று இராவணேச்வர னிடம் தூது வந்ததாக வேஷம் போட்ட மாயக் குரங்கு!

இதற்கு வந்த கேட்டைப் பாருங்கள்! வாருங்கள்!

இதன் வாலைச் சுட்டு, ஊரைச் சுற்றி, எல்லை கடக்க அடித் தோட்டப் போகிருேம். பாருங்கள், வாருங்கள்!" என்று ஒவ்வொருவரையும் அழைத்து அழைத்துக் காட்டுகிருர்கள். அவரவரும் ஓடி வந்து "எங்கப்பனை அழிச்சியா குரங்கே! என் அண்ணனைத் தின்னியா குரங்கே! என் ஆம்படையானைக் கொன்னியா குரங்கே!" என்று ஆத்திரத்தால் முகத்தில் இடிக்கிருர்கள். முதுகில் குத்துகிருர்கள். காரியத்தில் கண்ணுடைய மாருதியோ இந்தக் கொசுக் கடியை எல்லாம் அலக்ஷியம் செய்து கொண்டு பயந்தவர் போல் போகிருர். இவற்றை எல்லாம்—

பார்த்தாரோடி ஜானகிக்கும்
பகர்ந்தார வளும் உயிர் பதைத்தாள்
வேர்த்தாள் உலந்தாள் விம்மினுள்
விழுந்தாள், அழுதாள், வெய்துயிர்த்தாள்

வேடிக்கை பார்த்தவர்கள் ஓட்டமாக ஓடி சீதையிடம் கூறிக் களித்தார்கள். தேவியோ உயிர் பதைத்தாள். உடல் வெயர்த்தாள். எனக்கு உயிர் தந்த அந்த மஹாநுபாவருக்குத் தீயினுல் தீங்கு நேராமலிருக்க வேண்டுமே என்று விம்மினுள். விழுந்தழுதாள். பிறகு சிறிது தன்னைத் தேற்றிக் கொண்டு அக்னி பகவானைப் பிரார்த்திக்கிருள்.

தாயே அனைய கருணையான்
துணையே! ஏறுந் தகை வில்லா

நாயே அனைய வல்லரக்கர்
நலியக் கண்டால் நல்காயோ
நீயே உலகுக் கொரு சான்று
நிற்கே தெரியும் கற்பதனில்
தூயேன் என்னில் தொழுகின்றேன்
எரியே! அவனைச் சுடலென்றுள்

தாய் போன்ற கருணையுடைய வாயு பகவானுக்குத் தோழனான அக்னி பகவானே! உம்மை வணங்குகின்றேன். அரக்கர்கள் அந்த மாருதியை உபத்ரவிப்பதைக் கண்டு இரக்கம் காட்ட மாட்டீரா? நீர்தான் உலக சாக்ஷி. உமக்கு யாவும் தெரியும். நான் கற்புடையவளா யிருப்பது உண்மையானல் மாருதியைச் சுடாமலிரும்.

யத்யஸ்தி பதி சுச்ருஷா
யத்யஸ்தி சரிதம் தப:
யதி வாஸ்த்யேக பத்னீத்வம்
சீதோ பவ ஹநுமத:

ஹே அக்னி பகவானே! அந்த நாதன் ஒருவரையே உன்னி, அவருக்குப் பணிவிடை செய்து நான் தவ வழியில் நடப்பது உண்மையானல் மாருதியைச் சுடாமல் குளிர்ந்திரும்.

யதி கிஞ்சித் அநுக்ரோச:
தஸ்ய மய்யஸ்தி தீமத:
யதி வா பாக்ய சேஷோ மே
சீதோ பவ ஹநுமத:

அந்த நாதனுக்கு என்னிடம் கொஞ்சமாவது அருள் இருக்குமானல், கொஞ்சமாவது எனக்கு நல்ல பாக்கியம் பாக்கி இருக்குமானல், மாருதியைச் சுடாமல் குளிர்ந்திரும் என்று பிரார்த்தித்தாள்.

அப்பொழுது தீச்சிகை தேவிமுன் வலங்கொண்டு பிரகாசித்தது. மாருதியின் க்ஷேமத்தின் அறிகுறி போலும்.

அப்பொழுது மாருதி என்ன செய்கிறார்? என்ன நிலையில் இருக்கிறார்?

வெற்பினுல் இயன்ற தன்ன
மேனியை விழுங்கி வெந்தீ
நிற்பினும் சுடாது நின்ற
நீர்மையை நினைவி னேக்கி
அற்பினு ரருத சிந்தை
அநுமனும் ஜனகன் பாவை
கற்பினுல் இயன்ற தென்பான்
பெரியதோர் களிப்ப ஞனன்

மாருதி வாலிலிட்ட தீ மண்டி எரிகிறது. மலை போன்ற அவர் உடல் முழுவதும் வியாபித் திருக்கிறது. ஆனாலும் சுடவில்லை. இதற்கென்ன காரணம் என்று சிந்தித்தார். ஜனகன் மகளின் கற்புத் தான் இப்படிக் காக்கிறது என்று சந்தோஷித்தார். அல்லாமலும் கடல் கடந்த போது மலை உதவிக்கு வந்ததையும் நினைத்துக் கொண்டார்.

ஸீதாயாச் சான்ரு சம்ஸ்யேன
தேஜஸா ராக வஸ்ய ச
பிதுஸ்ச மம ஸக்யேன
ந மாம் தஹதி பாவக:

ஸீதா தேவியின் அருளாலும், இராமருடைய தேஜஸாலும், என் தந்தை வாயு பகவானிடம் உள்ள சிநேகத்தாலும் அக்னி பகவான் என்னைக் கொளுத்த வில்லை போலும் என்று உணர்ந்து களிப்படைந்தார்.

நன்னெறியில் நடப்பவர்களுக்கு பல சங்கடங்கள் வந்தாலும் எதிர்பாராத உதவிகளும் வந்து அவர்களை தாங்குவதைக் காண்கிறோம். ஆகையால் சங்கடங்களுக்குப் பயந்து யாரும் நெறி பிறழ வேண்டியதில்லை அல்லவா?

54. அத்தியாயம்

கோபம் பாபம்

களிப்பினால் உற்சாகம் கொண்ட மாருதி சிறிது நேரம் சிந்தித்தார். சிங்க நாதம் செய்து கொண்டு கிளம்பினார் ஒரே தாண்டாகக் கோபுர வாயிலை அடைந்தார். மலை போலிருந்த மாருதி தன் உருவத்தைச் சுருக்கினார். அவரைக் கட்டியிருந்த கயிறுகள் நழுவி விழுந்தன. இப்படித் தன்னைக் கட்டி லிருந்து விடுவித்துக்கொண்டு மீண்டும் தனது உரு வத்தை வளர்த்தினார். அங்கிருந்த இரும்புத் தடி ஒன்றை எடுத்து அரக்கர்களை நொறுக்கினார். வந்த காரியம் வெற்றியோடு முடிவடைந்த உற்சாகத்தினால் மாருதி பொங்கிக் கொண்டிருக்கிறார். இனி என்ன செய்ய வேண்டுமென்று சிந்தித்தார்.

"தேவியைக் கண்டாயிற்று. இராவணன் மனத்தையும் பலத்தையும் கண்டேன். அசோக வனத்தையும் ஒரு பகுதி அரக்கர்களையும் அழித்தேன். இன்னும் என்ன பாக்கி? இந்தக் கோட்டைகளை அழிக்க வேண்டும். சிறிது முயற்சியினால் இது நிறைவேறும். அடுத்தபடி என்ன? என் வாலில் எரிந்து கொண்டிருக்கிற அக்னி பகவான் என்னைக் கொளுத்தவில்லை. இப்படி எனக்கு உபகாரம் செய்கிற அவருக்குத் திருப்தி செய்வது நியாயமாகும். அக்கிரமம் மிகுந்த இந்த அழகான இலங்கையை அவருக்கு உணவாக அளிக்கிறேன்."

"மன்னனை வாழ்த்திப் பின்னை
வயங்கெரி மடுப்பன் என்னு
பொன்னகர் மீதே தன்போர்
வாலினைப் போக விட்டான்"

இராமருக்கு வெற்றி உண்டாக வேண்டுமென்று வாழ்த்தி இந்தப் பாதக இலங்கையில் தீ வைப்பேன் என்று தீர்மானித்தார். தீ ஜொலிக்கும் தனது வெற்றி வாலை நீட்டி விட்டார். வீட்டுக்கு வீடு தாண்டினார். ஆங்காங்கு தீ வைத்தார். கலங்காத நெஞ்சுடைய மாருதி பார்த்துப் பார்த்து தீ வைக்கிறார். பிரகஸ்தனுடைய வீட்டில் குதித்துக் கொளுத்தினார். மகா பார்ச்வன், வஜ்ரதம்ஷ்ட்ரன், சுகன், ஸாரணன், இந்திரஜித்தன், ஜம்புமாலி, சுமாலி, ரச்மிகேது, சூர்யசத்ரு, ஹ்ரஸ்வ கர்னன், தம்ஷ்ட்ரன், யுத்தோன்மத்தன், மத்தன், த்வஜக்ரீவன், வித்யுத் ஜிஹ்வன், கோரன், ஹஸ்திமுகன், கராளன், பிசாசன், சோணிதாக்ஷன், கும்பகர்ணன், மகராக்ஷன், எக்ஞசத்ரு, ப்ரஹ்ம சத்ரு, நராந்தகன், கும்பன், நிகும்பன் இவர்கள் வீடுகளை யெல்லாம் கொளுத்தினார். ஆனால் விபீஷணர் வீட்டை மாத்திரம் விட்டு

விட்டார். இராவணன் அரண்மனையும் கொளுத்தப் பட்டது.

எங்கு பார்த்தாலும் தீ! தீ!! தீ!!! என்ற பெருங் கூச்சல். வானளாவிய புகைப் படலமும் தீப் படலமும். இடையில் அகப்பட்டுக் கொண்ட இராக்ஷஸ கூட்டங்களின் கூக்குரல். படீர் படீரென்று மாட மாளிகைகள் வெடித்துச் சரிந்து விழுகின்றன. பொற் கூண்டுகளிலிருந்த பஞ்ச வர்ணக் கிளிகள் பதைத்து வெந்து மடிகின்றன. பரிதாபம்!

"மருங்கின் மேலொரு
மகவுகொண் டொருதனி மகவை
அருங்கையால் பற்றி மற்றொரு
மகவுபின் னரற்ற
நெருங்கி னுரொடு நெறிகுழல்
சுறுக்கொள நீக்கி
கருங்கடற்றலை விழ்ந்தனர்
அரக்கியர் கதறி"

இடுப்பிலொரு குழந்தை, கையிலொரு குழந்தை, பின்னேயொரு குழந்தை பதறிக் கதறி யழ தடுமாறித் தத்தளிக்கும் அரக்கியரோ கூட்ட நெருக்கத்தால் தங்கள் தீ வண்ணக் கூந்தலில் தீப் பற்ற இடித்து விலக்கிக் கொண்டு தாங்க மாட்டாத வெப்பந் தணியும்படி கதறிக் கொண்டு கடலில் வீழ்ந்தனர்.

இந்த அரக்கியர்களும் இவர்களுடைய காதலர்களும் உலகத்திலுள்ள எத்தனையோ பெண்களையும் பேதைக் குழந்தைகளையும் கதற அடித்தார்கள் என்பது உண்மை. அந்தக் கர்ம பலன் தப்பாமல் இவர்கள் தலையிலும் விழுந்திருக்கிறது. உலகத்தில் நடைபெறும் இயற்கைச் சட்டத்தின் தவறாத நீதியை

இது நிரூபிக்கிறது. ஆனாலும் இவர்கள் அனுபவிக்கும் இந்தப் பரிதாபக் காட்சி இளக்க முடைய நெஞ்சுக்கு சகிக்கக் கூடியதாய் இல்லை. இவர்கள் தவறைக் கண்டு வஞ்சம் கொண்ட நெஞ்சினர்கள் இவர்கள் கஷ்டத்தைக் கண்டு களிப்படையலாம். ஆனால் பெருங்குணம் படைத்த பெரியோர்கள் எதிரியானாலும் அவர்கள் தீங்கு அடைவதைக் கண்டு சந்தோஷப்பட முடியாது. மாருதிக்கு இந்த உணர்ச்சி உண்டாயிற்ரு? உண்டாயிற்று என்றுதான் வால்மீகி தெளிவாகக் கூறுகிருர். படியுங்கள்.

இலங்கை முற்றிலும் கொளுத்தி தன் வாலி லுள்ள நெருப்பை சமுத்திரத்தில் தோய்த்தணைத்தார் மாருதி. எரிந்தழிந்த இலங்கையை, துடித்து மடியும் அரக்கர்களைக் கண்டார். சிந்திக்கிருர். அவர் உடலில் ஒரு நடுக்கம் கண்டது. நாணத்தால் குன்றினுர். தன்னையே நொந்து கொள்ளுகிருர். இந்த இலங்கையில் தீ யிட்டு என்ன கொடிய காரியத்தைச செய்து விட்டேன். ஐயோ! என் கோபம் எவ்வளவு பாபத்தைச் செய்து விட்டது.

தன்யாஸ்தே புருஷ ச்ரேஷ்டா
யே புத்யா கோபமுத்திதம்
நிருந்தந்தி மஹாத்மானே
தீப்த மக்னி மிவாம்பஸா

கதித்தெழும் நெருப்பை நீரால் தணிப்பது போல கொதித்தெழும் கோபத்தை புத்தியால் தணித்துக் கொள்ளும் மகாத்மாக்கள் மகா பாக்கிய சாலிகள். இவர்களே புருஷ சிரேஷ்டர்கள். இப்படி யன்றி என்னைப் போல் கோபத்திற்கு இடம் கொடுத்து விடுபவர்களோ எதைத் தான் செய்ய மாட்டார்கள்?

க்ருத்த: பாபம் ந குர்யாத் க:
க்ருத்தோ ஹன்யாத் குருனபி
க்ருத்த: பருஷயா வாசா
நர: ஸாதூ னதிக்ஷிபேத்

கோபியானவன் எந்த பாபத்தையும் செய்து விடுவான். கோபி குருவையும் கொன்று விடுவான். கோபியானவன் ஸாதுக்களையும் கொடுஞ் சொல்லால் திட்டி விடுவான். ஆனால்

ய: ஸமுத்பதிதம் க்ரோதம்
க்ஷமயைவ நிரஸ்யதி
யதோரக ஸ்தவசம் ஜீர்ணம்
ஸ வை புருஷ உச்யதே

பாம்பானது சட்டையை உரித்துத் தள்ளி விடுகிறது. இது போல் கொதித்தெழும் கோபத்தை எவன் பொறுமையால் நீக்குகிறானோ அவனே புருஷன் என்று கொண்டாடப்படுகிறான்.

அந்தோ கெட்டேன். நானோ துர்புத்தி யுள்ளவன். வெட்கம் கெட்ட பாவி. ஆ! ஆ! இந்த இலங்கை எங்கும் எரியாத இடம் பாக்கி இல்லையே. அப்படியானால் சீதா தேவியும் தான் இதில் அகப்பட்டுக் கொண்டிருக்க வேண்டும் சற்றும் யோசனை இல்லாமல் என்ன காரியம் செய்து விட்டேன். எதற்காக இந்த இலங்கை வந்தேனோ அந்தக் காரியம் பாழாகி விட்டதே. சிறிதும் நான் யோசிக்காமல் போனேனே. சீதா தேவியைப் பாதுகாக்க வேண்டுமென்று எனக்குத் தோன்றாமல் போயிற்றே. என் குரங்கு புத்தியைக் காட்டி விட்டேனே! நான் எப்படி வானரர் முகத்தில், இராமலக்ஷ்மணர் முகத்தில் விழிப்பேன். அவர்கள் எப்படி உயிர் தரிப்பார்கள்? சே! சே! தேவிக்கு மட்டும் ஏதாவது ஆபத்து வந்திருந்தால் நான் உடனே உயிரை மாய்த்துக் கொள்வேன் என்று தீர்மானித்தார்.

இச்சமயம் மாருதிக்கு சில நல்ல குறிகள் தென்பட்டன. ஆகையால் சிறிது தெளிவு கொண்டு மீண்டும் சிந்திக்கிறார்.

"ஒரு வேளை தேவியை அவளது கற்பே காத்திருக்கும். அந்த சீல முடைய ராம பத்தினியை நெருப்பு எப்படித் தீண்டும்? அந்த கற்புத் தீயை இந்த ஜடத் தீ எரித்து விட முடியுமா? அன்றியும்—

த்ரயாணும் பரதாதீனும்
ப்ராத்ரூணும் தேவதா ச யா
ராமஸ்ய ச மன: காந்தா
ஸா கதம் வினசிஷ்யதி

மஹா தர்மிஷ்டர்களாகிற லக்ஷ்மணர் பரதர் சத்ருக்னர் மூவருக்கும் தாயான சீதாதேவி; ஸ்ரீ இராமருடைய மனதிற்கு காந்தம் போன்ற அந்த ஜனக நந்தினி எப்படி அழிந்து விடுவாள்?

தவிர அக்னி பகவான் எதையும் கொளுத்துபவராயிருந்தும் என் வாலைக் கொளுத்த வில்லையே! அந்தத் தாயை எப்படிக் கொளுத்துவார்?

அல்லாமலும் சீதா தேவியைத் தேட வரும்போது, கடல் மத்தியில் மலை முளைத்து உதவி செய்ய வந்ததே. அந்த ஆச்சரியத்தைக் கண்ட பிறகும் நான் ஸந்தேகப் படுவானேன்? என்று எண்ணினார்.

இந்த சமயத்தில் வான வீதியிலுள்ள சாரணர்கள்—

"ஆ! ஆச்சர்யம்! யாரும் நுழைய முடியாத இலங்கையை இந்த மாருதி கொளுத்தி விட்டாரே. அன்றியும் இலங்கை எங்கும் அழிந்தும் சீதாதேவி தப்பி யிருப்பது இன்னும் ஆச்சர்யமா யிருக்கிறது" என்று பேசிக் கொள்ளும் சத்தம் மாருதிக்குக் கேட்டது. இதனால் அவருக்குத் திருப்தி உண்டாயிற்று. மீண்டும் தேவியைக் கண்டு வணங்கி விடை பெற்று இராமரிடம் போவதென்று தீர்மானித்துப் புறப்பட்டார்.

55. அத்தியாயம்

உணர்ச்சி மழை

ஆகாய வாசிகளாகிற மகரிஷிகளின் வாக்காலும் தனக்கு ஏற்பட்ட நற்சகுனங்களாலும் சீதா பிராட்டி க்ஷேமமாக இருக்கிறாளென்று மாருதி உணருகிறார்.

ஆனாலும் "ஒரு வேளை எப்படியோ" என்ற சந்தேகமும் இருக்கிறது. எவ்வளவு நிச்சயமான காரியத்திலும் இந்த அற்ப சந்தேகம் கலந்து கொண்டு தான் இருக்கும் போலும். ஆகையால் மாருதி சிறிது பயத்தோடேயே அசோக வனம் இருந்த இடத்தை நாடினார். வழி யெங்கும் தான் இட்ட தீயால் சாம்பலான பாகங்களையே காண்கிறார். அசோக வனமும் அடையாளம் தெரியாமல் அழிந்திருக்கிறது. ஏன்? இவரே இலங்கையை அழிக்க அங்கு தானே 'சுக்லாம் பரதரம் சூட்டினர்' இரவில் இவர் கண்ட இலங்கையின் அற்புதக் காட்சி என்ன! அசோக வனத்தின் மாட்சி யென்ன! இப்பொழுது எங்கும் சாம்பலாய் பொட்டலாய், மயானம் போல் காணப்படும் நிலை யென்ன? இதனால் மாருதியின் சந்தேகமும் பயமும் அதிகரித்தது.

ஆனால் நெடுந் தூரத்தில் ஒரே ஒரு மரம் மட்டும் தென்படுகிறது. அந்த சிம்சுபா விருக்ஷத்தைக் கண்டவுடன் மாருதிக்கு சிறிது தைரிய முண்டாகிறது. வேகமாக ஓடினார். சர்வ நாசம் செய்யப்படும் பிரளய காலத்தில் தனித்திலங்கும் சக்தியைப் போல் விளங்கும் அந்தக் கற்புத் தெய்வத்தை, இராம

ப்ரியையை, சீதா பிராட்டியை அந்த மரத்தடியில் கண்டார். சந்தேகமும் பயமும் நீங்கி சந்தோஷம் கொண்டார். வணங்கினார். ரணகளத்திலிருந்து வெற்றியோடு மீளும் மகனைக் கண்ட தாயைப்போல் பிராட்டியும் இருதயம் பூரித்து மாருதியை ஆசீர்வதித்தாள். கூறுகிறாள்.

"வீர மாருதி! இந்த துராத்மாவான இராவணனை வென்று என்னைச் சிறை மீட்டுக் கொண்டு போக நீர் ஒருவரே போதும். ஆனால் இது இராமருக்குப் பெருமையைத் தராது. அவர் இங்கு வந்து தனது வில்லாண்மையால் இராவணனை வென்று என்னைச் சிறை மீட்டால் அவர் பெருமைக்குத் தகுந்ததாக இருக்கும். இந்த வழியில் முயற்சி செய்யும்" என்றாள்.

பிராட்டியின் உள்ளத்தை உணர்ந்த மாருதியும் உடனே இராமரிடம் போக விடை பெற முயற்சிக்கிறார். பிராட்டியை தனியே விட்டுவிட்டுப் போவது வருத்தமா யிருந்தாலும் தான் உடனே புறப்பட வேண்டிய கடமை அவரை உந்துகிறது.

தனியே தவித்திருந்த பிராட்டிக்கும் மாருதியைக் காண்பது சிறிது ஆறுதலாக இருக்கிறது. ஆனாலும் மேலே நடக்கவேண்டிய காரியங்களின் அவசியத்தையும் அவசரத்தையும் உணர்ந்த தேவி கூறுகிறாள். 'எப்படிப் பேசினால் இராமர் உடனே வந்து என்னை இந்த துக்கத்திலிருந்து விடுவிப்பாரோ அப்படிச் சொல்லி உபகாரம் செய்யும். லக்ஷ்மணருக்கும் சொல்லும். பேருபகாரியான ராஜா சுக்ரீவருக்கும் வானரத் தலைவர்களுக்கும் என் வந்தனத்தைச் சொல்லும். வானரர் அனைவருக்கும் என் அன்பைத் தெரிவியும். க்ஷேமமாகப் போய்வாரும் என்று ஆசீர்வதித்து விடை கொடுத்தாள். மாருதியும் வலம் வந்து வணங்கிப் புறப்பட்டார்.

கடற் கரையின் ஓரமாய் ஆகாயத்தை அளாவி நின்ற அரிஷ்ட பர்வதத்தில் ஏறினார். இவர் போகும் வேகத்தில் மரங்கள் நொறுங்கின. மிருகங்கள் பயந்து கதறி மடிந்தன. பக்ஷிகள் கூச்சலிட்டு ஆகாயத்தில் கிளம்பி விழுந்து அழிந்தன. மலை உச்சி ஏறிய மாருதி தன் உருவத்தை வளர்த்தார். அந்த தர்மாத்மாவான இராமரை தியானித்தார். ஆகாயத்தில் தாவ எண்ணி காலை அமுக்கி உந்தினார். அந்த மலை முழுதும் சலித்தது. வட திசை நோக்கி கடல் மீது பாய்ந்தார் மாருதி. இராமருடைய வில்லிலிருந்து புறப்பட்ட அம்புபோல் வேகமாகப்போகிறார்.

வழியில் இடையூறு ஒன்றுமில்லை. ஆனால் இவர் வருகையை எதிர் நோக்கிக் காத்திருந்த மைனாக பர்வதம் மட்டும் தலை தூக்கி அன்போடு வரவேற்றது. மாருதியும் தான் அளித்த வாக்குறுதியின்படி தனது வேகத்தைக் குறைத்து, அந்தப் பர்வததைத் தொட்டு அன்பு காட்டி, தேவியைக் கண்ட சந்தோஷ சமாசாரத்தை அறிவித்து சந்தோஷத்தோடு விடை பெற்று மீண்டும் பாய்ந்தார்.

கடலின் வட கரையில் மஹேந்திர கிரியைக் கண்டார் மாருதி. சந்தோஷத்தால் கர்ஜித்தார். மகத்தான இந்த கர்ஜனை பத்துத் திசைகளிலும் பரவியது. இவரது வருகையை எதிர் நோக்கி தவங்கிடக்கும் வானரர்களின் செவிகளில் நிரம்பியது.

விஷயம் தெரிந்த ஜாம்பவந்தர் வானரத் தலைவர்களோடு கலந்து "இது மாருதியின் கர்ஜனை தான். அவர் வெற்றியோடேயே மீள்கிறார். இல்லாவிடில் இத்தகைய சந்தோஷ ஆரவாரம் இராது" என்று அறிவித்தார்.

வானரர்கள் சந்தோஷம் கொண்டார்கள். மரங்களின் உச்சியில் ஏறினார்கள். மாருதியைக் காணும்

ஆசையோடு எட்டிப் பார்க்கிருர்கள். 'வாருங்கள் வாருங்கள்' என்று துணியை வீசுவது போல் கிளையை உலுக்குகிருர்கள்.

மாருதியும் மலைமேல் வந்து குதித்தார். தன் உருவத்தைச் சுருக்கினுர். இளவரசனுகிற அங்கதன் ஜாம்பவந்தர் முதலாஞேர் இருக்குமிடம் நோக்கி நடக்கிருர். வானரர் வந்து சூழ்ந்து கொண்டனர். எப்படி?

பறவைப் பார்ப்பு
தாய் வரக் கண்டதன்ன
உவகையில் தளிர்த்தாரம்மா!

தாய்ப் பறவை திரும்பி வரக்கண்ட குஞ்சுகள் போல சந்தோஷம் கொண்டு மொய்த்தனர். என்ன செய்கிருர்கள்?

"அழுதனர் சிலவர் முன்னின்(று)
ஆர்த்தனர் சிலவர் அண்மித்
தொழுதனர் சிலவர் ஆடித்
துள்ளினர் சிலவர் அள்ளி
முழுதுற விழுங்குவார் போல்
மொய்த்தனர் சிலவர் சுற்றும்
தழுவினர் சிலவர் கொண்டு
சுமந்தனர் சிலவர் தாங்கி"

வானரரிற் சிலர் மாருதியைக் கண்டு கண்ணீர் ததும்ப தேம்பித் தேம்பி அழுகிருர்கள். கடுந்துக்கத்தில் சிரிப்பு உண்டாகிறது இப்படியே பெரும் சந்தோஷத்திலும் அழுகை வந்து விடுகிறது. சிலர் ஆரவாரம் செய்கிருர்கள். சிலர் வெற்றி மாருதியைத் தொட்டுப் பார்க்கிருர்கள். சிலர் அவர் காலடியில் விழுந்து தொழுகிருர்கள். சிலர் ஆடுகிருர்கள். பாடுகிருர்கள். துள்ளிக் குதிக்கிருர்கள். சிலர் பார்வை

யால் விழுங்கி விடுவதைப் போல அவரைச் சூழ்ந்து மொய்த்தனர். சிலர் ஓடி வந்து கட்டிக் கொண்டார்கள். சிலர் தோளில் தூக்கிக்கொண்டு ஜே! கோஷம் போடுகிருர்கள்.

மாருதி இந்த உணர்ச்சிக் கடலை மெதுவாக நீந்தி, தன்னை விடுவித்துக்கொண்டு, அங்கதன் ஜாம்பவந்தர் முதலானோரைக் கண்டு வணங்கினுர். அவர்களும் இவரைக் கௌரவித்து வர வேற்ருர்கள். உடனே

த்ருஷ்டா ஸீதேதி விக்ராந்த:
ஸம்க்ஷேபேண ந்யவேதயத்

"சீதா தேவி காணப் பட்டாள்" என்று பல சாலியான மாருதி சுருக்கமாக அறிவித்ததாக வால்மீகி கூறுகிருர். ஆனுல் கம்பரோ

* * ஆங்கு அவண்
இருந்திவண் இருந்தோர்க் கெல்லாம்
ஞால நாயகன் றன்தேவி
சொல்லினள் நன்மை யென்ருன்

இங்கிருக்கும் வானரர்கள் எல்லோரையும் சீதா தேவி விசாரித்து க்ஷேமம் சொன்னுள் என்று சிறப்பாக வானரர்களின் இருதயத்தைத் தொடும்படி சொல்லின் செல்வனுன மாருதி அறிவித்ததாக அழகு படுத்திக் கூறுகிருர். இதைக் கேட்டவுடன் சந்தோஷம் தலைக்கேறின வானரர்கள் இன்னது செய்கிருேமென்றே உணராமல் துள்ளிக் குதித்து வாலை ஆட்டி கிலகிலாசப்தம் செய்து ஆரவாரம் செய்தார்கள். இந்த உணர்ச்சி மழை ஓய்வதற்கு நெடு நேரம் பிடித்தது.

மாருதி அங்கதன் கையைப் பிடித்துக்கொண்டு அந்த மலையில் கண்ணிற்கும் மனதிற்கும் இனிய ஒரு

சம வெளியை அடைந்தார். வானரர்கள் அனைவரும் அவரைச் சுற்றிச் சூழ்ந்து அமர்ந்தார்கள். வானரர் களைப் பார்த்து "இலங்கையில் அசோக வனத்தில் அந்த ஜனக நந்தினியைக் காணும் பாக்கியம் பெற் றேன். எப்படி இருக்கிருள்?

ஏகவேணீ தரா பாலா
ராம தர்சன லாலஸா
உபவாஸ பரிச்ராந்தா
ஜடிலா மலினு க்ருசா

இராமரைக் காணும் ஒரே ஞாபகத்தோடு தவம் கிடக்கிருள். அந்தப் பால்யமான ஜானகி ஒரு வித அலங்காரமு மின்றி யிருக்கிருள். தலை யெல்லாம் ஒரே சடையாக இருக்கிறது. அன்ன ஆகார மின்றி உபவாசத்தால் களைத்திருக்கிருள். இளைத்திருக்கிருள். பொன்னிறத்த மேனி யெல்லாம் புழுதி படிந்திருக் கிறது. அந்த ராம நாம தாரகத்தாலேயே உயிர் தாங்கி யிருக்கிருள் என்ருர்.

சீதையின் உடல் நிலையையும், ஒப்பற்ற மன நிலை யையும் கேட்டவுடன் அந்த வானரக் கூட்டத்தில் மீண்டு மொரு ஆரவாரம் உண்டாயிற்று. பயபக்தி யோடு தங்கள் சேஷ்டைகளை விடுத்து அடங்கி ஒடுங்கி உட்கார்ந்தார்கள்.

அப்பொழுது இளவரசனுகிற அங்கதன் மாருதியை அன்போடு நோக்கி "கடல் கடந்து வெற்றியோடு மீண்ட மாருதி! பலத்திலும் வீரத்தி லும் உமக்குச் சமம் யார் இருக்கிருர்கள்?

அஹோ ஸ்வாமினி தே பக்தி:
அஹோ வீர்யம் அஹோ த்ருதி:
திஷ்டயா த்ருஷ்டா த்வயா தேவி
ராம பத்னீ யசஸ்வினீ

ஆச்சரியம்! தலைவரிடத்தில் நீர் காட்டும் பக்தி என்ன! ஆ! என்ன வீரம்! என்ன தீரம்! நல்ல வேளையாக அந்தக் கீர்த்தியுள்ள இராம பத்தினியை நீர் கண்டீர். இராமரும் துக்கம் நீங்குவார். நாங்களும் பிழைத்தோம் என்று புகழ்ந்தான். மேலும் சொல்லுகிறார்கள், வானரர்கள்.

" பொருதமை புண்ணே சொல்ல
வென்றமை போந்த தன்மை
உரைசெய ஊர்தீ யிட்ட(து)
ஓங்கரும் புகையே ஓத
கருதலர் பெருமை தேவி
மீண்டிலாச் செயலே காட்டத்
தெரிதர உணர்ந்தோம் பின்னர்
என்னினிச் செய்து மென்றார்

மாருதி! நீர் போய் வந்த விவரங்களில் ஒரு சில வற்றை ஊகித் துணர்கிறோம். நீர் அரக்கர்களோடு மகத்தான சண்டை செய்திருப்பதை உமது மேனியில் இருக்கும் எண்ணற்ற புண்களே உணர்த்துகின்றன. நீர் அவர்களை வெற்றி கொண்டிருக்கிறீர். இல்லையானால் எப்படித் திரும்பி வரமுடியும்? இலங்கையை நீர் தீயிட்டுக் கொளுத்தி யிருக்கிறீர். அங்கிருந்து கிளம்பின புகை மண்டலங்கள் இங்கிருந்தே நன்றாகக் காணப்பட்டன. என்றாலும் பகைவர்கள் அதிக பலசாலிகளாகவே யிருக்கிறார்கள். இல்லையானால் தேவியை நீரே சிறை மீட்டு வந்திருக்க மாட்டீரா? இப்படி சில விஷயங்களை நாங்கள் தெரிந்து கொண்டிருந்தாலும் நீர் புறப்பட்டது முதல் இங்கு திரும்பியது வரையில் எல்லா விபரங்களையும் ஆதியோடந்தமாக கேட்க விரும்புகிறோம். நீரும் உமது காரியமென்று சிலவற்றை மறைக்காமல்

எல்லாவற்றையும் கூறும். மேலும் இனி நாங்கள் என்ன செய்ய வேண்டுமென்றும் தெரியப்படுத்தும் என்று கேட்டுக் கொண்டார்கள். மாருதியும் இதற்கிசைந்து எல்லாவற்றையும் சொல்ல ஆரம்பித்தார்.

56. அத்தியாயம்

சுந்தரகாண்டச் சுருக்கம்

முதலில் மாருதி சீதா தேவியைத் திசை நோக்கி தலையால் வணங்கினார். புளகாங்கிதம் கொண்டு கூறுகிறார்.

"நீங்களெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கும் போது தான் சமுத்திரத்தின் தென் கரையை அடைய விரும்பி மகேந்திர மலையிலிருந்து ஆகாயத்தில் தாவினேன்.

இப்படிப் போகும்போது பொற் சிகர முடைய ஒரு மலை, வழி மறித்துத் தடை போல் நின்றது. என் வாலால் அடித்தேன். அந்த சிகரம் தூள் தூளாக பிளந்தது.

உடனே "புத்ரா" என்று அம்மலை மனமகிழப் பேசியது. "நான் உனக்குச் சிறிய தகப்பன். வாயு பகவானுக்குத் தோழன். இந்த மஹோததியில் வசிக்கும் மைநாகன். இந்திரன் மலைகளைச் சிறகரிந்த

போது உன் தந்தையால் இங்கு கொண்டு வந்து காக்கப் பட்டேன். தர்ம மூர்த்தியாகிற இராம காரியத்திற்கு உதவி செய்யவே வந்தேன். தடையல்ல' என்றது. அதனிடத்தில் விடை பெற்று உற்சாகத்தோடு அதிக வேகமாக வெகு தூரம் போனேன்.

அப்பொழுது கோரமான அரக்கி காணப் பட்டாள். "என் வாய்க்குள் புகுந்து ஆகாரமாக வேண்டும்" என்று வழி மறித்தாள். நான் என் உடலை வளர்த்தினேன். அவள் வாயை வளர்த்தினாள். திடீரென்று சிறுத்து அவள் வாயில் புகுந்து வெளியே வந்து விட்டேன். உடனே அவள் சுரஸை என்ற நாக மாதாவாக மாறி நின்று என்னை வாழ்த்தி விடை கொடுத்துப் போனாள்.

பின்னும் கருடனைப் போல் வானத்தில் போய்க் கொண்டிருந்தேன். திடீரென்று என் வேகம் தடைப் பட்டது. ஆனால் யாரையும் காண முடியவில்லை. சுற்றிப் பார்த்து ஜலத்தில் அரக்கியைக் கண்டேன். இவள் நிழலைப் பற்றி இழுக்கும் 'சாயாக்ரஹி' "பசியோடிருக்கும் எனக்குக் கொழுத்த ஆகாரமாவாய்" என்று கர்ச்சித்தாள். நான் உடலை வளர்த்தினேன். என் கருத்தறியாது என்னை விழுங்க அவள் வாயை வளர்த்தினாள். நான் உடனே சுருங்கி அவள் வாயில் புகுந்து இருதயத்தைப் பிடுங்கிக் கொண்டு ஆகாயத்தில் எழுந்தேன். அவள் மாண்டு வீழ்ந்தாள்.

இப்படிக் கடலைக் கடந்து மலைகள் நிறைந்த இலங்கையை அடைந்தேன். இருட்டின பிறகு உள்ளே புகுந்தேன். நகர்க் காவல் இலங்கைமா தேவி என்னைக் கொல்ல அட்டஹாஸம் செய்தாள். இடது கையால் அவளை அடித்து வீழ்த்தினேன். "என்னை வென்றதால் இந்த நகரை வெல்வாய்" என்று அவள் நல்ல வாக்குச் சொல்லிப் போனாள்.

இரவெல்லாம் இலங்கை எங்கும் சீதா பிராட்டியைத் தேடினேன். காணாது வருந்தினேன். கடைசியாக அசோக வனத்தில் சிம்சுபா விருக்ஷத்திலேறிப் பார்த்தேன். தேவியைக் கண்டேன்.

உபவாஸத்தால் இளைத்து, உடலெல்லாம் புழுதி படிந்து, தலையெல்லாம் ஒரே சடையாகி, இராமரையே நோக்கி உருகி, உயிர்விட நிச்சயித்திருந்த பிராட்டியை, அரக்கிகள் மத்தியில் எப்படியோ கண்டேன்.

அப்பொழுது ஆடம்பரத்தோடு இராவணன் அங்கு வந்தான். நான் பக்ஷி போல் மறைந்திருந்து பார்த்தேன்.

இராவணனைக் கண்டவுடன் நடு நடுங்கி சீதை அங்கங்களை மறைத்துக் கொண்டு தனக்கு யார் துணை என்று பரிதாபமாகச் சுற்றிப் பார்த்தாள்.

துக்கப்படும் சீதையைப் பார்த்து தன்னை ஏற்றுக் கொள்ளும்படி இராவணன் மன்றாடினான். தேவியின் உறுதியைக் கண்டு "கர்வம் பிடித்தவளே! இன்னும் இரண்டு மாதத்தில் உடன்படாவிட்டால் உன் இரத்தத்தை குடித்து விடுவேன்" என்று பயமுறுத்தினான்.

தேவி அஞ்சவில்லை. "தகாத வார்த்தை கூறும் உன் நாக்கு ஏன் அழுகி விழவில்லை? நீ பலமற்ற கோழை. அவரில்லாத சமயத்தில் திருடிக் கொண்டு வந்தாய்! சத்ய சீலரும் ரண பண்டிதருமான அந்த ராகவருக்குக் கால் பிடிக்கவும் நீ லாயக்கில்லை" என்று கடிந்தாள்.

இராவணன் கோபத்தால் கொதித்தான். வலது கையை ஓங்கி தேவியைக் கொல்ல ஓடி வந்தான்.

ஸ்திரீகளெல்லாம் ஆ! ஆ! என்று கதறினார்கள். இராவணன் மனைவி அவனைத் தடுத்து அணைத்துக் கொண்டாள். இராவணன் திரும்பிப் போனான்.

இராவணன் போன பிறகு ராக்ஷஸிகள் சீதா தேவியை நயத்தாலும் பயத்தாலும் வசப்படுத்த முயற்சித்தார்கள். தேவி அவற்றைத் துரும்பாகவும் மதிக்கவில்லை. அவர்கள் தோல்வியுற்றுக் களைப் படைந்து போயினர்.

அப்பொழுது உறங்கி இருந்த திரிசடை எழுந்து தான் கண்ட பயங்கரமான கனவைக் கூறி அரக்கர் களுக்கு நாசமும், இராமருக்கு ஜெயமும் உண்டாகப் போவதால் சீதையைச் சரணடையும்படி எச்சரித் தாள். அரக்கிகளும் அப்படியே சரணடைய, தனக்கு நன்மை உண்டானால் அவர்களையும் பாது காப்பதாக தேவி உறுதி கூறினாள்.

தேவியின் நிலையைக் கண்டு நான் மிகவும் நொந்து போனேன். எப்படிச் சந்திப்ப தென்று ஆலோசித்தேன். பிராட்டிக்கு மிகப் பிரியமான இராம சரித்திரத்தைச் சொல்ல ஆரம்பித்தேன். இதைக் கேட்டு சந்தோஷம் கொண்டு என்னைப் பார்த்து "நீ யாரப்பா? இராமருக்கும் உனக்கும் எப்படி சம்பந்த முண்டாயிற்று?" என்று கேட்டாள்.

சுருக்கமாக விஷயத்தை விளக்கி "நான் வாயு புத்ரன். சுக்ரீவருக்கு மந்திரி. இராம தூதன். இதோ அவர் கணையாழி" என்று கொடுத்து, "இனி நான் என்ன செய்யவேண்டுமென்று கட்டளையிடும். இப்பொழுதே இராம லக்ஷ்மணர் இருக்குமிடம் கொண்டு போய்ச் சேர்த்து விடுகிறேன்" என்று பிரார்த்தித்தேன்.

தேவி இதை அங்கீகரிக்கவில்லை. "இராமர் இங்கு வந்து இராவணனை வீழ்த்தி, என்னை அழைத்துப் போவதே தகுதியானது" என்றாள்.

உயர் கருத்துடைய அந்த உத்தமியை நான் தலையால் வணங்கி "இராமர் நம்பக்கூடிய அடையாளம் ஒன்று கொடும்" என்று கேட்டேன். பேரடையாளமாக இந்தச் சூடாமணியைக் கொடுத்தாள். நான் பிரதக்ஷிணம் செய்து வணங்கிப் புறப்பட யத்தனித்தேன். அப்பொழுது பிராட்டி—

"மாருதி! எனது விருத்தாந்தத்தை இராமருக்குச் சொல்லும். எப்படிச் சொன்னால் இராம லக்ஷ்மணரும் சுக்ரீவரும் உடனே புறப்பட்டு வருவார்களோ அப்படிச் சொல்லும். இராவணனிட்ட இரண்டு மாத தவணையும் கடந்து அநாதையாக இங்கு நான் மாண்ட பிறகு அவர்கள் வரும்படி நேராதபடி முன்னெச்சரிக்கையாகச் சொல்லும்" என்றாள்.

இந்த பரிதாபமான வார்த்தையைக் கேட்டு எனக்குத் துக்கமும் கோபமும் வந்தது. பிராட்டியிடம் விடைபெற்றுப் புறப்பட்டேன்.

மேலே என்ன செய்ய வேண்டுமென்று சிந்தித்தேன். என் உடலை வளர்த்து அசோக வனத்தை அழித்தேன். இதைக் கண்டு பயந்த அரக்கர்கள் இராவணனிடம் ஓடி முறையிட்டனர். அவன் தன் மனம் போல் வேலை செய்யக்கூடிய கிங்கரரை அனுப்பினான். ஆயுத பாணிகளான எண்பதினாயிரம் பேர் எதிர்த்தனர். அவர்களை அழித்தேன். சிங்கார மண்டபத்தையும் காவலாளிகளையும் நாசம் செய்தேன்.

பின்னர் பிரஹஸ்தனுடைய பிள்ளை ஜம்புமாலி படைகளோடு வந்தான். இவர்களையும் கொன்றேன்.

மந்திரி புத்திரர்கள் வந்தார்கள். அவர்களையும் கூட்டத்தோடு யமலோகத்துக்கு அனுப்பினேன்.

இராவணன் ஐந்து சேனாதிபதிகளை அனுப்பினான். சேனைகளும் இவர்களும் அழிந்தார்கள்.

இராவண புத்திரன் ரண பண்டிதனான அக்ஷ குமாரன் இளைஞர்கள் சூழப் படையோடு வந்தான், படையோடும் அழிந்தான்.

இராவண மூத்த குமாரன், யுத்த மதம் கொண்ட இந்திரஜித்தன் வந்தான். இவனையும் ஆண்மை அழித்துச் சந்தோஷித்தேன். எனது நிலையையும் தனது நிலையையும் கண்ட இந்திரஜித்தன் பிரம்மாஸ்திரத்தால் என்னைக் கட்டினான்.

இராக்ஷஸர்கள் என்னைக் கயிற்றால் கட்டி இராவணனிடம் கொண்டு போனார்கள். இராவணனைக் கண்டேன். நான் வந்த காரணத்தையும் அரக்கர்களைக் கொன்ற காரணத்தையும் கேட்டான். எல்லாம் சீதா தேவிக்காகத்தான் என்று பதில் சொன்னேன்.

வாலியைக் கொன்று இராமர் சுக்ரீவருக்கு அரசையும் மனைவியையும் திருப்பித் தருவதென்றும், சுக்ரீவர் சீதா தேவியைத் தேடித் தருவதென்றும், இருவருக்கும் ஏற்பட்ட அக்னி சாக்ஷியான ஒப்பந்தநட்பை விளக்கினேன். இப்படியே இராமர் வாலியைக் கொன்று அரசளித்ததையும், சுக்ரீவ ஆணையால் இராம காரியத்தை நிறைவேற்ற வானரர்கள் தேவியைத் தேடிப் புறப்பட்டதையும் விரித்தேன். வானரர்கள் அரக்கர்களையும் இலங்கையையும் அழிக்குமுன், சீதா தேவியை இராமரிடம் கொண்டு

வந்து விட்டு விடும்படி சுக்ரீவர் கூறியதாக அறிவுறுத்தினேன்.

இதைக் கேட்ட இராவணன் கோபத்தால் கொதித்தான். கொளுத்திவிடுபவன் போல் என்னைப் பார்த்தான். "கொன்று விடுங்கள்" என்று கட்டளை இட்டான். என் பிரபாவத்தை அறியாதவன், பாபம்!

ஆனால் இராவணனுடைய தம்பி மகா மேதாவியான விபீஷணர் எனக்காகப் பரிந்து பிரார்த்தித்தார். எவ்வளவு கொடிய குற்றம் செய்தாலும் தூதர்களை அங்கபங்கப் படுத்தலாமே யன்றி கொல்லக் கூடாது என்று சாஸ்திரத்தை எடுத்துக் காட்டினார். இதன் மேல் இராவணன் "இவன் வாலைச் சுடுங்கள்" என்று கட்டளை இட்டான்.

ராக்ஷஸர்கள் என் வாலில் துணிகளையும் சணலையும் சுற்றி நெருப்பு வைத்தார்கள். கட்டியிருந்த என்னைக் கட்டையாலும் முஷ்டியாலும் இடித்தார்கள். ராஜ வீதிகளில் இழுத்துக்கொண்டு போனார்கள். கூச்சலிட்டுக் கொண்டே கோபுரவாயிலுக்கு வந்தார்கள். நான் உடலைச் சுருக்கி கட்டை விடுவித்துக் கொண்டேன். இரும்புத் தடியால் அரக்கர்களை அடித்துக் கொன்றேன் என் வாலிலிட்ட தீயைக் கொண்டு மாட மாளிகையுடைய இலங்கை முற்றும் ஊழித் தீ போல் கொளுத்தினேன். எரியாத பாகம் எங்கும் இல்லை.

இதனால் சீதாதேவியும் எரிந்து விட்டாளோ என்ற சந்தேகம் திடீரென்று உண்டாயிற்று. மகத்தான இராம காரியம் கெட்டுப் போயிற்றே என்று சோக மடைந்து விட்டேன்.

இச்சமயம் ஜானகி மட்டும் எரிக்கப்பட வில்லை என்று ஆகாய வாசிகள் ஆச்சர்யத்தோடு பேசிக்

கொள்வது என் காதில் விழுந்தது. என் மனமும் சந்தோஷத்தோடேயே திடமாக இருந்தது. இனிய காற்றும் வீசியது. என் வால் நெருப்பும் என்னைக் கொளுத்தவில்லையே என்ற நிச்சய முண்டாயிற்று. மனத்தெளிவோடு மீண்டும் தேவியைக் கண்டு வணங்கி விடைபெற்றுக் கொண்டேன்.

மீண்டும் உங்களை காணும் ஆசையோடு அரிஷ்ட பருவதத்தில் ஏறி வான மார்க்கத்தில் உங்களிடம் வந்தேன். ஸ்ரீ இராமருடைய பிரபாவத்தாலும் உங்களுடைய தேஜஸாலும் சுக்ரீவ ககாரியத்தை நிறைவேற்றி யிருக்கிறேன. இன்னும் பாக்கியுள்ள காரியங்கள் எப்படி நடக்க வேண்டுமென்று ஆலோசனை கூறுங்கள் என்று நிறுத்தினார்.

இப்படி வால்மீகி அழகான சுந்தர காண்டத்தின் சாரத்தை இங்கு சுருக்கிக் கூறி மந்திராலோசனைக்கும் இடம் கொடுக்கிறார். இப்படியே இராமாயணம் முழுவதையும் ஆரம்பத்தில் சுருக்கி கூறியிருக்கிறார் என்பதும் குறிப்பிடத் தக்கது.

57. அத்தியாயம்

உற்சாகமும் அனுபவமும்

சீதா பிராட்டியின் மிக மேன்மையான குணங்களையும் ஆச்சர்யமான உறுதியையும், மாருதியின் தீரத்தையும், அதி வீர பராக்ரமச் செயல்களையும் கேட்ட வானரர்கள், பூரிப்பால் ஆரவாரம் செய்

தார்கள். மிக உற்சாகம் காட்டினார்கள். இவர்களது மனங் கவரும் உற்சாகத்தாலும், தனது அஸஹாய வெற்றியாலும் உற்சாகம் கொண்ட மாருதி வானரர்களுக்கு ஒரு ஆலோசனை கூறுகிறார்.

"பெரியோர்களே! பிரபுவான இராமருடைய முயற்சி பயனுடையதாயிற்று. ராஜா சுக்ரீவருடைய உற்சாகம் பலன் கொடுத்தது. என் சேவையும் வீண் போகவில்லை. எதனால்? எல்லாம் சீதா பிராட்டியின் நல்லொழுக்கத்தால் தான். ஒழுக்கமும் உறுதியும் தலைவியினிடத்தில் இல்லையானால் தலைவனும், அவனது நண்பர்களும், ஊழியர்களும் என்ன பாடு பட்டுத்தான் என்ன பிரயோஜனம்?

ஆனால் சீதா தேவியின் ஒழுக்கமும் உறுதியும் அதிக ஆச்சர்யமா யிருக்கிறது. உணர்ச்சி அற்றவர்களையும் ஊக்கி விட்டு, கோழைகளையும் வீரர்களாக்குவதாயிருக்கிறது. அந்தக் கற்பரசியின் சக்தி நெருப்பைக் காட்டிலும் தீவிரமாயிருக்கிறது. எப்படி?

ந ஹதக்னி சிகா குர்யாத்
ஸம்ஸ்ப்ருஷ்டா பாணினா ஸதீ
ஜனகஸ்யாத்மஜா குர்யாத்
யத் க்ரோத கலுஷீ க்ருதா

எரிகின்ற நெருப்பைக் கையால் தொட்டால் அது சுடாமல் விடுமா? ஒரு வேளை நெருப்புச் சுடாமலிருந்தாலும் இருக்கும். சீதையைக் கோப மூட்டுகிறவனை அவள் கற்புத் தீ ஒரு நாளும் சுடாமல் விடாது. இது நிச்சயம். சீதா தேவிக்கு இத்தகைய பெரிய சக்தி இருக்கிறது. இது நமக்கு அளவற்ற பக்க பலம். இப்படி இருப்பதாலே நாம் எல்லாம் இப்பொழுதே இலங்கை சென்று இராக்ஷஸர்களையும் இராவணனையும் கொன்று வென்று சீதா பிராட்டி

யைச் சிறை மீட்டு தேவியோடேயே இராம லக்ஷ்மணரிடம் போவது உசிதம் என்று தோன்றுகிறது.

ஏனென்றால் அந்த கட்டுக் காவலுடைய இலங்கையை அழித்து இராவணனையும் இராக்ஷஸர்களையும் கொல்வதற்கு நான் ஒருவனே போது மென்று எண்ணுகிறேன். சூரர்களாகிற நீங்களும் புறப்பட்டால் வெற்றிக்குச் சந்தேகமென்ன? நான் கல் மழை பொழிந்தால் தேவர்களும் அழிவார்கள். இந்த அரக்கர்கள் எம்மாத்திரம்?

மந்தர மலையை அசைத்தாலும் அசைக்கலாம். இந்த ஜாம்பவந்தரை யுத்தத்தில் அசைக்க முடியுமா?

அரக்கர் வம்சத்தைக் கருவறுக்க வாலி புத்ரன் அங்கதன் ஒருவரே போதுமே.

பனசனும் நீலனும் மந்தர மலையையும் தூள் படுத்தி விடுவார்களே. அரக்கர்கள் எம்மாத்திரம்?

அச்வினி தேவர்களின் புத்ரர்களான மயிந்தன் துவிதன் இருவரும் அமிர்தம் குடித்தவர்களாயிற்றே! இவர்களை வெல்ல வல்லவர் உலகத்தில் யாரிருக்கிறார்கள்?

நான் இலங்கையை அழித்து, நகரெங்கும் தீக் கொளுத்தி, ராம நாமத்தையும் அவரது தாஸனை மாருதி பெயரையும் எங்கும் பிரசித்தப் படுத்தியிருக்கிறேன்.

சீதா தேவியே தனது பொறுமையாலும் உறுதியாலும் இலங்கையின் பலத்தை அழித்திருக்கிறாள். இராமர் இராவணனைக் கொன்றார் என்று பெயருக்கு மாத்திரம் நடக்கவேண்டியதுதான் பாக்கி. இந்த

நிலையில் என்ன செய்யவேண்டுமோ அதை யோஜனை செய்யுங்கள்" என்றார் மாருதி.

உடனே யுவ ராஜனான அங்கதன் உற்சாகத்தோடு பேசுகிறான்.

"சீதா தேவியை மீட்டுக் கொண்டு போகாமல் வெறுங்கையோடு நாம் இராமரிடம் செல்வது சரியல்ல.

த்ருஷ்டா தேவி ந சானீதா
இதி தத்ர நிவேதனம்
அயுக்நமிவ பச்யாமி
பவத்பி: க்யாத விக்ரமை:

வீரத்திலும் பலத்திலும் கீர்த்தி பெற்ற நீங்கள் இராமரிடம் சென்று "சீதா தேவியைக் கண்டோம் ஆனால் மீட்டுக்கொண்டு வரவில்லை" என்று சொல்வது உங்கள் பெருமைக்குப் பொருத்தமாக இல்லை.

ஏற்கனவே மாருதி வேண்டிய வேலை செய்து விட்டார். இனி என்ன? நாமே சென்று அரக்கர்களைக் கொன்று தேவியைச் சிறை மீட்டுச் செல்வோம்" என்று ஆமோதித்தார். அங்கதனுடைய நிச்சயத்தைக் கண்ட ஜாம்பவந்தர் இதை ஆக்ஷேபித்துக் கூறுகிறார்.

"தென் திசையில் தேடி வரும்படி நம்மை அனுப்பினார்கள். இராமரோ சுக்ரீவரோ சண்டை செய்யும்படி நமக்குக் கட்டளை யிடவில்லை. நாம் செய்யும் காரியம் ஒரு வேளை அவர்களுக்குப் பிடிக்காமலிருக்கலாம்.

அன்றியும் அரக்கரை அழித்துச் சீதையைச் சிறை மீட்பதாக இராமர் பிரதிக்ஞை செய்திருக்கிறார். அதை எப்படி பொய்யாக்குவது? நாம் இதைச் செய்வது அவர்களுக்குத் திருப்தியை உண்டாக்காது.

ஆகையால் உடனே இராமரிடம் போவதே நாம் செய்யத் தகுந்த காரியம் என்று எடுத்துக் காட்டினர், இந்தப் பெரியவருடைய நியாய வாதத்தை யாவரும் அங்கீகரித்தார்கள். மகேந்திரகிரியை விட்டு உடனே புறப்படுகிறார்கள்.

அநுமான் மகா மேதாவி தான். ஆனால் நாமே இராவண ஸம்ஹாரம் செய்வோம் என்று அவர் கூறுவது உற்சாகத்தின் மிகுதியாகும். இராம லக்ஷ்மணரும், சுக்ரீவர் முதலானோரும் வந்து சண்டை செய்யும்போதே எவ்வளவு கஷ்டமும் ஆபத்து மிருக்கிறதென்று யுத்த காண்டத்தில் காணலாம்.

யுவராஜன் அங்கதன் இதை ஆமோதிப்பதும் இளமையின் தீவரமே. ஆனால் வயதிலும் அறிவிலும் முதிர்ந்த ஜாம்பவந்தர் இது தவறெனக் கண்டார். வானரர்கள் மட்டும் இராவணனை வென்றுவிட முடியாதென்று அவருக்குத் தெரியும். ஆனாலும் இதைப் பட்டவாத்தனமாகச் சொல்லி விடவில்லை. ஆனால் வானரர்கள் தவறான வழியில் இறங்கி விடாமல் தடுத்து விட விரும்புகிறார். இராமரோ சுக்ரீவரோ நமக்கு கட்டளை இடாத காரியத்தை செய்யக் கூடாதென்று ஒரு நல்ல காரணம் காட்டுகிறார். அவர்களும் இந்த நியாயத்துக்கு இணங்குகிறார்கள்.

வயதில் மிகுந்தவர்கள் நல்ல அனுபவ முடையவர்கள். இவர்கள் ஆலோசனை மிகவும் பயன்படுவதைக் காண்கிறோம். ஆனால் வயது பழுத்தால் மட்டும் போதாது. அறிவும் முதிர்ந்திருக்க வேண்டும். கேவலம் வயதுக்கு மட்டும் பெருமை யில்லை. ஆனால் அறிவும் வயதும் பழுத்தவர்களுடைய அமுத மொழிகளை இளைஞர்கள் தங்கள் உற்சாகத்தால் 'சுத்த கர்ணடகம்' என்று அலக்ஷியம் செய்வது அறிவுடைமை யாகாது.

58, அத்தியாயம்

தேன் குடித்த குரங்கு

அறிவும் வயதும் மிகுந்த ஜாம்பவந்தருடைய ஆலோசனையின்படி வானரர்கள் இராமரையும் சுக்ரீவரையும் கண்டு சந்தோஷ சமாசாரம் சொல்லும் ஆவலோடு மகேந்திர கிரியை விட்டு வேகமாகப் போகிறார்கள்.

மலை போன்ற உருவமுடையவர்கள். மேகம் போன்றவர்கள். மதம் பிடித்த யானை போன்றவர்கள். மிகுந்த பல முடையவர்கள். வான வெளியை மறைத்துக் கொண்டு ஆகாயத்தில் போகிறார்கள். வெற்றியோடு திரும்புகிற உற்சாகம் இவர்களை உந்துகிறது. மாருதி யல்லவா இவர்களுக்கு வெற்றி தேடிக் கொடுத்தவர். ஆகையால் எல்லாருடைய கண்களும் அந்த வெற்றி வீரர் மீதே இருக்கின்றன. மாருதியை வானரர்கள் கண்களால் சுமந்து கொண்டு போவது போல் இருக்கிறது என்று வால்மீகி அழகாகச் சொல்லுகிறார்.

இராமருக்கு சந்தோஷம் கொண்டு போகும் உற்சாகமுடைய வானரர்கள் கிஷ்கிந்தையை நெருங்கினர். எதிரே இந்திரனுடைய நந்தனவனம் போன்ற மது வனத்தைக் கண்டனர். இந்தக் காட்டில் தேன் வளர்க்கப் படுவதால் இதற்கு மது வனம் என்று பெயர். பதக்குத் தேன் பிடிக்கும் அடைகள் எல்லாம் மரங்களில் வரிசை வரிசையாகத் தொங்

ின. இங்கு ஏராளமான பழ மரங்கள் இருந்தன. கொடிகளும், பூக்களும், பழங்களும், தேனடைகளும் செறிந்த மரங்களெல்லாம், கண்ணிற்கும் மனதிற்கும் இனிய காட்சியாய் இருந்தன.

இந்த மது வனம் மிக ஜாக்கிரதையாக காக்கப் படுகிறது. இதை ஆதியில் இந்திரன் வாலிக்குக் கொடுத்தார். இப்பொழுது சுக்ரீவர் வசம் இருக் கிறது. இராஜாவான சுக்ரீவருக்கு தேவையான பழமும் தேனும் இங்கிருந்து தான் போகு மென்று தெரிகிறது. இராஜாவின் உணவுக் களஞ்சியமான இந்த மது வனம் எவ்வளவு ஜாக்ரதையாக பாதுகாக் கப்படும்? சுக்ரீவருடைய மாமன் ததிமுகனே இங்கு காவல் இருக்கிறார். இன்னும் ஏராளமான வானரர் கள் இவருக்குத் துணையாக இங்கு காவலிருக்கிறார்கள்.

கண்ணையும் மனதையும் கவரு மிந்த மது வனத் தைக் கண்டவுடன் வானரர் வேகம் தடைப்பட்டது. நாக்கில் ஜலம் ஊறியது. சீதா தேவியைக் காணும் ஒரே நோக்கத்துடன், ஊணுறக்கத்திலும் கைஷிய மின்றி, ஒரே கவலையிலும், துயரத்திலும் மூழ்கி இருந்த வானரர்கள் மிகவும் மெலிந்து வாடி இருந் தார்கள். எடுத்த காரியம் சித்தி பெற்று வெற்றி யோடு மீளுமிவர்கள் மிகப் பிரியமான பழத்தையும் தேனையும் கண்டவுடன் உண்டு களிக்கும் ஆவல் கொண்டனர். ஆனால் இந்த மது வனம் கட்டுக் காவ லுடைய அரச வனமாயிற்றே. ஆகையால் இவர்கள் மெதுவாக இளவரசனான அங்கதனை அணுகினர். மது வனத்தில் பிரவேசித்து கொஞ்சம் பசியைத் தணித் துக் கொள்ள உத்திரவு கொடுக்கும்படி வேண்டினர்.

அறிவாளியான அங்கதனும் ஜாம்பவந்தர் முத லான பெரியோர்களோடு ஆலோசனை செய்தார்.

அவர்களும் சிபார்சு செய்தனர். இதன் மேல் அங்கத னும் வானரர்கள் மது வருந்த அநுமதி கொடுத்தார்.

இளவரசனுடைய அநுமதி பிறந்தவுடன் வான ரர்கள் அத்தனை பேரும் மது வனத்தில் பிரவேசித் தார்கள். மனங்கொண்ட வரை மணமிகுந்த பழங் களையும் கிழங்குகளையும் அருந்துகிறார்கள். வண்டுகள் மொய்க்கும் மரங்களில் தேனடை பிழிந்து அருந்து கிறார்கள். தங்கள் தங்கள் தலைவர்களுக்கும் இனிய பொருள்களைக் கொடுக்கிறார்கள்.

வயிறு நிறைய உண்டதாலும் மதுக் குடித்த தாலும் சந்தோஷத்தால் ஆடுகிறார்கள்.

காயந்தி கேசித் ப்ரணமந்தி கேசித்
நிருத்யந்தி கேசித் ப்ரஹஸந்தி கேசித்
பதந்தி கேசித் விசரந்தி கேசித்
ப்லவந்தி கேசித் ப்ரலபந்தி கேசித்

பாடுகிறார்கள் சிலர். இனிமையான சங்கீத மெல்லாம் கிளம்புகிறது. ஆலாபனங்கள் எழுகின் றன. ரவைகள் உதிருகின்றன. சந்தோஷ மிகுதி யினால் நமஸ்காரம் பண்ணுகிறார்கள். ஆனந்தத்தால் கூத்தாடுகிறார்கள். விழுந்து விழுந்து சிரிக்கிறார்கள். பொத்தென்று கீழே விழுகிறார்கள் சிலர். சிலர் அங்கு மிங்கும் உலாவுகிறார்கள். தாண்டிக் குதிக்கிறார் கள் சிலர். என்னமோ நினைந்து கொண்டு அழுகிறார் கள் சிலர். சந்தோஷமும் உணர்ச்சியும் மிகுதியாலும் அழுகை வரும் போலும்!

இன்னம் இவர்கள் என்னென்னவோ சேஷ்டை செய்கிறார்கள். ஒருவரை யொருவர் நெருங்குகிறார் கள். ஆக்ரமிக்கிறார்கள். ஒருவருக் கொருவர்

என்னமோ பேசிக்கொள்கிருர்கள். விளையாடுகிருர்கள். மரத்திற்கு மரம் தாண்டி ஓடுகிருர்கள். மரத்தின் உச்சியிலிருந்து பொத்தென்று கீழே குதிக்கிருர்கள். பூமியிலிருந்து உச்சிக்குத் தாண்டுகிருர்கள். இன்னம் எத்தனையோ வேடிக்கைகள்!

ஒருவர் வாய் கொள்ளும் தேனை
 ஒருவருண் டெளிதில் போவார்
ஒருவர் கைக் கொள்ளும் தேனை
 ஒருவர் கொண் டோடிப் போவார்
ஒருவரோ டொருவர் ஒன்றத்
 தழுவுவர். விழுவர் ஓடி
ஒருவர்மேல் ஒருவர் ஏறி
 ஓகையென் றுவகை கூர்வார்

ஒரு குரங்கு நல்ல தேனடையைப் பொறுக்கி வண்டுகளை ஓட்டி அதை எடுத்து வாட்டமாக உட்கார்ந்து கொண்டு அடையைப் பிழிந்து வாயைப் பிளந்து குடிக்குந் தருணம். இச்சமயம் இதைப் பார்த்துக் கொண்டே இருந்த மற்ருெரு குரங்கு அதை வெடுக்கென்று பிடுங்கி பாடொன்றும் படாமலேயே இனிமையாக அதைக் கடித்து குடித்து ஓடிப்போகும்.

ஒரு குரங்கு மிகப் பிரயாசைப்பட்டு மர உச்சியில் இருந்த ஒரு பெருத்த அடையை ஆவலோடு கையில் எடுக்கும். மற்ருெரு குரங்கு வெடுக்கென்று அதைப் பிடுங்கிக் கொண்டு ஓடிப்போகும். சந்தோஷத்தால் குரங்குகள் ஒன்ருேடொன்று கட்டிப்புரளும். ஒரு குரங்கின் தோளில் இன்னெரு குரங்கு தாவி ஏறிக்கொண்டு சந்தோஷ ஆரவாரம் செய்யும்.

இப்படி, குரங்குகளெல்லாம் மது உண்டு மதங் கொண்டு ஆடிப்பாடி விளையாடிக் கொண்டிருக்கின்

றன! இந்தக் கோலா கலத்தில் மரங்களும், செடிகளும் நொறுங்கின.

வனபாலனுன தநிமுகனுக்கு இது எட்டியது. உடனே இவர்களைத் தடுக்கும்படி தனது ஏவலாளர்களுக்குக் கட்டளையிட்டான். ஆனால் அவர்கள் கட்டுக்கு அடங்கவில்லை. ததிமுகன் கோபங் கொண்டான். தன்னுடைய காவலை மீறி வனத்தை அழிக்கும் வானரர்களை திட்டினன். கையாலடித்தான். சிலரை சண்டை போட்டான். இது ஞாயமா என்று சிலரிடம் வாதித்தான். மதங்கொண்ட வானரர்களோ உற்சாக மிகுதியால் சிறிதும் பயமின்றி ததிமுகனை லட்சியம் செய்யாமல் காவலர்களைக் கடித்து, நகத்தால் கிழித்து, காலால் உதைத்து துன்புறுத்தினர்கள்.

இதை யறிந்த மாருதி வந்து முன்னே நின்று கொண்டார். "வானரர்களே! நீங்கள் நன்றாகத் தேன் குடியுங்கள். உங்களைத் தடுக்கும் எதிரிகளை நான் தடுத்துக்கொள்கிறேன்!" என்று அபயமளித்து கர்ஜித்தார். இதைக் கேட்ட அங்கதன் இதை ஆமோதித்து உத்திரவிடுகிறன். "வானரர்களே! வெற்றி கொண்டுவந்த மாருதி தவறான காரியத்தைச் சொன்னலும்கூட அவர் செய்த நன்மைக்காக நான் அதற்கும் உடன் படுவேன். அப்படி இருக்க உங்களுக்கெல்லாம் இனிமை செய்யும் இந்தக் காரியத்தில் அவர் முன்னிற்கும் பொழுது இதைக் கண்டிப்பாக நிறைவேற்றி வைப்பேன்" என்றார்.

வானரர்கள் அங்கதனையும் மாருதியையும் வாழ்த்தி அணை உடைந்த நதிபோல் மது வனத்தை நோக்கி மீண்டும் ஓடினர்கள். வேண்டிய மட்டில் குடித்தார்கள். மது அடையால் ஒருவரை யொருவர் அடித்துக் கொண்டார்கள். அங்கிருந்த காவற்காரர்களை அடித்துத் துரத்தினர்கள். காலைப் பிடித் திழுத்து அவமானப்படுத்தி விரட்டி யடித்தார்கள்.

காவலாளிகள் ததிமுகனிடம் போய் முறையிட்டார்கள். அவனும் கோபங் கொண்டு பரிவாரங்களோடு மீண்டும் ஓடி வந்தான். வழியில் மரங்களையும் பாறைகளையும் எடுத்துக்கொண்டு ஓடி வந்தார்கள். மரமேந்தி வரும் ததிமுகனை அங்கதன் ஓங்கி அடித்தான்.

வாய்வழி குருதி சோர
மணிக்கையான் மலங்க மோதி
போய் மொழி கதிரோன் மைந்தர்க்(கு)
என்றவன் தன்னைப் போக்கி
தீயெழும் வெகுளி பொங்க
மற்றவன் சேனை தன்னை
காய் கனல் பொழியும் கையால்
குத்துதிர் கட்டி என்றான்

மதுவால் கண்ணிழந்திருந்த அங்கதன், ததிமுகன் தான் பூஜிக்கததக்க பெரியவராயிற்றே என்று கூட சிந்திக்க வில்லை. வாயால் இரத்தம் கக்க கையால் அடித்தான். கசக்கித் துவட்டி பூமியில் உருட்டினான். காலுங் கையுமொடிந்த ததிமுகன் மூர்ச்சையானான். அவன சேனையையும் கட்டி உதையுங்கள் என்று கட்டளை இட்டான் அங்கதன். விடுவார்களா வானரர்கள்?

பிடித்தனர், கொடிகள் தம்மால்
பிணித்தனர், பின்னும் முன்னும்
இடித்தனர் அசனி அஞ்ச
எறும் வலிக் கரங்கள் ஓச்சி
துடித்தனர் உடலம் சோர்ந்தார்
சொல்லும் போய் நீருமென்ன
படித்தனன் வாலி மைந்தன்
பயத்துடன் அவரும் போனார்

காவல் குரங்குகளை பிடித்து கொடிகளால் கட்டினார்கள். நெஞ்சிலும் மார்பிலும் இடிபோல குத்தினர்

கள். பாவம்! அந்தக் குரங்குகள் துடித்துப் போனார்கள். சோர்ந்து விழுந்தார்கள். நீங்களும் போய் சொல்லுங்களென அடித்து விரட்டினார்கள். அவர்களும் நடுக்கத்தோடு ஓடினார்கள்.

கள் தெளிந்த ததிமுகன் தன்னைச் சூழ்ந்த கூட்டத்தாரோடு கலந்தான். அவர்களுக்கும் தேறுதல் சொன்னான். 'நல்லது நான் இப்பொழுதே போய் சுக்ரீவ மகா ர்ாஜாவிடம் இவர்கள் அக்ரமத்தையெல்லாம் விளக்கி அங்கதன் மேல் எல்லாப் பழியையும் வைக்கிறேன். இவன் அப்பன் பட்ட பாட்டை இவன் மறந்து போனான். சுக்ரீவன் அங்கதனையும் இந்த தடிக் குரங்குகளையும் கட்டி உதைக்கப் போகிறார். அரசன் ஆணையை மீறின இவர்கள் நல்ல உதை தின்று மானங் கெடப் போகிறார்கள். நாம் சிறிது பொறுப்பதால் அவர்கள் கஷ்டத்தைக் கண்டு களிக்கப் போகிறோம்'' என்று கூறினான்.

உடனே மற்றுஞ் சிலரோடு கிளம்பி சுக்ரீவர் இருக்கும் மலையை நோக்கி ஓடினான்.

59. அத்தியாயம்

பரஸ்பர மன்னிப்பு

ஸ்ரீ ராம லக்ஷ்மணர் கிஷ்கிந்தைக் கருகிலுள்ள மலையில் தங்கி இருக்கின்றனர். இராஜாவான சுக்ரீவன் இவர் அருகிலிருந்து உபசரித்துக் கொண்டிருக்கிறார். மூவரும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இராமர் வருத்தத்தோடு கூறுகிறார்—

“சுக்ரீவா! மற்ற மூன்று திசைகளில் போன வானரர் வெறுங் கையோடு திரும்பி விட்டனர். தென் திசையில் தேடிப் போனவர்களைப் பற்றி ஒன்றும் தெரிய வில்லையே! இட்ட தவணை கடந்து பல நாளாயினவே.

ஒரு வேளை அரக்கர்கள் கொடுமையால் சீதை இறந்தாள் என்று தெரிந்து, இந்த துக்க சமாசாரத்தை இங்கு வந்து அறிவிக்க மனமில்லாமல், இந்த துக்கத் தாலேயே தங்களையும் மாய்த்துக் கொண்டிருப்பார்களா?

அல்லது. சீதையைக் காணாமலேயே இன்னும் தேடிக் கொண்டிருக்கிறார்களா?

அய்லது அரக்கர்களைக் கண்டு அவர்களோடு போர் செய்து கொண்டிருக்கிறார்களா? மாயம் கொண்ட வஞ்சக அரக்கர்களால் சிறைப் படுத்தப் பட்டு விட்டார்களா?

சீதையைப் பற்றி ஒரு தகவலும் தெரியாமலும், தவணை கடந்து இங்கு வரவும் பயந்து மனமில்லாம

லும், வேறு செய்யும் வகை யொன்றும் இல்லாமலும் கண்ணை மூடித் தவத்தில் இறங்கி விட்டார்களா?

என்று கவலையோடு கேட்டுக் கொண்டிருக்கிறார். இச்சமயம் வானரர்களால் நன்கு மொத்துண்ட ததிமுகன் உடலெல்லாம் இரத்தம் வழிய பரிவாரங் களோடும் சுக்ரீவன் காலடியில் வந்து விழுந்து வணங்கினான்.

தலை உடைந்து மனம் ஒடிந்து காலில் விழுந்த ததிமுகனுக்கு சுக்ரீவன் அபயம் அளித்து நடந்த தென்ன வென்று விசாரித்தார். ததிமுகனும் சிறிது தேறிக் கூறுகிறான்.

"பிரபோ! பெரியவாளான ருக்ஷ ரஜஸோ, வாலியோ, நீரோ நான் காக்கும் மது வனத்தை இது வரை கை விட்ட தில்லை. கட்டுக் காவலுடைய இந்த ஒப்பற்ற வனத்தை வானரர்கள் சுத்தமாக அழித்துப் போட்டார்கள். இஷ்டப்படி மதுக் குடிக்கிறார்கள். அழிக்கிறார்கள். காவலொன்று இருப்பதாகவே அவர்கள் எண்ணவில்லை. இவர்கள் போய்த் தடுத்தும் லக்ஷியம் செய்யவில்லை. மிரட்டு கிறார்கள். அப்பொழுதும் விடாமல் இவர்கள் தடுத் தார்கள். ராஜாவாகிய உமது ஆணையால் தடுக்கும் இவர்களை மீறி வனத்தை அழிப்பது மன்றி இவர் களையும் அடித்து விட்டார்கள். சிலர் கையால் அறைந்தனர். சிலர் முழங் காலால் இடித்தனர். சிலர் இவர்களைப் பிடித்திழுத்து அவமானப்படுத்தி னர். இதைக் கேட்டு நானும் ஓடி நயத்தாலும் பயத் தாலும் தடுத்துப்பார்த்தேன். என்னையும் உம்மையும் அலக்ஷியமாக பேசி அந்த வாலி மகன் அங்கதன் அவமானப் படுத்தியது பொறுமல் ஒரு பாறையை எடுத்து வீசினேன். அதைப் புறங்கையால் தட்டி, என்னையும் பிடித்து மனங் கொண்ட மட்டும் குத்தி,

உதைத்து, அடித்து, நொறுக்கி "சுக்ரீவனிடம் சொல்லு போ" என்று துரத்தி யடித்தான். நீர் இருக்கும்போதே உம்மையும் அவமானப் படுத்தி, ராஜ கட்டளையை நிறைவேற்றும் உத்யோகஸ்தர்களாகிற எங்களையும் அடித்துத் துன்புறுத்தி, வேலியே பயிரை அழிப்பதுபோல் வானரர்களே மது வனத்தை அழிப்பதென்றால் என்ன விபரிதமாக இருக்கிறதென்று பிராது கொடுத்து ததிமுகன் சுக்ரீவனுக்கு அதிக கோபத்தை உண்டாக்க முழு முயற்சியும் செய்தான். ஆனால் இவன் எதிர் பார்த்ததற்கு விரோதமாக சுக்ரீவன் முகம் மலர்ந்து மிகுந்த சந்தோஷத்தையே காட்டியது. ததிமுகன் குழப்பம் அடைந்தான்.

ததிமுகன் வந்து விழுந்து அழுது புலம்புவதைக் கண்டு சந்தேகம் கொண்ட லக்ஷ்மணர் என்ன சமாசாரம் என்று விசாரித்தார். சுக்ரீவன் சந்தோஷத்தோடு கூறுகிறான்.

"அங்கதன் முதலானவர்கள் மது வனத்தில் வந்து தேனருந்துவதாக ததிமுகன் அறிவிக்கிறார். தென் திசையில் போய் வந்தவர்கள் காரியசித்தி இல்லாவிட்டால் இந்த வேலை செய்ய மாட்டார்கள். தடுத்த காவலர்களையும் அடித்து வனத்தையும் அழித்து விட்டார்களாம். சீதா தேவியை தரிசனம் செய்து விட்டு சந்தோஷ சமாசாரம் கொண்டு வந்திருக்கிறார்கள். ஹநுமான் தான் இதை சாதித்திருக்க வேண்டும். வேறு யாருமில்லை. அவரிடத்தில் காரிய ஸித்தி இருக்கிறது. ஏன்? நல்ல அறிவுடையவர். பல விஷயங்களை கேட்டுத் தெளிந்தவர். முயற்சி யுடையவர். பல முடையவர். ஆகையால் காரிய சித்தி அவரிட மிருக்கிறது. ஜாம்பவான் வழி காட்டுகிறார். மஹா பலசாலியான அங்கதன் தலைமை வகிக்கிறான். மாருதி காரிய நிர்வாகம் செய்கிறார். வெற்றிக் கென்ன சந்தேகம்?

அன்றியும் வெற்றி யின்றி அவர்கள் காலங் கடந்து இங்கு வரவும் மாட்டார்கள். மது வனத்தில் நுழையத் துணியவும் மாட்டார்கள். ஆகையால் கொஞ்சம் கூட சந்தேகப்பட வேண்டாம் என்று திடமாகச் சொன்னார். காதுக்கினிய இந்த வார்த்தைகளைக் கேட்டு இராம லக்ஷ்மணர் நிகரற்ற சந்தோஷம் அடைந்தனர்.

அப்பொழுது சுக்ரீவன் ததிமுகனைப் பார்த்து

ஒன்றுனக் குணர்த்துவ
துளது வாலிசேய்
புன்றொழில் செய்கைசேர்
புணர்ப்பன் அல்லனால்

ஒரு விஷயம் உனக்கு அறிவுறுத்த விரும்புகிறேன். அங்கதன் அற்ப புத்தி உடையவனல்ல. அற்ப காரியம் செய்பவனல்ல. மேலும்--

கொற்றவன் பணிதலை
கொண்டு தெண்டிரை
சுற்றிய திசையெலாம்
துருவித் தோகையைப்
பற்றிய பகைஞரைக்
கடிந்து பாங்கர்வந்(து)
உற்றனர் அவரை யாம்
உரைப்ப தென்னையே

வெற்றி வீரராகிற ஸ்ரீ ராமருடைய கட்டளையை சிரமேல் தாங்கி, தென் திசை எல்லாம் சுற்றி, தேவியைத் தேடிக் கண்டு பிடித்து, துஷ்டர்களாகிற அரக்கர்களையும் அழித்து, வெற்றியோடு சந்தோஷ சமாசாரம் கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்களை உட

சரித்து பெருமைப் படுத்துவது கடமையாகிறது. அவர்களைக் கண்டிப்ப தெப்படி?

அன்றியும் வாலிசேய்
அரச தூதலின்
பின்றுதல் அரிதரோ
பிணங்கும் சிந்தையாய்
ஒன்று நீ உணரலை
உறுதி வேண்டுமேல்
சென்றவன் தனைச்சரண்
சேர்தி ஈண்டென

அன்றியும் அங்கதன் இளவரசன் என்பதை நீ உணர வில்லையா? இளவரசர் உத்தியோகஸ்தர்களை அலக்ஷியம் செய்து விட்டதாக புகார் செய்கிறாய். உன்னுடைய உத்தியோகஸ்தர்கள் இளவரசரை அலக்ஷியம் செய்து விட்டதை ஏன் உணரவில்லை? அரச வனத்தைக் காப்பது உங்கள் கடமை தான். ஆனால் களைத்து வந்த வானரர்களுக்கு இளவரசன் மது வனத்தில் அநுமதி கொடுத்தால் நீங்கள் தடுப்பானேன்? உங்கள் கடமையிலிருந்த அதிக உற்சாகத்தால் நீங்கள் நிலைமையைத் தெரிந்து கொள்ளவில்லை. நீங்கள் அரசனைக் காட்டிலும் அதிக ராஜ விசுவாசம் காட்டி விட்டீர்கள். நீ அங்கதனிடத்திலே போய் மன்னிப்பு கேட்டுக் கொண்டு சமாதானம் செய்வது தான் தகுதியாகும். அவர்கள் மது வருந்தியதைப் பற்றி நான் சந்தோஷிக்கிறேன். காரிய சித்தி செய்து கொண்டு வந்தவர்கள் சிறிது தவறு செய்திருந்தாலும் மன்னிக்கத் தகும். நான் மன்னிக்கிறேன் அநுமான் முதலானவர்களை சீக்கிரமே அனுப்பு என்று விடை கொடுத்தார்.

ததிமுகனும் தன் தவறை உணர்ந்து கொண்டான். அடங்கி ஒடுங்கி கூட்டத்தோடு புறப்பட்டு

மீண்டும் மது வனத்திற்கு வந்தான். அங்கதனை வணங்கினான்.

போழ்ந்தன யான்செய்த
குறை பொறுக்கென
விழ்ந்தனன் அடிமிசை
விழ வாலிசேய்
தாழ்ந்து கை பற்றி மெய்
தழீஇக்கொண் டும்மையான்
சூழ்ந்ததும் பொறுக்கென
முதன்மை சொல்லினன்

இளவரசே! இந்த வனம் உம்முடையது. நான் அறியாமல் உமக்கு செய்த குற்றத்தை பொறுத்தருள வேண்டும் என்று அங்கதன் காலில் வீழ்ந்தான். பெருந்தன்மையுள்ள அங்கதனும் அந்த ததிமுகனை கையால் பற்றி எடுத்து அணைத்து நானும் உமக்குச் செய்ததை பொறுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டான்.

ததிமுகன் மேலும் கூறுகிறான். இளவரசே! நான் தங்கள் சிறிய தந்தையாகிற சுக்ரீவ மகாராஜா விடம் தங்களுடைய வருகையை அறிவித்தேன். வனமழிந்ததைக் கேட்டும் அவர் சந்தோஷித்தாரே யல்லாமல் கோபிக்க வில்லை. உங்களனைவரையும் தன்னிடம் சீக்கிரம் அனுப்பும்படி மிக சந்தோஷத் துடனேயே கட்டளை இட்டார் என்று தெரிவித்தான்.

இதைக் கேட்ட அங்கதன் சிறிது பரபரப்போடு கூறுகிறான். நாம் வந்து விட்ட விஷயம் இராமர் காதுக்கு எட்டி இருக்கும். நாம் கால தாமதம் செய்யத் தகாது. வானரர்கள் மனமாற உண்டு உறங்கி களையாறி விட்டார்கள். சுக்ரீவரிடம் போவதைத்

தவிர வேறென்ன பாக்கி? நீங்களெல்லாம் கூடி எப்படிச் சொல்கிறீர்களோ அப்படி நடக்கிறேன். நான் யுவராஜனாய் இருந்தாலும் கட்டளை இட மாட்டேன். காரிய சித்தி செய்து கொண்டு வந்த உங்களை நான் கௌரவப் படுத்த வேண்டும் என்று அழகாகப் பேசினான். வானரர்களுக்கு அதிக சந்தோஷமுண்டாயிற்று. கூறுகிறார்கள்—

ஏவம் வக்ஷ்யதி கோ ராஜன்
ப்ரபு: ஸன் வானரர்ஷப
ஐச்வர்ய மத மந்தோஹி
ஸர்வோஹ மிதி மன்யதே

அரசே! தலைவராய் இருப்பவர் உம்மைப் போல் யார் அணைத்து நடத்துகிறார்கள். அதிகார ஐச்வர்ய மதத்தால் எல்லாம தாம் தானென்று அகங்காரம் கொள்ளுகிறார்கள். உமது வார்த்தை உமது பெருமைக்குத் தக்கபடி இருக்கிறது. இந்த பெருங்குணம் எதிர் காலத்தில் நீர் அடையவேண்டிய சுப பாக்கியத்திற்கு அறிகுறியாக இருக்கிறது. நாங்களெல்லாம் புறப்பட ஆயத்தமாய் இருக்கிறோம். ஆனால்—

த்வயா ஹ்யனுக் தைர் ஹரிபிர்
நைவ சக்யம் பதாத்பதம்
க்வசித் கந்தும் ஹரிச்ரேஷ்ட
ப்ரூம ஸத்யம் இதம் து தே

வானரோத்தமா! உமது கட்டளை யின்றி வானரர்கள் ஒரு அடி எடுத்து வைக்க மாட்டார்கள். இதை உமக்கு சத்தியமாகச் சொல்லுகிறோம் என்றனர்.

அங்கதன் இதைக் கேட்டு மனமகிழ்ந்து நல்லது புறப்படுவோம் என்று வானில் கிளம்பினான். மற்ற வானரர்களும் பின்தொடர்ந்து வேகமாகப் புறப் பட்டார்கள்.

60. அத்தியாயம்

தவஞ் செய்த தவம்

ததிமுகன் திரும்பிப் போன பிறகு இராமர் சுக்ரீவனைப் பார்த்து, 'நண்பா! வானரர்கள் வந்து விட்டார்கள். ஆனால் எனக்கு என்ன செய்தி கொண்டு வந்திருக்கிறார்களோ! 'சீதையைக் கண்டோம்'' என்பார்களோ, "ஒரு தகவலும் இல்லை" என்பார்களோ என்று கவலையோடு கேட்டார். அப்பொழுது சுக்ரீவன்

"இராமா! தவணை நாள் கடந்து வானரர்கள் வெறுங்கையோடு இங்கு வரத் துணிய மாட்டார்கள்.

அப்படியே வந்தாலும் தலை குனிந்து, சோர்ந்து அடங்கி வருவார்கள். பரம்பரை பரம்பரையாகக் காத்து வரும் மது வனத்தில் நுழையத் துணிய மாட்டார்கள். அந்த மது வனத்தையும் அழித்து, காவலர்களையும் அடித்துத் துரத்தியிருக்கும் அவர்கள் களிப்பு அவர்கள் கொண்டுவரும் சந்தோஷ சமாசாரத்தையே பகிரங்கப் படுத்துகிறது. தேவியைக் கண்டிருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. அறிவும், பலமும், முயற்சியும், வெற்றியுமுடைய மாருதி தான் இதைச் சாதித்திருக்க வேண்டும் என்பதிலும் சந்தேகமில்லை" என்று திடமாகத் தேற்றிக் கொண்டிருந்தார்.

இச்சமயம் சுக்ரீவனுடைய வார்த்தையை உறுதிப்படுத்தும் ஜெய பேரிகை போல் வானரர்

களுடைய கிலகிலா சப்தம் தென் திசையில் கேட்டது. இராம லக்ஷ்மணர் சந்தோஷம், சந்தேகம், வெற்றி, பயம் கலந்த உணர்ச்சியோடும் ஆவலோடும் பார்க்கின்றனர். வானரர்கள் தோன்றினர். அங்கதனை முன்னிட்டுக் கொண்டு மாருதி முன்னே வந்தார். என்ன செய்தார்?

எய்தினன் அநுமனும்
எய்தி ஏந்தல் தன்
மொய்கழல் தொழுகிலன்
முளரி நீங்கிய
தையலை நோக்கிய
தலையன் கையினன்
வையகம் தழீஇ நெடி
திறைஞ்சி வாழ்த்தினன்

வந்தார் மாருதி. வந்தவர் இராமரையோ சுக்ரீவரையோ வணங்கவில்லை. தென் திசையை நோக்கிக் கைகூட்பி பூமியில் விழுந்து வணங்கி வாழ்த்துகிறார்.

குறிப்புணரும் கூர்மை யுடைய இராமர் மாருதியின் செய்கையால் சீதா தேவியின் பெருமையை உணருகிறார். ஆனால் தேவி உயிரோடிருக்கிறாளா? மாருதி கண்டாரா? என்று நிச்சயிக்கக் கூட வில்லை. இதை உணர இவருடைய ஆவல் அதிகமே ஆகிறது. உடனே மாருதி—

கண்டனென் கற்பினுக்
கணியைக் கண்களால்
தெண்டிரை அலைகடல்
இலங்கைத் தென்னகர்
அண்டர் நாயக! இனித்
துறத்தி ஐயமும்
பண்டுள துயருமென்
றநுமன் பன்னுவான்

கண்டேன். கற்புக்கு ஆபரணமா யிருக்கும் சீதா பிராட்டியைக் கண்டேன். அந்த உத்தமியை எனது கண்களால் காணும் பாக்கியம் பெற்றேன். கடல் சூழ்ந்த தென்னிலங்கைத் தீவில் கண்டேன். ஸ்வாமி! உமது சந்தேகத்தையும் சோகத்தையும் உதறி விடும்" என்று மாருதி அமிர்த வர்ஷம் போல் பொழிந்தார்.

வாடி அண்ணுந் திருந்த பயிரை மழை தளிர்ப் பிப்பது போல் இராமருடைய சோகம் நிறைந்த உள்ளத்தை மாருதியின் வார்த்தைகள் உயிர்ப்பித் தன. அவர் முகத்தில் புதிய பிரகாசம் வீசியது. ஆவ லோடு கேட்கிருர்.

க்வ ஸீதா வர்ததே தேவி
கதம் ச மயி வர்ததே
ஏதன்மே ஸர்வ மாக்யாத
வைதேஹீம் ப்ரதி வானரா:

பூமியில் பிறந்த அந்த சீதை எங்கே இருக்கிருள்? என்னிடத்தில் என்ன மனே பாவத்தோடு இருக் கிருள்? வானரர்களே! அந்த விதேஹ ராஜ புத்திரி யைப் பற்றிய எல்லா விஷயங்களேயும் எனக்குச் சொல்லுங்களேன்" என்று கேட்டார்.

எல்லா விபரங்களேயும் அறிவிக்கும்படி பிராட் டியை நேரில் கண்ட மாருதியையே வானரர்கள் தூண்டினர். உடனே சொல்லின் செல்வனுகிற மாருதி கூறுவதாக இந்தச் சொல்லின் செல்வனுகிற கம்பர் மொழியும் விஸ்தாரமான கவிகளேப் படியுங்கள்.

உன் பெருந் தேவி என்னும்
உரிமைக்கும் உன்னைப் பெற்ற

மன்பெரும் மருகி என்னும்
வாய்மைக்கும் மிதிலை மன்னன்
தன்பெருந் தனயை என்னும்
தகைமைக்கும் தலைமை சான்ருள்
என்பெரும் தெய்வம் ஐய!
இன்னமும் கேட்டி என்பான்

புருஷோத்தமனுகிற இராமா! என் தெய்வமான சீதா பிராட்டியானவள் தனது உயர் குணங்களால் உம்து பனேவி என்னும் உரிமைக்கு தகுதியில் தலைமை பெற்று விளங்குகிருள். உலகெல்லாம் ஆண்ட உமது தந்தையார் தசரத சக்ரவர்த்தியின் மூத்த மருமகள் என்னும் பெருமைக்கு ஏற்ப விளங்குகிருள். ராஜரிஷியான விதேகராஜனுடைய செல்வக் குமரி யென்னும் சிறப்பை வெளிப் படுத்திக் கொண்டிருக் கிருள்.

பொன்னலது இல்லை பொன்னை
ஒப்பெனப் பொறையில் நின்ருள்
தன்னலது இல்லை தன்னை
ஒப்பெனத் தனக்கு வந்த
நின்னலது இல்லை நின்னை
ஒப்பென நினக்கும் நேர்ந்தாள்
என்னலது இல்லை என்னை
ஒப்பென எனக்கும் ஈந்தாள்

இந்த உலகத்தில் எத்தனையோ பொருள்கள் இருக்கின்றன. இவற்றில் பொன்னுக்கு நிகரான பொருள் பொன் தான். வேறு காண முடியுமா? இதுபோல கஷ்டங்களைப் பொறுமையோடு சகிக்கும் தேவிக்கு நிகரான பெண் தேவி தான். வேறெங்கே காணக் கிடைக்கும்? இத்தகைய உத்தமிக்கு மாலை சூட்டும் பாக்கியம் பெற்ற உமக்கு நிகர் நீர் தான். தனது சீலத்தால் இந்தப் பெருமையை உமக்கு அளித்

தாள். இத்தகைய உத்தமியின் சிறை யிடை புக்கு, உமது அடையாளம் கொடுத்து, சோகத்தைப்போக்கி, அங்கிருந்து உமக்கு சந்தோஷ சமாச்சாரம் கொண்டு வரும் தூத கைங்கர்யம் செய்யும் பாக்கியம் பெற்ற எனக்கு நிகர் யானே என்னும் பெருமையையும் எனக் களித்தாள். இவற்றால்—

உன்குலம் உன்ன தாக்கி
உயர் புகழ்க் கொருத்தி யாய
தன்குலம் தன்னா தாக்கி
தன்னையித் தனிமை செய்தான்
வன்குலம் கூற்றுக் கீந்தவ்
வானவர் குலத்தை வாழ்வித்(து)
என்குலம் எனக்குத் தந்தாள்
என்னினிச் செய்வ தெம்மோய் ?

இக்ஷ்வாகு நாதா ! உமது ரகு குலத்திற்கே தனிப் பெரும் புகழுண்டு. அந்தக் குலப் புகழ் உமக்கும் உண்டு. ஆனால் சீதா தேவியினால் நீர் பெற்ற புகழ் உம்மாலேயே உமது குல முழுதும் முழுப் புகழ் பெறும்படி அத்தனை மேன்மை யுடையதாக இருக்கிறது.

இப்படியே ஜனக ராஜனுடைய குலமும் புகழு டையதுதான். ஆனாலும் சீதையின் குணப்புகழால் ஜனகர் குலமே புதுப் புகழ் பெற்று விளங்குகிறது. இனி எக்காலத்திலும் சீதை குலமென்றே அது புகழப் படும்.

அன்றியும் தன்னைச் சிறை வைத்த பலமுள்ள அரக்கர் குலத்தை தன் தவத்தாலேயே ஜீவனற்ற தாக்கி விட்டாள். இந்த அரக்கர்களால் சிறைப் படுத்தப் பட்டிருந்த அமரர் குலத்தை, தான் சிறை புகுந்த சீர்மையால் விடுவித்து விட்டாள்.

எனது வானர குலத்திற்கு பெருமை யுண்டானு லும் அந்த சீதைக்கு கைங்கரியம் செய்த என்னுல் என் குலப் புகழை புதுக்கி விட்டாள். எனது தாயா கிற சீதா பிராட்டி இன்னும் செய்யத் தக்கது என்ன தான் இருக்கிறது? இலங்கையில் நான் கண்ட அற்புதத்தைக் கேளும்.

விற்பெரும் தடந்தோள் வீர
வீங்குநீர் இலங்கை வெற்பின்
நற்பெருந் தவத்தளாய நங்கையைக்
கண்டேன் அல்லேன்
இற்பிறப் பென்ப தொன்றும்
இரும்பொறை என்ப தொன்றும்
கற்பெனும் பெயர தொன்றும்
களிநடம் புரியக் கண்டேன்

வில்லேந்திய வீரரே! கடல் சூழ்ந்த இலங்கை மலையில் நற்றவம் கிடக்கும் ஒரு ஸ்திரீ ரத்தினத்தைக் கண்டதாகச் சொல்வேன். ஆனுல் இப்படிச் சொல் வது போதாது. இதனுல் என் மனம் திருப்தி கொள்ளவில்லை. நான் கண்டது இன்னும் விசேஷ மானது. நற்குடிப் பிறப்பும், அளவற்ற பொறுமை யும், கற்பெனும் தெய்வச் சிறப்பும் ஒன்று கூடி உரு வெடுத்து ஆனந்தக் கூத்தாடுவதை அங்கு ஆச்சரியத் தோடு கண்டேன். பிரிவென்னும் துன்பத்தில் இந்த ஆனந்தக் கூத்திற்கு இடமேது என்று கேட்கலாம். ஆனுல் சீதா தேவி உம்மைப் பிரிந்திருப்பதாக நான் கருதக் கூடவில்லை. ஏன்?

கண்ணினு முளைநீ தையல்
கருத்தினும் உளைநீ வாயின்
எண்ணினு முளைநீ கொங்கை
இணைக்குவை தன்னின் ஒவ்வா(து)

அன்னல்வெங் காமன் எய்த
அலரம்பு தொளைத்த ஆருப்
புண்ணினு முளைநீ நின்னை
பிரிந்தமை பொருந்திற் ருமோ ?

சீதா பிராட்டியின் கண் முன்னே எப்பொழுதும் உம்முடைய உருவந்தான் இருக்கிறது. அவர் வேறெதையும் விரும்பி காண்பதாகத் தெரியவில்லை. தேவியின் கருத்திலும் உமது உருவமும் செயலும் தான் நிலை பெற்றிருக்கிறது. வேறு சிந்தனை எதுவும் இல்லை. நீர் பிரிந்திருப்பதால் தேவியினுடைய மார்பிலும், உடலெங்கும், மயிர்க் கால்கள் தோறும் மன்மதனுடைய கொடிய மலரம்புகள் தொளைத்துத் தொளைத்து ஆருமல் இருக்கும் பசும் புண்கள் நிரம்பி இருப்பது உண்மையே. ஆனல் அந்தப் புண்கள் ஒவ்வொன்றும் "இராமா, இராமா" என்று உமது நாமத்தைத் தான் வாய் விட்டுக் கூவுகிறது. ஆகையால் நீர் சீதா தேவியை பிரிந்திருப்பதாகக் கொண்டாலும் சீதா தேவி உம்மைப் பிரிந்திருப்பதாக ஒருக்காலும் கொள்ள முடியாது என்று, தான் கண்ட சீதா பிராட்டியின் பெருமையை இது வரை விரித்த மாருதி, "சீதை எங்கே இருக்கிருள்' என்று இராமர் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லத் தொடங்குகிருர். அந்த அழகையும் அனுபவியுங்கள்.

வேலையுள் இலங்கை என்னும்
விரிநகர் ஒருசார் விண்டோய்]
காலையும் மாலை தானும்
இல்ல தோர் கனகக் கற்பச்
சோலையங் கதனின் உம்பி
புல்லினல் தொடுத்த தூய
சாலையின் இருந்தாள் ஐய,
தவஞ் செய்த தவமாம் தையல்

சமுத்திரத்தில் நூறு யோஜனைக் கப்பால் இலங்கை யென்னும் விசாலமான நகரம் இருக்கிறது. அதன் மத்தியில் இந்திரனுடைய நந்தன வனம்போல் கட்டுக் காவலுடைய அசோகவனம். இதில் ஆகாயமளாவிய மரங்கள். சூரியக் கிரணமே எப்பொழுதும் நுழையாததால் இரவும் பகலும் இங்கு ஒரே மாதிரி இருக்கிறது. பொன் மயமான கற்பக விருட்சங்களும் இங்கு நிரம்பி இருக்கின்றன. இவற்றின் மத்தியில் புல்லால் வேயப்பட்ட ஒரு பர்னசாலை. ஏது? உமது அன்புள்ள தம்பி லக்ஷ்மணர் தனது திருக்கரங்களால் பஞ்சவடியில் பக்தி பூர்வமாக செப்பனிட்ட சாலை. சீதையின் திருமேனியை தீண்ட அஞ்சி சாலையோடு பெயர்த்துப் போனானல்லவா, இராவணன்? அவனெடுத்துப் போன அதே சாலையில் தான் இன்றும் சீதை அந்த அசோக வனத்தில் இருக்கிருள். அதில் தவம் செய்யும் சீதையைக் கண்ட யான் இவள் தவத்தால் பிறந்தவள் என்று எண்ணினேன். ஆனல் இதில் திருப்தி கொள்ளவில்லை. தவம் என்ற ஒரு வஸ்து இருக்கிறதல்லவா? அதுவே உருவெடுத்து மூக்கைப் பிடித்து தவஞ் செய்ய ஆரம்பித்தது. இப்படித் தவமே தவஞ் செய்த பெருமையினுல்தான் சீதா தேவி தோன்றினுள் என்று நினைக்கிறேன்.

சீதா தேவி பிறந்ததால் தன் குலத்திற்கும் உம் குலத்திற்கும் என் குலத்திற்கும் புகழளித்தாள் என்பது மட்டும் அல்ல. பெண்குலத்திற்கே தனிப் பெருமை உண்டாகி விட்டது. எப்படி?

சோகத்தா ளாய நங்கை
கற்பினுற் ருெழுகற் கொத்த
மாகத்தார் தேவி மாரும்
வான் சிறப் புற்ருர், மற்றைப்

பாகத்தா ளிப்போ தீசன்
மருடத்தாள், பதுமத்தாளும்
ஆகத்தாளல்லள் மாயன்
ஆயிர மௌலி மேலாள்!

தேவி சோகத்தோடிருக்கிருள் என்பது உண்மை. ஆனல் கற்பின் சிறப்பால் ஜொலித்துக் கொண்டிருக்கிருள். இதனல் தேவ ஸ்திரீகளெல்லாம் வணங்கத் தக்க உயர் நிலை பெற்றிருக்கிருள். இந்த தேவ ஸ்திரீகளெல்லாம் தேவியாலேயே மேன்மை பெறக் காத்திருக்கிருர்கள். தேவி சிறையில் தவங் கிடப்பதால் அரக்கர்கள் அழிந்து தேவர்கள் சிறை மீட்கப் படுவார்களல்லவா? ஆகையால் சீதையின் கற்பால் தேவப் பெண்கள் மேன்மை பெற்றனர். இது மட்டுமா? சீதா தேவியால் பெண்மையே உயர்ந்து விட்டது.

பார்வதி தேவியானவள் தனது தகுதியால் பரமேசுவரருடைய திருமேனியில் ஒரு பாதியையே பெற்ருள். ஆனல் சீதையின் பெண்மையினுல் பெருமிதங் கொண்ட பார்வதி இப்பொழுது ஈசன் ஜடா மகுடத்தில் ஏறிக்கொண்டாள். தாமரையிற் பிறந்த லக்ஷ்மி இதுவரை பகவானுடைய ஹிருதயஸ்தானத்தைப் பெற்றிருந்தாள். இப்பொழுதோ சீதா தேவியால் பெண்மை உயர்ந்ததால் லக்ஷ்மி தேவி அந்த மாயவனுடைய ஆயிரம் மகுடத்தில் சஞ்சரிக்கிருள். நீரும்—

ஆண் பிறந்தனமந்த செல்வம்
உண்டனே ஆதி அன்றே

ஆணுய்ப் பிறந்தவர் அடையக் கூடிய பெரும் பாக்கியத்தைப் பெற்றிருக்கிறீர்.

(பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மை உண்டாகப் பெறின் குறள்)

கற்புடைய மனைவியைக் காட்டிலும் இங்கு ஆடவர் அடையக் கூடிய பாக்யம் வேறு என்ன இருக்கிறது? இத்தகைய உத்தமியை பத்தினியாகப் பெற்ற நீரே பாக்கியசாலி என்று மாருதி தேவியின் மேன்மையைப் புகழ்ந்து இராமரை வாழ்த்தினார்.

61. அத்தியாயம்

ஒரு நுணத் திரண்டு கண்டேன்!

மீண்டும் மாருதி கூறுகிறார் "ஸ்வாமி! நூறு யோசனை விஸ்தீர்ண முள்ள சமுத்திரத்திற்கு அப்பாலிருக்கிறது இலங்கைத் தீவு. அங்கு கட்டுக் காவலுடைய இராவணனுடைய அந்தப்புர அசோக வனத்தில், ராக்ஷஸிகள் மத்தியில் சிறை வைக்கப்பட்டிருக்கும் சீதா தேவியைக் கண்டேன். எப்படி இருக்கிறாள்?

ஏக வேணி தரா தீனு
த்வயி சிந்தா பராயணு
அத: சய்யா விவர்ணுங்கீ
பத்மனீவ ஹிமாகமே
ராவணுத் விநிவிருத்தார்த்தா
மர்த்தவ்ய க்ருத நிச்சயா

தேவி மிக்க மெலிந்து வாடி வதங்கி யிருக்கிருள். தலையெல்லாம் ஒரே சடை. சிந்தை எல்லாம் உம்மிடத்தில். மண்ணில் கிடக்கிருள். பனியால் நிற மிழந்த தாமரை போல் பொலிவி விழந்து இருக்கிருள். இராவணனை ஒரு துரும்பாகவும் மதிக்கவில்லை. இவனும் இவன்து பரிவாரங்களும் செய்யும் துன்பத்தாலும், உம்மைப் பிரிந்த தாபத்தாலும், இனிக் காண முடியாதோ என்ற சந்தேகத்தாலும் உயிர் விடத் தீர்மானித்து விட்டாள். நான் பார்த்த சமயம் தனது சடையைக் கழுத்தில் சுருக்கிட்டு மரத்தில் தூக்கிக் கொள்ளும் நிலையில் நின்ருள். நடுங்கிப் போனேன். ஆனல் என்ன செய்வது, எப்படி அணுகுவது என்று தெரிய வில்லை. கடைசியாக உமது குலப் பெருமையையும் உமது திவ்ய சரித்திரத்தையும் சொல்ல ஆரம்பித்தேன். தேவி சிறித்து சிறிதாக நம்பிக்கை கொண்டாள். பேரடையாளமாக உமது கணையாழியை கொடுத்தேன். ஆ! என்ன ஆச்சர்யம்! உடனே—

ஒருகணத் திரண்டு கண்டேன்
  ஒளிமணி ஆழி ஆன்ற
திருமுகைத் தடத்து வைத்தாள்
  வைத்தலும் செல்வ நின்பால்
விரகமென் பதனின் வந்த
  வெங்கொழுந் தீயினல் வெந்(து)
உருகியது உடனே ஆறி
  வலித்தது குளிர்ப்புள் ஊற

பாக்கியமுள்ள இராமா! உமது கணையாழியை வாங்கி தேவி கண்ணில் ஒத்தி மார்பில் அணைத்தாள். உமது பிரிவால் தபித்துக் கொண்டிருக்கிற அக்னி மயமான தேவி உடம்பில் தங்கமயமான கணையாழி பட்டவுடன் அந்தக் கணையாழி உருகியது. உடனே

கணையாழி உம்மிட மிருந்து வந்த ஞாபகத்தால், உம்மோடு கூட்டி வைக்கும் என்ற நம்பிக்கையால் தேவியின் உள்ளங் குளிர, உடல் குளிர, இந்தக் குளிர்ச்சியினுல் உருகியிருந்த கணையாழி இறுகியது.

தேவி உடம்பில் கணையாழி பட்டதால் இது உருகியது. கணையாழி பட்டதால் குளிர்ந்த தேவி உடம்பால், உருகிய கணையாழி மீண்டும் இறுகியது. இந்த இரண்டு அற்புதங்களை ஒரே கணத்தில் கண் டேன் என்ருர் மாருதி.

இராமரைப் பிரிந்ததில் தேவிக்கு இருக்கும் தாபத்தையும், அவரையும் அவரது அடையாளத் தையும் மீண்டும் காண்பதில் தேவிக்குள்ள மகிழ்ச்சி யையும் தெரிவிக்க கம்பர் கையாளும் இந்த அற்புத மான முறையைப் பாருங்கள்.

இதைக் கேட்டவுடன் இராமர் சந்தோஷத்தால் பூரித்தார். ஆனுல் சீதையின் துக்கத்தால் துக்கித்து உலர்ந்தார். இன்னும் மாருதி என்ன சொல்லப் போகிருர் என்று ஆவலோடு அவர் முகத்தைப் பார்க் கிருர். மீண்டும் மாருதி தான் கண்டதைச் சொல்லு கிருர்.

வாங்கிய ஆழி தன்னை
வஞ்சருர் வந்த தாமென்(று)
ஆங்குயர் மழைக்கண் ணிரால்
ஆயிரம் கலச மாட்டி
ஏங்கினள் இருந்த தல்லால்
இயம்பலள் எய்த்த மேனி
வீங்கினள் வியந்த தல்லால்
இமைத்திலள் உயிர்ப்பு விண்டாள்

கணையாழியைக் கையில் வாங்கிக் கொண்ட பிராட்டி, இந்த புனிதமான வஸ்து இந்தப் பாதகர்

இருக்கும் இலங்கையில் வந்து விட்டதே என்று தீட்டுக் கழிப்பது போல், ஆயிரம் முறை, எண்ணற்ற தடவை தன் கண்ணீரால் அதை மஞ்சனம் ஆட்டினாள்.

கணையாழியைப் பார்த்து அப்படியே ஏங்கி இருந்தாளே அல்லாமல் ஒரு வார்த்தை கூட பேச வில்லை. ஆனால் அந்தக் கணையாழியின் ஸ்பர்சம் தேவியின் உடலிலும் மனத்திலும் எத்தனை மாறுதலை உண்டாக்கியது என்று விளக்கமாகத் தெரிந்தது. இளைத்திருந்த மேனி கண நேரத்தில் பூரித்துவிட்டது. ஆச்சர்யத்தோடு புதுமை கண்டது போல் கணையாழி யைப் பார்த்துக் கொண்டே இருக்கிறாள். பார்த்த கண் கொட்டவே இல்லை. கண் வழியே மனமும் அந்தக் கணையாழியிலும், அதன் வழி உம்மிடத்திலும் நிலை பெற்று நின்றுவிட்டது. மனம் நின்ற பொழுது உயிர்ப்பும் (சுவாசமும்) நின்று போயிற்று. மூச்சு விட இல்லை. கண்ணும் மனமும் காற்றும் ஒன்று பட்டுக் கலந்த சமாதியில் மூழ்கி விட்டாள்.

இப்படி நீண்ட நேரம் இருந்த பின், உம்முடைய உடல் நிலையையும் மன நிலையையும் தெரிந்து கொள்ளும் ஆசை பிடித்து உந்த, சமாதி கலைந்து வாய் மலர்ந்து கேட்டாள்.

இங்குள தன்மை எல்லாம்
இயைபுளி இயையக் கேட்டாள்
அங்குள தன்மை எல்லாம்
அடியனுக் கறியச் சொன்னாள்
திங்களொன் றிருப்பன் இன்னே
திருவுளம் தீர்ந்த பின்னை
மங்குவென் உயிரோ டென்றுன்
குரைகழல் தலைக்கண் வைத்தாள்

உம்மைப் பற்றியும், உமது உயிர் போன்ற தம்பியைப் பற்றியும், நண்பரும் சகோதரருமான சுக்ரீவரைப் பற்றியும், வானரர்களைப் பற்றியும் தனித்தனி விசாரித்து இங்குள்ள விஷயங்களை எல்லாம் நன்கு கேட்டாள்.

அங்கு இராவணனாலும் அரக்கிகளாலும் இருக்கும் துன்பத்தை விரித்தாள். இராவணன் அளித்திருக்கும் தவணை நாள் கொஞ்சம் தான் இருப்பதால், இன்னும் ஒரு மாதத்திற்குள் நீர் வந்து சிறை மீட்க அருள் செய்ய வில்லையானால், பிராணனை விட்டு விடுவதாக உமது பாத சாக்ஷியாக என்னிடம் வற்புறுத்திச் சொன்னாள். கடைசியாக சில அடையாளங்கள் சொல்லி, உம்மைப் பார்ப்பதுபோல் பார்த்து, உயிர் தாங்கி யிருந்த தனது உயிரனைய சூடாமணியை பேரடையாளமாக உம்மிடம் கொடுக்கும்படி கொடுத்தாள்'' என்று மாருதி இராமரிடம் சூடாமணியைக் கொடுத்தார்.

இராமர் அந்த உயர்ந்த மணியைப் பெற்றார். பெரு மகிழ்ச்சியுற்றார். எப்படி? மிதிலையில் முதல் முதலாக சீதையின் கையைப் பற்றிய பொழுது அடைந்த மகிழ்ச்சியையும் உணர்ச்சியையும் பெற்றார்.

பொடித்தன ரோமம் போந்து
பொழிந்தன கண்ணீர் பொங்கி
துடித்தன மார்பும் தோளும்
தோன்றின வியர்வின் துள்ளி
மடித்தது மணிவாய் ஆவி
வருவது போவதாகித்
தடித்தது மேனி என்னே
யாருளார் தன்மை தேர்வார்?

சூடாமணியின் ஸ்பர்சத்தால் இராமர் உடல் எல்லாம் மயிர் சிலிர்த்தது. உள்ளம் உருகி வழிவது

போல் கண்ணீர் பொங்கி வழிந்தது. மார்பு துடித்தது. தோள்கள் துடித்தன. குப்பென்று வியர்வை பொடித்தது. மணி இதழைக் கடித்தார். பெருமூச்சு விட்டார். உடலும் தடித்திடப் பெருமிதமுற்ருர். அவர் அடைந்த மாறுதலை எல்லாம் யாரறியக் கூடும்?

கண்ணீர் ததும்ப இராமர் சூடாமணியைப் பார்த்துக் கொண்டே தம்பியைப் பார்த்துச் சொல்லுகிருர்.

" இலக்ஷ்மண ! சூடாமணி வந்து விட்டது. என் கண்மணி வரவில்லை. இதைக் காட்டிலும் என்ன துக்கம் வேண்டும்? சீதை இன்னம் ஒரு மாதம் உயிர் தரித்திருப்பதாகச் சொன்னுளாம். அப்படியானுல்

சிரம் ஜீவதி வைதேஹி
யதி மாஸம் தரிஷ்யதி
ந ஜீவேயம் க்ஷணமபி
விநா தாம் அஸிதேக்ஷணும்

இன்னம் ஒரு மாஸம் பிரிவைச் சகித்து அந்த வைதேஹி உயிர் தரித்திருந்தால் ரொம்ப ஆச்சர்யம். நீண்டகாலம் சகித்திருக்கும் பொறுமை யுடையவள் என்று தான் சொல்ல வேண்டும். ஆனுல் என்னுல் முடியாது. கரிய கண்களுடைய அந்த சீதை யில்லாமல் ஒரு கண நேரம் கூட உயிர் தரித்திருக்க என்னுல் முடியாது. ஆகையால் லக்ஷ்மணு!

நய மாமபி தம் தேசம்
யத்ர த்ருஷ்டா மம ப்ரியா

என் ப்ரியை, அந்த ஜானகி எந்த இடத்தில் காணப்பட்டாளோ அங்கே என்னையும் கொண்டு

போய் சேர்த்து விடப்பா! அந்தோ! அவள் எப்படித் தவிக்கிறாளோ!

கதம் ஸா மம ஸுச்ரோணி
பீரு பீரு ஸதீ ஸதா
பயாவஹானாம் கோராணாம்
மத்யே திஷ்டதி ரக்ஷஸாம்

அழகிய நுண்ணிடை யுடைய எனது சீதை, உத்தமமான குண முடையவள், மிக்க அச்ச முடையவளாயிற்றே! பயங்கரமான அந்த ராக்ஷஸக் கூட்டத்தின் மத்தியில் எப்படித்தான் உயிரை வைத்துக் கொண்டிருக்கிறாளோ! ஹே மாருதி!

கிமாஹ ஸீதா ஹனுமான்
தத்வத: கதயாத்ய மே
ஏதேன கலு ஜீவிஷ்யே
பேஷஜே னாதுரோ யதா!

சீதை என்ன சொன்னாள்? உண்மையைச் சொல்லும் அய்யா! நான் வருத்தப் படுவேனே என்று மறைக்க வேண்டாம். நான் உயிரைப் பிடித்துக் கொண்டிருக்க தைரியம் கொள்ளும்படி சீதை ஏதாவது எனக்குச் சொல்லி அனுப்பினாளா? கடுமையான நோய்ப் பட்டவன் மருந்தால் பிழைத் திருப்பது போல் சீதையின் வார்த்தையால் தான் நான் ஜீவனைத் தாங்கியிருக்க வேண்டும், மாருதி!

மதுரா மதுரா லாபா
கிமாஹ மம பாமினி

மிக்க இனிமையான சீதை. இனிமையான வடிவுடையவள். இனிமையான குண முடையவள். இனிமையான மொழியுடையவள். ஆனால் மிக்க

ரோஷக்காரி. அவளுக்குத் துக்கத்தின் மேல் துக்கம் வந்திருக்கிறது. என்னையும் பிரிந்து அரக்கிகள் மத்தியில் தவிக்கிருள். இந்த நிலையில் எனக்கு என்ன சொன்ஞள், மாருதி! உண்மையாகச் சொல்லும்" என்று கேட்டார், இராமர். மாருதி பதில் சொல்லுகிருர்.

62. அத்தியாயம்

கண்ணிழந்த காக்கை

இராமா! நீர் அந்தப்புரத்தில் தனித்து இருக்கும் பொழுது பிராட்டி—

என்னே ரின்உயிர் மென்கிளிக்(கு)
யார்பெய ரீகேன்
மன்ன என்றலும் மாசறு
கைகயன் மாதென்
அன்னை தன்பெயர் ஆகென
அன்பினே டன்ஞள்
சொன்ன மெய்ம்மொழி சொல்லுதி
மெய்ம்மை தெளிந்தோய்

"நாதா! நான் ஒரு அழகான பஞ்சவர்ணக் கிளி வளர்க்கிறேன். அதை அருமையாக பாவித்து வருகிறேன். அதற்கு ஒரு பெயரிட விரும்புகிறேன், யார் பெயரிடலா மென்று சொல்லுங்கள்" என்று கேட்டாளாம். அப்பொழுது தாங்கள் மிகச் சந்தோஷ

மாக கொஞ்சமும் ஆலோசனை யின்றி "எங்கம்மா! கைகேயி பெயர் இடு, சீதா" என்று சொன்னீராம். இதை யாரும் இப்பொழுது உண்மை யென்று கூட நம்ப மாட்டார்கள். ஆனால் உமக்கு இது நம்பிக் கையை ஊட்டுமென்று பிராட்டி இதை அறிவிக்கச் சொன்னாள்.

அன்றியும், மற்றொரு விஷயம். காட்டில் இருக்கும் பொழுது நடந்தது. திருமேனிக் காவலிருந்த லக்ஷ்மணருக்குக் கூட இது தெரியாதாம். உமது நம்பிக்கைக்காக இதையும் அறிவிக்கச் சொன்னாள்.

நாக மொன்றிய நல்வரை
யின் தலை மேனாள்
ஆகம் வந்தெனை அள்ளுகிர்
வாளின் அளைந்த
காக மொன்றை முனிந்தயல்
கல்லெழு புல்லால்
வேக வெம்படை விட்டது
மெல்ல விரிப்பாய்

சித்ர கூட பர்வதத்தில் இருக்கும் போது, பிராட்டியும் நீரும் வனத்தில் அலைந்து களைத்து ஓர் இடத்தில் தங்கினீர்களாம். களைப்புற்ற தேவி முதலில் உறங்கி எழுந்தாள். நீரும் உடனே பிராட்டி யின் மடியில் படுத்து உறங்கிக் களையாறினீர். அப் பொழுது ஒரு காக்கை தேவி மார்பில் கிழித்துத் துன் புறுத்தியது. பிராட்டி அதை துரத்த முயற்சித்தும் அது போக வில்லை. மீண்டும் மீண்டும் கொத்திக் கிழித்தது. ரத்தம் வழிந்து உமது உடலை நனைத்தது. பிராட்டி இதைப் பொறுக்காமல் உம்மை எழுப்பி னாள். நீரும் கண் விழித்துப் பார்த்தீர். மார்பில் குத்தி கிளறப்பட்டிருக்கும் காயத்தைக் கண்டீர். யார் இப்படிச் செய்த தென்று கோபத்தோடும்

வருத்தத்தோடும் கேட்டீர். இரத்தம் தோய்ந்த நகத்தோடு முன்னே இருக்கும் காக்கையையும் கண்டீர். அது இந்திரனுடைய பிள்ளை போலும். உமது கோபத்தைக் கண்டு பூமிக் கடியில் மறையப் பார்த்தது. அறிவாளியாகிய நீர் பூமியிலிருந்து ஒரு தர்ப்பத்தை எடுத்து பிரம்மாஸ்திர மந்திரத்தை அபிமந்திரித்தீர். அது ஜொலித்துக் கொண்டு நிற்கிறது. அதை காக்கையை நோக்கி விடுத்தீர். தர்ப்பம் காக்கையைத் தொடர்ந்தது. அது எங்கெங்கேயோ ஓடியது. ரிஷிகளை யடைந்தது. தேவர்களிடம் ஓடியது. தனது தகப்பனுகிற இந்திரனைச் சரணடைந்தது. ஆனுல்

ஸ பித்ரா ச பரித்யக்த:
ஸுரைஸ்ச ஸ மஹரிஷிபி:
த்ரீன் லோகான் ஸம் பரிக்ரம்ய
த்ராதாரம் நாதி கச்சதி

தந்தையாகிற இந்திரனும் உமது பாணத்தினின்றும் அதைக் காக்க முன்னிற்க வில்லை. பிள்ளையைக் கைவிட்டு விட்டான் தேவர்களும் மகரிஷிகளும் உதவி செய்யவில்லை. காக்கை மூன்றுலகங்களையும் நன்ருகச் சுற்றிச் சுற்றி வந்தது. எங்கும் ரக்ஷணம் கிடைக்க வில்லை. மீண்டும் சரண்யனுகிற உமது பாதத்தில் வந்து விழுந்தது. அது கொலைக் குரியதாய் இருந்தும் உமது கருணையினுல் அதைக் காத்தீர். அஸ்திரம் வீணுகாதாகையால் காக்கையின் கண்ணை அறுத்து உயிரைக் கொடுத்தீர். காக்கை இப்படி உயிர் பெற்று உம்மையும் உமது தந்தையையும் வணங்கி ஓடிப் போயிற்று.

இப்படி, தனக்காக ஒரு காக்கையின் மீது பிரம்மாஸ்திரத்தை விடுத்தவர் இந்த இராவணனை இன்னும் ஏன் விட்டு வைத்திருக்கிருர் என்று தேவி பரிதபித்தாள். உமது உத்திரவு பெற்று இளையவர்

லக்ஷ்மணராவது ஏன் தன்னை வந்து காக்க வில்லை என்று நொந்து அழுதாள். காக்கும் சக்தி பெற்றிருந்தும் தன்னுடைய பாவத்தால்தான் நீங்கள் பராமுகமாக இருப்பதாக துக்கித்தாள். உள்ளத்தை உருக்கும் அந்த வார்த்தைகளைக் கேட்டு நான் தேவியைத் தேற்ற முயற்சித்தேன்.

"தாயே! சத்தியத்தின் மீது ஆணையிட்டுச் சொல்கிறேன். உமது பிரிவால் இராமர் பிரக்ஞை இழந்திருக்கிறார். இராமருடைய துக்கத்தைக் கண்ட இளையவர் பரிதபிக்கிறார். எப்படியோ உம்மைக் கண்டாயிற்று. இது துக்கத்தை விட வேண்டிய சமயம். நீர் துக்கப்படக் கூடாது. பந்துமித்திர களத்ராதிகளோடு அந்தக் கொடிய இராவணனைக் கொன்று உம்மை அயோத்திக்கு அழைத்துப் போவது திண்ணம்" என்று தேற்றினேன். உமக் கேதாவது அடையாளம் கொடுக்கும்படி வேண்டினேன். உயிர் போல் பாதுகாத்து வந்த இந்தச் சூடாமணியைக் கொடுத்தாள். தலையால் வணங்கிப் பெற்றேன். புறப்பட முயற்சித்தேன். அப்பொழுது "இராம லக்ஷ்மணரைப் பார்க்கப் போகும் நீர் பாக்யசாலி" என்றாள் தேவி. அப்பொழுது எனக்கொரு யோசனை தோன்றியது.

"தாயே மிருதுவான எனது தோளில் ஏறிக் கொள்ளும். அங்கு கொண்டு போய் சேர்த்து விடுகிறேன்" என்று பிரார்த்தித்தேன். ஆனால் தேவி இணங்கவில்லை. "இராமர் வந்து என்னை அழைத்துப் போவதே அவரது பெருமைக்குத் தகுதியாக இருக்கும். அல்லாமலும் இராமரை அன்றி அன்னியரொருவர் தீண்ட நான் அநுமதிக்க முடியாது. அவரிடம் உடனே போய் அறிவியும்!' என்று கட்டளை இட்டாள்.

"அல்லாமலும் இராம லக்ஷ்மணரையும் சுக்ரீவரையும் வானரர்களையும் நான் க்ஷேமம் விசாரித்ததாகச் சொல்லும். நான் இந்த துக்கத்தில் இருந்து கரை ஏறும்படி எப்படியாவது வழி செய்யும்" என்று திருப்பத் திரும்பக் கூறினாள்.

பின்னும் உடனே புறப்பட முயற்சித்த என்னிடம் இரக்கம் கொண்டு தேவி—

"எங்காவது மறைவான இடத்தில் இன்று தங்கிக் களையாறி நாளை வேண்டுமானால் புறப்படும். நீர் சீக்கிரம் திரும்பி வரவே புறப்படுகிறீர் என்றாலும், நீர் வரும்வரை நான் உயிரோடிருப்பது நிச்சயமில்லை. நாதனிடமிருந்து வந்த உம்மைப் பார்ப்பதாலாவது எனது சோகம் சிறிது நிவர்த்தியாகட்டும்.

மற்றொரு முக்கியமான விஷயம், மாருதி! சமுத்திரம் கடந்து சேனையோடு இராமர் இலங்கை வருவது சிரம ஸாத்யம் என்று தோன்றுகிறதே. இதற்கு என்ன பரிகாரம் தோன்றுகிறது, உமக்கு" என்று கேட்டாள். அப்பொழுது நான்,

தாயே! எங்கள் சுக்ரீவ மகாராஜா உமது காரியத்தை நிறைவேற்றி வைக்கக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார். வானரர்களோ எந்தத் திக்கிலும் செல்லும் வல்லமை யுள்ளவர்கள். பலமுறை இவர்கள் பூமியைச் சுற்றி வந்திருக்கிறார்கள்.

மத் விசிஷ்டாஸ்ச துல்யாஸ்ச
ஸந்தி தத்ர வனௌகஸ:
மத்த: ப்ரத்யவர: கஸ்சித்
நாஸ்தி ஸுக்ரீவ ஸன்னிதௌ!

சுக்ரீவர் சேனையில் என்னைக் காட்டிலும் மேலானவர்கள் இருக்கிறார்கள். எனக்குச் சமமான

வர்கள் இருக்கிறார்கள். எனக்கு கீழானவர்கள் அங்கு யாருமில்லை. ஆகையால் நானே இங்கு வந்து விட்ட பொழுது மற்றவர்களைப் பற்றிக் கேட்பானேன்? இராம லக்ஷ்மணரும் என் தோள்மேலேறி சந்திர சூரியரைப் போல் இங்கு வந்து விடுவார்கள். வானரச் சேனையின் ஆரவாரத்தை இலங்கையில் வெகு சீக்கிரம் கேட்கப் போகிறீர். இராவணாதி ராக்ஷஸர்களைக் கொன்று ஸ்ரீ இராமர் உம்மை மீட்டுக் கொண்டு சீக்கிரமே அயோத்தி சென்று பட்டாபிஷேகம் கொள்ளப் போகிறார். உமது கண் குளிரக் கண்டு ஆனந்த பாஷ்பம் சொரியப் போகிறீர்" என்று நான் தேறுதல் கூறியதில் பிராட்டி சாந்தி அடைந்திருக்கிறாள் என்று மாருதி விண்ணப்பித்தார்.

இராம லக்ஷ்மணர் இதைக் கேட்டு உள்ளம் குளிர்ந்து முகம் மலர்ந்தனர். சுக்ரீவர் பரம சந்தோஷம் அடைந்தார். வானரர்கள் குதூகலத்தினால் உண்டான உற்சாகத்தினால் ஆரவாரம் செய்தார்கள்.

ஸ்ரீ பகவானருளால்

தியாகி இராமாயணம்

சுந்தர காண்டம்

முற்றிற்று.